உள்ளடக்கம்

27—4—1989

பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 219–248

2. தகவல் கோரல்—

(அ) விளவன்கோடு தொகுதியில் சில பகுதிகளில் ஏற்கனவே கொடுக்கப்பட்ட குடும்ப அட்டைகளைத் திரும்பப் பெறுவதால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு 249–251

(ஆ) ஆந்திர மாநிலச் சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சி குறித்து 251–252

(இ) தெலுங்கு கங்கைத் திட்டம் பற்றி ஆந்திர மாநில திட்டக் குழுத் தலைவர் பேசியுள்ளது குறித்து 252

(ஈ) உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சந்த் சட்டையில்லாமல் அவைக்கு வந்துள்ளது குறித்து 253

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—

ஈரோடுக்கு அருகில் பெரியபாளையத்தில் பேருந்துகள் விபத்துக்குள்ளானதால் ஏற்பட்டுள்ள உயிர்ச் சேதம் குறித்து 253–257

4. அறிவிப்புகள்—

(அ) அவைக்குழு— உறுப்பினர்கள் நியமனம் .. 257–258

(ஆ) பேரவை விதிகள் குழு—உறுப்பினர்கள் நியமனம் .. 258–259

(இ) பேரவை நூலகக் குழு—உறுப்பினர்கள் நியமனம் 259

(ஈ) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு—உறுப்பினர்கள் நியமனம் 260

பக்கங்கள்.

5. கவன ஈர்ப்பு—

(அ) வேதாரண்யம் தொகுதியில் பாக் ஜலசந்தியிலிருந்து விசாக வெள்ளம் புகுந்து ஆற்றுநீரை உப்பு நீராக்கியதால் விளைநிலங்கள் பாதிப்பு 260–263

(ஆ) எடப்பாடி மருத்துவமனை கட்டப்பட்டும் திறக்கப்படாமல் இருப்பது குறித்து .. 264–265

6. ஒழுங்குப் பிரச்சினை—
கவன ஈர்ப்பு அறிக்கையில் உள்ள வாசகம் குறித்து. 263

7. சட்டமுன் வடிவுகள்—

(அ) சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன் வடிவு, 1989 265–266

(ஆ) சட்டமன்றம் (தகுதியின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980 .. 266

(இ) மாநகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த), சட்டமுன்வடிவு, 1989 .. 266–267

8. மானியக் கோரிக்கைகள், 1989–90 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி— 267–348

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை

(ஆ) கோரிக்கை எண். 15—காவல் துறை ..

(இ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி 270, 281, 282, 288
திரு. எஸ். டி. உகம்சந்த் 271–280
திரு. எஸ். எஸ். தென்னரசு 281–291
திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் 292–306
திரு. கே. ரமணி 307–322
திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் 323–328
திரு. பெ. ஆசையன். 328–331
திரு. வி. கே. சின்னசாமி 332–339
திரு. ஏ. செங்குட்டுவன் 340–344
திரு. எம். முகமது சித்திக் 344–348

9. அரசினர் தீர்மானம்—
விதி 32-ஐத் தளர்த்தல் 348

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 349

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

***1989* ஏப்ரல் *27,* வியாழக்கிழமை.**
சித்திரை *14,* சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு *2020*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை ''

எவராயிருப்பினும் குற்றம் இன்னதென்று ஆராய்ந்து தடவு தாட்சணியம் எனப்படும் கண்ணோட்டம் பார்க்காமல் நடுவு நிலைமை பொருந்தி மேற்கொள்ளத்தக்க நடவடிக்கையை ஆராய்ந்து செய்வதே நீதி முறையாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

எட்டையபுரம் தாலுக்கா அமைத்தல்.

139—(*வினா எண். 522)—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டம், கோவில்பட்டி, விளாத்திகுளம் ஆகிய இரு தாலுக்காக்களை மூன்றாகப் பிரித்து எட்டயபுரத்தைத் தலைமை இடமாகக் கொண்ட ஒரு புதிய தாலுக்கா அமைக்க கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம், கோவில்பட்டி அதை ஒட்டியுள்ள சங்கரன்கோவில் இந்த 3 தாலுக்காக்களும் மிகப்பெரிய தாலுக்காக்களாக இருப்பது மட்டும் அல்லாமல், தங்களுடைய அலுவல்களுக்காக பொது மக்கள் செல்வதற்கு இடைஞ் சலாக இருப்பதை உத்தேசித்து இந்த 3 தாலுக்காக் களையும் 4 ஆக பிரித்து கோவில்பட்டியை ஒட்டியுள்ள சங்கரன் கோவில் வட்டத்தில் உள்ள கிராமங்களை கோவில்பட்டியோடு இணைத்தும், அதேபோல் விளாத்திகுளம் பகுதியில் ஒரு பகுதியை யும் கோவில்பட்டி தாலுக்காவின் ஒரு பகுதியில் உள்ளதையும் இணைத்து ஒரு புதிய தாலுக்கா அமைக்க வேண்டும் என்று கடந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கோரிக்கை அந்த வட்டத்தில் உள்ள மக்களால் அனுப்பப்பட்டுள்ளது. அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறதே, அது அங்குள்ள பொது மக்களுடைய சௌகரியத்திற்கு ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தால், இன்றைக்கு ஒரு சர்ட்டிபிகேட் வாங்கவோ மற்ற காரியங்களுக்கோ மிகவும் இடைஞ்சலாக இருப்பதை கருதியும், அரசு உடனடியாக கோவில்பட்டிக்கு பக்கத்திலுள்ள சங்கரன்கோவில் வட்டத்திலுள்ள கிராமங்களை கோவில்பட்டி தாலுக்காவோடு இணத்தும், எட்டையாபுரத்தை தலைமையிட மாகக்கொண்ட ஒரு புதிய தாலுக்கா அமைக்க வேண்டிய ஏற்பாடு களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பரப் பளவு, மக்கள் தொகை, நிலவரி மற்றும் பிற்பட்ட தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டும், அரசின் நிதி நிலையை கருத்தில் கொண்டும், புதிய வட்டங்கள் அமைக்கப் படுகின்றன. தற்போது சிதம்பரனார் மாவட்டம் கோவில்பட்டி, விளாத்திகுளம் ஆகிய 2 தாலுக்காக்களைச் சீரமைப்பது, எட்டையா புரத்தை தலைமையிடமாகக்கொண்டு புதிய வட்டம் உருவாக்கவும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் சங்கரன்கோவில் வட்டத்திலுள்ள இளையரசனேந்தல் உள்வட்டத்தை கோவில் பட்டி வட்டத்துடன் சேர்ப்பது தொடர்பாகவும், சிதம்பரனார் மாவட்ட ஆட்சியரிடமிருந்து முன் மொழிவுகள் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களால் பெறப்பட்டு அவர் அலுவலகத்தில் ஆய்வில் உள்ளதாகவும், இது தொடர்பாக கேட்கப்பட்ட கூடுதல் விவரங்கள் இன்னும் சிதம்பரனார் மாவட்ட ஆட்சியரிடமிருந்து கிடைக்கப்பெற வில்லை என்றும் இணை ஆணையர் வருவாய் நிர்வாகம் தெரிவித்துள்ளார். ஆக பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் எழுப்பிய கேள்விக்கு சாதகமான பதில் வரும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

1989 ஏப்ரல் 27]

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலாவதாக கோவில்பட்டியை ஒட்டியிருக்கக்கூடிய சங்கரன்கோவில் வட்டத்தைச் சேர்ந்த இளையரசனேந்தல் பிர்க்காவில் உள்ள அந்த கிராம மக்கள் இன்றைக்கு தங்களுடைய பல்வேறு காரியங்களுக்காக கோவில்பட்டி வந்து மறுபடியும் சங்கரன்கோவில் போகக்கூடிய, 30, 40 மைல் சுற்றவேண்டிய ஒரு இக்கட்டான நிலை இருப்பதன் காரணமாக அதை கொஞ்சம் அவசரமாகக் கவனித்து உடனடியாக அந்தக் கிராமங்களை எந்தவிதமான விசேட பணச் செலவும் ஏற்படப்போவது இல்லை என்பதால், இளையரசனேந்தல் பிர்க்காவை கோவில்பட்டி வட்டத்தோடு இணைப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை துரிதமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் ஏற்கனவே பதில் சொன்னேன். ஆட்சியாளரிடமிருந்து இன்னும் தேவையானத் தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை என்பதை எடுத்துச் சொன்னேன். இருக்கிற சிக்கல்களைப் பற்றி நமது மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் சொன்னதை நான் முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்கிறேன். ஆணையரிடமிருந்து அறிவிப்பு வந்தவுடன். தகவல் கிடைத்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியை வழங்குகிறேன்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் கேட்ட கேள்வியையொட்டி நானும் ஒரு கேள்வியை கேட்க விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பலப்பல வருவாய், இவைகளைக் கொண்டுதான் தாலுக்கா பிரிவினை நடைபெறுகிறது என்று சொன்னார்கள். ஆனால் அதிகாரிகள் பிர்க்கா வாரியாக, அப்படி அப்படியே தூக்கிப்போட்டு தாலுக்காக்களைப் பிரிப்பதாக நாங்கள் அறிகிறோம். ஒவ்வொரு தாலுக்கா தலைநகரத்தைச் சுற்றியிருக்கக்கூடிய பகுதிகள் 15 கிலோ மீட்டருக்கு மேலே போகாமல் தாலுகாக்களைப் பிரிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி வட்டங்கள் அமைக்கப்படுகின்றன என்பதைப் பற்றிய ’டெபினிஷன்’ எனது விடையின் ஆரம்பத்தில் தரப்பட்டது. பொதுவாக, வட்டங்களில் பரப்பளவு, மக்கள் தொகை, நிலவரி மற்றும் பிற்பட்ட தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் அமைக்

கப்படுகின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு.தென்னரசு அவர்கள் கேட்கும்போது வேறு மாதிரியாக அவைகள் பிரிக்கப்படுகின்றன என்று தெரிவித்தார்கள். எனக்கு அது பற்றிய தகவல் இல்லை. தகவல் தந்தால் அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாக நலன் கருதி இப்படி பிரிக்கப்படுகின்ற மாவட்ட, வட்டங்களுக்கு பெயர்ச் சூட்டுகின்றபோது திரு. ஏ. டி. பன்னீர்செல்வம், வீரமாமுனிவர் போன்ற பெயர்களைச் சூட்டும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் செயற்குறிப்பு இப்போதைக்கு இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத் தலைநகரங்களைப் பிரிப்பது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே இருந்த அரசு பெரிய தாலுக்காக்களைப் பிரிப்பதற்கு ஒத்துக் கொண்டார்கள். வடாற்காடு மாவட்டம், குடியாத்தம் தாலுக்கா, கிழக்கு மேற்காக 60 கிலோ மீட்டராக உள்ளது. நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் தொகுதியான காட்பாடியைத் தலைமையிடமாகக் கொண்டு தாலுக்கா அமைக்கப்படும் என்று அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதை நிறைவேற்றிக்கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் உங்களைப் பயன்படுத்தியதற்காகப் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது யோசிக்கப்படும். (சிரிப்பு).

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டங்கள் புதியதாகப் பிரிக்கப்படும்போது அந்தந்தத் தொகுதியிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து ஆலோசித்து, அவர்களுடன் சேர்ந்து வ்ட்டங்களைப் பிரிப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த தொகுதி உறுப்பினர்கள் தகுதியானவர்கள் என்ற கருத்து படைத்த அரசு இந்த அரசு. ஆகையினாலே, உறுப்பினர்களைக் கலந்து காரியங்கள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1989 ஏப்ரல் 27] 5

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்காக்களைப் பிரிக்கின்றபோது, அதிலும் குறிப்பாக சிதம்பரனார் மாவட்டத்தில்தான், வீர பாண்டிய கட்டபொம்மன் பிறந்த பாஞ்சாலங்குறிச்சி என்ற ஊரும், கோட்டையும் இருக்கிறது திருநெல்வேலி மாவட்டத்தில் அதற்குரிய இடம் எதுவும் இல்லை. ஆகவே, சிதம்பரனார் மாவட்டத்திலே புதிய தாலுக்கா ஆரம்பிக் கின்றபோது அதற்கு வீரபாண்டிய கட்டபொம்மன் என்ற பெயரைச் சூட்டி, நெல்லை மாவட்டத்திலே தொக்கியிருக்கின்ற அந்தப் பெயரை நீக்கி, புராதனமான பெயரான திருநெல்வேலி மாவட்டம் என்றே அறிவிப்பார்களா என்று கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே விடை அளித்து விட்டேன். புதியதொரு கேள்வியாக இப்போது கேட்கப் படுகிறது. தனிக் கேள்வி போடவும்.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90ஆம் ஆண்டுகளில் புதிய வட்டங்கள் பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதைக்கு இல்லை.

(முற்பகல் 9–10)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : கனம் சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்திற்கு பெயர் வைக்க உத்தேசம் இல்லை என்று சொன்னார்கள். அப்படி பெயர் வைத்தால் வீரவாஞ்சி பெயரை வைக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீட்சிதர் அவர்கள் திசை திருப்பிக் காட்டியே பழக்கப்பட்ட ஒரு நல்ல தீர்க்கதரிசி. அவர்களுக்குச் சொல்கிறேன் பெயர் வைக்க உத்தேசம் இல்லை என்று சொல்லவில்லை. எப்படி பெயர் வைப்பது, யாருடைய பெயரை வைப்பது என்ற குறிப்புரைகளைக் கேட் டிருக்கிறோம். குறிப்புகள் வந்தவுடன் அந்த அடிப்படையில் செய்வோம் என்ற உறுதியை அளிக்கிறேன்.

பொன்னமராவதி தாலுக்கா அமைத்தல்.

140—(*வினா எண். 987)—திரு. வ. சுப்பையா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னமராவதியைத் தலைமையிடமாகக் கொண்டு தாலுக்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. வ. சுப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னமராவதியைத் தலையையிடமாகக் கொண்டு அமைக்கப்படவிருக்கிற தாலுக்காவில் 3 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. மேலும், அது 43 பஞ்சாயத்துக்களைக் கொண்டது. சுமார் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்டது. 7 உயர்நிலைப் பள்ளிகளையும், 3 மேல்நிலைப் பள்ளிகளையும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளையும், மாநில வங்கிகளையும் காவல் நிலையங்களையும், பல்வேறு அரசுப் பணியிடங்களையும் கொண்டது. இப்போது செயல்பட்டு வருகின்ற திருமயம் தாலுக்காவிற்கும் பொன்னமராவதிக்கும் இடைப்பட்ட தூரம் 30 கிலோ மீட்டர். ஆகவே, அந்தப் பகுதிக்கு சென்றுவர, அந்தத் தாலுக்காவுக்குச் சென்றுவர சிரமமாக இருக்கிற காரணத்தால் வெகு விரைவிலேயே பொன்னமராவதித் தாலுக்காவை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : புதுக்கோட்டை மாவட்டப் பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு எனது பதில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருமயம் வட்டத்தைப் பிரித்து பொன்னமராவதியைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு புதிய வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பழைய கோட்டைத் தலைவர் என்று சொன்னால் பொருத்தமாக இருக்குமா?

திரு. மா. சுந்தரதாஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களை புதுக்கோட்டை மாவட்டப் பேரவைத் தலைவர் என்று குறிப்பிட்டார்கள். பேரவைத் தலைவரை அப்படி குறிப்பிடலாமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்.: புதுக்கோட்டை மாவட்டத்தில் என்று சொன்னேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புதுக்கோட்டை கமா மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்று பொருள் கொள்ள வேண்டும், இதற்கு கொண்டு கூட்டுப் பொருள் ''கோள்'' என்று பெயர், அந்த முறையிலே வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்.: தலைவரவர்களே, நான் தொடரலாமா ? பொன்னமராவதி பற்றிய விவரங்களை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 130 வருவாய் கிராமங்கள் உள்ள பகுதி அது, வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை 6, அதைப் படிக்க வேண்டுமென்று விரும்பினால் படிக்கிறேன், ஆக, தற்போது திருமயம் வட்டத்தில் திருமயம், அரிமளம், பொன்னமராவதி ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. பொன்னமராவதி ஒன்றிய கிராமங்கள் உள்ளிட்ட பொன்னமராவதி பேரூராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஏற்படுத்த மாவட்ட ஆட்சியர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். சிரமங்கள் எனக்குப் புரிகின்றன. பொன்னமராவதியைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கப்படுகிற அந்த வட்டம் சரியாக இருக்குமென்ற பரிந்துரையை மாவட்ட ஆட்சியர் முன்மொழிந்திருக்கிறார், அதற்காகும் செலவு அரசுக்கு 3.14 இலட்சம் ரூபாய் தொடர் செலவும், 41.40 இலட்சம் ரூபாய் தொடராச் செலவும் ஏற்படும்.

திருமயம் வட்டத்தைப் பிரிப்பது பற்றிய கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது. 18 வயது பூர்த்தியானவர்கள் அனைவரையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணி நடைபெற்றுவருவதில் அப்போதிருந்த சிரமம் காரணமாக, தேர்தல் கமிஷன் தடை ஆணை பிறப்பித்ததன் விளைவாகச் செயல்பட முடியவில்லை. இந்தத் தடை ஆணை விலக்கப்பட்டபின் இந்தக் கருத்துருவை அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. சுப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கு பொன்னமராவதி பகுதி மக்களின் சார்பாக நான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலுள்ள சட்டமன்றத் தொகுதிகள் 234. ஆகவே ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு தாசில்தார் என்ற முறையில் நம்முடைய சட்டத்தைத் திருத்தி தாலுக்காக்கள் ஏற்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தைத் திருத்துகிற நேரம் வரும் போது திருத்துவோம். (சிரிப்பு).

நகர பேருந்து விடுதல்.

141—*(வினா எண். 225)— திரு. துரை சந்திரசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு, ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு எல்லா கிராமங்களுக்கும் நகரப பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம், திருக்காட்டுப்பள்ளி மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் கிளை துவங்க திட்டமுளளது.

(ஆ) திருக்காட்டுப்பள்ளி :

திருக்காட்டுப்பள்ளியில் விஷ்ணம் பேட்டை கிராமத்தில் கிளை அமைக்க நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

திருவையாறு :

திருவையாற்றில பணிமனை அமைக்க நிலம் கொடுக்க ஒருவரும் முன்வர மறுக்கின்றனா. தகுந்த நிலம் கிடைக்கப் பெற்றதும் கட்டுமானப் பணிகள் ஏற்கப்பட்டு புதிய பேருந்து இயக்கம் செயல்படுத்தப்படும்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு இடங்களிலே கிளை துவங்க அனுமதித்ததற்காக திருவையாறு தொகுதி மக்களின் சார்பாக நன்றியை நான் தெரிவித்துக்கொள் கிறேன். திருவையாறில் நிலம் இல்லை என்று கூறினார்கள், தற் போது சத்திரம் நிர்வாகத்தில் 21 ஏக்கர் நிலம் தனியாரிடமிருந்து பெறப்பட்டுள்ளது, இதில் கிளை துவங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் பற்றிய தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள கொடுத்ததற்காக நன்றி, தொடர் நடவடிக்கை மேற்கொளளப்படும்,

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தைத் திருத்துகிற நேரம் வரும் போது திருத்துவோம். (சிரிப்பு).

நகர பேருந்து விடுதல்.

141—*(வினா எண். 225)— திரு. துரை சந்திரசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு, ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு எல்லா கிராமங்களுக்கும் நகரப பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம், திருக்காட்டுப்பள்ளி மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் கிளை துவங்க திட்டமுள்ளது.

(ஆ) திருக்காட்டுப்பள்ளி :

திருக்காட்டுப்பள்ளியில் விஷ்ணம் பேட்டை கிராமத்தில் கிளை அமைக்க நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருவையாறு :

திருவையாற்றில பணிமனை அமைக்க நிலம் கொடுக்க ஒருவரும் முன்வர மறுக்கின்றனர். தகுந்த நிலம் கிடைக்கப் பெற்றதும் கட்டுமானப் பணிகள் ஏற்கப்பட்டு புதிய பேருந்து இயக்கம் செயல்படுத்தப்படும்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு இடங்களிலே கிளை துவங்க அனுமதித்ததற்காக திருவையாறு தொகுதி மக்களின் சார்பாக நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். திருவையாறில் நிலம் இல்லை என்று கூறினார்கள், தற்போது சத்திரம் நிர்வாகத்தில் 21 ஏக்கர் நிலம் தனியாரிடமிருந்து பெறப்பட்டுள்ளது, இதில் கிளை துவங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் பற்றிய தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்ததற்காக நன்றி, தொடர் நடவடிக்கை மேற்கொளவப்படும்,

1989 ஏப்ரல் 27]

திரு. துரை சந்திரசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு ஆகிய இடங்களில் தொடங்கப்படும் கிளைகளிலிருந்து எத்தனை வழித்தடங்கள் தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வழித்தடங்கள் பற்றிய கணக்கு தற்போது என்னிடத்தில் இல்லை. அங்கே கிளை ஆரம்பிக்கப்பட்ட பிறகு போக்குவரத்துக்கான வசதிகள் செய்யப்படுமா என்று கேட்கப்பட்டிருக்கிறது, இருந்தாலும், தனியாகக் கேள்வி கேட்டால் எவ்வளவு பேருந்துகளை அங்கேயிருந்து இயக்க முடியும் என்பதைச் சொல்ல முடியும்.

திருமதி எஸ். பி. சற்குணம் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஐ.ஓ.சி. அருகிலிருந்து ஒரே ஒரு பஸ் 44 கிராஸ் என்ற பஸ் தான் சென்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய தொகுதியில் திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி எல்லாம் அடங்குகின்றனவா : (சிரிப்பு).

திரு. வி. கே. சின்னசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி திருக்காட்டுப்பள்ளியிலே புதிய பேருந்து நிலையம் அமைப்பது பற்றியதாக இருந்தாலும் நான் பணிவன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஓடிக்கொண்டிருந்த நிறைய நகரப் பேருந்துகளை நிறுத்தி இருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஓராண்டுக்காலத்தில் எங்களுடைய பெரியார் மாவட்டத்தில் நூற்றுக்கு 20 அல்லது 30 சதவீதம் ஓடிக்கொண்டிருந்த பேருந்துகளை நிறுத்தி இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோவை வந்த நேரத்தில் கூட நிறுத்திய வண்டிகளை விடவேண்டும் என்று எழுதிக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறோம், கிராம மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள், நீங்களும் கிராமத்திலிருந்து வந்தவர்கள் தான், இருந்தாலும் ஜீவா போக்குவரத்துக்காரர்கள் அதிலே மவுனம் சாதித்து இன்னும் ஏன் அந்த பஸ்களை விடாமல் இருக்கிறார்கள்? நாங்களும் நேரடியாகச் சென்று சொல்லி இருக்கிறோம். தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு சொல்லியிருக்கிறோம். எனவே, புதிய வண்டிகளை விடுவதற்கு முன், எந்தெந்த வண்டிகள் ஓடிக்கொண்டிருந்தவை நிறுத்தப்பட்டிருக்கின்றனவோ அவை அனைத்தையும் விடுவதற்கான நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வார்களா என்பதை நான் அறிய .விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஓடிக்கொண்டிருந்த வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தால் அவை எந்தக் காரணத்தினால் நிறுத்தப்பட்டன என்பது குறித்து

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து பேசி நிறுத்தப்பட்ட வண்டிகளை மீண்டும் விடுவதற்கான ஏற்பாடுகள் நிச்சயமாகச் செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-20)

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய போக்குவரத்து அதிகமாகிவிட்ட இந்தக் காலத்தில் கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதி செய்து தரப்படவேண்டியது அவசியம் தான். ஆனால், கிராமப்புறங்களில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்து பஸ் போக்குவரத்துக்கே இடையூறாக மோசமான நிலைமைகள் இருக்கின்றன. அதைச் சீர்படுத்துவதற்கு அங்கே ஹைவேஸ் அதிகாரிகள் மூலமாக எதைச் சொன்னாலும் நடைபெறுவதில்லை அந்த துறையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பில் இருப்பதால் அந்தக் கிராமப் புறச் சாலைகளைச் சீர்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அரசு உத்திரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களிலே ஓடிக்கொண்டிருக்கின்ற பஸ்களை நிறுத்தியதற்குக் காரணம் சாலைகள் மிகவும் பழுதடைந்து பேருந்துகளை இயக்கமுடியாதது நிலைமை தான். சில இடங்களிலே அதனால் பேருந்துகளைக்கூட நிறுத்தவேண்டிய நிலைமைகள் ஏற்பட்டுவிட்டன, சாலைகளை பராமரிப்பதற்குத் தேவையான நிதி வசதி நம்மிடத்திலே தற்சமயம் கிடையாது. இருந்தாலும்கூட, இருக்கின்ற நிதி வசதிகளை வைத்து பேருந்துகள் செல்லக்கூடிய பாதைகளைச் செப்பனிட வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு கொண்டிருக்கின்றது, எதிர்காலத்தில் ரோடு பராமரிப்பதற்காக அதிகப்படியான நிதியை ஒதுக்கி அந்த பழுதுபட்டிருக்கின்றச் சாலைகளைச் செப்பனிடுவதற்காக ஏற்பாடுகளை அரசாங்கம் நிச்சயமாகச் செய்யும்.

திரு. கே. சுந்தர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நகரப் பேருந்துகளின் தூரம் 30 கிலோ மீட்டராக இருக்கிறது, அதை 35 கிலோ மீட்டராக ஆக்கும் உத்தேசம் அரசுக்கு இருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25 கிலோ மீட்டராக இருந்தது, 30 கிலோ மீட்டராக ஆகியிருக்கிறது. 35 ஆனால், மீண்டும் அதை 40 ஆக ஆக்க வேண்டிய சூழ்நிலை வரும், எனவே, தற்போது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சோழன் போக்குவரத்துக்கழகத்தின 16 ஆவது ஆண்டு அறிக்கையில 1987–88 ஆம் ஆண்டில 100 புதிய பேருந்துகளை இயக்குவது

1989 ஏப்ரல் 27]

என்றும், முதல் கட்டமாக நடவடிக்கை திருவையாறு, பாபநாசம், ஆடுதுறை ஆகிய இடங்களிலே கிளைகளைத் தொடங்க வேண்டும் என்றும் 1988-89-ம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. கடந்த கால ஆட்சியினுடைய மெத்தனப் போக்கின் காரணமாக, இந்தக் கிளைகள் தொடங்கப்படவில்லை. எனவே, உடனடியாக இந்த ஆண்டாவது அந்த மூன்று இடங்களிலே கிளைகள் தொடங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுகள் தேவையில்லை. இருந்தாலும்கூட, திருக்காட்டுப்பள்ளியிலே திருவையாற்றிலே கிளைகள் தொடங்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதைஏற்கெனவே என்னுடைய பதிலிலே தெரிவித்திருக்கிறேன். திருக்காட்டுப்பள்ளியிலே தேவையான நிலம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. திருவையாற்றைப் பொறுத்தவரையில் நிலம் இதுவரை கிடைக்கவில்லை. மாண்புமிகு சட்டமன் உறுப்பினர் அவர்கள் சொல்லிய தகவலின் அடிப்படையில் நில கையகபபடுத்துவதற்கான ஏற்பாடுகள் விரைவில் செய்யப்படும்.

திரு. எஸ். எஸ். இராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் பெரும்பான்மையான கிராம மக்களுக்கு பஸ்கள் விடும்போது சில பாதைகள் குறுகலாக இக்கட்டான நிலையில் இருப்பதால் அந்த இடங்களில் மினி பஸ்களை விட்டு அங்குள்ள கிராம மக்களுக்கு வசதி செய்து தரப்படுமா ? 30 கிலோ மீட்டர் என்று வைத்திருக்கும் அளவையொட்டி, இன்னும் கூட்டம் அதிகமாக இருந்தால், வசூல் அதிகமாக இருந்தால், அங்கே அதிகமாக கூடுதல், அடிஷனல் பஸ்கள் விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதை குறுகலாக இருக்கக்கூடிய சில பாதைகளில் ஏற்கெனவே மினி பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் ஓடுகின்ற பெரும்பாலான வழித்தடங்களில் குறுகிய சிறிய மினி பேருந்துகள்தான் ஓடிக்கொண்டிருக்கின்றன. எந்தெந்த வழித்தடங்களில் அதிகப்படியாசு நெரிசல் இருக்கிறதோ அவைகளில் எல்லாம் கூடுதலான பேருந்துகள் விடுவதற்கு அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்கள் நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. வெ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுளள திட்டக்குடி நகரில் பெரியார் போக்குவரத்துக் கழகத்தினுடைய கிளை ஒன்றை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுபபினர் அவர்கள், திருக்காட்டுப்பள்ளிக்கு வரமுடியுமா?

திரு. வெ. கணேசன் : அந்தக் கிளை எவ்வளவு காலத்தில் தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

கரும்பின் விலை

142—(*வினா எண். 242 திரு.—சி, கோவிந்தராஜன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) சர்க்கரை ஆலைகளுக்கு விவசாயிகளால் அனுப்பப்படும் கரும்பின் விலையை டன் ஒன்றுக்கு ரூ. 10 உயர்த்திக் கொடுக்கும்படி 20—2—1988-ல் தமிழக அரசினால் ஏதேனும் ஆணை பிறப்பிக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், மேற்படி உத்தரவு எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டது ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி ; தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) எழாது.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிலோ சர்க்கரை விலையை 25 காசு ஏற்றிய காரணத்தை அடிப்படையாக வைத்து அன்றைக்கு ஆளுநர் ஆட்சியிலே, 20—2—1988 அன்று இப்படிப்பட்ட ஓர் ஆணை வழங்கப்பட்டு எல்லா இடங்களுக்கும் சென்றுவிட்டது, பிறகு என்ன காரணத்தாலோ அது நிறுத்தப்பட்டு விட்டதாக விவசாயிகள் புகார் கூறுகிறார்கள். அதுபற்றி எந்த அளவுக்கு காரியங்கள் நடைபெற்றுள்ளன என்பதைப்பற்றிமாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்குவார்களா ? இல்லையென்றால் அதைப் பூார்துகொண்டு இனிமேலாவது அதுகுறித்து பின்னால் விவாத்து விளக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்டதற்கு பிறகும், மாண்புமிகு உறுப்பினா அவர்கள் இந்தத் தகவலை.என்னிடத்தில் தெரிவித்திருக்கிறார்கள், அதன் அடிப்படையில் அந்த இலாகாவை பரிசோதிக்குமாறு கேட்டேன். தற்போது அப்படிப்பட்ட உத்தரவு ஒன்றும் இல்லை என்று உறுதியாகத் தெரிவித்துள்ளார்கள். இனிமேல மேற்கொண்டு அப்படிப்பட்ட பரிசீலனையை எடுத்துக்கொண்டு முத்தரப்பு மாநாடு போடுவதா இலலையா—என்று பார்த்து ஏனென்றால் கடந்த 5 ஆண்டுகளாக அது போடப்படாமல் இருக்கிற காரணத்தால்— அது குறித்து மறு பரிசிலனை செய்துஅறிவிக்கலாம்என்றுதெரிவித்துக்கொள்கிறேன்.

திரு சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, 1987—88—ம் ஆண்டுக்கு ஒரு டன் கரும்புக்கு ரூபாய் 5 கூடுதலாகக் கொடுப்பதாக ஈ.ஐ.டி. பாரி நிறுவவம் வாக்குறுதி

அளித்தது. அப்படி ஏற்பட்டது அரசாங்கத்தினுடைய உத்தரவினால்தான் அது கொடுக்கப்படாமல் இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. அப்படி கொடுக்கப்படாத பணம் எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி பாக்கியிருப்பதாகத் தகவல் எனக்கு இல்லை. அதனால், உடனடியாக விசாரித்து அப்படி பாக்கி இருக்குமானால் அதைத் தருவதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

திரு. கோ. பூவராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு வெட்டுகின்றபோது காலம் கடந்து வெட்டு கிறார்கள், அதனாலே எடை குறைவுஏற்படுகிறது, 10 ரூபாய் அதிகமாக கொடுக்கவில்லை என்றாலும் கூட, எடைக் குறைகிற போது அதை ஈடுகட்ட ஏதாவது பணம் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ? அடுத்து, ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கரும்பை எடுத்துச் செல்லும்போது அந்த வட்டாரத் தில இருக்கிற ஆலை அதிபர்களுக்குக்கமிஷனாக ரூபாய் 35, 36 பெறுகிறார்கள். அது இனிமேல்தவிர்க்கப்படுமா ? அதற்கு ஏதாவது வழி உண்டா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்பமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்ப காலம் கடந்து வெட்டப்படுகிறது என்ற புகார் தரணி சர்க்கரை ஆலையிலிருந்து மட்டும் தான் கிடைக்கப்பெற்றிருக்கிறது. வேறு சர்க்கரை ஆலைகளிலிருந்து அப்படிப்பட்ட தகவல ஏதும் வரவில்லை, கூடுமான வரையில் 10 நாள், 15 நாள் என்று வெட்டுவதிலே சில தவறுகள் ஏற்படுவ தற்குக் காரணம் அன்-ரெஜிஸ்டர்ட் கரும்பையும் ஆரம்பத்தி லேயே வெட்டிவிடுவதால் சில தகராறுகள் இருப்பதாகத் தெரிய வருகிறது. அப்படி காலம் கடந்து கரும்பு வெட்டுவதைப்பற்றி உடனடியாக அரசுக்கு குறிப்பிட்டு தெரியப்படுத்தினால் உடனடி யாக அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, 10 ரூபாயைக் கொடுப்பதற்குரிய உத்தரவு ஏதும் பிறப் பிக்கப்படவில்லை என்று அமைச்சா அவர்கள் குறிப்பிட்டார்கள். நெல்லுக்கு மத்திய சர்க்காருடைய அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷன் விலை நிர்ணயித்தபோது, நாம் அவர்களுடைய நிர்ணயிப்பைச் சாியில்லை என்ற கருத்தோடு அந்த விவசாயிகளுக்கு உதவி செய் வதற்காக நமது அரசு குவிண்டால ஒன்றுக்கு ரூபாய் .35 அதிகம் கொடுக்கும்படியான நல்ல காரியத்தை செய்திருக்கிறது, அத னால் அரசுக்கு செலவு அதிகம்தான், ஆனால, கரும்பு விவசாயி களுடைய நிலை இன்னும் மோசமாகிக் கொண்டு இருக்கிற நிலை யில், அரசுக்குப் பண .நெருக்கடி நிலை இருபபதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு இந்த மாதிரி ஓர் உதவியை

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வதற்கு முன்வருவார்களா கரும்பு விவசாயிகள் போடுகின்றகரும்பினுடைய சாக்கரைச் சத்து எவ்வளவு என்று கம்பெனிக்காரர்கள் இறுதியில்தான் முடிவுசெய்கிறார்கள். அவர்கள் பணத்தைக் கொடுப்போம் என்று சொல்லிவிட்டுஇனறைக்குகோடிக்கணக்கில்கொடுக்காமல்பாக்கிப்பணத்தை நிறுத்தி வைத்திருக்கிறார்களே, அதை உடனடியாகக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு மத்திய சர்க்கார் தான் விலை நிர்ணயம்செய்கிறது, அதாவது மத்திய விலை நிர்ணய கமிஷன் மூலமாக விலை நிர்ணயம் செய்யப்படுகிறது, அப்படி நெல்லுக்கு நாம் தொகை கொடுத்ததுபோல் 1988—89ல் மத்திய சர்க்கார் கரும்புக்கும் குறைந்த பட்ச விலையாக 8.5.சதவிகிதம் சர்க்கரை கட்டுமானம் உள்ள கரும்பக்கு டன் ஒன்றுக்கு 190 ரூபாய் என்று தான் அறிவித்திருந்தது. ஆனால, மாநில அரசு அதை.220 ரூபாயாக அறிவித்திருக்கிறது, தனியார் துறை ஆலைகள் சில அதை ஏற்கவும் மறுக்கின்றன. கூட்டுறவு ஆலைகள் தான் சாதகமாக எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அதைத் தவிர, மத்திய சர்க்கார் சென்ற ஆண்டு 5 ரூபாய் கூட அனுமதிக்கலாம் என்று அறிவித்துள்ளது, ஓராண்டு அதைப்பற்றி அறிவிக்காமல் இருந்ததை நாம் பொறுப்பேற்று வந்த உடனேயே அறிவித்திருக்கிறோம். தற்போதைய விலை அவர்கள 195 ரூபாயாகவும், நம்முடைய விலை 225 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் ஆலைகளில் ஒவ்வொருவருக்கும் பாக்கி இருப்பதாக உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள், அந்தத் தகவல் இல்லை. எழுத்து மூலமாகக் .கொடுத்தால், நடவடிக்கை எடுத்து, அதை வாங்கிக் கொடுக்க இந்த அரசு முடிவெடுக்கும்.

(முற்பகல 9-30)

திரு. ஜி. பழனிச்சாமி : பேரவைத் தலைவரவர்களே, கரும்பு விவசாயச் சங்கத்தின் சார்பாக விவசாயிகளுடைய குழு அமைத்து, கரும்ப விலையை நிர்ணயிக்கலாமென்று கேட்டிருந்தார்களே, அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்குண்டா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவரவர்களே, கரும்பு விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கைகள் விடும் காலங்களில், முத்தரப்பு மாநாடு நடத்தி, அதைத் தீர்ப்பது வழக்கமாக இருந்து வருகிறது. 1983ஆம் ஆண்டில் கூட்டப்பட்ட முத்தரப்பு மாநாடு கலவரத்தோடு முடிந்த காரணத்தால், ஆலை முதலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் மோதல் ஏற்பட்ட காரணத்தால்,1983லிருந்து இதுவரை முத்தரப்பு மாநாடு கூட்டப்படவில்லை. அதைப் பற்றி இந்த அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

1989 ஏப்ரல் 27]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதிலில் 220 ரூபாய் வரையில் கொடுக்கலாமென்று சொன்னார்கள். ஒரு ஏக்கர் கரும்பு விவசாயம் செய்ய 4,000 லிருந்து 5,000 ரூபாய் செலவாகிறது. அதனால் ரெக்கவரி அடிப்படையில், குறைந்தபட்சம் 250 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாய விளைபொருள்கள், அது கரும்பாக இருந்தாலும், நெல்லாக இருந்தாலும், அதனுடைய செலவினங்களைக் கணக்கிட்டு, அதன் அடிப்படையில் மத்திய அரசு விலை நிர்ணயம் செய்து வருகிறது. ஆனால் கூலி உயர்வு, இடுபொருள்கள் விலை உயர்வு ஆண்டுக்காண்டு ஏறி வருவதை அரசு உணருகிறது. அதற்கு ஏற்றவகையில் மத்திய அரசு விலை நிர்ணயித்தால், இந்த அரசாங்கம் அதை அமல்படுத்தத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. முருகேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குஜராத், பீகார் போன்ற மாநிலத்தில் ஒரு டன் கரும்புக்கு 300 லிருந்து 350 ரூபாய் கொடுக்கப்படுவதோடு. அந்தக் கரும்புக்கு உண்டான வெட்டுக் கூலியும், டிரான்ஸ் போர்ட் சார்ஜும் ஆலை நிர்வாகமே ஏற்றுக்கொள்கிறது. அதுமாதிரி தமிழ்நாட்டிலே கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நடைமுறையில் இருந்து வருகிற தமிழ்நாட்டு பழக்கம் 40 கிலோ மீட்டருக்கு மேல் கரும்பை ஏற்றிவர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், அந்த ஆலை நிர்வாகம் அதற்குரிய தொகை தர தற்போது விதி இருக்கிறது. அதை 20 கிலோ மீட்டராகக் குறைக்கலாமா என்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது. பேச்சு வார்த்தை நடத்திய பிறகு, அதை அவைக்கு அறிவிக்கிறேன்.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயி தான் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை மார்க்கெட்டில் விற்பனை செய்கிறான். ஆனால், இப்போது சர்க்கரை ஆலைகளுக்குத் தன்னுடைய விளை பொருள்களைச் சர்க்கரை ஆலைக்கே கொண்டு வந்து கொடுப்பதால், அந்த டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ் பூராவும் கூட்டுறவுச் சங்கங்களாக இருந்தாலும் அல்லது தனிப்பட்ட முதலாளிகளாக இருந்தாலும், அவர்களே ஏற்றுக்கொள்ளும் முயற்சிகளை அரசாங்கம் எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத் தலைவரவர்களே, ஆலை நிர்வாகம் இப்போது 5 ரூபாய் உயர்த்தித் தாருங்கள் என்றால்கூட அதைக் கொடுக்க மறுத்துக்கொண்டிருக்கிறார்கள். டிரான்ஸ்போர்ட் சார்ஜசை அவர்களே கொடுக்க வேண்டுமென்றால், விலையைக் குறைக்க வேண்டுமென்று சொல்லுவார்கள். இடைவெளியினை, கிலோ மீட்டரைச் சற்று தளர்த்தலாமா என்ற ஆலோசனை அரசுக்கு இருக்கிறது.

திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கரும்பு சாகுபடிக்கு வழங்குகின்ற கடன்களுக்கு வட்டி போடப்படுகிறது. அதைப்போல கரும்பை வெட்டிக் கொடுக்கும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட வேண்டிய பணம் பல மாதங்கள் ஆகியும் வழங்கப்படாமல் இருக்கிறது. அதற்கு வட்டி சேர்த்து வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆரம்பத்திலே சொல்லி இருக்கிறேன். எந்த ஆலையில், எவ்வளவு ரூபாய், எந்த ஆண்டில் பாக்கி இருக்கிறதென்ற விவரத்தை அறிவித்தால், அதற்குரிய நடவடிக்கையை உடனடியாக இந்த அரசு எடுக்கும்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கரும்பு விவசாயிகளுக்கு மத்திய அரசு ஒரு விலையை நிர்ணயிக்கிறது. இங்கு 10 ரூபாய் அதிகமாக அளித்து நிர்ணயிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் பேக்டரியில் உள்ள டைரக்டர்கள் மத்திய அரசு விலைதான் தரப்பட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆகவே, இப்படி விலை நிர்ணயித்து, மாநில அரசு பொதுவாகவே விவசாயிகளின் விளை பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் இப்படி அறிவித்ததற்குப் பிறகு மாநில சர்க்கார் அறிவிப்பதைச் சிலபேர் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது உண்மைதான். ஆனால் நமது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துக் கூட்டுறவு ஆலைகளும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. தனியார் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதால் அதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கலாமா என்பது குறித்து சட்டத்துறையைக் கலந்து ஆலோசிக்கலாமா என்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. தி. ரா. மாசிலாமணி.

டாக்டர் சி. ரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயர் அறிவிப்பதில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, தயவுசெய்து என்னை டாக்டர் மாசிலாமணி என்று அழைத்தால் குழப்பத்தைத் தவிர்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் சி. ரா. மாசிலா மணி அவர் தி. இரா. மாசிலாமணி.

டாக்டர் சி. ரா. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகளிலிருந்து, அரசாங்கத் திற்கு வரவேண்டிய கட்டணம் வசூலிக்கப்படாமல் இருக்கிறது. அதன் காரணமாக சுகர் கேன்செஸ் நிதியிலிருந்து பராமரிக்கப் பட வேண்டிய சாலைகள் எல்லாம் பராமரிக்கப்படாமலேயே இருக்கின்றன. எனவே அந்தக் கட்டணத்தை உடனடியாக வசூலிக்கும் முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னாலே கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானமே இந்த அடிப்படை யில்தான் தரப்பட்டிருந்தது. அதையொட்டி நான் அவைக்கு அளித்த பதிலில் கூடுமானவரையில் உயர்நீதிமன்றத் தால் ரிட் மனுவின்மீது விதிக்கப்பட்ட ஸ்டேயை வெகேட் பண்ணுவதற்கான நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம் என்கிற தகவலை மட்டும் தற்போது தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருணா சுகர்ஸ் என்னும் சர்க்கரை ஆலையின் விவகாரம் ஆலைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பதிவு செய்யப் படாத கரும்பை வெளி ஆலைகளுக்கு அனுப்பும்போது, பதிவு செய்யப்பட்ட கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்கிற அதே விலைக்குப் பதிலாக மத்திய சர்க்கார் அறிவித்திருக்கிற அந்த குறைந்த விலையைக் கொடுத்தால் போதும் என்று சுகர் டைரக்டர் அவர்கள் உத்தரவு போட்டிருப்பதன் காரண மாக நியாயமான விலை அவர்களுக்குக் கிடைக்காமல் இருக் கிறதே. இதைப் போக்க, ஆலைகளுக்குக் கரும்பு கொடுக்கும் விவசாயிகளுக்குக் கிடைக்கிற விலையே வெளியே அனுப்பப் படுகிற கரும்புக்கும் கிடைக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, வினாவினை ஆரம்பிக்கும்போதே ' பதிவு செய்யப் படாத கரும்பு ' என்றுதான் ஆரம்பித்திருக்கிறார். எல்லை ஒன்றாக இருந்தாலும் பதிவு செய்தால் தான் ஆலை நிர்வாகம் பொறுப்பு என்று விதி இருக்கிறது. எனவே தயவு செய்து இந்த ஆண்டிலிருந்தாவது அவர்களையெல்லாம் பதிவு செய்து கொள்ளுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 143 மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் பெற்றுள்ளது. அடுத்து வினா எண். 144.

சாத்தனூர் அணை பூங்காவில் மின் விளக்குகள்.

144—(*வினா எண். 29)—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் அணை பூங்காவில் மின் விளக்குகள் சரியாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றனவா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, சாத்தனூர் அணை பூங்காவில் உள்ள மின் விளக்குகள் சரியாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணை வடாற்காடு மாவட்டத்தின் தெற்கு பகுதியில் உள்ள ஒரு சுற்றுலா மையமாக இருந்து வருகிறது. ஆனால் சமீப காலங்களில் அங்கே விளக்கு அலங்காரங்கள், பூங்காக்கள் போன்றவைசரியான முறையில் பராமரிக்கப்படாத காரணத்தால் தான் சுற்றுலாப் பயணிகள் அங்கே வருவது கூட தற்போது குறைந்து இருக்கிறது என்பதை அமைச்சர் அறிவாரா ? எனவே ஏற்கெனவே 1974, 1975, 1976 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு செலவழித்து அவைகள் பராமரிக்கப்பட்டனவோ அதே அளவுக்குத் தொகை ஒதுக்கி அவற்றைப் பராமரிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் நானே அந்தப் பகுதிக்குச் சென்று அந்த இடங்களைப் பார்வையிட்டு, இன்னும் மின் விளக்குகள் எங்கெங்கே எந்தெந்த வகையில் போட வேண்டும் என்று யோசனை தெரிவித்துவிட்டு வந்திருக்கிறேன். அடுத்தமுறை மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பக்கம் போகிறபோது அவற்றைப் பார்த்து விட்டு வந்து சொல்லலாம். தற்போது அவற்றின் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் ரூ. 20 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. இதில் மின்சாரப் பராமரிப்புக்காக ரூ.16 இலட்சம், மீதியிருக்கிற ரூ.4 இலட்சம் மின்கட்டணமாகக் கட்டப்பட்டு வருகிறது. ஆகவே, தற்போது அந்த ஒளிசிந்துகிற வண்ண விளக்குகள் எப்படி இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் பார்த்து விட்டு சொல்லட்டும். மேலும், தேவை என்றால் அலங்கார விளக்குகள் போடப்படும்.

1989 ஏப்ரல் 27]

[முற்பகல் 9-40]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே சரியான முறையில் 1974-75 ஆம் ஆண்டுகளில் தமிழ் சினிமா படங்கள், தெலுங்கு சினிமா படங்கள், இந்தி சினிமா படங்கள் எல்லாம் சாத்தனூரில் எடுக்கப்பட்டன. ஆனால் சமீபத்தில் அது சரியான முறையில் இல்லை என்ற காரணத்தாலே தான் அவர்கள் அங்கு வருவதில்லை. அதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அந்த வகையில் அதை உரிய முறையில் பராமரித்து பழைய நிலையை அடைவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு ஒரு செய்தியை நான் சொல்ல விரும்புகிறேன். பொதுவாகவே இப்போது தமிழ்த்திரைப்படங்கள் இப்படிப்பட்ட அணைக்கட்டுகள், ஆற்று ஓரம், சாலை ஓரம் ஆகிய இடங்களில் எல்லாம் எடுப்பதில்லை. சென்னைக்குள்ளேயே எங்கேயோ ஒரு வீட்டிலே உள்ளேயே எடுத்துவிட்டு, அதையும் ஸ்டுடியோவில் கூட எடுப்பதில்லை ; ஒரு வீட்டை நன்கு டெக்கரேட் செய்து அதற்குள்ளேயே எடுத்து முடித்துவிடுகிறார்கள் சிக்கன முறையில். அங்கேயே ஆறுகளைக் கொண்டு வருகிறார்கள் அணைகளைக் கொண்டு வருகிறார்கள் ; எல்லாம் ஒரு சிறு வீட்டுக்குள்ளேயே முடிந்து விடுகிறது. ஆகையினாலேதான் இப்போது தமிழ்த் திரைப்படங்கள் இப்படிப்பட்ட இடங்களுக்குப் போவது குறைந்து இருக்கிறது. உறுப்பினருக்கு அப்படிப்பட்ட ஏதாவது திரைப்படம் தயாரிக்கும் திட்டம் இருந்து அதை சாத்தனூரிலே எடுப்பது என்று முடிவு எடுத்திருந்தால், உறுப்பினருக்காக பிரத்தியேக நடவடிக்கை எடுத்து, சாத்தனூரில் மின் விளக்குகள் அமைக்கப்பட்டு அவருக்கு அந்த வாய்ப்பு தரப்படும்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு தவறான பார்வையில் சினிமாவைப் பற்றி சொல்கிறார்கள். சாத்தனூர் அணைக் கட்டைப் பற்றி, நான் சினிமா தயாரிப்பாளர் என்ற முறையிலே சொல்கின்றேன். சாத்தனூர் அணைக்கட்டை பல்லாயிரக் கணக்கான தடவை எடுத்து எடுத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களை மாண்புமிகு உறுப்பினர் என்ற முறையிலே தான் கேள்வி கேட்க அனுமதித்து இருக்கின்றேன் (சிரிப்பு).

திரு. பெ. சீனிவாசன் : பார்த்த உடனே இது சாத்தனூர் என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒவ்வொரு சாதாரண ஜனங்களுக்குக்கூட அது புளித்துப் போன ஒரு அணைக்கட்டு; சினிமாலகத்திலே அது ஒரு புளித்துப் போன ஒரு சைட்; அந்த

லொக்கேஷன் எடுபடாது; ஆகையால் புதிய புதிய இடங்களைப் போய்ப் பார்த்து எடுக்கிறார்கள். அமைச்சரவர்கள் புதிதாக வந்திருக்கிற படங்கள் எல்லாம் சென்னையிலே ஒரு வீட்டில் எடுக்கிறார்கள் என்று சொன்னார்கள்; அப்படியல்ல. ஒரு வீட்டிலே எடுக்கிற காட்சியை எடுப்பார்கள்; மற்ற காட்சிகளை எல்லாம் தொலை தூரத்தில் போய் இடங்களைக் கண்டுபிடித்து எடுக்கிறார்கள். இது அமைச்சருக்குத் தெரியும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் எடுத்த படங்களைப் பார்த்ததில்லை.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு தயாரிப்பாளரா ?

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய வட ஆற்காடு மாவட்டத்தினுடைய சாத்தனூர் அணைக்கட்டின் பெருமைகளை, அலங்காரங்களை இங்கே சொன்னார்கள். தென் மாவட்டங்களிலே வைகை அணைக்கட்டு தலைவர் காமராசர் காலத்திலே—தென் மாவட்டங்களுக்கு சுற்றுலாத் திட்டமாக அமைக்கப்பட்டு ஒவ்வொரு சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் பார்ப்பதற்காக போவது வழக்கமாக இருக்கிறது. இன்றைக்கு வைகை அணைக்கட்டு பொலிவு இழந்து, அழகு இழந்து, மின் விளக்குகள் எல்லாம் சரிவர பாரமரிக்கப்படாமல் இருப்பது ஆகியவைகளை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அண்மையில் அங்கே சென்று இருந்த போது முறையிட்டார்கள். சாத்தனூருக்கு இருக்கிற மனவளம், அந்த மண் வாசனையை மதுரை மாவட்டத்திலுள்ள வைகை அணைக்கும் வைத்து அவர்களுடைய கருணை திரும்புமா என்று தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடத்துக்கு இருந்த மண்வாசனை அக்கறையில் சட்டமன்றத்தில் ஒரு கேள்வி போட்டு இருக்கிறார். தென்பாண்டி மண்டலத்தின் மண் வாசனையிலே இவ்வளவு அக்கறையிலுள்ள திரு. தங்கபாண்டியன் கேள்விஒன்றை எழுதி இந்தத் துறைக்கு அனுப்பி இருக்கலாம். இருந்தாலும் அவருக்கு நான் சொல்கிறேன், அவரோடு நானும் சென்று வைகை அணையிலே விளக்குகள் போடுவது பற்றி அதிகாரிகளோடு ஆலோசனை நடத்திவிட்டு வந்திருக்கின்றேன். அது எப்படி செயல்படுகிறது என்பதை மண் வாசனை உள்ள திரு. தங்கபாண்டியன் ஒரு முறை சென்று வந்து மீண்டும் என்னிடத்தில் அதைப் பற்றி தெரிவித்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாகவே பொதுப் பணித் துறைக்கு அனுப்பினால் வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றிய விடைகள் தான் வருவதாகச் சொல்கிறார்கள். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, எந்தப் பகுதியிலே இருந்து கேள்விகள் வந்தாலும் அரசு வரவேற்கிறது.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு தலைவரவர்களே, சாத் தனூர் அணையில் பெரிய முதலைப் பண்ணை ஒன்று உள்ளது. பல்வேறு சுற்றுலாப் பயணிகள் வருகின்ற காரணத்தாலும், அங்கே புதிதாக பார்க்குகள் அமைத்து அவர்களைக் கவருகின்ற வகை யிலேயும் ஏற்பாடு செய்யவேண்டும். சுற்றுலாப் பயணிகள் மூலம் வருகின்ற வருமானம் ஒரு ஆண்டுக்கு எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, கேள்வி யின் விளக்குகள் போடுவதைப் பற்றி, முதலைப்பண்ணை பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். முதலைப் பண்ணையைப் பார்க்க சுற்றுலாப் பயணிகள் நிறைய பேர் வருகிறார்கள் ; ஆனால் அதற்கு வருகிற வருமானம் எவ்வளவு என்றவிவரம் என்னிடம் தற்போது இல்லை. அதுகுறித்து தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் அளிக்க முடியும்.

நாட்ராம்பள்ளித் தொகுதியில் செட்டேரி அணை.

145 (*வினா எண் 501)— திரு. ஆர். மகேந்திரன் : மாண்பு மிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில், வெலகல் நத்தம் ஊராட்சியில் கட்டுப்பட்டுள்ள செட்டேரி அணையைச் சீர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இந்த அணை தற்பொழுது நல்ல நிலையில் உள்ளதால், இதனை சீர் செய்ய நடவடிக்கை ஏதும் தற்போது தேவையில்லை என்று அரசு கருதுகிறது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாகவே பொதுப் பணித் துறைக்கு அனுப்பினால் வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றிய விடைகள் தான் வருவதாகச் சொல்கிறார்கள். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, எந்தப் பகுதியிலே இருந்து கேள்விகள் வந்தாலும் அரசு வரவேற்கிறது.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு தலைவரவர்களே, சாத்தனூர் அணையில் பெரிய முதலைப் பண்ணை ஒன்று உள்ளது. பல்வேறு சுற்றுலாப் பயணிகள் வருகின்ற காரணத்தாலும், அங்கே புதிதாக பார்க்குகள் அமைத்து அவர்களைக் கவருகின்ற வகையிலேயும் ஏற்பாடு செய்யவேண்டும். சுற்றுலாப் பயணிகள் மூலம் வருகின்ற வருமானம் ஒரு ஆண்டுக்கு எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, கேள்வியின் விளக்குகள் போடுவதைப் பற்றி, முதலைப்பண்ணை பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். முதலைப் பண்ணையைப் பார்க்க சுற்றுலாப் பயணிகள் நிறைய பேர் வருகிறார்கள் ; ஆனால் அதற்கு வருகிற வருமானம் எவ்வளவு என்றவிவரம் என்னிடம் தற்போது இல்லை. அதுகுறித்து தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் அளிக்க முடியும்.

நாட்ராம்பள்ளித் தொகுதியில் செட்டேரி அணை.

145 (*வினா எண் 501)— திரு. ஆர். மகேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில், வெலகல் நத்தம் ஊராட்சியில் கட்டுப்பட்டுள்ள செட்டேரி அணையைச் சீர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இந்த அணை தற்பொழுது நல்ல நிலையில் உள்ளதால், இதனை சீர் செய்ய நடவடிக்கை ஏதும் தற்போது தேவையில்லை என்று அரசு கருதுகிறது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியும் வடார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தது தான். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவரவர்கள் வடார்க்காடு மாவட்டக் கேள்விகளாக ஒரு நாளைக்குப் போட்டுவிட்டு இப்படியொரு கேள்வியைக் கேட்கிறார்களோ என்று நான் ஐயப்படுகிறேன். (சிரிப்பு).

திரு. ஆர். மகேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சுமார் 15 வருடங்களுக்கு முன்பு நாட்ராம்பள்ளி தொகுதியிலே, வெலகல்நத்தம் கிராமத்து அருகிலே கொட்டாற்றின் குறுக்கே செட்டேரி அணை கட்டப்பட்டது. அதை டாக்டர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள். அந்த அணை கட்டப்பட்டதன் நோக்கம், அந்த அணையின் கீழ் பகுதியில் இருக்கின்ற அனைத்து ஏரிகளுக்கும் தண்ணீர் நிரம்பிய பிறகு அந்த அணையின்கீழ் பகுதியிலே இருக்கின்ற சுமார் 830 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அந்த அணை கட்டப்பட்டது. ஆனால், அந்த அணையின்கீழ் பகுதியில் இருக்கின்ற ஏரிகள் அனைத்தும் காய்ந்து கிடக்கின்றன. சுமார் பத்து ஏக்கர் கூட நீர்ப்பாசனம் நடைபெறவில்லை. இத்தகையதொருதிட்டத்தைப்பயன்படுத்திஅந்த அணைக்குத் தண்ணீர் கொண்டு வந்து கீழ் பகுதியிலுள்ள ஏரிகளுக்குத் தண்ணீரை விட அரசு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அணை செப்பனிடப்படுமா என்று கேட்டார்கள். அணை நல்ல நிலையிலே இருக்கிறது. மழை பொழிந் தால்தான் அணைக்கு நீர் வரும். ஆனால், இந்த அணைக்கு ஒரு நிலைமை என்னவென்றால், இந்த அணைக்குத் தண்ணீர் வருகிற அந்த வரத்துக் கால்வாய்க்கு மேற்கே ஆந்திராவின் எல்லை இருக்கிறது. ஆந்திர மாநிலம் - ஆந்திர எல்லைக்குள், அதாவது நம்முடைய அணையினுடைய முகத்துவாரம், அதனுடைய நுழைவாயிலுக்குப் பக்கத்தில் ஒரு ஏரியைக் கட்டிவிட்டார்கள். ஆக, தண்ணீர் அங்கே மடக்கி, தேக்கப்படுகிறது. இதை நான் மாண்புமிகு உறுப்பினரோடு அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டேன். ஆக, தண்ணீர், மழை பொழிந்தால், மற்றக் கால்வாய்களில் வந்து, அணை நிரம்பலாம். ஆந்திர மாநிலத்தில் இருக்கிற ஏரியிலிருந்து தண்ணீரை விடச் சொல்லி, இந்த அணையை நிரப்ப வேண்டுமானால், அந்த மாநிலத்தோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருக்கிறது.

திரு. ஆர். மகேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியமைக்கு நன்றி, அடுத்த கேள்வி ஒன்றைக் கேட்க நான் விரும்புகிறேன். அந்த அணை டாக்டர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது

என்ற எண்ணத்தோடு, கடந்த கால ஆட்சியிலே இருந்த ஆட்சியாளர்கள் அதை அறவே மறந்து விட்டார்கள். அந்த அணையை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் பார்வையிட்டார்கள். அந்த அணையை டாக்டர் கலைஞரவர்கள் திறந்து வைத்தார்கள். அவர் அதிலே வைத்த பெயர்பலகை கூட அந்த அணையில் இல்லை. அந்த அணையிலே ஒரு பூங்காகூட இல்லை ஒரு சிறந்த பூங்காவை அந்த அணையில் ஏற்படுத்தி, அந்த அணையை அழகுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல், இந்த அணை 1975ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ரூ. 42,63,000 செலவிலே கட்டப்பட்டது. இந்த அணையிலிருந்து 15 ஏரிகளுக்குத் தண்ணீர் போகிறது. அதன் மூலமாக 1,230 ஏக்கர்கள் பாசனம் பெறுகின்றன. கலைஞர் அவர்கள் இந்த அணையைக் கட்டியதால் அந்த அணைக்கட்டிலே கலைஞருடைய பெயர்கூட இல்லை என்று அவர்கள் சொன்னார்கள். கல்லணையைக் கட்டியவன் கரிகால் பெருவளத்தான் தான். ஆனால் பெயர் கல்லணையிலே இல்லை. கரிகால் பெருவளத்தான் பெயர் தமிழகத்திலே என்றும் நிற்கும், நிலைக்கும், நின்றுகொண்டுதான் நிலைத்திருக்கும். அதைப்போல், கலைஞருடைய பெயரை யார் மறைத்தாலும், அவருடைய பெயர் தமிழகத்திலே நிற்கும், நிலைக்கும், புகழ் ஓங்கி நிற்கும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி தமிழகத்திற்கு வருகின்ற பல கால்வாய்கள், நதிகளை கர்நாடக மாநிலமும், ஆந்திர மாநிலமும் இப்படிச் செய்து ஏரிகளைக் கட்டித் தண்ணீரைத் தடுத்து விடுகிறார்கள். கீழே இருக்கின்ற ஆயக்கட்டுதாரர். Lower Riparian Rights என்கின்ற அளவிற்கு, அவர்கள் அதை இழந்து விடுகிறார்கள். இதுவொரு மறுக்கப்படாத ஜீவாதார உரிமை. இதை எந்த அரசும் தன்னிச்சையாக எடுத்துக்கொள்ள முடியாது. எனவே, இதை குறித்த ஒரு முறையான பேச்சுவார்த்தையை ஆந்திர மாநில அரசோடும், கர்நாடக அரசோடும் நடத்துவதற்கு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாட்ராம்பள்ளிக்கும், ஆந்திர மாநில அரசுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா ?

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே,

This question arises because of the reply of the Honourable Minister எனவே, அதனால் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசு முன்வருமா ? ஏதாவது இதுவரை பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9 - 50)

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்து ஆந்திர மாநில நீர்ப்பாசனத் துறை அமைச்சரோடு பேசப்படும் என்று நான் பதிலுரைக்கும் போதே தெரிவித்தேன்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் காலத்தில் இந்த செட்டேரி பகுதியில் மட்டு மல்லாமல் நிலத்தடி நீரை நம்பியிருக்கிற கீழ்ப்பகுதியில் இருக்கிற பல கிராமங்களுக்கு பயன்படுகிற வகையில் அந்த நேரத்தில் திட்டத்தைப் போட்டு, அந்தத் திட்டம் செயல்பட்டு வந்தது. அதற்குப்பிறகு ஆந்திராவில் அணையை கட்டி தடுத்துவிட்டார்கள் என்றுஅமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கேஅவர்களோடு பேசி உடனடியாக அந்தத் தண்ணீரைப் பெற்று கீழ்ப்பகுதியில் இருக்கிற விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர் களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கேட்ட கேள்வியைத் தான் கேட்டிருக்கிறார். அவர் 'ஆக்டிவ்' வாய்சில் கேட்டார். இவர் 'பேசிவ் வாய்சில்' கேட்டிருக்கிறார். நான் 'பேசிவ் வாய்சில்' சொன்ன பதிலை 'ஆக்டிவ் வாய்சாக' எடுத்துக் கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது ஆந்திரப் பகுதி யில் அவர்கள் அணைகட்டி தமிழகத்தில் வடாற்காடு மாவட்டத் தில் குறிப்பிட்ட பகுதிக்கு வரும் தண்ணீரை நிறுத்திவிட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதைப்போல மேற்குத் தொடர்ச்சி மலையில் நமது பகுதியில் உற்பத்தியாகும் ஆறுகளை நாம் அங்கே அணைகளைக் கட்டி கிழக்கே திருப்பிவிட அரசு ஆவன செய்யுமா? இல்லையெனில், கேரளா அரசோடு இன்னும் பேச்சுவார்த்தைதான் செய்து கொண்டிருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாப் பிரச்சினைகளையும் பேச்சு வார்த்தை மூலமாக சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளலாம் என்று கருதுகிறோம். காவிரியில் அதுதான் பிரச்சினை. பாண்டியாறு புன்னம்புழாவில் அதுதான் பிரச்சினை. பாலாற்றில் பேத்தமங்க லத்தில் அதுதான் பிரச்சினை. ஆரணியாற்றில் அணை கட்டு வதிலும் அதுதான் பிரச்சினை. வெலகல் நத்தம் வரையில் இப்படி இருக்கிறது. காரணம் இதில் இரண்டு, மூன்று மாநிலங்கள் இணைந்து இருக்கிற காரணத்தால், ஒரு மாநிலத்திற்கு மாநிலம் இடையில் இப்படிப்பட்ட சுமூகமான நிலையை உருவாக்குவதற்கு பேச்சுவார்த்தை தான் துணை செய்யும் என்று இந்த அரசு கருதுகிறது.

[1989 ஏப்ரல் 27]

பொதியன்பள்ளம் அணைக்கட்டுத் திட்டம்.

146—(*வினா எண். 1009)—திரு. வ. முல்லைவேந்தன்; மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மொரப்பூர் தொகுதியில், பொதியன்பள்ளம் அணைக்கட்டு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) பணி எப்போது தொடங்கப்பெறும்?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, (அ) இத்திட்டம் தல அதிகாரிகளின் விரிவான ஆய்வில் உள்ளது.

(ஆ) வினாவிற்கு தற்பொழுது இடமில்லை.

(இ) திட்ட மதிப்பீடு, தோராயமாக ரூ. 23.00 இலட்சங்கள் ஆகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் ஒரு வறட்சியான பகுதியாக இருக்கிற காரணத்தால் 1974ஆம் ஆண்டில் நம்முடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது அந்த பொதியனபள்ளம் அணைக்கட்டுத் திட்டம் நிறைவேற்றப்பட வேலைகள் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டு, ஆட்சி கவிழ்க்கப்பட்ட காரணத்தால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டு விட்டது. வறட்சியாக இருக்கிற அந்தப் பகுதியில், விவசாயிகள் மேம்பாடு அடைய விரைவில் நடவடிக்கையெடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பல திட்டங்கள் இப்படி கைவிடப்பட்டுள்ளன. மோர்தானா திட்டம் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டதுதான். அது கைவிடப்பட்டது. செண்பகத் தோப்புத் திட்டம் அப்படி விடப்பட்டிருக்கிறது. அந்த வகையில் இந்த அணைக்கட்டும் சேர்ந்திருக்கிறது. எனவேதான் இந்த அரசு இந்தத் திட்டங்களை எடுக்கவேண்டும், இவை வறட்சிப்பகுதிகளுக்கும் பயன்படும் என்ற எண்ணத்தோடு, இந்த திட்டத்தின் ஆய்வை மேற்கொள்ளும்படி தல அதிகாரிகளுக்கு—லோக்கல் ஆபீசர்ஸ்'—சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆய்வு அறிக்கை கிடைத்தவுடன் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தலைமைப் பொறியாளர் அந்த இடத்தைப் பார்வையிட்டு அங்கே ஒரு பெரிய அணையைக் கட்டலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் 23 லட்சம் ரூபாய் என்பது ஒரு சிறிய ஏரி கட்டுகிற அளவிற்குத்தான் இருக்கும். எனவே, அதை ஒரு பெரிய அணைக் கட்டுத் திட்டமாக நிறைவேற்றவும், இந்த வறட்சிக் காலத்தில் பல்வேறு மீட்புப் பணியில் அந்த வேலைகளை எடுத்துக் கொள்ளவும் வேண்டுமென்று விரும்புகிறேன். அதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை ஒரு தோராயமான மதிப்பீடாகத்தான் தெரிவித்தேன். வறட்சி நிவாரணப் பணியில் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அளவிற்கு அவ்வளவு தொகையை அதில் போட முடியாது. அதற்கு வேறு திட்டங்கள் உண்டு. வேறு வகையில் அது கட்டப்படும். முதலில் ஆய்வு அறிக்கை கிடைக்கட்டும். எவ்வளவு தொகையில் அந்த அணையைக் கட்டுவது என்பதை அரசு பின்னர் கவனிக்கும்.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு தலைவர் அவர்களே தர்மபுரி மாவட்டம் பொதியன்பள்ளம் பகுதி, வாணியாறு அணைக்கட்டுப் பகுதி, தும்பஹள்ளி அணைக்கட்டுப் பகுதி, ஈச்சம்பாடி அணைக்கட்டுப் பகுதி ஆகிய பகுதிகளில் இலங்கை வாழ்த்தமிழர்களுக்காக கடந்த காலத்தில் கட்டப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட சிமெண்ட் ஸீட் கூரை வேய்ந்த வீடுகள், இப்போது இலங்கை வாழ்த் தமிழர்கள் மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்பட்டு விட்ட காரணத்தால் வீணாக பாழடைந்த நிலையில் இருக்கின்றனஇவைகள பொதுப்பணித்துறையைச் சேர்ந்தவை என்று சொலகிறார்கள். அப்படியானால் அவைகள் பழுதுபார்க்கப்பட்டு, வீடற்ற ஏழைகளுக்கு அளிக்கப்படுமா என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, புதிய தகவல். அரசு ஆராயும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் யானைக்கால் நோய்.

147—(*வினா எண். 355)—திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் புதுக்கடை, கருங்கல், இரணியல் போன்ற பகுதிகளில் யானைக்கால் நோய் வேகமாகப் பரவிவருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அது குறித்து மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

[1989 ஏப்ரல் 27

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தலைமைப் பொறியாளர் அந்த இடத்தைப் பார்வையிட்டு அங்கே ஒரு பெரிய அணையைக் கட்டலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் 23 லட்சம் ரூபாய் என்பது ஒரு சிறிய ஏரி கட்டுகிற அளவிற்குத்தான் இருக்கும். எனவே, அதை ஒரு பெரிய அணைக் கட்டுத் திட்டமாக நிறைவேற்றவும், இந்த வறட்சிக் காலத்தில் பல்வேறு மீட்புப் பணியில் அந்த வேலைகளை எடுத்துக் கொள்ளவும் வேண்டுமென்று விரும்புகிறேன். அதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை ஒரு தோராயமான மதிப்பீடாகத்தான் தெரிவித்தேன். வறட்சி நிவாரணப் பணியில் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அளவிற்கு அவ்வளவு தொகையை அதில் போட முடியாது. அதற்கு வேறு திட்டங்கள் உண்டு. வேறு வகையில் அது கட்டப்படும். முதலில் ஆய்வு அறிக்கை கிடைக்கட்டும். எவ்வளவு தொகையில் அந்த அணையைக் கட்டுவது என்பதை அரசு பின்னர் கவனிக்கும்.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு தலைவர் அவர்களே தர்மபுரி மாவட்டம் பொதியன்பள்ளம் பகுதி, வாணியாறு அணைக்கட்டுப் பகுதி, தும்பஹள்ளி அணைக்கட்டுப் பகுதி, ஈச்சம்பாடி அணைக்கட்டுப் பகுதி ஆகிய பகுதிகளில் இலங்கை வாழ்த்தமிழர்களுக்காக கடந்த காலத்தில் கட்டப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட சிமெண்ட் ஸீட் கூரை வேய்ந்த வீடுகள், இப்போது இலங்கை வாழ்த் தமிழர்கள் மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்பட்டு விட்ட காரணத்தால வீணாக பாழடைந்த நிலையில் இருக்கின்றனஇவைகள பொதுப்பணித்துறையைச் சேர்ந்தவை என்று சொலகிறார்கள். அப்படியானால் அவைகள் பழுதுபார்க்கப்பட்டு, வீடற்ற ஏழைகளுக்கு அளிக்கப்படுமா என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, புதிய தகவல். அரசு ஆராயும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் யானைக்கால் நோய்.

147—(*வினா எண். 355)—திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் புதுக்கடை, கருங்கல், இரணியல் போன்ற பகுதிகளில் யானைக்கால் நோய் வேகமாகப் பரவிவருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அது குறித்து மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

1989 ஏப்ரல் 27]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) யானைக்கால் வியாதியைத் தடுப்பதற்காக தடுப்புத் திட்டங்கள் புதுக்கடை, கருங்கல் மற்றும் இரணியல் ஆகிய மூன்று இடங்களிலும் செயல்பட்டு வருகிறது.

திரு. பொன். விஜயராகவன் : தலைவர் அவர்களே இப்போது அங்கே நடைமுறைப்படுத்தப்படுகின்ற தடுப்புத் திட்டங்கள் இந்தக் கொசுவை ஒழிப்பதற்கான திட்டமாக இருப்பதாகத்தான் சொல்கிறார்கள். ஆனால் இந்த நோய் அந்த குறிப்பிட்ட மூன்று இடங்களில் அல்லாது, மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் வெகு வேகமாக பரவிக்கொண்டு வருகின்ற காரணத்தால் இதைத் தடுப்பதற்காக மருத்துவ வசதிகளோ, மருத்துவ நிலையங்களோ, யானைக்கால் வியாதியைத் தடுப்பது குறித்த ஆராய்ச்சி நிலையங்களோ நிறுவுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் யானைக்கால் நோயைத் தடுப்பதற்காக 1985-ஆம் ஆண்டு முதல் நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு யானைக்கால் நோய்த்தடுப்பு பகுதியும், பத்மநாபபுரம், குளச்சல் மற்றும் குழித்துறை முதலான இடங்களில் இரவு நேர சிகிச்சை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் மூலமாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மற்ற கிராமங்களில் இந்த நோய் கண்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க வகைசெய்யும் திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது. மேலே உள்ள 3 இடங்களிலும் யானைக்கால் நோய் எந்த அளவு பரவியுள்ளது என்பதைக் கண்டறிய 1987-ஆம் ஆண்டு மே மாதத்தில் தனி ஆய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டது. அந்த ஆய்வின் படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் யானைக்கால் நோய் பரவி வருவது கண்டுபிடிக்கப்பட்டது. இந்நோய் மேலும் பரவாமல் தடுப்பதற்காக இரண்டு தடுப்புப் பகுதிகள், கன்ட்ரோலிங் யூனிட்ஸ் கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்கும் கருத்து, 1989–90 ஆம் ஆண்டுக்கான பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. நிதிப்பற்றாக்குறை காரணமாக இத் திட்டத்தைச் செயல்படுத்த இயலவில்லை. எனவே, அடுத்த ஆண்டாவது இதைப் பற்றி பரிசீலித்து அரசு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொன். விஜயராகவன் : தலைவர் அவர்களே, வசதி படைத்தவர்கள் தனியார் மருத்துவமனைக்குச் சென்று இதை கவனித்து, அதற்காக சிகிச்சையைப் பெறுகிறார்கள். இந்த நோயினுடைய சிம்டம்ஸ்க் கூட ஏழை எளிய மக்களுக்கு

ஆரம்பகாலத்தில் சரியாகத் தெளிவாகத் தெரிய வருவதில்லை. இன்றைக்கு ஏறத்தாழ பல்வேறு கிராமங்களிலே 20, 25 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள் இந்த யானைக்கால் வியாதியினால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்ற சூழ்நிலை இருப்பதைக் கருத்தில் கொண்டு இதற்கு நிதிநிலை போதவில்லை, நிதிநிலை இல்லை என்ற கருத்தைச் சொல்லாமல், மக்களுடைய நல்வாழ்விற்கான பிரச்சினை என்பதைக் கருத்தில்கொண்டு, ஏற்கனவே ஏராளமான பேர்கள், பல்லாயிரக்கணக்கான பேர்கள் இதனால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, இதற்கு முன்னுரிமை அளித்து, நிதிநிலைமை குறைவாக இருந்தாலும், முன்னுரிமை அளித்து, இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து, அங்கேயிருக்கக்கூடிய யானைக்கால் வியாதியை ஒழிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தினை முதல்வர் அவர்களோடு கலந்து, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. மா. சுந்தரதாஸ்: தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் மார்த்தாண்டம், இரணியல் மற்றும் கருங்கல் ஆகியவைகள் எல்லாம் ஒரே சுற்றுவட்டாரப்பகுதிகள்தான். அந்தப் பகுதியில் நீங்கள் சொல்லுகின்ற அளவு இல்லாமல் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற தகவல் அல்லாமல், அதிகமான மக்களுக்கு இந்த நோய் பரவிக்கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப் போல், வசதி உள்ளவர்கள் பிரைவேட் மருத்துவமனைக்குச் செல்லுகிறார்கள். ஏழை எளியவர்களுக்கு சரியான மருத்துவ வசதி இல்லாத காரணத்தால், கருங்கல், இரணியல் மற்றும் மார்த்தாண்டம் போன்ற பகுதிகளில் ஒரு பெரிய மருத்துவமனையை— இந்த நோயைத் தடுப்பதற்காக ஒரு மருத்துவமனையை— அமைக்க அரசு முன்வருமா என்று அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, முதல் கேள்வியிலே இதற்குப் பதில்கள் அடங்கியிருக்கின்றன.

திரு. செ. நூர் முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த யானைக்கால் நோய் என்பது மிகக் கடுமையான அளவில் பரவிக்கொண்டு வருகிறது என்பதை அமைச்சர் அவர்களே இங்கே ஒத்துக்கொண்டார்கள். ஆனால், இப்போது அதைத் தடுக்கின்ற வகையில் நடைபெறுகிற நடவடிக்கைகள் என்னவென்று சொன்னால் கொசுவை ஒழிக்கின்ற மருந்து தெளிக்கின்ற பணிகள் பல இடங்களில் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. ஆனால் நடைமுறையில் இதைப் பார்க்கிறபோது, கொசுவை அழிக்கத்

1989 ஏப்ரல் 27]

தெளிக்கின்ற மருந்து, கொசுவின் இனவிருத்தியைப் பெருக்கு வதற்கான வீரிய மருந்தோ என்று சந்தேகப்படுகின்ற அளவிற்கு நிலைமைகள் சென்று கொண்டு இருக்கின்றன. ஆகவே உண்மையிலேயே இந்தக் கொசுவை ஒழிப்பதற்கு இந்த மருந்தால் ஒரு பயனும் இல்லை என்ற நிலைமை இருப்பதால், வேறு ஏதாவது மாற்றுத் திட்டத்தின் மூலம் கொசுவை அறவே ஒழிப் பதற்கு, கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருந்து இந்த யானை க்கால் நோயை ஒழிப்பதற்கு அரசு ஏதேனும் கருத்துரு வைத்தி திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொசுவை தடுப் பதற்காக, இப்போது சமீபத்தில்கூட ஒரு கருத்தரங்கு நடை பெற்றது. பம்பாய் போன்ற நகரங்களில் பல புதிய முயற்சிகள் எல்லாம் கண்டுபிடித்து இருப்பதாக அந்தக் கருத்தரங்கில் சொல் லப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிக்கின்ற மருந்து மிகவும் திறமையற்ற மருந்தாக இருக்கிறது என்று சொன் னார்கள். அதைப் பற்றி மீண்டும் ஆய்வுக்குக் கூட எடுத்துக் கொவ ளலாம். ஆனால் தமிழகம் முழுவதுமாக அந்த மருந்து தான் தெளிக்கப்பட்டு வருகிறது. தடை செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

குடவாசல் அரசு மருத்துவமனை.

148—(*வினா எண். 554)—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் அரசு மருத்துவ மனையை வட்ட மருத்துவமனையாக மாற்றி தேவையான மருத் துவர்கள் உதவியாளர்கள் நியமனம் செய்ய கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தஞ்சை மாவட்டம் குடவாசல் அரசு மருத்துவமனை தற்போது வட்ட மருத்துவ மனையாக செயல்பட்டு வருகிறது.

1989 ஏப்ரல் 27]

தெளிக்கின்ற மருந்து, கொசுவின் இனவிருத்தியைப் பெருக்குவதற்கான வீரிய மருந்தோ என்று சந்தேகப்படுகின்ற அளவிற்கு நிலைமைகள் சென்று கொண்டு இருக்கின்றன. ஆகவே உண்மையிலேயே இந்தக் கொசுவை ஒழிப்பதற்கு இந்த மருந்தால் ஒரு பயனும் இல்லை என்ற நிலைமை இருப்பதால், வேறு ஏதாவது மாற்றுத் திட்டத்தின் மூலம் கொசுவை அறவே ஒழிப்பதற்கு, கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருந்து இந்த யானைக்கால் நோயை ஒழிப்பதற்கு அரசு ஏதேனும் கருத்துரு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொசுவை தடுப்பதற்காக, இப்போது சமீபத்தில்கூட ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. பம்பாய் போன்ற நகரங்களில் பல புதிய முயற்சிகள் எல்லாம் கண்டுபிடித்து இருப்பதாக அந்தக் கருத்தரங்கில் சொல்லப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிக்கின்ற மருந்து மிகவும் திறமையற்ற மருந்தாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதைப் பற்றி மீண்டும் ஆய்வுக்குக் கூட எடுத்துக் கொவ ளலாம். ஆனால் தமிழகம் முழுவதுமாக அந்த மருந்து தான் தெளிக்கப்பட்டு வருகிறது. தடை செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

குடவாசல் அரசு மருத்துவமனை.

148—(*வினா எண். 554)—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் அரசு மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாக மாற்றி தேவையான மருத்துவர்கள் உதவியாளர்கள் நியமனம் செய்ய கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தஞ்சை மாவட்டம் குடவாசல் அரசு மருத்துவமனை தற்போது வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் குடவாசல் மருத்துவ மனையானது சுமார் 55 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு தனி யாராலே கட்டிக் கொடுக்கப்பட்ட ஒரு கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அந்த மருத்துவமனையில் குழந்தைகள் நல பிரிவு அவசர சிகிச்சைப் பிரிவு, எக்ஸ்ரே, ஈ.சி.ஜி. பிரிவுகள், அதி நவீன உபகரணங்களுடன் கூடிய அறுவை சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை ஏற்படுத்தவும், தேவையான பணியாளர்களை நியமனம் செய்யவும் அரசு ஆவன செய்யுமா என்பதை தங்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, அங்கேயுள்ள கட்டிடங்கள் அத்தனையும் பழுது பட்டிருக்கின்ற காரணத்தால், 20 படுக்கைகள் கொண்ட புதிய வார்டுக்கான கட்டிடம் கட்டவும், மருத்துவமனையைச் சுற்றி காம்பவுண்டு சுவர் கட்டவும், மேலும் அங்கேயுள்ள மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டியினுடைய மோட்டார் பழுதுபட்டு பல ஆண்டுகளுக்கு முன்னால் எடுத்துச் செல்லப்பட்டது மீண்டும் பொருத்தப்படாத காரணத்தால், அங்கே குடிதண்ணீர் வசதி இல்லாமல் இருக்கிறது. எனவே உடனடியாக மோட்டார் பொருத்தி, குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கவும், தேவை யான மருத்துவர்களை அங்கே பணியில் அமர்த்தவும் அரசு ஆவன செய்யுமா என்பதை தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, குடவாசலில் 16 படுக்கைகள் கொண்ட ஒரு தாலுக்கா மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. அந்த மருத்துவமனைக்கு வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை, உள் நோயாளிகள் 10 பேரும், வெளி நோயாளிகளாக 225 பேரு மாக இருக்கிறார்கள். வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை யை கணக்கில் கொண்டு, அதனுடைய வளர்ச்சிக்கான திட்டங் கள் வகுக்கப்படுகின்றன. அதே நேரத்தில், அரசினுடைய நிதி நிலையையும் கணக்கில் கொண்டு வேறு பல முன்னேற்றத்திற் கான திட்டங்கள் தீட்டப்படுகின்றன. ஆகவே உறுப்பினருடைய கருத்தோடு, இந்த இரண்டையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு—(ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்).

1989 ஏப்ரல் 27]

(அ) விளவங்கோடு தொகுதியில் சில பகுதிகளில் ஏற்கெனவே கொடுக்கப்பட்ட குடும்ப அட்டைகளைத் திரும்பப்பெறுவதால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளவங்கோடு தொகுதியில் ஏறத்தாழ மீனவர் பகுதி மற்றும் மிகவும் பின்தங்கிய பகுதி ஏழை மக்கள், ஒரு வீட்டில் 2, 3 குடும்பங்கள் இருக்கின்றன. இதற்கு முந்தைய அரசு இருந்த காலத்தில், தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், வில்லேஜ் ஆபீசர் எல்லாம் நேரடியாகச் சென்று பார்த்துத்தான் ரேஷன் கார்டுகள், ஒரு வீட்டிற்கு 2, 3 கார்டுகளைக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது புதிய ஆணை வந்திருக்கிறது என்று சொல்லி, ஒரு வீட்டிற்கு ஒரு கார்டு என்று சொல்கின்ற வகையில், ஏறத்தாழ என்னுடைய தாலுக்காவிலே 5,000 பேர்களுக்கு கார்டுகளை ரத்து செய்திருக்கிறார்கள். மேலும் இம்மாதிரி கார்டுகள் வேண்டுமென்று சொல்லி, 5,000 பேர்கள் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த கார்டுகளும் கொடுக்கப்படவில்லை. மேலும் அரிசி வாங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு, அரிசி நிறுத்தப்பட்டிருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, பழைய மாதிரி அரிசி கொடுப்பதற்கும், 5,000 பேர்களுக்கு கார்டுகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் சாதாரணமாக ஒரு வீட்டிலே 2, 3 ஏழைக் குடும்பங்கள் தங்குவது உண்மைதான். அவர்களுக்கு நேரடியாக தாசில்தார் வந்து பார்த்துத்தான் கார்டுகளைக் கொடுத்திருக்கிறார்கள். மேலும் இந்த மாதிரி இருக்கின்ற 5,000 கார்டுகளுக்கு உடனடியாக கார்டுகளை வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் எழுப்பிய பிரச்சினையைப் பற்றி சில விளக்கங்களைத் தருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

தமிழ்நாட்டினுடைய மக்கட்தொகை 5 கோடியாக இருக்கிறது. ஆனால் ரேஷன் கார்டுகளில் இருக்கின்ற மக்கட்தொகை $6\frac{1}{4}$ கோடியாக இருக்கின்றது. எனவே இந்த $1\frac{1}{4}$ கோடி மக்களுக்கு நாம் அரிசி, சர்க்கரை போன்றவைகள் வழங்கியாக வேண்டும். எனவே இதைக் கண்டுபிடிக்கும்படி அரசாங்கம் இலாக்காவை கேட்டுக் கொண்டிருக்கிறது. அப்படி அவர்கள் போய் சோதனையிடுகின்ற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போன்று ஒரு வீட்டில் இரண்டு குடும்பங்கள் இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு குடும்பத்திலும் இரண்டு குடும்பங்களுடைய எண்ணிக்கை இருக்கிறது. உதாரணத்திற்கு சுந்தரதாஸ் அவர்களுடைய குடும்பம் இருக்கிறது என்றால், அவர், அவருடைய,

[திரு. ஆற்காடு நா. வீராசாமி]

மனைவி, தாய், தந்தை, பிள்ளைகள் அதில் இருக்கிறார்கள் அவருடைய தம்பி வீட்டிலும், இவருடைய தாய், தந்தை இவருடைய பிள்ளைகளும் இருக்கிறார்கள். இப்படி எண்ணிக்கை இருக்கின்ற காரணத்தால் மக்கட்தொகை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இது ஒன்று.

இரண்டாவது சிலபேர் இரண்டு திருமணங்கள் செய்து கொண்டு, இரண்டு குடும்பங்களை நடத்துகிறார்கள். அப்படி இரண்டு மனைவிமார்கள் வீட்டிலேயும் அந்தக் கார்டுகளிலே குடும்பத் தலைவருடைய பெயர் ஒரே பெயர் தான் பதிவாகி இருக்கிறது. அப்படி இருக்கக்கூடாது ஏதாவது ஒரு குடும்பத்திலேதான் குடும்பத் தலைவருடைய பெயர் இருக்கலாம் என்று சொல்லும் போது இரண்டு பேருமே என் வீட்டில் தான் அவர் பெயர் இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். (சிரிப்பு) இலாகா இந்தப் பிரச்சினையிலே முடிவு எடுக்க முடியாத காரணத்தால் அந்தக் குடும்பத் தலைவர் எந்த வீட்டிலே அந்தப் பெயர் இருக்கலாம் என்று முடிவு எடுக்கிறாரோ அவருடைய முடிவிற்கு விட்டுவிடும்படி இலாகாவுக்கு சொல்லியிருக்கிறோம். எனவே இலாகா நல்ல முறையிலே குடும்ப அட்டைகள் வழங்குவதற்காக எடுக்கப்படுகிற இந்த நடவடிக்கைகளில் தயவுசெய்து யாரும் நோக்கம் கற்பிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சில குடும்பங்களுக்கு கார்டுகள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அது அவருடைய தொகுதியிலே மட்டும் அல்ல, எல்லோருடைய தொகுதியிலேயும் இருக்கிறது. எனவே சமீபத்திலே நடைபெற்ற அந்த தேர்தல் வாக்காளர் பட்டியலையும் கையிலே வைத்துக் கொண்டு, குடும்ப அட்டைகள் வைத்துக் கொண்டிருக்கிற அவருடைய பட்டியலையும் வைத்துக் கொண்டு சோதனை இட்டு சரி பார்க்கும்படி இலாகாவைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இவைகளையெல்லாம் பரிசீலித்து 1990 ஆம் ஆண்டில் எந்த விதமான புகாரும் இல்லாத அளவுக்கு ரேஷன் கார்டுகள் புதுப்பித்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொன். விஜயராகவன் : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லிக் கொண்டு வரும்போது சிலர் 2 மனைவிகளை வைத்திருக்கிறார்கள். 2 குடும்பங்கள் இருக்கின்றன என்பதைப் பற்றிச் சொன்னார்கள். அதை ஒரு வேளை அரசு ஏற்றுக் கொண்டது போல ஒரு தொனி இங்கே ஏற்பட்டது. இரண்டு கல்யாணம் செய்து, 2 மனைவிகளை வைத்துக் கொள்வது இந்திய சட்டப்படி குற்றமானது. ஆகவே அந்த இரண்டு மனைவிகள் வைத்திருப்பவர்களைப் பற்றி இங்கே சொல்கிறபோது ஏற்பட்ட தொனியை வைத்து அதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது போன்ற நிலைமை ஏற்படுகிறது...

1989 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் பல சட்டங்கள் இருக்கின்றன. இந்துக்களுக்கு ஒரு சட்டம் இருக்கிறது. முஸ்லீம்களுக்கு என்று ஒரு சட்டம் இருக்கிறது. முஸ்லீம்கள் 5 குடும்பங்களைக் கூட வைத்துக் கொள்ளலாம் என்று. (குறுக்கீடு). 4 குடும்பங்களை வைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. இந்தக் குடும்பங்களை எத்தனை வைத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றி இப்போது உணவு இலாகா பரிசீலித்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால் எங்களுக்கு இருக்கிற கவலை எல்லாம் அந்த எண்ணிக்கையைப் பொறுத்துத்தான். இந்துக்களிலேயே கூட முதல் மனைவி ஒப்புதல் தருவார்களேயானால் இரண்டாவது திருமணம் செய்து கொள்ள எந்தவிதமான தடங்கலும் இல்லை. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே அதிகமான '' Point of Order '' எல்லாம் வேண்டாம். ரொம்பப் பேருக்கு '' Order '' சரியாகத்தான் இருக்கிறது. (சிரிப்பு). திரு. உ. ரா. வரதராசன்

(ஆ) ஆந்திர மாநில சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சி குறித்து.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டப் பேரவையினுடைய உரிமை, அவைத் தலைவருடைய உரிமை சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையை நான் இங்கே அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதிலே உச்ச நீதிமன்றம் சம்பந்தப்பட்டிருப்பதினாலே அதைப் பற்றி பேசுகிறபோது கடைப் பிடிக்கவேண்டிய எச்சரிக்கையோடு தான் நான் இந்தப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். ஆந்திர மாநில சட்டமன்றப் பேரவையிலே ஒரு நிகழ்ச்சி. அதனுடைய விவரங்களுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. அது சம்பந்தமாக பேரவை ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி அதை அமல்படுத்துகிறது. இந்தப் பிரச்சினை ஆந்திர மாநிலத்தினுடைய உயர்நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு....

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உள்ளீடாக ஒரு கருத்தை வைத்துக் கொண்டு பேசும்போது, அந்தக் கருத்து எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அந்தக் கருத்து இந்த அவையிலே உள்ளவர்களுக்கு எல்லாம் திட்டவட்டமாகத் தெரியாது. ஆகவே உள்ளீடாக ஒரு கருத்தை வைத்து அந்த அடிப்படையில் ஒரு கருத்தை இந்த அவையிலே எழுப்புவதற்கு தாங்கள் அனுமதிப்பது முறையல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உ. ரா. வரதராசன் அவர்கள் உட்கார வேண்டும். தாங்கள் எழுப்பிய சிக்கல் குறித்து

1989 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் பல சட்டங்கள் இருக்கின்றன. இந்துக்களுக்கு ஒரு சட்டம் இருக்கிறது. முஸ்லீம்களுக்கு என்று ஒரு சட்டம் இருக்கிறது. முஸ்லீம்கள் 5 குடும்பங்களைக் கூட வைத்துக் கொள்ளலாம் என்று. (குறுக்கீடு). 4 குடும்பங்களை வைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. இந்தக் குடும்பங்களை எத்தனை வைத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றி இப்போது உணவு இலாகா பரிசீலித்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால் எங்களுக்கு இருக்கிற கவலை எல்லாம் அந்த எண்ணிக்கையைப் பொறுத்துத்தான். இந்துக்களிலேயே கூட முதல் மனைவி ஒப்புதல் தருவார்களேயானால் இரண்டாவது திருமணம் செய்து கொள்ள எந்தவிதமான தடங்கலும் இல்லை. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே அதிகமான '' Point of Order '' எல்லாம் வேண்டாம். ரொம்பப் பேருக்கு '' Order '' சரியாகத்தான் இருக்கிறது. (சிரிப்பு). திரு. உ. ரா. வரதராசன்

(ஆ) ஆந்திர மாநில சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சி குறித்து.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டப் பேரவையினுடைய உரிமை, அவைத் தலைவருடைய உரிமை சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையை நான் இங்கே அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதிலே உச்ச நீதிமன்றம் சம்பந்தப்பட்டிருப்பதினாலே அதைப் பற்றி பேசுகிறபோது கடைப் பிடிக்கவேண்டிய எச்சரிக்கையோடு தான் நான் இந்தப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். ஆந்திர மாநில சட்டமன்றப் பேரவையிலே ஒரு நிகழ்ச்சி. அதனுடைய விவரங்களுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. அது சம்பந்தமாக பேரவை ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி அதை அமல்படுத்துகிறது. இந்தப் பிரச்சினை ஆந்திர மாநிலத்தினுடைய உயர்நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு....

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உள்ளீடாக ஒரு கருத்தை வைத்துக் கொண்டு பேசும்போது, அந்தக் கருத்து எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அந்தக் கருத்து இந்த அவையிலே உள்ளவர்களுக்கு எல்லாம் திட்டவட்டமாகத் தெரியாது. ஆகவே உள்ளீடாக ஒரு கருத்தை வைத்து அந்த அடிப்படையில் ஒரு கருத்தை இந்த அவையிலே எழுப்புவதற்கு தாங்கள் அனுமதிப்பது முறையல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உ. ரா. வரதராசன் அவர்கள் உட்கார வேண்டும். தாங்கள் எழுப்பிய சிக்கல் குறித்து

நாங்களும் படித்தோம். என்றாலும் நம்முடைய தமிழகச் சட்ட மன்றப் பேரவைத் தலைவருக்கு அத்தகைய சிக்கல் ஏதும் கிடையாது. அப்படிச் சிக்கல் ஏதும் வருமானால் அது பற்றி இந்த அவை ஆராயும்.

(இ) தெலுங்கு கங்கைத் திட்டம் பற்றி ஆந்திர மாநில திட்டக் குழுத் தலைவர் பேசியுள்ளது குறித்து.

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சென்னை நகரத்தினுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த தெலுங்கு கங்கை திட்டம் சம்பந்தமாக நம்முடைய அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டு இருப்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஏற்கெனவே ஒப்பந்தபடியும் 47 கோடி ரூபாய் கொடுத்து அது வட்டி இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு பத்திரிகையிலே ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஒரு திட்டக் குழுத் தலைவர் அவர்கள், ஒரு பொறுப்பான பதவியிலே இருக்கக் கூடியவர்கள், தமிழக அரசு தர வேண்டிய பணத்தை ஒப்பந்தப் படி தராத காரணத்தினாலே கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு வராது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. ஆகையினால் அரசின் சார்பாக இது குறித்து என்ன விளக்கம் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தெலுங்கு கங்கைத் திட்டம் குறித்து இப்போது என்ன நிலவரம் என்பதைப் புதியதாகப் பொறுப்பேற்றுள்ள எங்களுக்கு முழுமையாக எதுவும் தெரிவதற்கு நியாயம் இல்லை. எனவே நான் தமிழக அரசினுடைய முக்கியமான அதிகாரிகளை எல்லாம் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். நம்முடைய சட்டமன்ற கூட்டத் தொடர் முடிந்தவுடன் ஒரு தேதி குறிப்பிட்டு ஆந்திராவிற்குச் சென்று அங்குள்ள அதிகாரிகளோடு கலந்து பேசி என்ன நிலவரத்திலே இப்போது தெலுங்கு கங்கைத் திட்டம் இருக்கிறது, எந்தெந்த நிலைகள் நிறைவு செய்யப்பட்டால் உடனடியாகச் சென்னைக்கு தெலுங்குகங்கைத் திட்டத்தினுடைய தண்ணீரைக் கொண்டுவர இயலும் என்பவைகளைப் பற்றியெல்லாம் பேசி முடித்து என்னிடத்திலே விவரம் அளிக்க வேண்டும் என்றும் அந்த விவரங்களின் அடிப்படையில் நான் ஆந்திர முதல்வர் அவர்களைச் சந்தித்து—அதற்கு ஒரு நேரம் குறிக்கப்பட்டு—அவரோடு கலந்து பேசி விரைவில் அந்தத் திட்டத்தை சென்னை மாநகருக்குக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ள இருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்களும் படித்தோம். என்றாலும் நம்முடைய தமிழகச் சட்ட மன்றப் பேரவைத் தலைவருக்கு அத்தகைய சிக்கல் ஏதும் கிடையாது. அப்படிச் சிக்கல் ஏதும் வருமானால் அது பற்றி இந்த அவை ஆராயும்.

(இ) தெலுங்கு கங்கைத் திட்டம் பற்றி ஆந்திர மாநில திட்டக் குழுத் தலைவர் பேசியுள்ளது குறித்து.

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சென்னை நகரத்தினுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த தெலுங்கு கங்கை திட்டம் சம்பந்தமாக நம்முடைய அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டு இருப்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஏற்கெனவே ஒப்பந்தபடியும் 47 கோடி ரூபாய் கொடுத்து அது வட்டி இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு பத்திரிகையிலே ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஒரு திட்டக் குழுத் தலைவர் அவர்கள், ஒரு பொறுப்பான பதவியிலே இருக்கக் கூடியவர்கள், தமிழக அரசு தர வேண்டிய பணத்தை ஒப்பந்தப்படி தராத காரணத்தினாலே கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு வராது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. ஆகையினால் அரசின் சார்பாக இது குறித்து என்ன விளக்கம் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தெலுங்கு கங்கைத் திட்டம் குறித்து இப்போது என்ன நிலவரம் என்பதைப் புதியதாகப் பொறுப்பேற்றுள்ள எங்களுக்கு முழுமையாக எதுவும் தெரிவதற்கு நியாயம் இல்லை. எனவே நான் தமிழக அரசினுடைய முக்கியமான அதிகாரிகளை எல்லாம் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். நம்முடைய சட்டமன்ற கூட்டத் தொடர் முடிந்தவுடன் ஒரு தேதி குறிப்பிட்டு ஆந்திராவிற்குச் சென்று அங்குள்ள அதிகாரிகளோடு கலந்து பேசி என்ன நிலவரத்திலே இப்போது தெலுங்கு கங்கைத் திட்டம் இருக்கிறது, எந்தெந்த நிலைகள் நிறைவு செய்யப்பட்டால் உடனடியாகச் சென்னைக்கு தெலுங்குகங்கைத் திட்டத்தினுடைய தண்ணீரைக் கொண்டுவர இயலும் என்பவைகளைப் பற்றியெல்லாம் பேசி முடித்து என்னிடத்திலே விவரம் அளிக்க வேண்டும் என்றும் அந்த விவரங்களின் அடிப்படையில் நான் ஆந்திர முதல்வர் அவர்களைச் சந்தித்து—அதற்கு ஒரு நேரம் குறிக்கப்பட்டு—அவரோடு கலந்து பேசி விரைவில் அந்தத் திட்டத்தை சென்னை மாநகருக்குக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ள இருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சந்த் சட்டையில்லாமல் அவைக்கு வந்துள்ளது குறித்து

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களை உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்வதெல்லாம் எதிர்க் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் மத்தியிலே ஒரு அச்சம் இருக்கிறது. இன்றைக்கு அருமை சகோதரர் உகம்சந்த் அவர்கள் சட்டை இல்லாமலே கையிலே கட்டை போட்டுக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதே போல மரியாதைக்குரிய உறுப்பினர் அண்ணாநம்பி அவர்களும் இதற்கு முன்னாலே கையிலே கட்டை போட்டு சட்டை இல்லாமல் வந்தார்கள். இதே போன்ற நிகழ்ச்சிகளை தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டிலே தொடர்ந்து நடத்தப்போகிறாரா ? அல்லது தடுத்து நிறுத்தப் போகிறாரா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் அருமை நண்பர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். சொன்னார். போலீசார் அடிபட்டதாகச் சொல்கிறார்கள். அதெல்லாம் வெறும் வேஷம் என்று சொன்னார். அவ்வளவுதான்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—

ஈரோட்டுக்கு அருகில் பெரியபளையத்தில் பேருந்துகள் விபத்துக்குள்ளானதால் ஏற்பட்டுள்ள உயிர் சேதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. ரமணி, சி. கோவிந்தசாமி ஆகியோர் 13–4–89 அன்று திருப்பூரிலிருந்து புறப்பட்ட ஒரு பேருந்தும், விஜயமங்கலத்திலிருந்து திருப்பூருக்கு வந்துகொண்டிருந்த ஒரு பேருந்தும் பெரிய பாளையம் என்ற இடத்தில் மோதியதால் 15 பயணிகள் இறந்துள்ளதாலும் மேலும் சிலர் கவலைக்கிடமாக உள்ளதாலும் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*** திரு. கே. ரமணி :** மாண்புமிக்க தலைவர் அவர்களே, போன 13–ந் தேதி ஏற்பட்ட நெஞ்சை பிளக்கும்படியான ஒரு கோரமான விபத்து இது. 15 பேர்களுடைய உயிர் போயிருக்கிறது. ஒரு தனியார் பேருந்து திருப்பூரிலிருந்து புறப்பட்டு ஊத்துக்குளி மார்க்கமாக ஈரோடு சென்று கொண்டிருந்தது. அதே மாதிரி ஜீவா போக்குவரத்துக் கழகம் நமது அரசு பேருந்து விஜயமங்கலம் வழியாக புறப்பட்டு,

(ஈ) உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சந்த் சட்டையில்லாமல் அவைக்கு வந்துள்ளது குறித்து

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களை உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்வதெல்லாம் எதிர்க் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் மத்தியிலே ஒரு அச்சம் இருக்கிறது. இன்றைக்கு அருமை சகோதரர் உகம்சந்த் அவர்கள் சட்டை இல்லாமலே கையிலே கட்டை போட்டுக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதே போல மரியாதைக்குரிய உறுப்பினர் அண்ணாநம்பி அவர்களும் இதற்கு முன்னாலே கையிலே கட்டை போட்டு சட்டை இல்லாமல் வந்தார்கள். இதே போன்ற நிகழ்ச்சிகளை தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டிலே தொடர்ந்து நடத்தப்போகிறாரா ? அல்லது தடுத்து நிறுத்தப் போகிறாரா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் அருமை நண்பர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். சொன்னார். போலீசார் அடிபட்டதாகச் சொல்கிறார்கள். அதெல்லாம் வெறும் வேஷம் என்று சொன்னார். அவ்வளவுதான்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—

ஈரோட்டுக்கு அருகில் பெரியபளையத்தில் பேருந்துகள் விபத்துக்குள்ளானதால் ஏற்பட்டுள்ள உயிர் சேதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. ரமணி, சி. கோவிந்தசாமி ஆகியோர் 13-4-89 அன்று திருப்பூரிலிருந்து புறப்பட்ட ஒரு பேருந்தும், விஜயமங்கலத்திலிருந்து திருப்பூருக்கு வந்துகொண்டிருந்த ஒரு பேருந்தும் பெரிய பாளையம் என்ற இடத்தில் மோதியதால் 15 பயணிகள் இறந்துள்ளதாலும் மேலும் சிலர் கவலைக்கிடமாக உள்ளதாலும் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. கே. ரமணி : மாண்புமிக்க தலைவர் அவர்களே, போன 13-ந் தேதி ஏற்பட்ட நெஞ்சை பிளக்கும்படியான ஒரு கோரமான விபத்து இது. 15 பேர்களுடைய உயிர் போயிருக்கிறது. ஒரு தனியார் பேருந்து திருப்பூரிலிருந்து புறப்பட்டு ஊத்துக்குளி மார்க்கமாக ஈரோடு சென்று கொண்டிருந்தது. அதே மாதிரி ஜீவா போக்குவரத்துக் கழகம் நமது அரசு பேருந்து விஜயமங்கலம் வழியாக புறப்பட்டு,

ஊத்துக்குளி வழியாக வந்துகொண்டிருக்கக்கூடிய அந்த பேருந்தும், இந்த பேருந்தும் இரண்டும் பயங்கரமாக மோதிக் கொண்டு ஒரு வண்டி உடைந்து, சிதறி அதில் இருக்கும் படியான பல இரும்பு கம்பிகள், ஆங்கிள்ஸ் போன்ற பலதும் அடித்து மோதி பேருந்துக்குள்ளே இருந்த பயணிகள் மீது தாக்கி ஸ்தலத்திலேயே 7 பேர்கள் இறந்து போய்விட்டார்கள். 6 பேர்கள் அடுத்தபடியாக திருப்பூர் மருத்துவமனையிலே இறந்துவிட்டார்கள். இன்னும் சில பேர்களுடைய நிலை கவலைக்கிடமாக இருந்தது. மறுபடியும் இரண்டு பேர்கள் இறந்து விட்டார்கள். பாக்கி இருக்கின்றவர்கள் எவ்வளவு பேர்கள் அங்கஹீனமானவர்களாக, ஊனமுற்றவர்களாக ஆகி விட்டார்கள் என்பது அவர்கள் மருத்துவமனையைவிட்டு வெளியே வந்த பிறகுதான் புரியும். இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான விபத்து நடந்தது. இது போன்ற விபத்துக்கள் பேருந்துகள் மோதுதலில் ஏற்படக்கூடிய விபத்துக்களில் 5 பேர்கள் 10 பேர்கள், 15 பேர்கள் இறந்து போகும் படியான நிலைதான் அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது. இது ஒரு மிகவும் வேதனையான விஷயம். அதே மாதிரி லாரி களிலே, வேன்களிலே எல்லாம் பயணம் செய்யக்கூடிய பயணிகளும் இதுமாதிரி மோதுதலில் சிக்கிக்கொண்டு பல பேர்கள் உயிர் இழக்கிறார்கள். இந்த பேருந்துகள் இரண்டில் ஒன்று உண்மையிலேயே ஓட்டுவதற்குக் கூட சரியானதாக இல்லை என்ற தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். அதனாலே தான் அது உடைந்து, நொறுங்கி, அதனுடைய பார்ட்ஸ் பலதும் மற்ற வண்டிகளிலே போய் அடித்து அதில் இருக் கின்றவர்கள் இறந்து போனார்கள் என்று சொல்கிறார்கள்.

அதனுடைய முழு விவரம் நம் கையில் இல்லை. அந்த வண்டி மோதிய இடத்தில் அந்தப் பயணிகள் அத்தனை பேர்களுடைய பயங்கரமான வேதனை மிக்க கூச்சலும், உயிர் போகும்போது ஏற்பட்ட கூச்சலும், அந்த இடம் முழுவதும் ரத்தம் தளம் கட்டிய மாதிரி ஆகி, ஒரு கொடூரக் காட்சியாக இருந்தது என்று ஸ்தலத்தில் இருக்கிறவர்கள் எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நிலைமைகளைத் தடுப்பதற்கு, நாமும், நமது அரசும், ஒரு சரியான வழிமுறை யைக் கண்டுபிடித்தாகவேண்டும். இதே மாதிரி நிலை தொடர்ந்து வராமல் இருப்பதற்கு—இந்த விபத்துக்களுக்கு என்ன காரணம் என்பது, இரண்டு வண்டிகள் அந்த வழியிலே போய்க். கொண்டு இருப்பது, சாதாரணமான வழக்கமான வழி அது நல்ல தார் ரோடு தான். ஒன்றிரண்டு இடங்களில் கர்வ்ஸ் இருக்கிறது, வளைவுகள் இருக்கின்றன. மற்றபடி ஊத்துக்குளி வழியாக விஜயமங்கலம் சென்று மெயின் ரூட்டிலே ஈரோட்டிற்குச் செல்லும்படியான பாதை சரியான பாதைதான். இப்படிப் பட்ட இடத்தில் இந்த மாதிரி எப்படி ஏற்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? ஓட்டுநர்கள், மற்றவர்களுடைய

கவனக் குறைவா, அல்லது வண்டிகள் சரியான கண்டிஷனில் இல்லையா, அல்லது இப்படிப் பேருந்துகள் அதிகமாகப் போய் கொண்டிருக்கின்ற பாதைகளிலே வேண்டிய எச்சரிக்கை போர்டுகள் போன்றவைகள் இல்லையா? வளைவு களிலே என்ன தடைகள் ஏற்படுத்தவேண்டுமோ அதைச் செய்யாமல் இருக்கிறதா? என்ன காரணத்தினால் இது நடைபெற்றுள்ளது என்பதை ஒரு சரியான பரிசீலனை நடத்தி மக்களுடைய உயிர் சர்வசாதாரணமாகப் போகாமல் பாது காப்பதற்கு ஒரு நல்ல நடவடிக்கையை எடுப்பதற்கு என்ன முறையைக் கையாள வேண்டும் என்பதைப் பரிசீலிக்க வேண்டி யிருக்கிறது. இந்த மாதிரி விஷயங்கள், நமது நெஞ்சைப் பிளக்கும்படியான இப்படிப்பட்ட விஷயங்கள் மேற்கொண்டு வராமல் இருப்பதற்கான அளவிற்கு நாம் இங்கே அதைப்பற்றி ஆழமாக விவாதிக்கவேண்டும் என்ற கருத்தோடு தான், உயிர்கள் 15 போய்விட்டன, எதிர்காலத்தில் இப்படிப்பட்ட கோரமான சம்பவங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு இந்த அவையிலேயே நாம், மற்ற பல மாண்புமிகு உறுப்பினர் களுக்கும் பல்வேறு யோசனைகள் இருக்கும். அவைகளைப் பற்றி நாம் இங்கே விவாதிப்பதற்காகத் தான் இன்றைய இதர நடவடிக்கைகளை இந்த அளவிற்கு ஒத்தி வைத்து, இந்த விவாதத்தை முறையாக நடத்தி, வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் உருவாக்குவதற்கு அரசிற்கும் உதவி செய்யலாம். அது நமக்கும் நல்லது என்ற முறையில், இந்த நடவடிக்கைகளை ஒத்தி வைத்து தாங்கள் அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளத்தை நெகிழ வைக்கக்கூடிய இந்த விபத்து 14-4-1989-ஆம் நாள் மதியம் சுமார் 1-15 மணியளவில் பெரியார் மாவட்டம் ஊத்துக்குளி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட எஸ். பெரியபாளையம் கிராமத்தில் இரண்டு பேருந்துகள் நேருக்கு நேராக மோதிக் கொண்டதில் 15 பயணிகள் மரணம் அடைந்தனர். 42 பயணிகள் காய மடைந்தனர். விபத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு பேருந்து களில் ஒன்று வாய்ப்பாடி கிராமத்திலேயிருந்து திருப்பூருக்குச் சென்று கொண்டிருந்த, ஜீவா போக்குவரத்துக் கழகத்தை சேர்ந்த பேருந்தாகும். மற்றொரு பேருந்து, திருப்பூரிலிருந்து ஈரோட்டிற்குச் சென்று கொண்டிருந்த தனலட்சுமி பஸ் சர்வீஸ் என்கின்ற தனியார் நிறுவனத்தைச் சார்ந்த பேருந் தாகும். விபத்து நடந்த இடத்திலேயே 7 பேர் இறந்தனர். மற்றும் 7 பேர் திருப்பூர் அரசு மருத்துவமனையிலும், மேலும் ஒரு நபர் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் இறந்தனர். விபத்தில் காயம் அடைந்த 42 பயணிகளில் 22 பேர் திருப்பூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளி களாகவும், மீதமுள்ள 20 பேர்கள் புற நோயாளிகளாகவும் சிகிச்சை பெற்றனர். அன்றைய தினம் கோவையிலே இருந்த

எனக்கு இந்தத் தகவல் தெரிந்தவுடன் திருப்பூர் மருத்துவ மனைக்கு நேரடியாகச் சென்று விபத்தில் காயம் அடைந்த வர்களைப் பார்த்து, அவர்களுக்கு ஆறுதல் சொல்லியதோடு, தேவையான உதவிகளையும் செய்யவேண்டும் என்று அதி காரிகளுக்கு ஆணையிட்டேன். விபத்தை நேரில் கண்ட எஸ். பெரியபாளையம் கிராம அதிகாரி கொடுத்த தகவலின் பேரில் ஊத்துக்குளி காவல்நிலைய குற்ற எண். 228/89, இந்திய தண்டனைச் சட்டம் 279 மற்றும் 304(ஏ) ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசா ரணையில் உள்ளது. இரண்டு பேருந்துகளும் மோட்டார் வாகன அதிகாரிகளால் பரிசோதிக்கப்பட்டன. விபத்திற்கு வாகன இயந்திரக் கோளாறு காரணம் அல்ல என்றும், அவர் சான்றிதழ் வழங்கியுள்ளார். புலன் விசாரணையில் தனியார் பேருந்து ஓட்டுநர் வாகனத்தைக் கவனக்குறைவாக ஓட்டியதன் காரணத்தினாலே தான் விபத்து நடந்ததாகத் தெரிகிறது.

(முற்பகல் 10.20)

இந்தத் தனியார் பேருந்து ஓட்டுநர் கைது செய்யப்பட்டு நீதி மன்ற காவலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். திருப்பூர் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற பிரேத பரிசோதனைக்கு பிறகு இறந்த 14 பேர்கள் உடல்கள் உறவினர்களிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளன. ஒரு ஆண் பிரேதம் மட்டும் அடை யாளம் தெரியாத காரணத்தால் மருத்துவமனையில் வைக்கப் படடுள்ளது. இந்த நபரின் அடையாளத்தைத் தெரிந்து கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப் படிப்பட்ட கோர விபத்துக்கள் எதிர்பாராமல் பல இடங் களில் நடந்து கொண்டிருக்கின்றன. அது நடைபெற்ற அந்த இடத்தைப் பொறுத்த வரையில் நேரடியாக அதிகாரிகள் சென்று விசாரித்து அறிந்து இருக்கிறார்கள். அந்த விபத்து ஏற்பட்ட இடத்தினுடைய புகைப்படங்களை எடுத்து வரச் சொல்லி அதனையும் நான் நேரடியாகக் கண்டேன். ஆனால் அந்த இடத்தில் விபத்து நடைபெறுவதற்கான வகையில் சாலை மோசமாகவோ அல்லது வளைவு உள்ள இடமாகவோ அல்லது குறுகிய இடமாக கூட இல்லை. ஆனால் தனியார் பேருந்து மிக வேகமாக வந்து ஒதுங்கிப் போன ஜீவா போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்தின் மேல் மோதிய காரணத்தால் தான் ஜீவா பேருந்து முழுமையாக ஒரு முக்கால்வாசிக்கு மேலாக பேருந்து என்கின்ற உருவமே கூட இல்லாத அளவுக்கு அடி பட்டு நொறுங்கி போய் இருக்கிறது. ஆகவே, தனியார் பேருந்தின் ஓட்டுநர் கவனக் குறைவினால் அது நடந்து இருக் கிறது என்று அங்கே சம்பந்தப்பட்ட வாகனத் துறையினுடைய அதிகாரிகள் சென்று பார்த்த பிறகு அந்தத் தகவலைக் கொடுத்து இருக்கிறார்கள். இருந்தாலும் கூட எதிர் காலத்தில் ஓட்டுநர் கள் மிகுந்த ஜாக்கிரதையோடு பேருந்துகளை நடத்திச் செல்ல வேண்டும் என்ற அறிவுரைகள் இந்தத் துறையினால் வழங்கப் படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

1989 ஏப்ரல் 27] (திரு .மு. கண்ணப்பன்)

அந்த விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தேவை யான உதவிகள் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிச்சய மாக வழங்கப்பட இருக்கிறது என்பதையும், காயம் அடைந் தவர்களுக்கும், அதிக அளவில் காயம் அடைந்தவர்களுக்கும் அவர்களுக்குத் தேவையான நிதி உதவி வழங்கப்படும் என்பதை யும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்தப் பிரச்சினை பற்றி சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்திவைத்து இது குறித்து மேலும் விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. அறிவிப்புகள்.

(அ) அவைக்குழு—உறுப்பினர்கள் நியமனம்.

அவைக்குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 253 உட்பிரிவு1-ன் கீழ் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை, 1989–90 ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்:

1. திரு. பெ. துரைபாண்டி
2. திரு. கே. கந்தசாமி
3. திரு. எஸ்.எஸ். கருப்பசாமி
4. திரு. மா. மணிமாறன்
5. திரு. பொ. முருகேசன்
6. திரு. எல். பால்ராஜ்
7. திரு. அ. பெரியண்ணன்
8. திரு. இரெ. இராசமாணிக்கம்
9. டாக்டர் த. சாந்தகுமாரி
10. திரு. அ.லெ. சுப்பிரமணியன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 ஏப்ரல் 27] (திரு .மு. கண்ணப்பன்)

அந்த விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தேவையான உதவிகள் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிச்சயமாக வழங்கப்பட இருக்கிறது என்பதையும், காயம் அடைந்தவர்களுக்கும், அதிக அளவில் காயம் அடைந்தவர்களுக்கும் அவர்களுக்குத் தேவையான நிதி உதவி வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்தப் பிரச்சினை பற்றி சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்திவைத்து இது குறித்து மேலும் விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. அறிவிப்புகள்.

(அ) அவைக்குழு—உறுப்பினர்கள் நியமனம்.

அவைக்குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 253 உட்பிரிவு1-ன் கீழ் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை, 1989–90 ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்:

1. திரு. பெ. துரைபாண்டி
2. திரு. கே. கந்தசாமி
3. திரு. எஸ்.எஸ். கருப்பசாமி
4. திரு. மா. மணிமாறன்
5. திரு. பொ. முருகேசன்
6. திரு. எல். பால்ராஜ்
7. திரு. அ. பெரியண்ணன்
8. திரு. இரெ. இராசமாணிக்கம்
9. டாக்டர் த. சாந்தகுமாரி
10. திரு. அ.லெ. சுப்பிரமணியன்

11. திரு. அ. பாப்பா சுந்தரம்

12. திரு. கே. சின்னசாமி

13. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்

14. திரு. ஆர். சிங்காரம்

15. திரு. சி. கோவிந்தசாமி

16. திரு. அ. மு. ஹமீது இப்ராகிம்

17. திரு. ஏ. தங்கராஜு

18. திரு. ஜி. பழனிச்சாமி

பேரவை விதி 253 உட்பிரிவு 1-ன் கீழ், திரு. அ. பெரியண்ணன் அவர்களை, இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கின்றேன்.

(ஆ) பேரவை விதிகள் குழு—உறுப்பினர்கள் நியமனம்.

பேரவை விதிகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 256-ன் கீழ், 1989–90 ஆம் ஆண்டிற்குப் பின்வரும் உறுப்பினர்களைப் பேரவை விதிகள் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:

1. மாண்புமிகு முதல் அமைச்சர்

2. மாண்புமிகு பேரவை முன்னவர்

3. மாண்புமிகு சட்ட அமைச்சர்

4. மாண்புமிகு உணவு அமைச்சர்

5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

6. திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்
(அரசு தலைமைக் கொறடா)

7. செல்வி ஜெ. ஜெயலலிதா
(எதிர்க்கட்சித் தலைவர்)

8. திரு. ஜி. கருப்பையா மூப்பனார்

9. திரு. பெ. சீனிவாசன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(பேரவைத் தலைவர்) [1989 ஏப்ரல் 27

11. திரு. அ. பாப்பா சுந்தரம்

12. திரு. கே. சின்னசாமி

13. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்

14. திரு. ஆர். சிங்காரம்

15. திரு. சி. கோவிந்தசாமி

16. திரு. அ. மு. ஹமீது இப்ராகிம்

17. திரு. ஏ. தங்கராஜு

18. திரு. ஜி. பழனிச்சாமி

பேரவை விதி 253 உட்பிரிவு 1-ன் கீழ், திரு. அ. பெரியண்ணன் அவர்களை, இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கின்றேன்.

(ஆ) பேரவை விதிகள் குழு—உறுப்பினர்கள் நியமனம்.

பேரவை விதிகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 256-ன் கீழ், 1989-90 ஆம் ஆண்டிற்குப் பின்வரும் உறுப்பினர்களைப் பேரவை விதிகள் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:

1. மாண்புமிகு முதல் அமைச்சர்

2. மாண்புமிகு பேரவை முன்னவர்

3. மாண்புமிகு சட்ட அமைச்சர்

4. மாண்புமிகு உணவு அமைச்சர்

5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

6. திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்
(அரசு தலைமைக் கொறடா)

7. செல்வி ஜெ. ஜெயலலிதா
(எதிர்க்கட்சித் தலைவர்)

8. திரு. ஜி. கருப்பையா மூப்பனார்

9. திரு. பெ. சீனிவாசன்

1989 ஏப்ரல் 27

பேரவைத் தலைவர்

10. திரு. என். கணபதி

11. டாக்டர் து. திருமூர்த்தி

12. திரு. எஸ். திருநாவுக்கரசு

13. திரு. குமரி அனந்தன்

14. திரு. கே. ரமணி

15. திரு. எம். அப்துல் லத்தீப்

16. திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்

பேரவை விதி 256-ன் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராவார்.

(இ) பேரவை நூலகக் குழு—உறுப்பினர்கள் நியமனம்.

பேரவை நூலகக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் விதி 264, உட்பிரிவு 1-இன் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1989–90 ஆம் ஆண்டிற்கான பேரவை நூலகக் குழுவிற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்:

1. திரு. எஸ்.எஸ். தென்னரசு

2. திரு. வீ. தமிழ்மணி

3. திரு. ஏ. செங்குட்டுவன்

4. திரு. வ. முல்லைவேந்தன்

5. திரு. பெ.சு. திருவேங்கடம்

6. திரு. எம். முத்தையன்

7. திரு. வி.கே. சின்னசாமி

8. திரு. ஆர். ஈஸ்வரன்

9. திரு. என். பழனிவேல்

பேரவை விதி 264 உட்பிரிவு 3-இன் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இக்குழுவின் தலைவராக இருப்பார்.

1989 ஏப்ரல் 27

பேரவைத் தலைவர்

10. திரு. என். கணபதி

11. டாக்டர் து. திருமூர்த்தி

12. திரு. எஸ். திருநாவுக்கரசு

13. திரு. குமரி அனந்தன்

14. திரு. கே. ரமணி

15. திரு. எம். அப்துல் லத்தீப்

16. திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்

பேரவை விதி 256-ன் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராவார்.

(இ) பேரவை நூலகக் குழு—உறுப்பினர்கள் நியமனம்.

பேரவை நூலகக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் விதி 264, உட்பிரிவு 1-இன் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1989–90 ஆம் ஆண்டிற்கான பேரவை நூலகக் குழுவிற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்:

1. திரு. எஸ்.எஸ். தென்னரசு

2. திரு. வீ. தமிழ்மணி

3. திரு. ஏ. செங்குட்டுவன்

4. திரு. வ. முல்லைவேந்தன்

5. திரு. பெ.சு. திருவேங்கடம்

6. திரு. எம். முத்தையன்

7. திரு. வி.கே. சின்னசாமி

8. திரு. ஆர். ஈஸ்வரன்

9. திரு. என். பழனிவேல்

பேரவை விதி 264 உட்பிரிவு 3-இன் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இக்குழுவின் தலைவராக இருப்பார்.

[1989 ஏப்ரல் 27

]பேரவைத் தலைவர்]

(ஈ) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு—உறுப்பினர்கள் நியமனம்

பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதி 268 உட்பிரிவு 1-இன் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1989–90 ஆம் ஆண்டிற்கானபேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவிற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்:

1. திரு. வி.கே. இராசு
2. டாக்டர் சி.ரா. மாசிலாமணி
3. திரு. கே.வி. இராமசாமி
4. திரு. ப. சுந்தரம்
5. திரு. டி.கே. பழனிச்சாமி
6. திரு. மீ.அ. வைத்தியலிங்கம்
7. திரு. எஸ்.ஆர். இராதா
8. திரு. ஆர். மூக்கன்
9. திரு. எ. ஏகாம்பர ரெட்டி
10. திரு. ஆர். நடேசன்
11. திரு. யூ.கே. வெள்ளிங்கிரி

பேரவையின் விதி 268, உட்பிரிவு 2-இன் கீழ் திரு. எஸ்.ஆர். இராதா அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கின்றேன்.

5 கவன ஈர்ப்புகள்.

(அ) வேதாரணியம் தொகுதியில் பாக் ஜலசந்தியிலிருந்து விசாக வெள்ளம் புகுந்து ஆற்று நீரை உப்பு நீராக்கியதால் விளைநிலங்கள் பாதிப்பு.

திரு. பி. வி. இராஜேந்திரன் : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வேதாரணியம் தொகுதியில் பாக். ஜலசந்தியிலிருந்து விசாக வெள்ளம் புகுந்து ஆற்று நீரை உப்பு நீராக்கியும் விளை நிலங்களைப் பாழாக்கியும் வருவதைத் தடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்காதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(ஈ) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு—உறுப்பினர்கள் நியமனம்

பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதி 268 உட்பிரிவு 1-இன் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1989–90 ஆம் ஆண்டிற்கான பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவிற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்:

1. திரு. வி.கே. இராசு
2. டாக்டர் சி.ரா. மாசிலாமணி
3. திரு. கே.வி. இராமசாமி
4. திரு. ப. சுந்தரம்
5. திரு. டி.கே. பழனிச்சாமி
6. திரு. மீ.அ. வைத்தியலிங்கம்
7. திரு. எஸ்.ஆர். இராதா
8. திரு. ஆர். மூக்கன்
9. திரு. எ. ஏகாம்பர ரெட்டி
10. திரு. ஆர். நடேசன்
11. திரு. யூ.கே. வெள்ளிங்கிரி

பேரவையின் விதி 268, உட்பிரிவு 2-இன் கீழ் திரு. எஸ்.ஆர். இராதா அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கின்றேன்.

5 கவன ஈர்ப்புகள்.

(அ) வேதாரணியம் தொகுதியில் பாக் ஜலசந்தியிலிருந்து விசாக வெள்ளம் புகுந்து ஆற்று நீரை உப்பு நீராக்கியதால் விளைநிலங்கள் பாதிப்பு.

திரு. பி. வி. இராஜேந்திரன் : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வேதாரணியம் தொகுதியில் பாக். ஜலசந்தியிலிருந்து விசாக வெள்ளம் புகுந்து ஆற்று நீரை உப்பு நீராக்கியும் விளை நிலங்களைப் பாழாக்கியும் வருவதைத் தடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்காதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1989 ஏப்ரல் 27

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

பருவ மழைக் காலங்களில் குறிப்பிட்ட நாட்களில் குறிப்பாக நவம்பர், டிசம்பர், மாதங்களில் கடல் அலைகள் மிகவும் கடின மாகவும் ஏறத்தாழ 3 அடி உயரத்திற்குக் கூடுதலாக எழும். இதனால் கடலோரப் பகுதியில் 5 கி.மீ. நீளத்திற்கு கடல் நீர் உட்புகுவதால் மழைத் தண்ணீர் வடியாமல் வெள்ளக் காடாக மாறி விடுகின்றது. கடல் நீர் மட்டம் குறையும் போது தான் மழை நீர் வடிந்து விடுகின்றது. இது இயற்கையின் சீற்றத் தினால், பருவமழை காலங்களில் எதிர்பாராத வகையில் ஏற் படுகின்ற நிகழ்வுகள். இவற்றைத் தவிர்க்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டு விடுகின்றது. ஆனால் இதனால் ஏற்படும் பின் விளைவு களைத் தவிர்க்க உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு கிறது. எனவே இந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தை அனுமதிக்க வேண்டியதில்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பட்டுக் கோட்டைக்கு வழி கேட்டிருந்தேன். ஆனால் அரசு எனக்கு கொட்டைப் பாக்கிற்கு விலை சொல்லி இருக்கிறது. நான் உங்களுக்கு 4-4-1987 ஆம் தேதியிட்ட அவசரப் பொது முக்கியத்தும் வாய்ந்த நிகழ்வினை விதி 55-ன் கீழ் கொண்டு வந்திருந்தேன். அதற்கான பதில் இங்கே வர வில்லை. நிகழ்ச்சி நிரலிலே தாங்கள் சுட்டிக் காட்டியிருக்கின்ற கேள்விக்கும் அரசுத் தரப்பிலேயிருந்து வந்திருக்கின்ற பதிலுக் கும் வித்தியாசம் இருக்கிறது. டெக்னிக்கல் ஃப்ளா இருக்கிறது. நான் கேட்டது, வைசாகம் ஃப்ளாட்-டினால் ஏற்படுகின்ற பாதிப்புகளைப் பற்றி. அரசு, மான்சூன் காலங்களிலே, நவம் பர், டிசம்பர் மாதங்களிலே வருகின்றதைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறது. வேதாரண்யம் பகுதியிலும் சரி, எங்கும் சரி, மான்சூன் காலங்களிலே கடல்நீர் உள்ளே ஏறாது. காரணம், ஆற்று நீர் வழிந்து சென்று கடலுக்குள்ளே தாக்குவதால், இரண்டும் எதிர்த்துதான் நிற்குமேயொழிய உள்ளே உப்புநீர் வந்துவிடாது. வேதாரண்யம் பகுதியில் வைசாகம் ஃப்ளாட் என்ற ஒரு பெக்கூலியர் பினாமினன் இருக்கிறது. 1950 ஆம் ஆண்டில் இங்கே வந்த, கவர்ன்மெண்ட் ஆப் இந்தியாவினுடைய பட்டேல் கமிட்டி, நரின்வாலா கமிட்டி போன்ற கமிட்டிகள் ஒரு மாதம் அங்கே தங்கி இருந்து ஆய்வு செய்து இந்தியாவி லேயே, கிரேட்டர் வேதாரண்யம் ஸ்வாம்ப்பில் மட்டும் தான் இந்த பினாமினன் இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றன. கடல் நீரை விட 5 மடங்கு 6 மடங்கு உப்புத் தன்மை அதிகமாக உள்ள சுமார் 16 டிகிரி 18 டிகிரி BAME உள்ள தண்ணீர் உள்ளே புகுந்து விவசாய நிலங்களை வீணடிப்பது மட்டுமல்ல,

கால்நடைகளுக்கு வேண்டிய குடிநீரையும் ஆற்றையும் பாழாக்கி விடுகிறது. பல கிராமங்கள் இதனால் பாதிக்கப்படுகின்றன. அது குறித்துத்தான் நான் கவன ஈர்ப்பு கொடுத்திருந்தேன். பல மக்கள் இன்றைக்கு அரசினுடைய உதவியை நாடாமல் தாங்களே சென்று மடை போட்டு கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். இது குறித்த புகைப்படங்களையும் உங்களிடம் நான் காட்டத் தயாராக இருக்கிறேன். அதற்குரிய பதிலை இந்த அரசு தர வேண்டும். எனக்கு ஒழுங்காகப் பட்டுக்கோட்டைக்கு வழி காட்ட வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானமாக வந்திருப்பது, வேதாரண்யம் பகுதியில், பாக் ஜலசந்தியிலிருந்து விசாகம் வெள்ளம் புகுந்து ஆற்று நீரை உப்பு நீராக்கியும், விளை நிலங்களைப் பாழாக்கியும் வருவதைத் தடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்காதது குறித்து என்றுதான் வந்திருக்கிறது. அந்த ஜலசந்தியிலேயிருக்கிற மானங்கொண்டான் ஆறு, வளவனாறு, அடப்பாறு மற்றும் முள்ளியாறு ஆகிய ஆறுகளில் கடல் நீர் உள்ளே புகுந்துவிடுகின்ற காரணத்தால் அந்தப் பகுதியிலே பல நேரங்களில் அந்த ஆறுகளினுடைய நீர் உப்புநீராக மாறி விடுகிறது என்பதுதான் அரசுத் தரப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற பதிலுரையாகும். எப்போது கடல் நீர் ஆற்றிலே புகுகிறது என்று சொன்னால், குறிப்பாக நவம்பர், டிசம்பர் மாதங்களில் கடல் அலை உயரமாக எழும்புகிறபொழுது ஆறுகளிலே புகுந்து விடுகிறது. கடல்நீர் ஆறுகளுக்குள்ளே நுழையாமல் தடுக்கக்கூடியது ரெகுலேட்டர்கள்தான். ரெகுலேட்டர்கள் ஒவ்வொரு ஆற்றிலும் எப்படிசீர்படுத்தப்பட்டிருக்கின்றன, மானங்கொண்டான் ஆற்றிலே இருக்கிற ரெகுலேட்டர் எப்படி பழுது பட்டது, மறுபடியும் அது எப்படி சீர்படுத்தப்பட்டிருக்கிறது, அடுத்து வளவனாறிலே உள்ள பழுதுபட்ட ரெகுலேட்டர் எப்படி சீர் செய்யப்பட்டிருக்கிறது, இப்போது அதனுடைய நிலைமை என்ன, முள்ளியாற்றின் நிலைமை என்ன என்பதைப் பற்றியெல்லாம் அரசு தன்னுடைய பதிலிலே தெரிவித்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கவன ஈர்ப்புக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர் பட்டுக்கோட்டை, கொட்டைப் பாக்கு என்கிறார். அதிலும் அவர் தஞ்சை மாவட்டத்துக்காரர். அவருக்கு பட்டுக்கோட்டைக்குச் செல்ல ஏற்கனவே நல்ல வழி தெரிந்திருக்கும்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் தரப்பிலே தரப்பட்டிருக்கின்ற பதிலில், நவம்பர், டிசம்பர் மாதங்களில் பருவ மழைக் காலங்களில், அப்போது இருக்கின்ற சைக்கிளோனிக் வெதரை அடிப்படையாகக் கொண்டு எழுகின்ற கடல் அலைகளின் உயரம் இவற்றைப் பற்றித்தான் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேதாரண்யத்திலே இருப்பது, இந்தியாவிலே எங்குமே இல்லாத ஒரு பினாமினன், விசாகம் ஃப்ளட் என்பது

1989 ஏப்ரல் 27] (திரு. பி. வி. இராஜேந்திரன் :)

அதைத்தான் நான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். என்னுடைய கேள்வியில், வேதாரண்யத்தில், ஏப்ரல், மே மாதங்களில் ஏற்படக்கூடியது என்று தெரிவித்து இருக்கிறேன். டெக்னிக்கலாக அது முற்றிலும் மாறுபட்டது. அதற்கு பதிலே வேறாகத்தான் இருக்க வேண்டும். இந்த அரசுத் தரப்பு பதில் என்னை திருப்திபடுத்தாது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாதங்களைக் குறிப்பிட்டு இருந்தால் சரியாக இருந்திருக்குமோ ?

[முற்பகல் 10-30]

6 ஒழுங்குப் பிரச்சனை

கவன ஈர்ப்பு அறிக்கையில் உள்ள வாசகம் குறித்து.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சனை எழுப்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையின் இறுதியில் ''எனவே இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டியதில்லை'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது முற்றிலும் தவறானது. கவன ஈர்ப்புத் தீர்மானம் அனுமதிக்கப்பட்டு, அதற்கான விவரமும் அனுமதிக்கப்பட்ட பிறகுதான் அவைக்கு வருகிறது. அதை அனுமதிக்க வேண்டியது என்பது மரபு. ஆகவே, அனுமதிக்க வேண்டியதில்லை என்று குறிப்பிட்டிருப்பது தவறானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பி. வி. இராஜேந்திரன் அவர்கள் கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கை முற்றிலும் மாறுபட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அவர் ஒரு ''டெக்னிக்கல் பாயின்டை'' குறிப்பிடுகிறார். விசாக வெள்ளம் வேறு, கடல் நீர் உள்ளே புகுவது வேறு என்று குறிப்பிடுகிறார். ஆகவே விவர அறிக்கை மீண்டும் அவையில் வைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கான விவர அறிக்கையில் இறுதியில் இப்படி ஒரு வாசகம் கொடுத்திருப்பது தவறானது என்று குறிப்பிட்டார். இறுதியில் இப்படிப்பட்ட விளக்கங்களை ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குக் கொடுப்பதைப் போல கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குக் கொடுக்கக் கூடாது என்று சுட்டிக்காட்டுகிறேன்.

அதைத்தான் நான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். என்னுடைய கேள்வியில், வேதாரண்யத்தில், ஏப்ரல், மே மாதங்களில் ஏற்படக்கூடியது என்று தெரிவித்து இருக்கிறேன். டெக்னிக்கலாக அது முற்றிலும் மாறுபட்டது. அதற்கு பதிலே வேறாகத்தான் இருக்க வேண்டும். இந்த அரசுத் தரப்பு பதில் என்னை திருப்திபடுத்தாது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாதங்களைக் குறிப்பிட்டு இருந்தால் சரியாக இருந்திருக்குமோ ?

[முற்பகல் 10-30]

6 ஒழுங்குப் பிரச்சனை

கவன ஈர்ப்பு அறிக்கையில் உள்ள வாசகம் குறித்து.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சனை எழுப்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையின் இறுதியில் ''எனவே இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டியதில்லை'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது முற்றிலும் தவறானது. கவன ஈர்ப்புத் தீர்மானம் அனுமதிக்கப்பட்டு, அதற்கான விவரமும் அனுமதிக்கப்பட்ட பிறகுதான் அவைக்கு வருகிறது. அதை அனுமதிக்க வேண்டியது என்பது மரபு. ஆகவே, அனுமதிக்க வேண்டியதில்லை என்று குறிப்பிட்டிருப்பது தவறானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பி. வி. இராஜேந்திரன் அவர்கள் கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கை முற்றிலும் மாறுபட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அவர் ஒரு ''டெக்னிக்கல் பாயின்டை'' குறிப்பிடுகிறார். விசாக வெள்ளம் வேறு, கடல் நீர் உள்ளே புகுவது வேறு என்று குறிப்பிடுகிறார். ஆகவே விவர அறிக்கை மீண்டும் அவையில் வைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கான விவர அறிக்கையில் இறுதியில் இப்படி ஒரு வாசகம் கொடுத்திருப்பது தவறானது என்று குறிப்பிட்டார். இறுதியில் இப்படிப்பட்ட விளக்கங்களை ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குக் கொடுப்பதைப் போல கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குக் கொடுக்கக் கூடாது என்று சுட்டிக்காட்டுகிறேன்.

5. கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) எடப்பாடி மருத்துவமனை கட்டப்பட்டும் திறக்கப்படாமல் இருப்பது குறித்து.

திரு. க. பழனிசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சேலம் மாவட்டம் எடப்பாடியில் கட்டப்பட்டுள்ள அரசு பொது மருத்துவமனை ஓராண்டுக் காலமாகியும் திறக்கப் படாமல் இருப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சேலம் மாவட்டம் எடப்பாடி நகரத்தில் அரசு மருத்துவமனை 16 படுக்கைகள் கொண்ட வார்டு, நுண்கதிர் பிரிவு ஆகியவை கட்ட 2—8—1985-ல் அனுமதி வழங்கப்பட்டு, கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 11—3—1988 அன்று பொதுப் பணித்துறையின ரால், மருத்துவத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

2. இம்மருத்துவமனையில் 16 படுக்கைகள் கொண்ட பிரிவு, எக்ஸ்ரே பிரிவு ஆகியவைகள் செயல்படுத்தத் தேவையான உப கரணங்கள் வாங்கவும், கூடுதல் பணியிடங்களை உருவாக்கவும், ஏனைய தொடரும் செலவினங்கள் அனுமதிக்கவும் 1989-90-ம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் சேர்க்கப்பட்டு செயற்படுத்த அரசின் ஆய்வில் உள்ளது.

3. 1989-90-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் ரூபாய் 4.82 இலட்சம் தொடரும் மற்றும் தொடரா செலவினமாக அனுமதிக் கப்பட்டுள்ளது. மேலும், கீழ்க்கண்ட பணியிடங்களை உரு வாக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1. உதவி மருத்துவ அலுவலர்	1
2. செவிலியர்	2
3. நுண்கதிர் இயக்குநர்	1
4. இருட்டறை உதவியாளர்	1
5. அறுவை அரங்கு உதவியாளர்	1
6. இளநிலை உதவியாளர்	1
7. செவிலியர் உதவியாளர் ..	1
8. துப்புரவு பணியாளர்	1

1989 ஏப்ரல் 27] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

4. புதிய வார்டு மற்றும் நுண்கதிர் பிரிவுகளுக்குத் தேவையான உபகரணங்கள், எக்ஸ்ரே கருவி ஆகியவை பொருத்தப் பட்டவுடன் புதிய கட்டிடம் முழுமையாகச் செயல்படத்துவங்கும்.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் ஆப்பரேஷன் செய்துக்கொள்வதற்கும், எக்ஸ்ரே எடுப்பதற்கும் 40 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சேலம் அரசு பொது மருத்துவமனைக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கேதான் இப்படிப்பட்ட சிகிச்சை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, விரைவிலே இந்த மருத்துவ மனையை திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவரவர்களே, கடந்த காலங்களிலே பல மருத்துவமனைகள் கட்டப்பட்டு அவை, திருமணமாகி முதலிரவுக்குக் காத்திருக்கும் தம்பதியரைப்போல நீண்டகாலமாக திறக்கப்படாமலேயே வைக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே கூட கட்டப்பட்டு மூன்று ஆண்டுகளாகியும் திறக்கப்படாத மருத்துவமனை இருப்பதை நினைவுபடுத்துகிறேன். அதைப்போன்று பல மருத்துவ மனைகள் திறக்கப்படாமலேயே இருக்கின்றன என்பதைக் கருத்தில்கொண்டு திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் 16 படுக்கைகள் கொண்ட பிரிவு, எக்ஸ்ரே பிரிவு ஆகியவைகளைச் செயல்படுத்தத் தேவையான உபகரணங்கள் வாங்கவும், கூடுதல் பணியிடங்களை உருவாக்கவும், ஏனைய தொடரும் செலவினங்கள் அனுமதிக்கவும் 1989-90-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் சேர்க்கப்பட்டு செயற்படுத்த அரசின் ஆய்வில் உள்ளது. ஆகவே, அத்தகைய உபகரணங்கள் வாங்கி முடிந்தவுடன் விரைவில் திறப்பதற்கு முயற்சி எடுக்கப்படும்.

திரு. க. பழனிசுவாமி : தலைவரவர்களே, ஆப்பரேஷன் செய்வதற்கு எம். எஸ். பட்டப்படிப்பு படித்த அறுவை சிகிச்சை டாக்டர்களையும் அதிகமான குழந்தைகள் சிகிச்சைக்கு வருவதால் குழந்தைகள் சிகிச்சைக்கு டி. சி. எச். படித்த டாக்டர்களையும் நியமிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கின்ற தெய்வசிகாமணி : அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

7 சட்ட முன் வடிவுகள்.

சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு 1989

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவைப்'' பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.

1989 ஏப்ரல் 27] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

4. புதிய வார்டு மற்றும் நுண்கதிர் பிரிவுகளுக்குத் தேவை யான உபகரணங்கள், எக்ஸ்ரே கருவி ஆகியவை பொருத்தப் பட்டவுடன் புதிய கட்டிடம் முழுமையாகச் செயல்படத்துவங்கும்.

திரு. க. பழனிசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் ஆப்பரேஷன் செய்துக்கொள் வதற்கும், எக்ஸரே எடுப்பதற்கும் 40 கிலோ மீட்டர் தூரத்தி லுள்ள சேலம் அரசு பொது மருத்துவமனைக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கேதான் இப்படிப்பட்ட சிகிச்சை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, விரைவிலே இந்த மருத்துவ மனையை திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவரவர்களே, கடந்த காலங்களிலே பல மருத்துவமனைகள் கட்டப்பட்டு அவை, திருமணமாகி முதலிர வுக்குக் காத்திருக்கும் தம்பதியரைப்போல நீண்டகாலமாக திறக் கப்படாமலேயே வைக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப் பினர் அவர்களுடைய தொகுதியிலே கூட கட்டப்பட்டு மூன்று ஆண்டுகளாகியும் திறக்கப்படாத மருத்துவமனை இருப்பதை நினைவுபடுத்துகிறேன். அதைப்போன்று பல மருத்துவ மனைகள் திறக்கப்படாமலேயே இருக்கின்றன என்பதைக் கருத்தில்கொண்டு திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் 16 படுக்கைகள் கொண்ட பிரிவு, எக்ஸ்ரே பிரிவு ஆகியவைகளைச் செயல்படுத்தத் தேவையான உபகரணங்கள் வாங்கவும், கூடுதல் பணியிடங்களை உருவாக்க வும், ஏனைய தொடரும் செலவினங்கள் அனுமதிக்கவும் 1989-90-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் சேர்க்கப்பட்டு செயற் படுத்த அரசின் ஆய்வில் உள்ளது. ஆகவே, அத்தகைய உப கரணங்கள் வாங்கி முடிந்தவுடன் விரைவில் திறப்பதற்கு முயற்சி எடுக்கப்படும்.

திரு. க. பழனிசுவாமி: தலைவரவர்களே, ஆப்பரேஷன் செய்வதற்கு எம். எஸ். பட்டப்படிப்பு படித்த அறுவை சிகிச்சை டாக்டர்களையும் அதிகமான குழந்தைகள் சிகிச்சைக்கு வருவ தால் குழந்தைகள் சிகிச்சைக்கு டி. சி. எச். படித்த டாக்டர் களையும் நியமிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கின்ற தெய்வசிகாமணி: அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

7 சட்ட முன் வடிவுகள்.

சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு 1989

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவைப்'' பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) சட்டமன்றம் (தகுதியின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1989.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றம் (தகுதி யின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) மாநகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப்பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) சட்டமன்றம் (தகுதியின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1989.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றம் (தகுதியின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) மாநகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப்பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) சட்டமன்றம் (தகுதியின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1989.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றம் (தகுதியின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) மாநகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப்பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

1989 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

8. மானியக் கோரிக்கைகள், 1989–90, விவாதமும் வாக்கெடுப்பும் —தொடர்ச்சி.

கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வைத் துறை

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் 4,35,22,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் குடியிருப்புப் பகுதி களில் கள்ளச் சாராயம் விற்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய தேவை குறித்து விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 4,35,22,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்".

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மதுவிலக்கை முழுமையாக அமல்படுத்தும் பொருட்டு மதுக்கடைகளையும் ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர் மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 4,35,22,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத்தீர்வைத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,35,22,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

1989 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

8. மானியக் கோரிக்கைகள், 1989–90, விவாதமும் வாக்கெடுப்பும் —தொடர்ச்சி.

கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வைத் துறை

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் 4,35,22,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் குடியிருப்புப் பகுதி களில் கள்ளச் சாராயம் விற்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய தேவை குறித்து விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 4,35,22,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்".

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மதுவிலக்கை முழுமையாக அமல்படுத்தும் பொருட்டு மதுக்கடைகளையும் ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர் மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 4,35,22,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத்தீர்வைத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,35,22,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வைத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,35,22,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

கோரிக்கை எண். 15—காவல்துறை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 15—காவல்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,64,93,96,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாக்டரிகள் மற்றும் அலுவலகங்களில் வாயில் முன்னால் ஆர்ப்பாட்டம், உண்ணா நோன்பு, தர்ணா ஆகிய வற்றை நடத்தும் ஜனநாயக உரிமைகளை மீண்டும் வழங்கவும், பேரணிகள், ஆர்ப்பாட்டங்களில் போது ஒலிபெருக்கிகளை எடுத்துச் செல்லவும் அனுமதிப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,64,93,96,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொன். விஜயராகவன் : பேரவைத் தலைவர் அவர் களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 15- காவல்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,64,93,96,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பி. வி. இராஜேந்திரன் : பேரவைத் தலைவர் அவர் களே, திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் ஆகிய ஊர்களில் உள்ள காவலர்களுக்கு வீட்டுவசதி செய்து தருவது பற்றியும், வாய்மேடு, தலைஞாயிறு ஆகிய ஊர்களில் காவல் நிலையம் மிகவும் பழைய கட்டிடங்களாக வசதிகள் ஏதுமின்றி இருப்பதைப் போக்குவது குறித்தும் விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 15—காவல்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,64,93,96,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள காவலர்களுக்கு வீடுகள் கட்டித் தருவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 15—காவல்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,64,93,96,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,02,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் தீயணைப்பு நிலையம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதால் புதிய கட்டிடம் உடன் கட்ட வேண்டும் என்று விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,02,60,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரத்தில் விஸ்தரிப்பு சுமார் 8 இலட்சம் மக்களைக் கொண்டதாக ஆகிவிட்டபடியால் காந்திபுரம், சாயிபாபா காலனி போன்ற பகுதிகளில் சில உப தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்துவதும் பணியாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதும் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,02,60,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

[. பொன். விஜயராகவன்] [1989 ஏப்ரல் 27

''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,02,60,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ஆர். ஈஸ்வரன்: பேரவைத்தலைவர் அவர்களே, வாசுதேவநல்லூர் தொகுதியில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு புதிய வண்டி வாங்குவது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,02,60,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எஸ். டி. உகம்சந்த்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள எல்லா வட்ட தலைநகரங்களிலும் தீயணைப்பு நிலையங்கள் துவக்கப்பட வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,02,60,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மற்றும் அதன் தொடர்பான துறைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளும்,* திட்டங்களும் இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவைகள் இங்கே உரையாற்றப்பட்டதாக நடவடிக்கைக் குறிப்பிலே ஏற்றிக்கொள்ளப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிற கருத்துக்களுக்கு இறுதியிலே என்னுடைய பதிலுரையை வழங்குவேன் என்பதைக் கூறி இந்த அளவில் அமர்கிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்புமிகு உறுப்பினர்களுக்கு இன்றும் . நாளையும், காவல்துறை, தீயணைப்புத் துறை விவாதங்கள் இருக்கின்றன. அதிக உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று விரும்புவதால், இன்றைக்கு அதிக உறுப்பினர்களுக்கு வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்ற ஆர்வத்தோடு அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. எனவே எடுத்துக் கொள்கிற நேரத்தினை நீங்கள் சரியாக வரையறுத்துக்கொண்டால்தான் அதிக வாய்ப்புக்களைப் பெறமுடியும் என்ற உண்மை உங்களுக்குத் தெரியாதது அல்ல. எனவே அந்த அடிப்படையிலே

* 350–421–ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.

இந்த விவாதத்தை முதலிலே தொடங்கி வைப்பவர்கள் தமிழ் நாட்டிலே இருக்கின்ற காவலர்கள் அனைவருக்கும் வீடுகள் கட்டித்தரப்பட வேண்டுமென்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிந்த திரு. உகம்சந்த் அவர்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற மதுவிலக்கு, ஆயத்தீர்வை, தமிழ்நாடு காவல்துறை, தீயணைப்புத் துறை ஆகிய மானியக கோரிக்கைகள் மீது பேசுவதற்கு ஒரு வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு சொல்லப்பட்டிருப்பது எல்லாம் சாராய சாம்ராஜ்யத்தை ஒழித்திருக்கிறோம் என்று இன்றைக்கு நாம் விளம்பரத்தைச் செய்துகொண்டு வருகிறோம். ஆனால் நாட்டிலே உள்ள நிலைமை என்னவென்பதை எண்ணிப்பார்க்கின்ற நேரத்தில் கள்ளச்சாராயம் தினம் தினம் பெருகி கள்ளச் சாராயத்தினுடைய ஆதிக்கமானது கிராமங்களிலே, நகரங்களிலே பரவியிருக்கின்ற ஒரு ஆபத்தை இன்றைக்கு நாடு உணர்ந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு பத்திரிகையிலும் அதைப் பற்றி பல்வேறு செய்திகள் தினமும் பல்வேறு முறையிலே வருகின்றன. இங்கே கள்ளச்சாராயம் விற்கப்படுகின்றது, இதனால் இப்படி இப்படி நன்மைகள், இதனால் இப்படி இப்படி தீமைகள் ஏற்படுகின்றன என்ற விவரங்களை எல்லாம் அங்கே அந்த பத்திரிகைகளிலே எல்லாம் விளக்கத்தை கொடுப்பதை நாம் தினம் தினம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

ஒரு பக்கத்திலே மதுவிலக்கை ஓரளவுக்கு நாம் தளர்த்தியிருந்தாலும், ஓரளவுக்குத்தான் தளர்த்தியிருக்கிறோம், ஆனால் இன்றைக்கு நாட்டிலே உள்ள நிலைமை என்ன என்று சொன்னால், பூரணமாக மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லப்படுகிறது. அந்த அளவுக்கு கள்ளச் சாராயங்கள் பெருக்கெடுத்து ஓடுகின்றன.

முன்பு இந்த சட்டமன்றம் கூடிய நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். தமிழகத்திலே சாராயச் சாம்ராஜ்யத்தை ஒழிப்பதற்காக தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற குறிப்பைச் சொன்னார்கள். அதற்கு அவர்கள் உதாரணமாக சொன்னது, எக்சைஸ், ஆயத்தீர்வையினுடைய வரி, அன்றைக்கு போடப்பட்டிருக்கின்ற அந்த வரியை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அரசு காலத்திலே அது நீக்கப்பட்டிருக்கிறது, அதன் மூலமாக ஒரு சாராய சாம்ராஜ்யம் உருவாக்கப்பட்டு நாட்டிலே ஆண்டிற்கு 20 கோடி ரூபாய் அளவுக்கு லஞ்சப்பணம் சென்றது என்ற அடிப்படையிலே அவர்கள் அன்றைக்கு எடுத்துக் கூறினார்கள். நான்

ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புவது எல்லாம் அரசின் சார்பாக வரி உயர்வை நாம் குறைக்கிறோம் என்று சொன்னாலும், வரியைத் தளர்த்துகிறோம் என்று சொன்னாலும், அதற்கெல்லாம் இதுதான் அர்த்தமாக இருக்கும் என்று சொன்னால், தளர்த்தப்படுவதன் காரணமாக லஞ்சங்கள் கொண்டு செல்லப்பட்டன என்று சொன்னால், இதற்குப் பிறகு எந்த அரசுமே இதைப்போன்ற வரி உயர்வை, ஏற்கெனவே போடப்பட்டிருக்கின்ற வரியை தளர்த்துவதற்கு முன்வர முடியாது. அப்படி முன் வந்தால், அவர்களுக்கும் இந்தப் பட்டப் பெயர்தான் ஏற்படும் என்பதை கடந்த கால வரலாறுகள் இன்றைக்கு சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கின்றன.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைக்கு வரியை தளர்த்தச் செய்தார் என்று சொன்னால், இன்றைக்கு தமிழகத்திற்கு கிடைக்கக்கூடிய அந்த ஆயத்தீர்வை கட்டண மானது வேறு மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருக்கின்றது என்ற காரணத்தினால்தான் அந்த வரி உயர்வை அவர்கள் தளர்த்தினார்கள். அதன் காரணமாக மாநிலத்திற்கு வர வேண்டிய வருமானங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்று சொன்னால், இன்றைக்கு உள்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற வெளிநாட்டு மது என்று சொல்லப்படுகின்ற அந்த மதுவுக்கு 1982–83 ஆம் ஆண்டு கிடைத்த வருமானம், அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், 13 கோடியே 42 லட்சம் ரூபாய் தான். 1983–84 ஆம் ஆண்டு அரசுக்குக் கிடைத்த வருமானம் 20 கோடியே ஒரு லட்சம் ரூபாய் சொச்சம். 1984–85 ஆம் ஆண்டு அரசுக்கு வருமானம், அதாவது வரியை குறைத்த பிறகு கிடைத்த வருமானம் 32 கோடியே 64 லட்சம் ரூபாய். 1985–86 ஆம் ஆண்டு கிடைத்த ஆண்டு வருமானம் 37 கோடியே 80 லட்சம் ரூபாய். 1986–87-ல் 55 கோடியே 89 லட்சம் ரூபாய். இந்த இந்தியாவில் தயாரிக்கின்ற வெளிநாட்டு மதுபானங்கள் மூலம் வருமானம் கிடைத்து இருக்கின்றது. அதுபோன்று தான் 'கன்ட்ரி ஸ்பிரிட்' என்று சொல்லப்படுகின்ற சாராயத்தின் மூலமாக கிடைக்கின்ற வருமானம் 1982–83 ஆம் ஆண்டு 105 கோடி ரூபாய் அளவிலே கிடைத்தது அரசுக்கு. 1984–85 ஆம் ஆண்டு 133 கோடி, அதாவது வரியை குறைத்த பிறகு இந்த வருமானம் அதிகரித்திருக்கிறது. 133 கோடி ரூபாய்க்கு அந்த வருமானம் பெருகியிருக்கிறது. 1985-86 ஆம் ஆண்டு அது 162 கோடி ரூபாய் அளவிலே இந்த வருமானம் பெருகியிருக்கிறது.

இதை நான் ஏன் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், அரசு ஒரு நல்ல நோக்கத்திற்காக வரியை தளர்த்துவது தவறு அல்ல. இதுபோல பல்வேறு சந்தர்ப்பங்களில் வரி தளர்த்தப் பட்டிருக்கிறது. அதுபோல சேல்ஸ் டாக்ஸ் தளர்த்தபபடுவது கூட வியாபாரம் நல்ல முறையில் நடக்க வேண்டும், அண்டை

1989 ஏப்ரல் 27] (திரு. எஸ். டி. உகம்சந்த்)

மாநிலங்களிலுள்ள வியாபாரிகளுக்குள் போட்டியிடுவதை தவிர்க்க வேண்டும் என்கிற நல்ல அடிப்படையில்தான். அதற்கு எல்லாம் உள்நோக்கம் கற்பிக்கும வகையில் பேசுவது சரியல்ல. ஆனால் ஒன்றை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1972 ஆம் ஆண்டு அன்றைக்கு மதுவிலக்குக் கொள்கை விளக்கக் குறிப்பு இங்கே மாமன்றத்தில் வைக்கப்பட்டபோது அந்தக் குறிப்பின் இணைப்பில் உள்ள 359வது பக்கத்திலே ஒன்றை சொல்லியிருந்தார்களை. அப்போதும் இன்றைய முதலமைச்சர் அவர்களதான் பொறுப்பில் இருந்தார்கள். பக்கத்திலிருக்கிற புதுச்சேரியிலிருந்து தமிழ்நாட்டுக்கு புட்டியில் அடைத்த மதுவகைகளை எடுத்து வருவதால் தமிழ்நாட்டுக்கு வருவாய் குறைவு ஏற்படுவதை தடுக்கும் வகையில் இந்தியாவில் உற்பத்தியாகிற வெளிநாட்டு மது வகைகளுக்கான தீர்வையை 1972 ஆம் ஆண்டில் 14 ரூபாயாக குறைபபதாக அதிலே குறிப்பிட்டிருந்தார்கள். எல்லா வகை மதுக்களுக்கும் பொருந்தும் வகையில் பீர் லிட்டர் ஒன்றுக்கு அன்றைக்கு 1-3/4 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்பு ஆயத் தீர்வை 25 ரூபாயாக இருந்தது. அதைத்தான் 14 ரூபாயாக குறைத்திருக்கிறார்கள். ஆனால் நான் அதுகுறித்து 'பல கோடிக்கணக்கான ரூபாய் தவறாக இவர்கள் பெற்றுக் கொண்டதன் காரணமாகத்தான் இப்படி ஆயத்தீர்வையை குறைத்திருக்கிறார்கள் அல்லது தளர்த்தியிருக்கிறார்கள்' என்று நான் சொன்னால் அது எப்படி தவறோ அதுபோலதான் எங்கள் ஆட்சியில் நடைபெற்றது பற்றி பேசுவதும்.

ஒரு அரசாங்கம் ஆட்சியில் இருக்கும்போது பல்வேறு நிலைமைகளை அனுசரித்து, பக்கத்து மாநிலங்களோடு போட்டிப் போட்டு வியாபாரத்தை பெருக்க வேண்டிய சூழ்நிலையில் இப்படி செய்வது தவிர்க்க முடியாதது. அதனால்தான் 1972ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை 25 ரூபாயாக இருந்தது 14 ரூபாயாக குறைக்கப்பட்டிருக்கிறது. அதுபோலதான் அன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தீர்வை அதிகமாக இருந்த காரணத்தால், பக்கத்து மாநிலங்களுடன் நாம் போட்டியிட முடியாது என்கிற காரணத்தால் அதை குறைத்திருக்கிறார்கள். ஆனாலும் அரசுக்கு வந்துகொண்டிருந்த வருமானம் அதிகமாகிக் கொண்டு தான் வருகிறது. காரணம் முதலில் 13 கோடி ரூபாய் கிடைத்து வந்தது, கடைசியில் 55 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அதுபோல உளநாட்டு சாராயம் என்று சொல்லப்படுகிற கன்ட்ரி ஸ்பிரிட்டை எடுத்துக் கொண்டால் முன்பு 105 கோடி ரூபாய் என்று இருந்த வருமானம் கடைசியில் 162 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இதை எல்லாம் தவறாக இன்றைக்கு பிரச்சாரம் செய்வதால்தான் நாட்டிலே இன்றைக்கு உள்ள நிலைமை என்னவென்றால் கள்ளச்சாராயம் பெருகியிருக்கிறது. அதைத் தடுக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று நான் அறிய விரும்புகிறேன். இன்றைக்கு ஒரு பக்கத்திலே கள்ளச்சாராயம் விற்பனையை ஒழிக்க வேண்டுமென்று சொன்னாலும் விரைவிலே ஏலத்திலே அதை கொடுக்க இருக்கிறோம் என்றும் ஒரு குறிப்பு சொல்கிறது.

ஆனால் அப்படி ஏலத்திலே விட்டதற்கு பிறகுதான் அதிலுள்ள நிலைமைகள் பற்றி அரசுக்கு தெரியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்குள்ள நிலைமையில் காவல் துறை பற்றி சொல்ல வேண்டுமென்றால் பல்வேறு சீர்திருத்தங்களை காவல் துறையில் செய்ய வேண்டிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறோம். காவல் துறையைச் சார்ந்தவர்கள், ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் எப்படி எல்லாம் தவறுகளை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதற்கு நானே உதாரணமாக இங்கே நின்றுகொண்டிருக்கிறேன். அது சம்பந்தமாகவும் நடைபெற்ற சம்பவம் குறித்து இன்றைக்கு விவரமாக விவாதிக்கிற நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறேன். இதே மாமன்றத்தில் நான் சென்ற 22 ஆம் தேதியன்று பேசுகிறபோது ஒன்றை சொன்னேன். ''தமிழகம் அமைதி பூங்காவாக இருக்க வேண்டும், அமைதி நிலைக்க வேண்டும், அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று நான் ஆணித்தரமாக கோரிக்கை விடுத்தேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் கடந்த 23 ஆம் தேதி நானே கலவரங்களை செய்தது போலவும், பயங்கர ஆயுதங்களை வைத்திருந்தது போலவும், பலரை இன்னும் சொல்லப்போனால் காவல் துறையைச் சார்ந்தவர்களையும், வாகனங்களையும் தாக்கியதாக உண்மைக்குப் புறம்பாக @ புகார் போடப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளேன். அந்த விவரத்தைப் பற்றி விவரிக்க வேண்டுமென்றால் சென்ற 23 ஆம் தேதி மதுராந்தகத்தில் அ.இ.அ.தி.மு.க. சார்பாக நாங்கள் ஒரு பொதுக் கூட்டம் போடுவதற்கு தேதி வாங்கியிருந்தோம்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே * என்ற வார்த்தை அவை நடவடிக்கை குறிப்பில் இருக்கலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *என்பதை அகற்றி உண்மைக்குப் புறம்பாக என்று மாற்றிக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்கிற விவரங்கள் விசாரணையில், கோர்ட்டில் இருக்கிறது. 'ஜுடிசியல் விசாரணையில் இருக்கிற பிரச்சினையைப் பற்றி இங்கே பேசுவது முறையல்ல என்று கருதுகிறேன். இது குறித்து மாண்புமிகு தலைவர் அவர்கள்தான் முடிவு சொல்ல வேண்டும்.

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1989 ஏப்ரல் 27]

(முற்பகல் 10.50)

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மேலோட்டமாக சொல்ல விரும்புகிறேன். விவரத்திற்கு உள்ளே நான் போக விரும்பவில்லை. உள்ள நிலைமை என்னவென்றால், என்னைப் பொறுத்தவரையில் நான் தார்மீக முறையில், அகிம்சையில் பற்றுக்கொண்டவன். அன்றைக்குக் கூட அகிம்சா முறையில் உட்கார்ந்து போராட்டம் நடத்திய என்னை காவல் துறையினர் செயல்பட விடாமல் செய்து, என்னை வீட்டுக்கு வெளியே செல்லவும் விடாமல், வெளியே உள்ளவர்களை உள்ளே வரவும் முடியாதவாறு தடுக்கப் பட்டோம். நாங்கள் தார்மீக முறையிலே, காந்திய முறையிலே, அகிம்சை முறையிலே படுத்துக் கொண்டு நியாயத்தைக் கேட்டேன். அதுவும் என்னுடைய வீட்டு வாசலினுடைய வராந்தாவில் தான் கேட்டேன். வேறு எங்குமல்ல. நடு ரோட்டிலே அல்ல, அந்தச் சூழ்நிலைகளில் நாங்கள் தாக்கப்பட்டிருக்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அன்றைக்கு காவல் துறையினர் கறுப்புக் கொடி காட்டுவதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு அனுமதி வழங்கியதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி அனுமதி வழங்கப்படவில்லை. அப்படி ஒரு தவறான தகவலை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு காவல் துறையினர் மூலமாகச் சொல்லப்பட்டிருக்கிறதென்று நான் அறிகிறேன். ஏனென்று சொன்னால், அன்றைக்குப் பலரை அவர்கள் பிரவென்டிவ் அரெஸ்ட்டாகச் செய்திருக்கிறார்கள். பிரவென்டிவ் அரெஸ்ட் செய்ய வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கிறதென்றால் அனுமதி கொடுத்திருந்தால் அது தேவையில்லை. பிரவென்டிவ் அரெஸ்ட் செய்யப்பட்டவர்கள் யார் என்றால் மதுராந்தகம் நகராட்சியினுடைய வைஸ் சேர்மென், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சமூக விரோதிகள் அல்ல. அவர்கள் எல்லாம் பிரவென்டிவ் அரெஸ்ட் என்று கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அனுமதி வழங்கப்படாததன் காரணமாகத்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், அனுமதி வழங்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அனுமதிக் கடிதம் யாருக்காவது அனுப்பப்பட்டிருக்கிறதா ? அப்படிப் பட்ட அனுமதியை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த மன்றத்தில் காட்ட முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட தவறான தகவலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு காவல் துறையினர் அளித்ததன் காரணமாகத் தான் இப்படிப்பட்ட விபரீதமான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன.

அன்றைக்கு உள்ள நிலைமையைச் சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய தம்பியை, வீட்டுக்குள் இருந்த என்னுடைய தம்பியை எந்தவிதமான உத்தரவும் இல்லாமல்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி. உகம்சந்த் அவர்களுடைய நிலைமைகள் அனைவருக்கும் தெரியும். எனவே வழக்குக்கு உள்ளே செல்ல வேண்டாம். உங்களுடைய உணர்வுகளுக்கு நான் மதிப்பளிக்கிறேன். இந்த அளவோடு இதை விட்டு விட்டு, அடுத்து, காவல் துறை பற்றிய மற்றச் செய்திகளைப் பேசினால் சிறப்பாக இருக்கும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவைத் தலைவரவர்களே, அரசியல் கட்சிக்குச் சம்பந்தமில்லாத என்னுடைய தம்பியை வீட்டிற்குள்ளே சென்று, அடித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைத்தான் சொல்கிறேன். வழக்கு வழக்குமன்றத்திலே இருக்கிறது. அங்கே சந்திக்கத்தான் போகிறோம். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் எதிர்க் கட்சிகளை ஒடுக்குவதற்கு தவறான முறையில் காவல் துறையைப் பயன்படுத்திக் கொண்டிருந்தால், இதுவே மரபாக மாறிவிடும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே.சாதிக் பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் தவறான தகவலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கறுப்புக் கொடி காட்டுவது அனுமதிக்கப்படுகிறது. நானும், திரு. துரைமுருகனும் கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்றபோது ஒரு இடத்தில் அல்ல, 4 இடங்களில் கன்னியாகுமரியில் கறுப்புக் கொடி காட்டினார்கள். அதைப் போலே திருநெல்வேலி மாவட்டத்தில் கறுப்புக் கொடி காட்டியிருக்கிறார்கள். கறுப்புக் கொடி காட்டுவதற்கு சில விதிமுறைகளைப் பின்பற்றி அதிகாரிகள் குறிப்பிட்ட சில இடங்களைத் தருகிறார்கள். அந்த இடங்களை மீறிச் சென்று விட்டால், சட்டம் இருந்து என்ன செய்ய முடியும் ? எனவே தான் அனுமதி கொடுக்கிறார்கள். அந்த அனுமதியை முறையாகப் பயன்படுத்திக் கொள்வது ஜனநாயகத்தில் பின்பற்றப்படும் பண்பு என்பதை மறந்து விடக் கூடாது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவரவர்களே, அனுமதி வழங்கியிருந்தால், அனுமதிக்கப்பட்ட இடத்தில் நாங்கள் காட்டியிருப்போம். அனுமதி வழங்கப்படவில்லை என்ற தகவலைத்தான் சொல்கிறேன். நான் ஆணித்தரமாக, உறுதியோடு சொல்ல முடியும், அனுமதி எங்களுக்கு வழங்கப்படவில்லை. அப்படி அனுமதி வழங்கியிருந்தால்.......

1989 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. ஆற்காடு ந. வீராசாமி : பேரவைத் தலைவரவர்களே, பொதுவாகக் காவல் துறையினரிடம் எழுத்து மூலமாக அனுமதி கேட்டால், எழுத்து மூலமாகப் பதில் சொல்லு வார்கள். அதே நேரத்தில் அதிகாரிகளிடமே கலந்து பேசு வதுண்டு. நாங்கள் கறுப்புக் கொடி காட்டப் போகிறோ மென்று வாய் மூலமாகச் சொன்னால், வாய் மூலமாகப் பதில் சொல்வதுண்டு. நான் தெரிந்து கொள்ள விரும்புவது, மாண்புமிகு உறுப்பினர் எழுத்து மூலமாக அங்கே அனுமதி கேட்டிருக்கிறார்களா ?

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எழுத்து மூலமாக அதற்கு அனுமதி கோரப் பட்டிருக்கிறது 5 தினங்களுக்கு முன்னதாக. இதை மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது கூட, அருமை நண்பர் திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் சொல்லுகிற நேரத் தில் சொன்னதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள், வெளி வேஷங்கள் இருக்கலாமென்று. ஆனால் நான் ஆணித்தரமாக சொல்லிக் கொள்வதெல்லாம், இதே மன்றத்தில் வந்திருக் கிறேன், எனக்கு வேஷம் போடத் தெரியாது. வேண்டுமானால் இங்கேயே நீங்கள் எந்த மருத்துவரைக் கொண்டு வந்து வேண்டு மானால் பார்க்கலாம். என்னுடைய கையிலே பிராக்சர் இருக்கிறது. (கையைக் காட்டினார்) லத்தி சார்ஜ் மூலமாக பிராக்சர். இன்னும் அடையாளம் மாறவில்லை. இன்னும் முதுகிலும் இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களுக்கு வேண்டுமானால் இதே அவையில் காட்டுகிறேன். இல்லை யென்றால் அறையில் காட்டத் தயாராக இருக்கிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் அன்றைக்கு லத்தி சார்ஜ் ஏற் படவில்லை, அடிபடவில்லை என்று சொல்லுகிறார்கள். புகைப் படத்தைப் பார்த்தால் தெரியும். லத்தி ஓங்கியிருக்கிறது. ஒரு லத்தி முதுகில் விழுந்திருக்கிறது. அந்தச் சூழ்நிலையில் படவில்லை என்றால் அதற்கு மேல் நான் விளக்கம் சொல்ல வில்லை. இதை மாத்திரம் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். அவர் முடித்துக் கொண்டு விட்டார்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மற்றொரு புகைப்படத்தையும் கூட மாண்புமிகு தலைவர் அவர்களே தங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அன்றைக்கு நாங்கள் படுத்துக் கொண்டு தான் மறியல் செய்தோம். என்னுடைய வீட்டு வாசலுக்குள்ளாகவே இருந்தோம், அந்தப் புகைப்படத்தையும் காட்டத் தயாராக இருக்கிறேன். படுத்துக் கொண்டு மறியல் செய்தோம். எங்களிடம் எந்த ஆயுதமும் இல்லை. பயங்கரமான ஆயுதம் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நாட்டில் உள்ள நிலைமை என்னவென்றால், ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கே, அவருடைய வீட்டு வாசலிலே இந்த நிலைமை என்றால், மக்கள் இன்றைக்குப் பேசிக் கொள்கிறார்கள், நாட்டிலே யாருக்கும் பாதுகாப்பு இல்லை என்ற சூழ்நிலைதான் இருந்து வருகிறது. அன்றைக்குப் பொதுக் கூட்ட மேடையிலே பேசப்பட்டதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தங்களுக்கு அதன் டேப்பைச் சமர்ப்பிக்க இருக்கிறேன். வன்முறையைத் தூண்டுகிற அளவுக்கு, நாங்கள் நினைத்தால் எதிர்க் கட்சித் தலைவரைக் கொலை செய்வோம். நான் சட்டமன்றத்தில் இருந்திருந்தால் கொலையே செய்திருப்பேன் என்று, மாண்புமிகு அமைச்சர்களை வைத்துக் கொண்டு ஒரு பொறுப்பு மிக்கவர் அன்றைக்குப் பேசி இருக்கிறார். அதனுடைய டேப்பும் என்னிடம் இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் அன்றைக்கு அவர் பேசி இருக்கிறார், நான்சட்ட மன்றத்தில் இருந்திருந்தால் *** அந்த அளவுக்கு கேவலமானமுறையில் அவர் பேசியிருக்கிறார். இப்படி, வன்முறையை தூண்டுகிற அளவுக்கு நாட்டில் காரியங்கள் நடைபெற்றால், ஜனநாயகம் எந்த அளவுக்கு இருக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதை மட்டும் அவர்கள் செய்யவில்லை. அன்றைக்கு முன்னாள் கருங்குழியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது மாவட்ட தி. மு. க. செயலாளர் சொல்லியிருக்கிறார் "நான் நினைத்தால் அகில இந்திய தி. மு. க.வைச் சார்ந்தவர்கள் கருப்புக் கொடி காட்டுவது யாராக இருந்தாலும் அவர்களை (மணியடிக்கப் பெற்றது). மாண்புமிகு தலைவர் அவர்களே இதைத் தன்னிலை விளக்கமாக எடுத்துக் கொள்ளவில்லை. அந்தக் கூட்டத்தில் பேசப்பட்டதைத் தான் சொன்னேன். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போதே 16 மணித் துளிகள் கொடுத்திருக்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: அவர் அந்தக் கூட்டத்திலே பேசி இருக்கிறார். "நாங்கள் அவர்களை கவனித்துக் கொள்வோம் —அவர்களுக்கு சரியான பாடத்தைக் புகட்டுவோம்" என்று

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

சொல்லியிருக்கிறார். நான் ஏன் இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற போது சொன்னார்கள்....

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் நன்மைக்காகச் சொல்கிறேன். வெளியே யார் யார் எதை எதை பேசுகிறார்கள் என்பதையெல்லாம் இங்கே அவையிலே பேசுவது பழக்கமில்லை. அப்படிச் சொன்னால ஒவ்வொருவரும் பேச வேண்டியது இருக்கும். இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கூட ''புரட்சித் தலைவா ஆணையிட்டால் அவருடைய தலையை வெட்டி காலடியில் வைப்பேன்'' என்றெல்லாம் கூட பேசி இருக்கிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியே நிறைய பேசப்படுவதை அனைவரும் அறிவர். எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அடுத்த செய்திக்குப் போகலாம். உங்களுக்கு ஏற்கெனவே 17 மணித் துளிகள் கொடுத்திருக்கிறேன். உங்கள் மீது எனக்கு அதிக அன்பு உண்டு. ஆனால் அதே நேரத்தில் எல்லா உறுப்பினர்கள் மீதும் நீங்கள் அன்பு வைக்க வேண்டும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தான் இன்றைக்கு உள்ள நிலைமை. வெளியே நடைபெற்றதைப் பற்றிசொல்லக் கூடாது என்றால், வெளியே எப்படி வன்முறையைத் தூண்டுகிறார்கள் என்று சொல்ல வேண்டிய கடமையில் நான் இருக்கிறேன். இது போலீஸ் மான்யம். எப்படியெல்லாம் அவர்கள் தூண்டுகிறார்கள் எதனால் இந்த வன்முறைகள் ஏற்படுகின்றன, யார் தூண்டுகிறார்கள் என்று சொல்லாமல் இருப்பது கடமையிலிருந்து தவறிய ஒன்றாகும். எனவே இப்படிப்பட்ட வன்முறைப் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அன்றைக்கு நடைபெற்ற சம்பவத்தை விட்டுவிட்டாலும், எங்களுக்கு வழங்கப்பட்ட சிகிச்சையைப் பற்றி நான் சொல்ல வேண்டிய கடமையில் இருக்கிறேன். எங்களுக்கு காயங்கள் ஏற்பட்டன. மாஜிஸ்ட்ரேட் முன்நிலையில் நாங்கள் நிறுத்தப் பட்ட உடனே, அவர்களே வருத்தப்பட்டுச் சொன்னார்கள். ''உடனடியாக மதுராந்தகம் மருத்துவ மனைக்கு இவர்களை அழைத்துச் சென்று நீங்கள் சிகிச்சைத் தரவேண்டும்'' என்று. ஆனால் காவல் துறையினர் எங்களுக்குச் சிகிச்சை வழங்கவில்லை. மாறாக நேரடியாக எங்களை கடலூருக்கு அழைத்துச் சென்றார்கள். மதுராந்தகத்தில் சப் ஜெயில் இல்லையா? செங்கற்

பட்டில் சப் ஜெயிலில் இடமில்லையா? சென்னையில் இடமில்லையா? வேண்டுமென்றே உள் நோக்கத்தின் காரணமாக எங்களை கடலூர் சிறைச்சாலைக்குக் கொண்டு சென்று கடைசி வரை சிகிச்சை அளிக்கப்படவில்லை. அன்றைக்கே மருத்துவர்கள் வந்தார்கள். அவர்கள் சொன்னார்கள். ''உங்களுக்கு ஃபிராக்சர் இருக்கிறது. ஆனால் நாங்கள் இங்கே கட்டுதான் போடுகிறோம் என்று சொன்னார்கள்''. கடைசியில் நான் நேற்று பெயிலில் வெளியே வந்த பிறகு கடலூரில் இருக்கிற மருத்துவமனைக்குச் சென்று அங்கே சிகிச்சைப் பெற்றேன். அப்போது எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்துச் சொன்னார்கள். ''பிராக்சர் ஆகி 3 தினங்கள் ஆகியிருக்கின்றன. ரத்தம் கட்டியிருக்கிறதே. ஏன் உடனடியாகச் சிகிச்சை எடுக்கவில்லை'' என்று அவர்களே கடிந்து கொள்கிற அளவுக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கே சிகிச்சை அளிப்பது மறுக்கப்பட்டிருக்கிறது என்றால் எந்த அளவுக்கு நாட்டிலே நிகழ்ச்சிகள் நிலைமைகள் இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டு ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் வைக்க விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை அது மிகவும் பெரிய தொகுதி. அங்கே பவுஞ்சூர் என்கிற இடத்தில் ஒரு காவல் நிலையத்தைத் தொடங்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கை அரசுக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டிருக்கிறது. அதை மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

தீயணைப்பைப் பொறுத்த வரையில் அங்கே பல்வேறு வண்டிகள் வழங்கப்பட்டிருந்தாலும், சரியான முறையில் அவைகள் ஓடாமல் இருக்கின்றன. அந்த தீயணைப்பு வண்டிகள் எல்லாம் சீரான முறையில் ஓடுவதற்கு வேண்டிய வழி வகை செய்ய வேண்டும். எல்லா தீயணைப்பு நிலையங்களுக்கும் வண்டிகள், ஆம்புலன்ஸ் வண்டிகள் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நாட்டிலே எதிர்க் கட்சிகளை ஒடுக்குவதற்கு நாம் காவல் துறையைப் பயன்படுத்தினால் அது ஜனநாயக உயர்வையே நிறுத்துகிற காரியமாக அமைந்து விடும் என்று தெரிவித்துக் கொண்டு இந்த அளவிலே பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

1989 ஏப்ரல் 27]

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உக்கம்சந்த் அவர்களுடைய பேச்சில் * * * என்கின்ற வகையிலே உபயோகப்படுத்திய அந்த வார்த்தை சபைக் குறிப்பில் இடம் பெறுவது சரியாக இருக்காது; அவற்றை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காரலாம். முடிவு எடுப்பது நான், பேரவைத் தலைவர். நம்முடைய நண்பர் உக்கம்சந்த் அவர்கள் கவனிக்க வேண்டும்; நீங்கள் பேசும் போது உங்களுக்கு முழு அனுமதி அளித்து இருக்கிறேன். வெளியில் பேசப்படுகிற பல்வேறு செய்திகளில் தரம், தரமின்மை என்ற பல்வேறு நிலைகள் காணப்படுவது உங்களுக்குத் தெரியும். எனவே இது அவைக்கு வரக் கூடாது என்ற அடிப்படையில் திரு. இராமநாதன் சுட்டிக் காட்டிய அந்த ஒரு தொடர் மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு தலைவரவர்களே, இன்றைய தினம் வாதத்திலே இருக்கக் கூடிய காவல் துறை மானியத்தில் சில குறிப்புகளை நம்முடைய மேன்மை தங்கிய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நீண்ட சொற்பொழிவாக நிகழ்த்துவதைவிட சிறிய குறிப்புகளாக நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்தாலே போதும் என்பது என்னுடைய கருத்து. ஏனென்றால் சிறிய கோடுகளைக் கூட சித்திரமாக ஆக்கிக்கொள்ளக்கூடிய வல்லமை பெற்ற கலைஞர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், கடந்த 13 ஆண்டுகளில் காவல் துறை கறை படிந்து இருந்தது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக நான் இரண்டு, மூன்று சம்பவங்களை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

1977-லிருந்து 1989 வரை இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய பெரும்பாலான உறுப்பினர்கள் மீதும் விரோதமான உண்மைக்கு மாறான ** வழக்குகள் போடப்பட்டன. அவர்களுக்காக 15 நாட்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த * என்பதை ''உண்மைக்கு மாறான*'' என்று திருத்திக் கொள்ள வேண்டும்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : உண்மைக்கு மாறான வழக்குகள்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நண்பர் உகம்சந்த் அவர்கள் பேசும்போது கூட ஒரு மறுப்பு எழுப்பப்பட்டது. ஆனால் ஒரு உறுப்பினர் பேசுவது '' பொய் '',

*மாண்புமிகுபேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பட்டது.

என்று இன்னொரு உறுப்பினர் குற்றஞ்சாட்டும்போது தான் பொய் என்ற வார்த்தை, அன்பார்லியமெண்ட்ரி' அப்போதுதான் 'அன்பார்லியமெண்ட்' என்று சொல்லப்பட்டு விலக்கப்பட வேண்டும். 'பொய்யாக', 'பொய் வழக்கு' 'பொய் கூற்று' என்று சொல்வதிலே தவறில்லை. ஒருவர் சொன்னது பொய் என்று சொல்லும்போது தான் அது அன்பார்லியமெண்டரியாக ஆகிறது. பொய் என்ற வார்த்தையையே பயன்படுத்தக்கூடாது என்றால் நீங்களே 'பொய்மையும், வாய்மையும்' என்ற குறளைக்கூட இங்கே பயன்படுத்த முடியாமல் போய்விடும். எனவே தயவு செய்து அதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேற்கோள் என்ற முறையில் நம்முடைய முதல்வரவர்கள் கொடுத்த விளக்கத்தை ஏற்று, இனிமேல் அந்த அளவுக்கு அனுமதிக்கப்படும்.

திரு. எஸ். எஸ். தென்னரசு: தலைவரவர்களே, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் நம்முடைய மதிப்பிற்குரிய முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. ஆர். பதவியேற்ற 6 மாதங்களுக்குப் பிறகு 1977-ல் சென்னையில் நம்முடைய இப்போதைய முதலமைச்சர், கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் தலைமையிலேயும், மதுரையில் நான், நம்முடைய இன்றைய மாண்புமிகு அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் இரகுமான்கான் அவர்கள், சட்டப்பேரவை உறுப்பினர் இராமநாதன் அவர்கள், நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் கோபால்சாமி அவர்கள், அதைப்போல் வேறுபல திராவிட முன்னேற்றக் கழக முன்னணித் தோழர்கள் மீதும் அபாண்டமான வழக்குகள் போட்டு, சிறு சிறு பதவிகளைப் பலருக்கு வழங்கி, சிலரை அப்ரூவர்களாக மாற்றி எங்கள் மீது ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டு இருக்கின்றது. அது இன்றைக்கு உயர் நீதிமன்றத்தில் இருப்பதனால் அதைப்பற்றி நான் குறிப்பிட விரும்பவில்லை. அதைப்போல பல வழக்குகள் எங்கள் மீது தொடரப்பட்டிருக்கிறது என்பதை நான் சட்டமன்றத்திற்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

ஆனால் அதேநேரத்தில் தவறு செய்த சிலர்மீது வழக்கு தொடர்வதற்கு அன்றைய போலீசார் முன் வரவில்லை. இந்த மன்றத்திலே இருக்கக்கூடிய தோழர் திரு. இரகுமான்கான் அவர்களுடைய இல்லத்திற்குச் சென்று முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள், அவர்களுடைய இல்லத்திலேயே தாக்கி, அவரைக் கொலை செய்ய முயன்றதும் அனைவருக்கும் தெரியும். நாட்டு மக்கள் அனைவரும் நன்றாக அறிவார்கள். அப்படிப்பட்ட கொடிய குற்றங்கள் புரிந்தவர்கள் மீதுகூட இன்னும் சரியான வழக்கை அன்றைய காவல்துறை போட

1989 ஏப்ரல் 27] (திரு. எஸ். எஸ். தென்னரசு)

வில்லை என்பதும் உங்களுக்குத் தெரியும். அதுபோன்ற குறைபாடுகள் அதிகம் இருந்தாலும்கூட, காவல்துறையின் அன்றைய நிர்வாகத்தில் நேர்மைக் குறைவாக நடந்தது மட்டுமல்ல, தன்னுடைய திறமையைக் காண்பிப்பதற்குக்கூட மறந்து விட்டது.

கலைஞருடைய முதல் ஆட்சிக் காலத்தில் ரேகை மூலம் குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், தடயங்கள் மூலம் குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், இந்தியாவிலேயே முதல் பரிசை வாங்கிக் கொண்டிருந்த காவல்துறை, கலைஞர் ஆட்சி போன பிறகு, நேற்று வரை எந்த முதலிடத்தையும் காவல்துறை பெறுவதற்கு இயலவில்லை. பத்தாண்டுக் காலமாகக் காவல்துறை செயலிழந்து போய்விட்டது. இதிலே என்ன ஆச்சரியம் என்றால், கலைஞர் ஆட்சிக் காலத்திலே பரிசு பெற்ற அதே போலீஸ் அதிகாரிகள் தான் இன்றைக்கு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட காவல்துறை அதிகாரிகளை நேர்மையாகப் பணியாற்றுவதற்கு அன்றைய அரசு தடுத்து விட்டதா அல்லது காவல் துறை அதிகாரிகளுக்கு அன்றைய ஆட்சியின் மீது கோபம் ஏற்பட்டு அலட்சியமாக இருந்து விட்டார்களா என்பதைக் காலப் போக்கில் தான் நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

எங்களுடைய மாவட்டத்தில், அருப்புக்கோட்டையிலேயிருந்து தூத்துக்குடி செல்லுகின்ற நெடுஞ்சாலையில் நான்கைந்து வழிப்பறிக் கொள்ளைகள் நடந்திருக்கின்றன. இதுவரைக்கும் எதையுமே அன்றைய காவல்துறை கண்டுபிடிக்கவில்லை.

அதைப்போல, விருதுநகரிலிருந்து திருநெல்வேலி செல்லுகின்ற நெடுஞ்சாலையில் இரவு நேரத்தில் பஸ்ஸை மறித்து, பலயிடங்களிலே கொள்ளை நடந்திருக்கின்றன. அதைப்பற்றியும் இன்றைய காவல்துறை கண்டுபிடிக்கவில்லை.

இவைகளைப் பற்றியெல்லாம் சிந்திக்கின்றபொழுது, திடீரென்று காவல்துறை செயலிழந்து விட்டது என்கின்ற எண்ணம் பொதுமக்கள் மத்தியிலே வந்திருக்கின்றது. அதைச் சீர் செய்வதற்கு நம்முடைய முதலமைச்சர்தான் மறுபடியும் முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் ஞாபகப்படுத்துகிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்திலே ரெக்ரூட்மெண்ட்—சப் இன்ஸ்பெக்டர்களுக்கு ரெக்ரூட்மெண்ட் நடந்திருக்கின்றன. சுமார். 600-க்கும் மேற்பட்ட சப் இன்ஸ்பெக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே பகிரங்கமாக ஊழல் நடைபெற்று இருப்பது எல்லோர் மத்தியிலேயும் இன்றைக்குப் பேசப்படுகிறது. உயரம் குறைவானவர்கள், மார்புஅளவு குறைவாக இருந்தவர்கள்

தேகப்பயிற்சி, ஓட்டப் பந்தயம் முதலிய அதலெடிக் பந்தயங்களிலே எந்த நற்சான்றிதழும் பெறாதவர்கள் இன்றைக்கு சப் இன்ஸ்பெக்டர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆங்காங்கே நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதை நம்முடைய முதலமைச்சரவர்கள், அந்தத் தேர்வு முறையைப் பரிசீலித்து, ஒரு கமிஷன் போட்டு விசாரித்து, அந்த பிட்னெஸ் சரிதானா என்பதை மிக விரைவிலே கண்டு பிடிக்க வேண்டுமென்று இந்தச் சபைக்கு நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படித் தவறு நடந்திருக்குமானால் அந்தத் தவறை அங்கீகாரம் செய்த அன்றைய டி. ஜி. பி. மீது முறையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த மன்றத்திற்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், வேறுவிதமான ஊழல்களும் இப்பொழுது நடைபெற்றிருக்கின்றன. அப்படி நியாய விரோதமாக, அரசியல் கட்சியின் சார்பிலே அட்டை வைத்திருப்போருக்கு மட்டும் சப் இன்ஸ்பெக்டர் பதவி வழங்கினால் எப்படிக் காரியமாற்றுவார்கள் என்பதற்கு உத்திரவாதம் சொல்ல முடியாது.

கடந்த 15 நாட்களுக்கு முன்பாக ஒரு அக்கிரமம் நடைபெற்றிருக்கிறது. இதே முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சப் இன்ஸ்பெக்டர் கமுதிக்கு அருகிலே இருக்கக் கூடிய மண்டல மாணிக்கத்தில் இருக்கின்றார். இலவச அரிசி போடுகின்ற தினத்தன்று அந்த ஊர் செயலாளர் அந்தக் கொட்டகையிலே கொடி கட்டினார் என்பதற்கு கொடி கட்டக் கூடாது என்று அவர் தடுத்திருக்கிறார். நாங்கள் எங்களுடைய பந்தலிலே கொடி கட்டுவதைத் தடுப்பதற்கு உங்களுக்கு அதிகாரம் இல்லை என்று செயலாளர் சொல்லியிருக்கிறார். இதனாலே கழகத்திற்கும், சப் இன்ஸ்பெக்டருக்கும் மோதல் ஏற்பட்டு, அந்தச் செயலாளரைத் தெருவிலே விட்டு அடித்து, கையிலே விலங்கு மாட்டி, கமுதி போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்ற கொடுமை உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

அப்படிப்பட்ட நியாய விரோதமான காரியங்கள் தொடர்ந்து நடைபெறும் என்பதால்தான், முறையில்லாமல் சப் இன்ஸ்பெக்டராக வந்தவரை இப்பொழுதே, ஆரம்பத்திலேயே நீக்கி விட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். காவல்துறை அதிகாரி அவர்கள் நடந்து கொண்டதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவாகள் சொன்னார்கள். நேற்றைய தினம் மாலை அணிவிப்பதற்காக. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே ஏதாவது "Point of order" இருக்கிறதா ? No, No. உட்காருங்கள்.

(முற்பகல் 11-10)

திரு. எஸ். எஸ். தென்னரசு : இதேபோன்ற அக்கிரமம் நடக்குமானால் யாரும் நியாயமான காரியங்களைச் செய்ய முடியாது. இந்த 600 சப் இன்ஸ்பெக்டர் விஷயத்தில் முதலமைச்சரவர்கள் மிக வேகமாகப் பரிசீலனையில் இறங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல வேறு சில இடங்களில் சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன. அவைகளையும் நாம் யோசிக்கவேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் விரும்புவது, அதே கமுதியில் டி.எஸ்.பி.யாக இருப்பவர் ** அவர்கள் கடந்த அக்டோபர் மாதம் தான் முதன்முதலாகப் பதவி ஏற்றிருக்கிறார்கள். அவருக்குத் துணையாக இப்போது மண்டலமாணிக்கத்தில் இருக்கக்கூடிய ** கடந்த வாரம் சப்-இன்ஸ்பெக்டர் பதவியை ஏற்றிருக்கிறார். இவர்கள் இருவருக்கும் முறைகேடாக பதவி தரப்பட்டிருக்கிறது என்று பொதுமக்கள் மத்தியில் அபிப்பிராயம் இருக்கிறது. அதை அவர்கள் சிந்திக்க வேண்டும். இன்னொன்று 'பியூர் மெரிட்' தரமான தகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு சப்-இன்ஸ்பெக்டர் பதவி தராமல் . .

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே, தென்னரசு அவர்கள் சில குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார். குற்றச்சாட்டுகளைச் சொல்லலாமே தவிர குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்ட பெயர்களைச் சொல்வது முறையாகாது. பெயர்களைச் சொல்லாமல் சொன்னாலே அது விளங்கிவிடும். அதிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, தயவுசெய்து குறிப்பிட்டு அவர்கள் பெயர்களைச் சொல்லாமல் இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாக, இந்தக் காவல் துறை மானியத்தில் பேசுகின்றவர்களும் சரி, வேறு நிலைகளில் பேசுகிறவர்களும் சரி, எந்த ஒரு அதிகாரியின் பெயரையும் குறிப்பிட்டு அவையில் சொல்லக்கூடாது என்பதை இந்த நேரத்தில் உணர்த்த விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொல்லப்பட்ட பெயர்களை குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பெயர்களை மட்டும் தான் குறிப்பிலிருந்து நீக்கி இருக்கிறேன். பதவியிலிருந்து அல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். (சிரிப்பு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, திடீரென்று யாராவது குறுக்கிட்டு ஆதாரம் கேட்டால் குழப்பம் அடையக்கூடாது என்பதற்காக நான் பெயர்களைச் சொன்னேன். பெயர்களை நீக்குவததைப் பற்றி ஆட்சேபணை இல்லை. நடவடிக்கை எடுத்தால் எனக்கு போதுமானது. இந்தக் குறைபாடுகளை விரைவில் தீர்ப்பதற்கு பொதுமக்கள் மத்தியிலும், காவல் துறையில் இருக்கக்கூடிய நல்லவர்கள் மத்தியிலும் மறுபடியும் ஒரு போலீஸ் கமிஷன் போடவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அந்தப் போலீஸ் கமிஷனில் பொதுவாக வீட்டுவசதிகள் அதிகமாகப் பரிசீலிக்கப்படும். காவல் துறைக்கு வேண்டிய சலுகைகள் அதிகமாக கொடுக்க வேண்டுமென்று பேசப்படும். அவைகளோடு இப்போது சமீபத்தில எழுந்திருக்கிற பிரச்சினை நம்முடைய காவல்துறையில் இருக்கிற ஆயுதங்களை விட வன்முறையாளர் கையில் உள்ள ஆயுதம் பலமானது என்றும், அது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டது என்றும் பரவலாகப் பேசிக் கொள்ளப்படுகிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு வாதிட்டு நாமும் வலிமையான ஆயுதத்தை போலீஸ்காரர்கள் கையில் ஒப்படைப்பதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்தக்கூடிய முறையில் முயற்சியெடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல நம்முடைய காவல்துறையில் இருக்கிற சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் போன்றவர்களுக்கு இப்போது மோட்டார் சைக்கிள்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மோட்டார் சைக்கிள் அவர்களுக்குச் சொந்தமானது அல்ல என்பதை சமீபத்தில் தான் நான் தெரிந்து கொண்டேன். அவர்கள் மாறுதல் ஆகிவிட்டால் மோட்டார் சைக்கிளை போட்டுவிட்டு போய்விட வேண்டும். அடுத்து வருகிறவர் அதை எடுத்துக் கொள்வார் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையை மாற்றி சமீபத்தில் ஓட்டுநருக்கு கார் சொந்தம் என்று செய்ததைப் போல அந்தந்த சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர்கள், சம்பளத்திலிருந்து ஒரு தொகையைப் பிடித்துக்கொண்டு சொந்தமாக மோட்டார் சைக்கிளை வாங்கிக் கொடுத்தால் அது கால காலத்திற்கும கெட்டுப் போகாமல் இருக்கும், பாதுகாப்பாகவும் இருக்கும் என்ற எண்ணம் பலருக்கு இருக்கிறது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இன்னொன்று காக்கிச் சட்டையைப் பற்றி அதிகமாக கவலைப் பட வேண்டியிருக்கிறது. காக்கிச்சட்டை. என்பது ஒரு காலத்தில் காவல் துறைக்கு மட்டும் தான் இருந்தது. இன்றைக்கு காக்கிச் சட்டை பலபேர் அணிந்து கொண்டிருப்பதால் காரை மறிக்கிற போது யார் மறிப்பது என்பதை கிட்டே போய் பார்த்தால்தான் தெரிகிறது. எல்லோரும் அவர்கள் சட்டையில் ஸ்டார் வைத்திருக்கிறார்கள். வேறு இலாக்காவைச் சேர்ந்தவர்களும் காக்கிச் சட்டையில் பெயரும், ஸ்டாரும் வைத்திருக்கிறார்கள். ஆகவே காக்கிச் சட்டை போட்டிருகக்கூடிய நடுத்தர அதிகாரிகள்,

1989 ஏப்ரல் 27] திரு. எஸ். எஸ். தென்னரசு

காக்கிச் சட்டை போலீஸ் லாக்காவிற்கு மட்டும் தான் பயன்பட வேண்டுமென்று விதியைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் சிந்திக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இப்போது இராணுவத்தில் 'ஆலிவ் கிரீன்' என்ற பச்சை சட்டையைத் தான் அவர்கள் போட வேண்டுமென்று இருக்கிறது. அவர்களைத் தவிர வேறு யாரும் அந்தச் சட்டையை அணியக் கூடாது என்று விதி இருப்பதைப் போல காக்கிச் சட்டை என்பது காவல் துறைக்கு மட்டும் தான் பொதுவானது என்ற முறையை அரசு இன்றைக்கு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இராமநாதபுரம் டி.ஐ.ஜி. அலுவலகம் இப்போது இராமநாதபுரத்தில் இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் ஜில்லாவைப் பற்றி நன்றாகத் தெரியும். இராமநாதபுரத்திலிருந்து இராஜபாளையத்திற்கு அவசரமாக டி.ஐ.ஜி. போக வேண்டுமென்றால் 210 கிலோ மீட்டர் தாண்டித்தான் போக வேண்டும். 60 கிலோ மீட்டர் வேகத்தில் காரில் போனால் கூட 3 3/4 மணி நேரம் ஆகிறது. அவர் மதுரை வழியாகச் சென்றால் 4 மணி நேரம், 4½ மணி நேரம் ஆகிறது. குறுக்கே பார்த்திபனூர், நரிக்குடி, அருப்புக்கோட்டை, விருதுநகர், இராஜபாளையம் வழியாகச் சென்றால் 3 3/4 மணி நேரம் ஆகிறது. நான் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குஒரு சம்பவத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஸ்ரீவில்லிபுத்தூரில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரின் தூண்டுதலின் பேரில், கைத்தறித் துறை அமைச்சருடைய விழாவிற்காகப் போட்டிருந்த பந்தல் சென்ற வாரம் எரிந்துவிட்டது. விடியற்காலை 4 மணிக்கு எனக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் இந்தத் தகவலைச் சொன்னார். உடனடியாக நான் டி.ஐ.ஜி. ராமநாதபுரத்திற்குத் தொடர்பு கொண்டேன். டி.ஐ.ஜி. ராமநாதபுரத்தில் இருந்து ராஜபாளையம் புறப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் 3 1/2 மணி நேரத்திற்குப் பிறகு ஒரு மயான அமைதி ஏற்பட்ட பிறகு தான், டி.ஐ.ஜி. ஸ்ரீவில்லிபுத்தூர் போய்ச் சேர முடிந்தது. ஆகையினாலே ராமநாதபுரத்தில் இருக்கக்கூடிய டி.ஐ.ஜி. அலுவலகத்தை மையப் பகுதியாக இருக்கக்கூடிய மதுரைக்குக் கொண்டு வர வேண்டும் என்று பெரும்பாலான மக்கள், அந்தப் பகுதியில் இருப்பவர்கள் விரும்புகிறார்கள். அதனாலே அரசாங்கத்திற்கு செலவு அறவே இல்லை என்று நான் தெரிந்துகொண்டேன். ஏன் என்றால், ராமநாதபுரம் மாவட்ட அலுவலகங்கள் எல்லாம் மாறிய பிறகு, ஏராளமான பங்களாக்கள்—ராமநாதபுரத்திலிருந்து போய்விட்டதால்—மதுரையிலே காலியாக இருக்கிறது. ஆகவே, டி.ஐ.ஜி. பங்களாவிற்கு இடம் தேவை என்ற பிரச்சினையே உங்களுக்கு இல்லை.

இரண்டாவது சென்னைக்கு அடுத்தபடியாக உள்ள பெரிய நகரம் மதுரை என்று இருப்பதால், 2 டி.ஐ.ஜி.க்கள் மதுரையில் இருப்பது பொருத்தமானது, பாதுகாப்புக்கு உகந்தது என்ற

எண்ணம் போலீஸ் வட்டாரத்திலே இருப்பதால், முதலமைச்சர் அவர்கள் நாளைக்கு அறிவிக்கின்றபோது, ராமநாதபுரம் டி.ஐ.ஜி. அலுவலகத்தை மதுரைக்கு மாற்றி விட்டோம் என்ற உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கலெக்டருக்கு இதே தொந்தரவு தான் இருக்கும். எப்படி ராமநாதபுரத்திலிருந்து ராஜபாளையம் செல்ல 4 மணி நேரம் ஆகிறதோ, அதைப் போலவே ராமநாதபுரம் கலெக்டருக்கும் அதே தொந்திரவுதான் இருக்கும். அப்படியானால் கலெக்டர் அலுவலகத்தையும் மீண்டும் மதுரையிலே வைத்து விடலாமா என்று மாண்புமிகு உறுப்பினர் எண்ணுகிறாரா ?

திரு. எஸ். எஸ். தென்னரசு : ராமநாதபுரம் கலெக்டருடைய எல்லை, பார்த்திபனூரோடு முடிந்துவிடுகிறது. இப்போது டி.ஐ.ஜி. அலுவலகம் 3 ஜில்லாவிற்கும் சேர்ந்து ஒரே டி.ஐ.ஜி அலுவலகம் இருக்கிறது என்பதால் இதை நான் குறிப்பிட்டேன். ராமநாதபுரம் கலெக்டருக்கு திருவாடானையோடு முடிந்துவிடுகிறது; இந்தப் பக்கம், பார்த்திப னூரோடு முடிந்துவிடுகிறது; அந்தப் பக்கம், மண்டபத்தோடு முடிந்து விடுகிறது.

அடுத்து மதுரைக்கு கமிஷனரைப் போடுவதாக நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்....

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லும்போது, எங்களுடைய டி.ஐ.ஜி. என்று சொன்னார். அவர் மதுரையைச் சேர்ந்தவர். ஆனால் அவர் குறிப்பிடக்கூடிய ராமநாதபுரம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது அவர் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்தவர், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தைச் சேர்ந்தவர், பேசிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் காமராசர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். எனவே 'எங்கள்' என்றால் உங்களைக் குறிக்கும், தென்னரசைக் குறிக்கும், எங்களையும் குறிக்கும்.

திரு. ரா. சொக்கர் : நான் முழுவதுமாகச் சொல்லிவிடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் மதுரையில் இருப்பதால் அப்படிச் சொல்கிறார்கள் என்று சொல்கிறேன். ராமநாதபுரம் டி.ஐ.ஜி. ரேஞ்ஜ் காமராசர், பசும்பொன் மற்றும் ராமநாதபுரம் ஆகிய 3 மாவட்டங்களுக்கும்தான் அந்த ரேஞ்ஜ்இருக்கிறது ஆகவேராமநாதபுரத்தில் டி.ஐ.ஜி. அலுவலகம் இருப்பது சௌகரியக் குறைவாக இருக்கிறது என்பது மறுக்க

முடியாத உண்மை. ஆனால் இந்த அலுவலகத்தை விருது நகருக்கு வேண்டுமென்றால் மாற்றலாமேயொழிய, மதுரைக்கு மாற்றுவது பொருத்தமாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விருதுநகரிலிருந்து திருவாடானைக்குப் போய்விடலாம் என்று சொல்கிறார்கள்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, 3 மாவட்டத்தின் அலுவலகங்களும் முன்னால் மதுரையிலே இருந்தது. இப்போது நியாயமாகப் பார்த்தால் அந்த அலுவலகத்தை—மதிப்பிற்குரிய தென்னரசு அவர்களுடைய வீடு மதுரையில் இருக்கிறது, எனவே டி.ஐ.ஜி. அலுவலகம் பக்கத்திலே இருந்தால் சௌகரியமாக இருக்கும், எனக்கும் இதிலே பெரிய சிரமம் இல்லை, இருந்தாலும் கூட, அந்த டி.ஐ.ஜி. அலுவலகத்தை—விருதுநகரிலே அமைப்பதுதான் நல்லது, அதுதான் மையப்பகுதியாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மையம் எது என்பதை வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைக் கொண்டு அளந்து முடிவு செய்வோம்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : வசதிக்காக மதுரை என்று சொன்னேன். மையப் பகுதி என்றால், மானாமதுரைதான் மையப் பகுதி என்பதை இரண்டு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு இடத்தைச் சொல்லிக்கொண்டு, பிரச்சினையைக் கிளப்பத் தேவையில்லை. முதலமைச்சர் அவர்கள் பரிசீலித்துப் பார்த்து தக்க இடத்திலே அமைப்பார்கள்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : மதுரைக்கு கமிஷனரைப் போடப் போவதாக நம்முடைய முதல்வர் அவர்கள் தெரிவித்தார்கள். மிகவும் மகிழ்ச்சிக்குரியது. ஆனால் மதுரை இப்போது ஹைதராபாத்தைப் போல, இரண்டாகப் பிரிந்து இருக்கிறது. மதுரையின் தென்பகுதியிலே மீனாட்சி அம்மன் கோயில், விமான நிலையம், ரயில்வே ஸ்டேசன், இந்த மூன்றைத் தவிர, மற்றவை அனைத்தும் மதுரையின் வடகரைக்கு வந்துவிட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கலைஞர் ஆட்சிக் காலத்தில்தான், மதுரையின் வடகரை வளம் பெற்றது. ராஜாஜி மருத்துவமனை, அமெரிக்கன் கல்லூரி, இந்த இரண்டைத் தவிர, மீனாட்சி கல்லூரி, யாதவர் கல்லூரி, யாதவர் பெண்கள் கல்லூரி, சட்டக் கல்லூரி, நீதிமன்றங்கள், தமிழ் இசைச் சங்கம், பெரிய ஹோட்டல்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளின் பங்களாக்கள், ஸ்டேடியம், காந்தி மியூசியம், கலெக்டர் ஆபீஸ் கார்ப்பரேஷன் அண்ணா நகர், கலைஞர் கருணாநிதி நகர், இவைகள் அனைத்தும் மதுரையின் வடகரையில் இருக்கின்றன.

(திரு. எஸ். எஸ். தென்னரசு) [1989 ஏப்ரல் 27

(முற்பகல் 11–20)

மதுரை கார்ப்பரேஷனுக்கு ஒரு கமிஷனர் போட முடிவு செய்து விட்டால், மதுரையில் இரண்டு டெபுடி கமிஷனர் போட வேண்டிய அவசியம் நிச்சயம் உண்டு என்பதை நான் நம்முடைய முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று விரும்புகிறேன்.

மூன்றாவதாக, இந்த ரிசர்வ் போலீசைப் பற்றிய பிரச்சினையாகும். ரிசர்வ் போலீஸ் பல இடங்களிலே இருப்பது வரவேற்கத்தக்கது. அந்த ரிசர்வ் போலீஸ் போக டி.எஸ்.பி. பெட்டாலியன் என்று மணிமுத்தாறு, பழனி, ஆவடி ஆகிய இடங்களில் எல்லாம் இருக்கின்றன.

இன்னொன்றையும் நான் கேள்விப்பட்டேன். கலைஞருடைய முதல் ஆட்சி மறைந்த பிறகு, 13 ஆண்டு காலமாக டில்லியிலே தமிழகத்தினுடைய டி.எஸ்.பி. படை இருப்பதாகச் சொல்கிறார்கள். அதனுடைய வரவு—செலவு என்ன? அவர்களுடைய குடும்பத்தாரின் நிலைமை என்ன? அவர்களைத் திரும்ப அழைப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு ரிசர்வ் போலீஸ் அமைப்பதற்கு சில காரணங்கள் உண்டு. கமுதியிலே கலவரம் ஏற்பட்டபோது கமுதியிலே ரிசர்வ் போலீஸ் உருவாக்கப்பட்டது. சிவகாசியிலே கலவரம் ஏற்பட்டபோது சிவகாசியிலே ரிசர்வ் போலீஸ் உருவாக்கப்பட்டது. 1921-ல் மாப்ளாஸ் கலவரம் ஏற்பட்டபோது பாலக்காட்டிற்கும் கள்ளிக்கோட்டைக்கும் நடுவிலே மலைப்புறத்திலே ரிசர்வ் போலீஸ் வைக்கப்பட்டது. அதைப்போன்று திருச்சியிலே சென்னை வரை இருக்கக் கூடிய நெடுஞ்சாலையிலே எந்த இடத்திலேயும் ரிசர்வ் போலீஸ் இல்லை என்ற குறை ஏற்பட்டு, அதனால் ஏற்படக் கூடிய சங்கடங்களையும் அரசாங்கம் உணர்ந்திருக்கும். ஆகையால் உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் போன்ற முக்கியமான இடத்தில் டி.எஸ்.பி. படை அமைப்பது மிக அவசியமானது என்பதை இந்த நேரத்தில் நான் கவனப்படுத்த விரும்புகிறேன்.

அதைப்போன்று மதுரைக்கு மேற்கே கூடலூர், அதாவது கேரளா எல்லை வரை 100 மைல் தூரம் இருக்கிறது. அங்கே ஏற்கனவே தேனியிலே வைப்பதற்கு கலைஞரின் ஆட்சிக் காலத்தில் ஒரு ஏற்பாடு இருந்தது. எனவே ரிசர்வ் போலீஸ் படை தேனியிலே வைப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

இறுதியாக இந்த போலீஸ் இலாக்காவினுடைய அதிகாரிகள், அலுவலர்கள், அமைச்சுப் பணியாளர்கள் முதலமைச்சருக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அந்த வேண்டு

1989 ஏப்ரல் 27] *[திரு எஸ்.எஸ். தென்னரசு]*

கோளை பத்திரிகையில்கூட நான் படித்துப் பார்த்தேன். உங்களுடைய அனுமதியின் பேரில் அந்தக் குறிப்புகளை மட்டும் நான் படிக்கின்றேன். இந்தக் காவல்துறை ஊழியர்களுக்கு தகுந்த அளவிற்கு அமைச்சுப் பணியாளர்கள் குறைவாக இருப்பதாகவும், மேலும் 200 பேர்கள் நியமிக்கவேண்டுமென்றும் முதலமைச்சருக்கு வேண்டுகோளை விடுத்திருக்கிறார்கள். அந்த வேண்டுகோளை நிறைவேற்றி தரவேண்டுமென்று கேட்டுக கொண்டு, அதே நேரத்தில் காலங்கடந்து நாங்கள் பணியாற்றக் கூடியவர்கள் மற்றவர்களைப் போன்று 5 மணிக்கு நாங்கள் வீட்டிற்குப் போய் விட மாட்டோம். 'லா அண்டு ஆர்டர்' பிரச்சினை வருகின்றபோது, இரவு பகல் என்று பாராமல் வேலை செய்கின்றோம். எனவே செகரட்டேரியரிட்டில் இருக்கின்ற பணியாளர்களுக்குத் தரக் கூடிய சலுகைகளை எங்களுக்கும் தரவேண்டுமென்று கோரிக்கைகள் விடுத்திருக்கிறார்கள். ஆக இவைகளை எல்லாம் உடனடியாக செய்யாவிட்டாலும்கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கூறி, வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை பெற்றமை குறித்து என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனிதனுடைய உயிருக்கும், உடமைக்கும் அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கிறது. உயிரையும், உடமையும் பாதுகாக்க வேண்டிய கடமை ஒவ்வொரு நாட்டிற்கும், அரசுக்கும் உண்டு. ஆக அந்தத் தலையாய கடமையை நிறைவேற்றுகின்ற பணியினைச் செய்பவர்கள் இந்த காவல்துறையினர். இவர்கள் தான் சட்டத்தையும், ஒழுங்கையும் காப்பாற்றுகிறவர்கள். ஆக இது அரசின் உயிர்நாடியாக இருக்கிறது. Concept of rule of Law என்று சொல்வார்கள். சட்டத்தின் ஆட்சி அத்தனை பேருக்கும் சமமாக வழங்கப்படவேண்டும். They are equal in the eyes of Law அதில் எந்தவிதமான குற்றம் எங்கே நடந்தாலும், எவ்வளவு பெரிய இடத்திலே நடந்தாலும், சட்டம் நிச்சயமாகத் தன்னுடைய கடமையைச் செய்வதிலே யாரும் குறுக்கே நிற்கக் கூடாது. இங்கே பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர் அவர்கள் ஒரு காலத்திலே தமிழகத்துப் போலீசார் தான் இந்தியாவிலேயே சிறந்த போலீசார் என்ற பெயர் வாங்கியிருப்பதாகத் தெரிவித்தார்கள். ஆனால் இன்றைய தினம் நாம் எங்கோ இருக்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். ஒரு காலத்திலே உண்மையாகவே தமிழக போலீசாரைப் பொறுத்தவரையில் உலகத்திலேயே இரண்டாவது இடம் என்று சொல்வார்கள். பல

விஷயங்களில் நாம் முதலிடம் பெற்றோம். இன்று மொழியைப் பொறுத்தவரையில் நாம் தான் முன் தோன்றி மூத்தவர்கள் என்று சொல்வோம். ஆனால் சில விஷயங்களில் அண்மைக் காலங்களில் நடைபெற்ற சம்பவங்களில் நாம் இரண்டாவது இடம் வகிக்கிறோம்.

கோவைக்கு வந்தீர்களேயானால், உலகத்திலேயே சிறந்த, இரண்டாவது இடமாக, குடிதண்ணீர் சிறுவாணியைப் பற்றி நாம் பெருமையாகச் சொல்வோம். அதைப்போன்று காவல் துறையைப் பொறுத்த வரையில், உலகத்திலேயே ஸ்காட்லாண்டு யார்டிற்கு அடுத்தபடியாக நம்முடைய தமிழக போலீஸ், அந்த காலத்தில் மெட்ராஸ் போலீஸ் இருந்ததாகச் சொல்வார்கள். ஆனால் இன்றைய தினம் பரிதாபகரமாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டுவதற்குப் பதிலாக ஆளுங் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களே இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இன்றைய தினம் ஒரு நல்ல செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. அமெரிக்காவிலே ஒரு சிறந்த போலீஸ்காரராக ஜனவரி மாதத்திய சிறந்த போலீஸ்காரராக 'ராகேஷ் வர்மா' என்ற இந்தியர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக நான் பத்திரிகையில் இன்றையதினம் படித்து, உள்ளபடியே மகிழ்ச்சியடைந்தேன். 48 வழக்குகளை ஒரே மாதத்தில் பிடித்திருக்கிறார்கள். பெரிய பெரிய கொள்ளை வழக்குகள், கொலை வழக்குகளைப் பிடித்திருக்கிறார்கள். அங்கே போலீசார் மூன்றாம் தர நடவடிக்கையில் ஈடுபட முடியாது. யாரையும் அடிக்க முடியாது, உதைக்க முடியாது, துன்புறுத்த முடியாது, இம்சிக்க முடியாது. ஆக தேர்ட் டிகிரீ மெத்தட்ஸ் இல்லாமலேயே அவர், ஒரு இந்தியர் அவராகவே 48 வழக்குகளை ஒரு மாதத்திலே கண்டு பிடிக்க முடிந்திருக்கிறது. அவர்களை கைது செய்ய முடிந்திருக்கிறது. அவர்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுக்க முடிந்திருக்கிறது. அதே போல நம்முடைய போலீசாரும் இங்கே செயல்பட வேண்டுமென்ற என்னுடைய விருப்பத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தியாவைப்பொறுத்தவரையில் Most farvoured nation என்ற லிஸ்ட்டிலே வருகிறது. அமெரிக்காவிலே மிகவும் நேசிக்கும் நாடு என்றுசிலநாடுகளை அவர்கள்லிஸ்ட்டை வத்திருக்கிறார்கள். அதிலே இந்தியா Most farvoured nation என்ற பட்டியலிலே வருகிறது. அந்தப் பட்டியலிலேயிருந்து இந்தியாவை நீக்கி விட வேண்டுமென்று அமெரிக்க செனட்டிலே ஒரு செனட்டர் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார். அதற்கு அவர் சொல்கிற காரணம் மனித உரிமைகள் இந்தியாவிலே மீறப்படுகின்றன. மனித உரிமைகள் இந்தியாவிலே நசுக்கப்படுகின்றன என்பதற்கு அவர் காடடியிருக்கிற சில உதாரணங்களிலே தமிழகமும் இடம் பெறுகிறது என்பதனாலே தான் நான் வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக அவர் 2 சம்பவங்களைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

... ALONE TRIUMPH

1989 ஏப்ரல் 27] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

தர்மபுரியிலே நாம் தீவிரவாதிகளுக்கு எதிராக எடுத்தோம் அல்லவா அந்த நடவடிக்கைகளை பல இடங்களிலே அவர் காட்டியிருக்கிறார். அந்த நடவடிக்கைகள் கடுமையானவை, மனித உரிமைகளை மீறப்படுபவை என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதிலே மூன்றாம் தரமான தேர்டு டிகிரி மெத்தட்ஸ் நிச்சயமாக இருந்தது என்பதை அத்தனை பேரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். அது போல தொடர்ந்து போலீசார் செயல்பட அனுமதிக்கக் கூடாது.

நம்முடைய போலீஸ் வடிவமைப்பு என்பது பிரிட்டிஷ்காரரர் நமக்குக் கொடுத்தது. நாமாக ஏற்படுத்திக் கொண்டது அல்ல. காலனி ஆதிக்கம் இருந்த நேரத்திலே, காலனி ஆதிக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக அவர்கள் ஏற்படுத்தியது தான் அந்தப் போலீஸ். அந்தப் போலீசாருக்கு மக்களை அச்சுறுத்துவது, அடக்கி வைப்பது, ஆதிக்கத்தை எதிர்த்து மக்கள் கிளர்ந்து எழக் கூடாது என்பதே அவர்கள் நோக்கமாக இருந்து வந்திருக்கிறது. போலீசாரிடத்திலே பார்த்தால் மக்களைப் பற்றி விளிக்கும்போது சாதாரணமாகப் பேச மாட்டார்கள். 'டேய்' என்று தான் கூப்பிட்டு பேசுவார்கள். பெரிய அதிகாரிகள் என்று சொன்னால் யஜமான் என்று தான் அழைக்க வேண்டும். இல்லாவிட்டால் போலீஸ் துரை என்று அழைக்க வேண்டும். ஆகையினால்தான் அந்தக் காலத்திலே பாரதி பாடினான். ''வெள்ளைப் பரங்கியை துரை என்ற காலமும் போச்சே'' என்று பாடினான். நான் நம்முடைய சென்னை நகர போலீஸ் கமிஷனரைப் பற்றி நிச்சயமாக குறிப்பிடவில்லை. வெள்ளைக்கார போலீசாரைப் பற்றித்தான் நான் சொல்கிறேன். வெள்ளைக்காரனுடைய ஆதிக்கச் சின்னமாக போலீசார் இருந்த காரணத்தினாலேதான் அவர்களுக்கு எதிராக அன்றைய தினம் ஏற்பட்ட உணர்வு இன்றும் இருக்கிறது. அன்றைய தினம் அந்த உணர்வு ஊட்டப்பட்டது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். என்றாலும் அந்த உணர்வு இன்றும் இருப்பதற்குக் காரணம் அந்த ஆதிக்கத்தின் சின்னமாக இன்றும் போலீசார் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். போலீஸ் மக்கள் நண்பனாக செயல்பட வேண்டும். அதன் உருவத்திலும் உள் அடக்கத்திலும் மாறுதல் கொண்டு வர வேண்டும். ஸ்டிரக்சர் அண்டு கேரக்டர் தலைகீழாக மாற வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பிரிட்டனைப் பொறுத்த வரையில், நமக்கு போலீசைக் கொடுத்த பிரிட்டனிலேயே அவர்கள் மக்கள் நண்பனாகத்தான் அதை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். It is not oppressive ஆனால் நிச்சயமாக நாம் அந்த மாதிரி அதை வைத்துக் கொள்ளவில்லை. சுதந்திரத்திற்குப் பின் இன்னும் முழு மாற்றம் நம்மாலே கொணர முடியவில்லை. அதிலே முதல்வர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1989 ஏப்ரல் 27

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை

ஜனநாயகத்தின் அடிப்படை என்பது கருத்து வேறுபாடு. சகிப்புத் தன்மை இருக்க வேண்டும். ஜவஹர்லால் நேரு அவர்கள் தலை சிறந்த ஜனநாயகவாதியாக விளங்கினார்கள். அவருக்கு நேர் எதிரிலேயே அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய எதையாவது தப்பு என்று சொன்னால் நிச்சயமாக அந்தக் கருத்து வேறுபாட்டை, அந்த விமர்சனத்தை சகித்துக் கொள்கிற தன்மை ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு இருந்தது. அதே சகிப்புத் தன்மை இங்கே இருக்கிற நமக்கும் இருக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கறுப்புக்கொடி காட்டுவது என்பது, எதிர்ப்பு உணர்வை வெளிப் படுத்துவது. அதற்கு நிச்சயமாக ஜனநாயக நாட்டில், எந்த ஜனநாயக நாட்டிலும் இடம் இருக்கிறது. இந்திரா காந்தி அவர்கள் பதவியிலிருந்து இறங்கி இருந்தார்கள். எம்.பி. யாகக் கூட இல்லை. பிரதமராக மட்டுமல்ல சாதாரண எம்.பி. யாகக் கூட இல்லாத நேரத்திலே தமிழகத்திற்கு வந்திருந் தார்கள். அவருக்கு கறுப்புக் கொடி காட்டினார்கள். நான் தவறு சொல்லவில்லை. எதிர்ப்புக் காட்டினீர்கள். அதனால் நிச்சயமாக அதில் நான் தவறு சொல்லவில்லை. ஆனால் அன்றைய தினம் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. ** அது போன்ற 'மதுரைகள்' நிச்சயமாக திரும்பக் கூடாது என்பதற்காகத்தான்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பால சுப்பிரமணியம் அவர்கள் பேசுகிறபோது ** என்று சொல்லு கிறார்கள். அது பொருத்தமான சொற்றொடர் அல்ல, நீக்கப்பட வேண்டிய சொற்றொடர். காரணம் நீதி மன்றத்திலே இன்றைக்கு வழக்கு நடந்துக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 11—30)

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: ஆம், வழக்கைத் தான் சொல்கிறேன். நீதிமன்றத்திலே இருக்கிறது. ** வழக்கு தான் போட்டிருக்கிறார்கள். சாட்சியம் இருக்கிறது அதைத்தான் சொல்கிறேன். அதை நிச்சயமாகச் சொல்லலாம். That is permissible நான் சொல்வ தெல்லாம், 'மதுரைகள்' நடக்கக் கூடாது. வரம்பு மீறக் கூடாது, கருப்புக் கொடி காட்டுவதிலே. கருப்புக் கொடி நீங்கள் காட்டுகிறீர்கள். ஆட்சியிலே இல்லாதவர்களுக்கு எதிராக கருப்புக்கொடி காட்டுகிறீர்கள். நாங்கள் சகித்துக்கொள்கிறோம். ஆனால் உங்களுக்கு எதிராக கருப்புக் கொடி காட்டினால் அதே

**மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

1989 ஏப்ரல் 27] [திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

சகிப்புத் தன்மை இருக்க வேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணமாக இரண்டு நாட்களுக்கு முன்னாலே மதுராந்தகத்திலே நடைபெற்ற சம்பவம் பற்றி இங்கே உறுப்பினர்கள் சொன்னார்கள். அதிலே கொஞ்சம் சகிப்புத் தன்மை காட்டியிருக்கலாம். இடம் ஒதுக்கி கொடுத்திருக்கலாம். மறுதினம் அவர் சபைக்கு வர வேண்டும். எனவே அவரை கைது செய்வதிலே அதிக அக்கறை காட்டாமல் அவரை விட்டிருக்கலாம். கைது செய்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர் தடியடிக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். கையிலே கட்டுப் போட்டிருக்கிறார்.

திரு. எஸ். எஸ். தென்னரசு: திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோது, எங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் தான் கருப்புக் கொடி காட்டிப் பழக்கமே தவிர முறைகேடாகக் கருப்புக் கொடி காட்டிப் பழக்கம் இல்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: ஆனால் ஒதுக்கப்பட்ட இடத்திலே ** மதுரையிலே அதுதான் நடைபெற்றது. அதைத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்கள் ** மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வழக்கு நீதிமன்றத்திலே நடந்து கொண்டிருக்கிறது. மேல் முறையீடு செய்யப்பட்ட பிறகு வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. அது பற்றி அவர் கருத்து தெரிவிக்கக் கூடாது. அந்த வழக்கில், நாங்கள் எந்த விதமான தாக்குதல்களிலும் ஈடுபடவில்லை. கருப்புக் கொடி அனுமதி பெற்று உரிய இடத்தில் உரிய நேரத்தில் தான் காண்பித்தோம் என்பதுதான் எங்களுடைய வாதம். எனவே அந்தச் சொற்றொடர்கள் அனைத்தும் நீக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பதவி இழந்ததற்குப் பின்னாலே கருப்புக்கொடி காட்டியதாகச் சொன்னார்கள். அதே நேரத்தில் நெருக்கடி காலத்தில் இராணுவ முகாம்கள் அமைத்து தேனியில் டாக்டர் கலைஞர் அவர்கள், அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக முன்னணித் தோழர்கள் எல்லாம் சிறையிலே இருக்கும்போது ஒரு பொதுக் கூட்டத்திலே கலந்து கொள்ளச் செல்லும் போது தேனி இரயில்வே கேட்டை அடைத்து வைத்து அந்த இடத்திலே காங்கிரஸ்காரர்கள் கருப்புக்கொடி காட்டு

**மாண்புமிகு மாற்றுத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

கிறோம் என்று சொல்லி அவர்கள் காருக்குள்ளே கம்பியை நுழைத்து, இடித்து, அடித்து நொறுக்கினார்கள் என்பதையும் இந்தப் பேச்சுக்கு அவர் துணையாக வைத்துக்கொண்டால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாற்றுத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். ஒரு அமைச்சரோ ஒரு அங்கத்தினரோ பேசுவதற்கு வாய்ப்பு அளித்து மைக் கொடுக்கப்பட்டால் அடுத்த அங்கத்தினர் உட்கார வேண்டும். இந்த அவையிலே இருவர் நிற்கக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் பேசும்போதும் மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் நின்று கொண்டிருந்தார். மாண்புமிகு அமைச்சர் பேசுகின்ற போதும்..

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாற்றுத் தலைவர் அவர்களே, எங்கள் மீது—கருப்புக் கொடி காட்டியவர்கள் மீது பொய் வழக்கு போடப்பட்டது என்பது தான் எங்களுடைய வாதமாக நீதிமன்றத்திலே இருந்தது. மறைந்த மரியாதைக்குரிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கூட அந்த வழக்கிலே வந்து சாட்சியம் சொல்லவில்லை. யாருக்காகக் கருப்புக் கொடி காட்டினோமோ அவர்களே வந்து இது போன்ற விவரங்களைச் சொல்லாத நிலையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வந்து மீண்டும் மீண்டும் கருப்புக் கொடி காட்டிய அந்த நிலைமைகளை எடுத்துச் சொல்லி ** என்று சொல்வது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டிய ஒன்று. நீதிமன்றத்திலே இருக்கக் கூடிய ஒன்றைத் திரும்ப திரும்பச் சொல்கிறார்கள். அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்) : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல வழக்கு மன்றத்திலே இருக்கின்ற காரணத்தினாலே ** என்பது பற்றி இந்த அவையிலே பதிவு செய்திருப்பது சரியாக இருக்காது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்ன கருத்தும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தும், இரண்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1989 ஏப்ரல் 27] [திரு. பெ. சீனிவாசகன்]

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டதை, இவ்வளவு நேரம் வளர்த்திருக்க வேண்டியதில்லை. நடைபெற்ற சம்பவத்திலே காட்டிய சகிப்புத் தன்மையைத்தான் நான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : நீங்கள் ரொம்ப சுருக்கமாகத் தான் பேசினீர்கள். ஆனால் வழக்கு 12 வருஷம் நடந்தது. அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (சிரிப்பு).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாற்றுத் தலைவர் அவர்களே, அதற்கு நான் பொறுப்பில்லை. நானும் எங்களுடைய கட்சியும் எந்த வகையிலும் பொறுப்பல்ல. அங்கே தாக்குதலுக்கு உள்ளான தோழர்கள் இரண்டு பேர். சித்தையன்கோட்டை அப்துல் காதருக்கு ஒரு கண் போய்விட்டது. சித்தன் அவர்களுக்கு—இந்த அவையிலே 3 முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்—இன்றும் ஒரு கண் பார்வை சரியாக கிடையாது. அந்த நேரத்திலே தாக்குதலிலே நடைபெற்ற சம்பவங்கள் அவைகள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிக் கொண்டே போகிறார்கள். அவசர காலச் சட்டத்தின் போது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் வீராசாமி அவர்களை அடித்து இன்று ஒரு காது கேட்காமலேயே கூட இருக்கிறது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாற்றுத் தலைவர் அவர்களே, எனக்கு அந்த வித்தியாசம் தெரியவில்லை. நன்றாகத்தான் அவர் காது கேட்பது போல் தெரிகிறது.

குறிப்பாக, மாற்றுத் தலைவர் அவர்களே, போலீசார், லா அண்டு ஆர்டர்—ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்கு வேலை பார்ப்பவர்களுக்கும், வி.ஐ.பி.க்கள், முக்கியஸ்தர்களுக்குப் பாதுகாப்புக்குச் செல்வதற்கும், ஒரே போலீசார் இருக்கக்கூடாது. காரணம், முக்கியஸ்தர்கள் வருகிறார்கள், வி.ஐ.பி.க்கள் வருகிறார்கள் என்று சொன்னால், இருக்கிற போலீசார் எல்லாம் பாதுகாப்புக்குச் சென்று விடுகிறார்கள். புகார் கொடுக்க வேண்டும் என்று போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனால், புகார் எடுப்பதற்கு அங்கே ஆளே இருப்பதில்லை. ஆகவே, முக்கியஸ்தர்கள் பாதுகாப்பிற்கு என்று தனியாக போலீசார் வேண்டும் என்ற கருத்தை நான் அங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

போலீஸ் ஸ்டேஷன்கள் இன்றைய தினம் பரிதாபகரமாக இருக்கின்றன. போலீஸ் லாக்கப்களிலே வைக்கப்படுகின்ற நபர்கள் நடத்தப்படுகின்ற முறைகளைப் பற்றி நிச்சயமாக ஆளுங்கட்சிக்காரர்கள் கூட கருத்து வேறுபாடு கொள்ளமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். மிகவும் மோசமாக இருக்கின்ற அந்த இடத்திலே நடத்தப்படுகின்ற முறை மோசமான முறை. காரணம், any person who is taken into custody, should not be presumed to be a criminal. He must be presumed to be innocent until it is proved otherwise.

எனவே, அவர்களை நல்லமுறையிலே நடத்த வேண்டும். ஆனால் சாதாரணமாக அங்கே காலைக் கடன்களைக் கழிப்பதற்காக இருந்தாலும் சரி, வேறு முறைகளுக்காக இருந்தாலும் சரி, அவர்களுக்கு வசதி கிடையாது. அதை எல்லாம் மாற்றியமைக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். போலீஸ் ஸ்டேஷன்களிலே அத்துமீறல்கள் தினசரி வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, பெண்களுக்கு எதிராக நடைபெறுகின்ற அத்துமீறல்கள் அதிகரித்து இருக்கின்றன. பெண்களை இரவு நேரங்களில் போலீஸ் லாக்கப்களில் வைக்கக் கூடாது, போலீஸ் ஸ்டேஷன்களுக்கு அழைக்கக்கூடாது என்ற அரசின் ஆணை இருந்தாலும் கூட, அதை எல்லாம் மீறி பெண்களைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் கற்பழித்திருக்கிறார்கள். அண்மைக் காலத்திலே தளியிலே நடைபெற்றது நமக்கு எல்லாம் ஒரு பெரிய அவமானகரமான சம்பவம். நிச்சயமாக அதை ஒரு கரும்புள்ளியாக நான் கருதுகிறேன். இது போன்ற நிறையப் புள்ளிகள் வந்துவிட்டால் அது முகமாக இருக்காது என்பதற்காகத் தான் சொல்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்) : உறுப்பினர் அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் முடிக்க வேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நான் 7 நிமிடம் தான் பேசியிருக்கிறேன். எனவே, எனக்கு இன்னும் நேரம் வேண்டும். என்னை மேலும் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறுக்கீடுகள் நிறைய

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்) : இரண்டு நிமிடம் குறுக்கீடுக்கு என்று எடுத்துக்கொண்டாலும் கூட, சீக்கிரம் முடிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: எனக்கு நேரம் போதாது. (குறுக்கீடு). ஆகவே, போலீஸ் ஸ்டேஷனிலே விசாரிக்கிறோம் என்ற பெயரிலே அடித்துக் கொன்றுவிட்டு, அதை சூசைட், தற்கொலை என்று சொல்கிறார்கள். அது மட்டுமல்ல. சிலர் பக்கத்திலே இருக்கிற நகரங்களுக்கு வருகிறார்கள். இரவிலே கடைசி பஸ்ஸைத் தவற விட்டு விட்டால் பஸ் ஸ்டாண்டிலே படுத்திருப்பார்கள். இது சாதாரணமான விஷயம், சின்ன பேரூராட்சிகளிலே பார்க்கலாம். அவர்களைச் சந்தேகக் கேஸ் என்று போட்டு, பிடித்துக் கொண்டு போய்—54, 550—மிகக் கொடுமையான செக்ஷன். பல ஆண்டுக் காலமாக இருக்கிற ஒரு கொடுமையான செக்ஷன். ஒரு முறை பிடித்துக்கொண்டு போய்விட்டால், அவர்களை அடிக்கடி துன்புறுத்துவார்கள். மீண்டும் நாமே குற்றவாளிகளை உருவாக்குவதற்கு இங்கே வழி செய்கிறோம். அப்படிப்பட்ட சந்தேகக் கேஸ்களைப் பிடிப்பது எதற்காக என்று சொன்னால், வாராந்திர கிரிமினல் மீட்டிங்குகள் நடக்கின்றன. மாதாந்திர மீட்டிங்குகள் நடக்கும் போது அவர்கள் புள்ளிவிவரங்களைக் கொடுக்க வேண்டும். 100 பேரைப் பிடித்திருக்கிறோம் என்று சொல்லிவிட்டு, அடுத்த மாதம் 10 பேரத்தான் பிடித்தேன் என்று சொன்னால், ஏன் இவ்வளவு குறைவாக வருகிறது என்று கேட்கிறார்கள். அதற்காக வேண்டுமென்றே புள்ளிவிவரங்கள் தர வேண்டும் என்ற நோக்கத்தோடு, நிறைய இந்த மாதிரி வழக்குகள் பிடிக்கப்படுகின்றன. இதைத் தவிர்க்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அது போல், மதுவிலக்கைப் பொறுத்த வரையில, ''ப்ரொஹிபிஷன் என்ஃபோர்ஸ்மென்ட் விங்''—மதுவிலக்கு அமல் பிரிவு—உண்மையாகவே மதுவிலக்கை அமல்படுத்த அவர்கள் உதவுகிறார்களா, அல்லது மது விற்பனையை ஊக்குவிக்கிறதா இந்தப் பிரிவு என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். நிலைமைகள் அத்தனை பேருக்கும் தெரியும். இதில் ஒன்றும் ரகசியம் கிடையாது. ஐ.எம்.எஃப்.எஸ்.ஐப் பொறுத்த வரையில், அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது. அந்நிய வகை மதுபானங்களை உற்பத்தி செய்கிறோம். அந்நிய வகை மது பானங்கள் கட்டுப்பாட்டோடு விற்பனை செய்யப்படுகிறது. அரசாங்கக் கட்டுப்பாட்டிலே அது இருக்கிறது. வருமானம் அரசாங்கத்திற்கு விற்பனை வரி மூலமாகவும், ஆயத் தீர்வை மூலமாகவும் வருகிறது. பணம் வருகிறது. ஆனால் இந்த உள்நாட்டு மது பானங்கள் நம் கட்டுப்பாட்டிலே இல்லை. மதுவிலக்கு அமல் பிரிவின் ஆசியோடு இவைகள் ஓகோ என்று, வியாபாரம் ஓகோ என்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமைகளை மாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லா விட்டால் நிச்சயமாக இந்தப் பிரிவு அரசாங்கத்தையே விழுங்கி விடும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம்

இங்கே, இன்றைய தினம் பத்திரிகையிலே தினசரி கட்டுரைகள் வந்துகொண்டு இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலேயும், கள்ளச் சாராயம் எப்படி விற்பனை ஆகிறது, யார் அதற்குக் காரணமாக இருக்கிறார்கள் என்பதெல்லாம் தெளிவாக, தினசரி பத்திரிகையிலே வந்திருக்கிறது, சென்ற மாதத்திலே. அநேகமாக முதல்வர் அவர்கள் படித்து இருப்பார்கள் என்று நம்புகிறேன். அந்தக் கட்டுரைகளிலே மிகத் தெளிவாகச் சொல்கிறார்கள். ஒரு மதுவிலக்கு அமல் பிரிவு ஸ்டேஷன் என்று சொன்னால், ஆறு போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஒரு மது விலக்கு அமல் பிரிவு இருக்கிறது. இதிலே ஒரு இன்ஸ்பெக்டர் இருக்கிறார். இரண்டு சப இன்ஸ்பெக்டர்கள இருக்கிறார்கள். 4 ஹெட் கான்ஸ்டபிள்கள் இருக்கிறார்கள். 18 கான்ஸ்டபிள் கள் இருக்கிறார்கள் என்று இங்கே தகவல் சொல்கிறார்கள்.

(முற்பகல் 11-40)

இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் மதுவை விற்பவர்கள் இடத்திலும், மதுவை காய்ச்சுபவர்கள் இடத்திலும் மாமூல் வாங்குகிறார்கள். ஒவ்வொருவருக்கும் இவ்வளவு என்று கணக்கு இருக்கிறது. இன்ஸ்பெக்டருக்கு 8 மடங்கு; சப்-இன்ஸ் பெக்டருக்கு 4 மடங்கு; அதற்கு கீழே இருக்கின்ற எட்-கான்ஸ் டேபிளுக்கு 2 மடங்கு; அதற்கு கீழே இருக்கின்ற கிரேடு 1 கான்ஸ்டேபிளுக்கு 1.5 மடங்கு; கான்ஸ்டேபிளுக்கு 1 மடங்கு; ஆக இவர்களோடு முடிந்து விடுகிறதா என்றால் நிச்சயமாக இல்லை, பொது நிதி கன்சாலிடேட்டட் ஃபண்டு என்று நாம் இங்கே வைத்து இருக்கிறோம் அல்லவா அதைப்போல போலீஸ் ஸ்டேஷனில் ஒரு பொது நிதி அவர்களுக்கு மேலே இருக்கின்ற அதிகாரிகளுக்கு போக வேண்டும் அல்லவா, டி. எஸ். பி., ஏ. எஸ். பி., எஸ். பி., என்று அவர்கள் அத்தனை பேர்களுக்கும் போக வேண்டும் அல்லவா அவர்களுக்கு எல்லாம் ஒரு கிரேடேஷன் அந்த கிரேடேஷன் எங்கே போய் நிற்கிறது என்று சொன்னால், மாத வருமானம் 1 இலட்சம்ரூபாய் என்று தெளிவாக பத்திரிகை களில் எழுதியிருக்கிறார்கள். ஒரு உயர் அதிகாரிக்கு ஒரு லட்சம் ரூபாய் மாத வருமானம் வருகிறது என்று சொன்னால் அவர்கள் நாங்கள் சொன்னால் கேட்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர் களா? நிச்சயமாக அரசாங்கத்தை அது விழுங்கக்கூடிய ஆபத்து இருக்கிறது. நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், என்னுடைய சொநத ஊரில் நான் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டாலும் எப்படிப்பட்டவர்களைப் பிடிக்கிறார்கள் என்று சொன்னால் குற்றம் இழைக்காதவர்களை, அதற்கு சம்பந்தம் இல்லாத

வர்களை புள்ளிவிவரத்திற்காக பிடிக்கிறார்கள். குற்றவாளிகளைக் குறிப்பாக மது விற்பவர்கள் இடத்திலே மாதம் ஒரு கேஸ் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். கேஸ் கொடுக்க முடியாதவர்கள் 250 ரூபாய் 300 ரூபாய் என்று பணம் கொடுத்து விடுகிறார்கள். அந்தப் பணம் வாங்கிக் கொண்ட பாவத்திற்காக கிராமத்திலே உள்ள அப்பாவி மக்களை இவர்கள் பிடித்து வந்து இங்கே புள்ளிவிவரங்களை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை என்னால் சொல்ல முடியும். என் சொந்த கிராமத்தில், நான் பிறந்து வாழ்ந்து கொண்டு இருக்கிற கிராமத்தில் பிடிக்கவில்லை. வெற்றிலை வியாபாரம் செய்கிற அந்த குடும்பம், அந்தக் குடும்பத்தைப் பொறுத்த வரையில் குறிப்பாக அந்த இளைஞனைப் பொறுத்த வரையில் எனக்கு நன்றாகத் தெரியும். சாராய வியாபாரம் நிச்சயமாகச் செய்ய மாட்டான். நிச்சயமாகக் குடிக்க மாட்டான்; கிராமத்தில் இருக்கிற அத்தனை பேரும் சொல்லுகிறார்கள். என் ஊருக்கு கிழக்கே வெற்றிலை வியாபாரத்திற்காகப் போய் இருந்த இடத்திலே கைது செய்யப்பட்டான். அத்தனை பேரும் இவனை ஏன் பிடிக்கிறீர்கள்? நியாயமா? என்று கேட்டபோது அங்குள்ள கடைக்காரரிடம் சொல்லியிருக்கிறார்கள், உன்னையும் கைது செய்து விடுவோம் ஜாக்கிரதை என்று சொல்லி அவனைக் கொண்டு போய்விட்டார்கள். மறுநாள் ஊரில் இருந்து போன அத்தனை பேரும் அது தவறு என்று சொன்ன போது கூட அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் போலீஸ் ஸ்டேஷன் எங்கேயும் இல்லை, உடுமலைப்பேட்டையில் தான் இருக்கிறது. என்னுடைய ஊருக்கு போலீஸ் புரகிபிஷன் என்போர்ஸ்மெண்ட் விங் உடுமலைப்பேட்டையில் இருக்கிறது. அந்த உடுமலைப்பேட்டை போலீஸ்காரர்களுக்கு இந்தத்தொழில் யார் செய்வது இல்லையோ, அவர்களைப் பிடித்துக் கொண்டு போகிறார்கள். நபர் யார் என்று பெயர் தருகிறேன். பிடித்த தேதியைத் தருகிறேன். நிச்சயமாக நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் போலீசாருக்கு செய்யப்பட்டிருக்கின்ற வசதிகள் நிச்சயமாகப் போதாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மதுவிலக்கைப் பொறுத்த வரையில் இன்றைக்கு பரிகாரமே கிடையாதா என்றால் நிச்சயமாக உண்டு. ஒன்று டோட்டல் புரகிபிஷன் வேண்டும்; பரிபூரண மதுவிலக்கு அமலுக்கு வரவேண்டும், அல்லது டோட்டல் ஸ்கிராப்பிங். எங்களைப் பொறுத்தவரையில் பரிபூரண மது விலக்கு ஒன்றுதான் அதற்குப்பரிகாரம் என்று நான் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இது கொஞ்சம் சிரமம் தான் என்றாலும் செய்து தான் தீர வேண்டும்.

''செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்''

1989 ஏப்ரல் 27] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீங்களும் அந்தப் பட்டியலில் இடம்பெறவேண்டும் என்பதுதான் எங்களுடைய விருப்பம். இதையெல்லாம் செவ்வனே நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொன்னால் போலீஸ் துறையில்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் பல காங்கிரஸ் மாநிலங்களில் உள்ள சிறியர் வரிசையிலேயே நானும் இடம்பெற விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் உயர்ந்த இடத்திற்கு வர வேண்டும் என்று நினைக்கிறோம். ஏன் தவறான உதாரணத்தைக் கொடுக்கிறீர்கள்? குஜராத்தைப் பாருங்கள் அங்கே மது விலக்கு இன்னும் இருக்கிறது. காங்கிரஸ் தான் அங்கே ஆட்சி செய்கிறது. அங்கே இன்னும் மது விலக்கு இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் ஆட்சியில் நாங்கள் இருந்தவரை பரிபூரண மது விலக்கு அமலில் இருந்து இருக்கிறது. அதை செய்யுங்கள் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.(குறுக்கீடு) தமிழகத்தைப் பற்றிச் சொல்லுகிறேன், பாண்டிச்சேரியில்ஒரு போதும் மது விலக்கு இருந்தது இல்லை. எனவே நீங்கள் நல்ல திறமையாளர்களை, நன்கு படித்தவர்களைப் போலீஸ் துறைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முடிந்த வரையில் அதிகமான பெண் போலீசை எடுத்தால் இது போன்ற தவறுகள் தொடர்ந்து நடைபெறாது. பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற கொடுமைகள், தீமைகள் இவைகளைக் களையவேண்டும் என்றால் பெண் போலீசை அதிகமாக எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சட்டபூர்வமாக, மரியாதையாக நடந்து கொள்ளுவது எப்படி என்று அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். சட்டம், சமூக இயல், அணுகு முறை இவற்றில் விரிவாக அவர்களுக்குப் பாடங்கள் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பலஇடங்களிலிருந்து புகார்கள் வந்து இருக்கின்றன. குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் வெள்ளச்சந்தையிலேயும், குருந்தன் கோட்டிலேயும் இரு காவல்நிலையங்கள் அமைக்க 1987-88-ல் நடந்த காவல்துறை மானியக் கோரிக்கையின் போது அன்றைய அரசு கொள்கை ரீதியாக அனுமதி அளித்தது. ஆனால் இன்று வரையில் அது நடைபெறவில்லை. அதுபோல் போலீஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு அவர்களுடைய வீட்டில் டெலிபோன் வைக்கவேண்டும் என்று சென்ற ஆண்டு மானியத்தில் ஒதுக்கப் பட்டது. அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. போலீசார் லீவில் இருந்தால்கூட அவர்களை வேலை செய்யச் சொல்லுகிறார்கள்.

[1989 ஏப்ரல் 27

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 25 நிமிடங்கள் ஆகிவிட்டன. ஒரே ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லீவில் இருப்பவர்களை சம்பளம் இல்லாமல் வேலை செய்யும்படி கட்டாயப்படுத்துகிறார்கள். இந்த நிலைகள் எல்லாம் மீண்டும் இருக்கக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியானவுடன் நிறைய பெரிய போலீஸ் அதிகாரிகள் மாறுதல்—இன்டிஸ்கிரிமினேட் டிரான்ஸ்பர்ஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். இது என்ன ஆகும் என்று சொன்னால், போலீசாருடைய நம்பிக்கை தகர்ந்து விடும். குறிப்பாக இடைத் தேர்தல் நடைபெற்றபோது மதுரையில் இருந்த டி. ஐ. ஜி. மாறுதலுக்கு உள்ளானார். மதுரையிலிருந்த போலீஸ் கண்காணிப்பாளர் அவர்கள் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறார்கள். இது அவசியம் தானா? இடைத்தேர்தல் அறிவித்ததற்குப் பின்னால் தேர்தல் கமிஷனுடைய குறிப்புகளின்படி நிச்சயமாக அந்த உயர் போலீஸ்அதிகாரிகளை டிரான்ஸ்பருக்கு உட்படுத்தக்கூடாது என்று இருந்தும் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த இரண்டு உயர் போலீஸ் அதிகாரிகளும் அன்றைய தினம் மாற்றம் செய்யப்பட்டார்கள். போலீஸ்காரர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு மாடர்ன் எக்யூப்மெண்ட்ஸ் மற்றும் மாடர்ன் டிரெயினிங் போன்றவற்றில் நல்ல முறையிலே பயிற்சி தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். போலீஸ்காரர்கள், மூன்றாந்தர, அதாவது அடிப்பது, இம்சைப்படுத்துவது, துன்புறுத்துவது போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது. கடைசியாக நான் சொல்ல விரும்புவது, போலீசாருக்கு அவுசிங் கார்ப்பரேஷன் நடத்துவதுபற்றி இன்றைய தினம், நீங்கள் ஆட்சிக்கு வந்த பின்னாலே அந்த அவுசிங் கார்ப்பரேஷனை எடுத்துவிட்டீர்கள். சிக்கனம் என்று சொன்னால் அவுசிங் போர்டையே எடுத்துவிடலாம். அது தேவையில்லை. அவுசிங் போர்டு இல்லாமல் இளைஞர்களுக்கு, கூட்டுறவுச் சங்கங்களை வைத்துக் கொள்ளச் சொல்லி அவர்களுக்கு நீங்கள் கடன் கொடுத்தீர்களானால், இதைவிட குறைந்த விலைக்கு அத்தனை பேர்களுக்கும் வீடுகள் கிடைக்கும். ஆனால் அதுவல்ல பிரச்சினை. போலீசாருக்கு நல்ல வசதிகள் செய்து தரவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காவல் துறையைப் பொறுத்த வரையில் சங்கம் வைத்துக் கொள்வதற்கு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அனுமதித்தார்கள்.. (குறுக்கீடு)

1989 ஏப்ரல் 27]

THIRU OSCAR C. NIGILI : Hon. Deputy Speaker Sir, my Hon'ble f. iend has just made a statement about indiscriminate transfers I would like to get a clarification from him whether they are 'indiscriminate transfers, or 'routine ones, All the Police Officers who were posted during the Governor's regime, except one or two. The present Police Commissioner is a shining example. He was not appointed by the D.M.K. Government. He was appointed during the Governor s Rule. There is a difference between a routine transfer and an indiscriminate transfer. (Interruption) One minute, I have not yet finsihed.

There is a differnce between a 'routine transfer'. and an indiscriminate transfer When the Governor's Rule was imposed all the Police Officers including the previous Commissioner were transferred. Is that an 'indiscriminate transfer' or a 'discriminate transfer'. These are the words which the Hon'ble Member should judiciously use. He should use the words 'indiscriminate' carefully.

THIRU S. R. BALASUBRAMANIAM ; Mr. Deputy Speaker Sir, more than 75per cent of the High Police Officials have been transferred. Definitely they are indiscriminate transfers. (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது சொல்லலாம். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. காவல் துறையினர் சங்கம் வைத்துக்கொள்ள எம்.ஜி.ஆர். அவர்கள் அனுமதித்து இருந்தார்கள். சில நாட்களிலே, சங்க வேலைகளிலே ஈடுபட்டதற்காக தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டு சிலர் சிறைபிடிக்கப் பட்டிருக்கிறார்கள். சங்க நடவடிக்கைகளுக்காக பழிவாங்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்தனை பேர்களையும் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். 1984 ல் தி.மு.க. அறிவித்த தேர்தல் அறிக்கையிலே போலீஸ் சங்கம் வைத்துக் கொள்ள அனுமதிப்போம் என்று சொல்லி இருக்கிறீர்கள். அவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ரத்து செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதைப்போல 1988ல் என்.ஜி.ஓ. சங்கத்திடம் நீங்கள் சென்னையிலே பேசியபோது..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : அவர்கள் மீதுள்ள வழக்குகளையெல்லாம் விலக்கிக் கொள்வோம் என்று உறுதி அளித்து இருக்கிறீர்கள். பொதுவாக

கழகம் ஆட்சிக்கு வந்த பின்னாலே, கட்சிக்காரர்கள் மீது இருந்த வழக்குகளையெல்லாம் விலக்கிக் கொண்டீர்கள். காவல் துறையினரை கவனிக்கவில்லை என்ற வருத்தம் அவர்களுக்கு இருக்கிறது. 1989 தேர்தல் அறிக்கையிலேயும் காவல்துறையினர் மீது சங்க நடவடிக்கைளுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ரத்து செய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டு தேர்தல்களிலேயும் காவல் துறையினரை தி.மு.க.-விற்குச் சாதக மாக பயன்படுத்துவதற்குத்தான் அந்தத் தேர்தல் கால வாக் குறுதிகள் பயன்பட்டனவே தவிர அவர்களுக்கு உங்களாலே எதுவும் செய்ய முடியவில்லை. ''சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்'' என்று சொல்லியே ஆட்சிக்கு வந்த வர்கள் நீங்கள். அப்படிப்பட்டவர்கள் சொன்ன சொல்லை மறந்திடலாமா என்று நான் கேட்க விரும்பு கிறேன்.

குறிப்பாக ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். கல்வி மானியத்தின் மீது பேசும்போது அங்கே நடைபெறுகின்ற கோளாறுகளைப் பற்றி பேசினேன். குறிப்பாக ஒரு அமைப்பைப் பற்றி இங்கே பேசி இருக்கிறேன். அந்த அமைப்பைச் சேர்ந்தவர், பட்டங்கள் வாங்கித் தருகிறேன், வேலைகள் வாங்கித் தரு கிறேன் என்று சொல்லி பல மோசடிகளை நடத்துவது மட்டு மல்லாமல் பல்வேறுமோசடிகளில் ஈடுபடுவதாக, எனக்குநேற்றுகூட தகவல் வந்திருக்கிறது. பலரிடத்திலே பணம் வாங்கியிருக் கிறார். இன்றைய தினம் சென்னையிலே அவருக்கு 5, 6 கோடி ரூபாய்க்கு சொத்து சேர்ந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு அரசியல் வாதிக்குக் கூட டாக்டர் பட்டம் அவர்தான் வாங்கிக் கொடுத்தார் என்று சொல்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் பலரிடத்திலே வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி பணம் வாங்கியிருக்கிறார். சென்ற மாதம், ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒரு. . (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள். இல்லையென்றால் வேறு உறுப்பினரை பேச அழைக்கவேண்டியிருக்கும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : ஒரு செயலாளர் இடத்திலேகூட 5 ஆயிரம் ரூபாய் அவர் வாங்கிக்கொண்டு ஏமாற்றி விட்டார் என்று எனக்குத் தகவல் வந்து இருக்கிறது. அதுகுறித்து நான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடத் திலே நிச்சயமாகத் தர இருக்கிறேன். என்னிடத்திலே அனைத்து தகவல்களும் இருக்கின்றன. குண்டர்கள் சட்டம் என்று சொல் லப்படுகின்ற அந்தச் சட்டத்தை அத்தகைய நபர்கள் மீது

நீங்கள் பயன்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அவர் 30 வழக்குகளிலே கைதாகி இருக்கிறார் என்று சொல்கிறார்கள். வெளியிலே தாராளமாகத் திரிந்து கொண்டிருக்கிறார். அவரை எதுவுமே செய்ய முடியவில்லை. ஆகவே உள் துறையிலே, போலீஸ் துறையிலே நீங்கள் முழு கவனம் தனிக்கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் உங்களுக்கு நல்ல பெயர் கிடைக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது ஏதோ பத்தோடு ஒன்று பதினொன்று, அத்தோடு இது ஒன்று என்ற கணக்கிலே இல்லாமல் நீங்கள் இதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டும். அப்படிச் செலுத்தவில்லை என்று சொன்னால் பழி உங்கள்மீதுதான் வரும். போலீஸ் கமிஷனரையோ உள்துறை செயலாளரையோ யாரும் பழி சொல்வதில்லை. உங்கள் மீதுதான் பழி சொல்வார்கள். அண்ணா அவர்கள் இந்த அவையிலே பேசியதை மட்டும் நான் படித்துக் காட்டிவிட்டு முடித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

1957-லே நீங்கள் இந்த அவையிலே உறுப்பினராக இருந்த நேரத்திலே அண்ணா அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்திலே பேசியது :

''நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நிதிக்கும் அமைச்சர், நீதிக்கும் அமைச்சர், கல்விக்கும் அமைச்சர், இந்த மூன்று பெரும் துறைகளையும் தாங்குவதற்குரிய ஆற்றல் படைத்தவர்தான் அவர் என்பதை சபைக்கு நெடுந்தொலைவிலே இருந்து பார்த்துக் கொண்டிருந்த காலம் முதலே நான் நன்கு உணர்ந்திருக்கிறேன். என்றாலும் பொதுவாக பாராளுமன்றத்தில் நிதியமைச்சராக இருப்பவர்கள் செலவு ஆகின்ற இலாக்காக்கள் எதையும் தம்மிடத்திலே வைத்துக்கொள்ளாமல் இருப்பதுதான் ஜனநாயகப் பண்பாட்டுக்கு உகந்தது என்று பல்வேறு நாடுகளிலும் வற்புறுத்தி வருவதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்'' என்ற அண்ணாவின் வரிகளை நான் சுட்டிக் காட்டி, முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கே. ரமணி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று போலீஸ் மானியத்தின்மீது சில முக்கியமான கருத்துக்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய அனுபவத்திலிருந்து தெரிந்துகொண்டவற்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதற்குத் தேவையான அளவுக்கு தாங்கள் எனக்கு நேரத்தை அனுமதிக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

1989 ஏப்ரல் 27] [திரு. கே. ரமணி]

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு தமிழக மக்கள் அவர்கள் அனுபவித்து வந்திருக்கும்படியான முந்தைய ஆட்சியினுடைய அனுபவங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு ஒரு புதிய அரசாங்கத்தை தமிழ்நாட்டில் உருவாக்கியிருக்கிறார்கள். மக்கள் ஆட்சிக்கு எதிரான எதேச்சாதிகாரத்தை வெற்றிபெறாமல் தடுத்து, ஜனநாயக சக்திகள், இடதுசாரி சக்திகள், உழைப்பாளி மக்கள் இப்படிப்பட்ட அடிப்படையான மக்களுடைய பலத்தைத் திரட்டி ஒரு பெரிய எழுச்சியை தமிழ்நாட்டில் உருவாக்கி இந்த புதிய அரசாங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

பண பலமும் அதிகார பலமும் அந்த மக்களுடைய போராட்டத்தாலே முறியடிக்கப்பட்டுதான் இந்த அரசாங்கம் வந்திருக்கிறது. இது ஒரு முக்கியமான மாற்றம். இந்த மாற்றத்தை நமது காவல்துறை ஜீரணிக்க முடிந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இந்த மாற்றத்தைக் காவல் துறை ஜீரணிக்க முடிய வேண்டும். காவல்துறை என்று சொல்லும் போது காவல் துறையில் இருக்கக்கூடிய அத்தனை பேர்களும்—கீழே இருக்கிற சாதாரண காவலர்களும் அதற்கு மேலே இருக்கிற அதிகாரிகளும் அத்தனை பேர்களும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்த அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்து என்ன காரியங்களைச் செய்ய வேண்டும்; சட்டத்திற்கு உட்பட்டு, விதிகளுக்கு உட்பட்டு ஜனநாயகத்தைப் பாதுகாத்து, மக்களுடைய உரிமைகளை அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கக்கூடிய நடவடிக்கைகளை இந்த சர்க்கார் எடுக்க வேண்டுமென்ற ஒரு முனைப்போடுதான் ஜனங்கள் இந்த அரசாங்கத்தை நியமித்திருக்கிறார்கள். அப்படியானால் அந்தக் கருத்தோட்டம் நமது காவல் துறைக்கு, காவல் துறை தலைமைக்கு ஏற்பட வேண்டாமா ? ஏற்பட வேண்டும். அது ஏற்பட்டுள்ளதா என்பதுதான் என்னுடைய கேள்வி. என்னைப் பொறுத்த வரையில் அதில் மிகப்பெரிய சிக்கல் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை இன்னும் காவல் துறைக்கு ஏற்படவில்லை என்று தெரிகிறது. அதற்கு பல உதாரணங்களை என்னால் சொல்ல முடியும். ஆனால் அத்தனையையும் இங்கே சொல்ல நேரமில்லை. இருந்தாலும் சிலவற்றை மட்டும் சொல்கிறேன்.

இந்த சர்க்காரும் பொதுமக்களும் எதிர்பார்க்கிற சட்டப் பூர்வமான ஜனநாயக முறையிலான காரியங்களைச் சமுதாய மாற்றத்திற்குச் செய்ய வேண்டிய கடமை என்ற முறையில் செய்வதற்குத் திட்டவட்டமாகக் காவல் துறை தன்னுடைய

கடமையை ஆற்ற வேண்டும். நம்முடைய தமிழ்நாட்டில் காவல் துறை பல காரியங்களைச் செய்ய முன்வந்துள்ளது என்று எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. பால சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். ஆனால் நடை முறையைப் பார்க்க வேண்டும். நாம் என்ன சொல்கிறோமோ அது நடைமுறைக்கு வருகிறதா என்று பார்க்க வேண்டும். Prac ice is the cri erion of truth உண்மையில் நாம் சொல்கிற சாராம்சம் நடைபெற வேண்டும். அது நடக்கிறதா? இந்த அரசாங்கம் இப்போதுதான் ஏற் பட்டுள்ளது. இதற்கு முன்னால் நடந்திருக்கும்படியான நடவடிக்கைகளுடைய கொள்கை குறிப்பு நம்முடைய கையில் இருக்கிறது. 1975, 1976 ஆகிய இந்த வருஷங் களுடைய கொள்கைக் குறிப்புகளைக் கூட நான் எடுத்துப் பார்த்தேன். அந்தக் கொள்கைக் குறிப்பைத்தான் கொடுத் திருக்கிறார்கள். ஆனால் இந்த அரசு செல்லவேண்டிய பாதை, மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். இந்தக் காவல் துறை அரசாங்கத்திற்கு நியாயமான உதவியை அளிப்பதோடு எப்படி இருக்கவேண்டும்? அதனு டைய தலைமை எப்படி திட்டங்களைப் போட்டு காவலர் களையும், மக்களையும் நம்பிக்கை ஊட்டும்படியான திசையில் திருப்பி அழைத்துச் செல்லவேண்டும் என்பதுதான் பிரதான மான பிரச்சினையாகும். சென்னை மாநகரத்தில் நீங்கள் பார்க்கலாம். மக்களுடைய ஜனநாயக உரிமைகளுக்கு எவ் வளவு பெரிய தாக்குதல்கள் தொடுக்கப்பட வேண்டுமோ அது காவல் துறையினரிடத்திலிருந்து வந்துகொண்டு இருக் கிறது. இது எங்களுடைய சொந்த அனுபவம்.

இந்த நிலைமையை நமது அரசாங்கம் கவனிக்கவேண்டும். ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், தர்ணா போன்றவற்றை மட்டுமல்லாமல் உண்ணாவிரதங்கள் கூட பல சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்படுவதில்லை. இந்தப் போராட்ட வடிவங்கள் எல்லாம் பலாத்காரத்தை உட் கொண்டவைகளா? அல்ல. ஆதாரங்களை எல்லாம் நான் வைத்திருக்கிறேன். அதை எல்லாம் இப்போது ப்ரசென்ட் பண்ண முடியாது. அப்படிப்பட்ட நடவடிக்கைகள் இருக் கின்றன. இப்படி ஜனநாயக முறையில் மக்கள் ஒன்றுதிரண்டு நடத்தப்படக்கூடிய நடவடிக்கைகளுக்கே கத்தி வைக்கப் படுகிறது. அது சரியல்ல. நல்ல மாற்றத்தினுடைய அடிப்படை இதுவல்ல. உதாரணமாக மத்திய சர்க்கார் வெளியிட்டிருக் கும்படியான பட்ஜெட்டில் வரிகளைத் திணித்திருக்கிறார்கள். இயற்கையாகவே அதை எதிர்த்து ஜனநாயகக் கிளர்ச்சி வருகிறது. அரசியல் கட்சிகள் அதைப் பிரதிபலிக்கவேண்டிய கடமை இருக்கிறது. அந்த முறையில் பட்ஜெட்டைப் பற்றி விளக்கப் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்த வேண்டும். இந்த மாநில அரசு கூட, புதுசாக வந்த அரசு கூட பட்ஜெட்டைத்

தாக்கல் செய்திருக்கிறது. இவர்கள் ஏழை, எளிய மக்களுக்கு பல புதிய சலுகைகளை அளித்திருக்கிறார்கள். அந்த அம்சங்களைப் பற்றி எல்லாம் மக்கள் மத்தியிலே எடுத்துச் சொல்ல வேண்டி இருக்கிறது. அதுமட்டுமல்ல. இப்போது தமிழகத்தில் புதிதாக வந்திருக்கின்ற அரசை உடைப்பதற்கான சதி நடவடிக்கைகளும் தமிழ்நாட்டில் நடக்கின்றன என்பதை நாம் நம்முடைய சொந்த அனுபவத்திலிருந்து பார்க்கிறோம். அதை எதிர்த்து நாம் போராட வேண்டும். மக்கள் எல்லாம் திரண்டு அந்தச் சதியை முறியடிப்பார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் பற்றி மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லாமல் வேறு எங்கே போய்ச் சொல்வது? அதற்கு நாம் அனுமதி கேட்டால் அது மறுக்கப்படுகிறது. மைக்செட் போடாதே என்று காவல்துறையினர் சொல்கிறார்கள்.

இது சென்னை மாநகரம். இன்னும் பல பகுதிகளில் நடக்கும்படியான கூட்டங்களில் ஏற்பட்டு இருக்கின்றன. சென்னையைப் பொறுத்தவரையில் பெரிய மைதானம் வேண்டும் என்றால் கடற்கரைக்குத்தான் செல்ல வேண்டும். மற்ற இடங்களில் சாதாரணமாகக் கூட்டம் போட்டால்கூட இங்கே போடக்கூடாது கடற்கரைக்குப் போங்கள் என்று சொல்கிறார்கள். கடற்கரைக்குப் போகும் சமயம் என்று ஒன்று இருக்கிறது. சாயங்காலம் எல்லோரும் போவார்கள். எனவே இப்படிப்பட்ட பிரச்சாரங்களை மக்கள் மத்தியிலே செய்வதற்கு எந்தத் தடையும் இருக்கக்கூடாது. ஆனால் அப்படிப்பட்ட தடைபோடுகிற நிலைமைகள் இருக்கின்றன. அந்த நிலைமைகள் எல்லாம் தொன்றுதொட்டு நடந்துவரக் கூடிய அடக்குமுறை நடவடிக்கைகள். அந்தக் கட்டுக்கோப்புக் குள்ளே இருந்து காவல்துறை வெளிவர முடியவில்லை. புதிய மாற்றங்களை ஜீரணம் பண்ண முடியவில்லை. இப்படி நாங்கள் கருதுகிறோம். மைக் போடுவதற்கு அனுமதி கிடைக்கவில்லை. கட்சிக் கொடிகளை ஏந்தி தெருவிலே நடந்து சென்று பிரச்சாரம் செய்தால் கூட தவறு என்று சொல்கிறார்கள். உதாரணமாக ஏப்ரல் மாதம் 8-ஆம் தேதி வண்ணாரப்பேட்டை, ராயபுரம் பகுதிகளில் எங்களுடைய கட்சி நண்பர்கள், அனுதாபிகள் ஆகியோர் கட்சிக் கொடிகளைக் கையில் ஏந்திச் சென்றனர். எந்தவிதமான மைக் செட்டும் அவர்கள் போடவில்லை. பட்ஜெட் பற்றியும், தமிழ்நாட்டின் நிலைமை பற்றியும் வாய்ப்பிரச்சாரம் செய்து கொண்டு போனபோது உதவி ஆய்வாளர்கள், அவர்களுடைய கொடிகளைப் பிடுங்கிக் கொண்டு போய்விட்டார்கள். இப்படி எல்லாம் செய்யக்கூடாது.

அடுத்து தொழிலாளர்கள் ஃபேக்டரிக்கு முன்னால் கேட் கூட்டங்கள் நடத்துவதற்குக் கூட தடை உத்தரவு இருக்கிறது. அங்கே மைக் வைத்துப் பேசக்கூடாது என்று இருக்

(திரு கே. ரமணி) [1989 ஏப்ரல் 27

றது. ஏன் தொழிலாளர்கள் ஃபேக்டரி கேட்டுக்குப் போகிறார்கள் ? விசேஷமான சலுகைக்காகவோ அல்லது ஆசைக்காகவோ செல்ல வில்லை. அவர்களுக்குச் சம்பளம் கொடுக்காமல், வேலை கொடுக்காமல் உபத்திரவம் பண்ணக்கூடிய முதலாளிகள் இருக்கிறார்களே, நிர்வாகம் இருக்கிறதே அவர்களுக்குத் தங்களுடைய எதிர்ப்பைக் காட்டுவதற்கு அதுதான் இடம். ஒரு முதலாளியினுடைய வீட்டிற்கு முன்னால் சென்று ஆர்ப்பாட்டம் செய்தால் காவல் துறை அனுமதிக்காது. அங்கேயே கைது செய்து அப்புறப்படுத்தி விடுவார்கள். கேட் கூட்டங்கள் போடக்கூடாது என்று தடை செய்கிறார்கள். அந்த வகையில் அனுமதி கொடுக்க முடியாது என்று எழுதித் தந்த பதில்கள் எங்களுடைய கையிலே இருக்கின்றன. கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு, ஆந்திரம் ஆகிய நான்கு மாநிலங்களையும் சேர்ந்த தென்னக இரயில்வே தொழிலாளர்கள் ஸ்தாபனம் சார்பாக ஒரு ஊர்வலத்தை அந்ப் ஜெனரல் மேனேஜர் காரியாலயத்துக்கு முன்னால் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்குத் திட்டமிட்டு அனுமதி கேட்டார்கள். அதைக் கொடுக்க மறுத்தார்கள். ஊர்வலம் வேண்டுமென்றால் நடத்துங்கள். டெமான்ஸ்ட்ரேஷன் கூடாது என்று சொன்னார்கள். ஜெனரல் மேனேஜர் ஆபீஸ் முன் நடத்தவிடவில்லை 1,008 ஆர்ப்பாட்டங்கள் பார்த்த இடம் அந்த இடம். பிரிட்டிஷ்காரன் காலத்திலேகூட அங்கே ஆர்ப்பாட்டங்கள் நடந்து இருக்கின்றன. அது கூடாது என்று சொன்னார்கள். நான்கு மாநிலங்களிலே இருந்து வந்தவர்கள், அவர்கள் அந்த டெமான்ஸ்ட்ரேஷனை நடத்த முடியவில்லை. ஊர்வலம் போனார்கள். அப்படிப்பட்ட நடவடிக்கைகள் அங்கே நடத்தப்பட்டது. இந்த விஷயத்தைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கூட நானே கடிதம் எழுதிக் கொடுத்தேன். இப்படி ஒரு சம்பவம் நடக்கிறது. அங்கே ஒரு டெமான்ஸ்ட்ரேஷன், கோஷம் கொடுத்து, கொஞ்ச நேரம் கோஷம்கொடுத்து விட்டு நின்று கலைந்து போவதுதான். வேறு ஒன்றும் இல்லை. அவர்கள் அங்கே மறியல் பண்ணப்போவது இல்லை. உட்கார்ந்திருக்கப் போவது இல்லை. சட்டத்தை மீறி ஒன்றும் செய்யக் கூடிய அளவுக்கு இல்லை. அதற்கு மறுத்தார்கள். போலீஸ் கமிஷனர் நினைத்தால் அது நடந்து விடும். அவ்வளவுதான் நிலை. இப்படிப்பட்ட நிலைமைகளை அனுமதிக்க முடியாது என்பது தான் என்னுடைய கருத்து. இதை நமது அரசாங்கமும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். காரணம் இந்த புதிய மாற்றத்தை ஜீரணிக்க முடியாத ஒரு சங்கடம் இதற்குள்ளே காவல் துறைக்கு இருக்கிறது என்பது எனக்குத் தெரிகிறது.

(நண்பகல் 12.00).

இது மாதிரி இன்னொன்று. இந்த கோட்டை இருக்கிறதே இந்தக் கோட்டையினுடைய பக்கம், சமாதான சின்னம் இருக்கிறதே அதிலேயிருந்து ரிசர்வ் பாங்கு வரைக்கும், இந்த கோட்டை பக்கத்திலே எந்த விதமான டெமான்ஸ்ட்ரேஷனும் ஊர்வலமும், அனுமதிப்பதில்லை. கோட்டைக்குப் போனால் வேண்டாம் என்று அந்த ஊர்வலத்தை இன்றைக்கு தடை உத்தரவு போட்டு தடுக்கிறார்கள். இந்த உத்தரவு போடப் பட்டு எத்தனை வருடங்கள் ஆயிற்று? எந்த அரசாங்கம் என்று கூட நான் பார்க்கவில்லை. அதற்கு நான் கவலைப் படவில்லை. அப்படிப் போனால் என்ன ? பார்லிமெண்ட் டுக்கு கேட் வரைக்கும் கூட போகின்றார்கள். சந்நியாசிகள் ஊர்வலமாகச் சென்று பார்லிமெண்ட் கேட்டுக்கு முன்னாலே அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதை நான் பார்த்து இருக்கிறேன். என் கண்ணுக்கு முன்னாலே பார்த்து இருக்கிறேன். அப்படிப் பட்ட ஒரு நிரந்தரமான தடை உத்தரவை இந்த கோட்டை, பக்கம் போட்டிருக்கின்றார்கள். இந்த ரிசர்வ் பாங்க் பக்கம் போக முடியாது. அந்தப் பக்கத்திலேயே எங்கும் போகக் கூடாது. அங்கே முன்னாலே தடியடிப் பிரயோகம் எல்லாம் நடந்திருக்கிறது. நமக்கு அப்படி சரித்திரம் இருக் கிறது. அப்படிப்பட்ட நிலை எதைக் காட்டுகிறது ? இந்த அடக்கு முறையின் பழைய கால பிடியிலிருந்து விடுபட முடி யாத ஒரு நிலைமை காவல் துறைக்கு இருக்கிறது என்பதாகும்.

அது மாதிரி தான் இப்போது ஸ்டேன்டர்ட் மோட்டார்ஸ் தொழிலாளிகள் போராட்டத்தில் நடந்தது. அந்த போராட் டம் எவ்வளவு கடுமையானது. அந்தத் தொழிலாளர்கள் மீது தடியடிப் பிரயோகம் நடந்திருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு போக்கு இருந்து வருகிறது. இது மட்டுமல்ல., இங்கே சென்னையில் இருக்கின்ற பெரிய போலீஸ் அதிகாரி சமாதான நிலைமைகளைப் பாதுகாத்து நமக்கு ஜனநாயக உரிமையைத் தர வேண்டியவர்கள் யார் ? இந்த மாநகரத்தினுடைய சட்டம் ஒழுங்கு நிலையைப் பற்றி பரிபூரணமாக கட்டுப் பாட்டை கையிலே வைத்திருக்கக் கூடிய நமது மதிப்பிற்குரிய போலீஸ் கமிஷனர் தான். ஆனால் அவரே ஒரு பெரிய பந்தா மாதிரிதானே, அவர்களுடைய பயணங்களை நடத்துகின் றார். அதை நாம் பார்க்கிறோம். ரோட்டிலே ஆள் நிற்கக் கூடாது. ஒரு சைரன் வைத்த கார் போகிறது என்றால், எல்லாம் ரோட்டை விட்டு அந்தப் பக்கமாகப் போய் விட வேண்டும். (குறுக்கீடு) தயவு செய்து என்னை பேச அனு மதிக்கிறீர்களா ? (மணியடிக்கப்பெற்றது). அப்போது என்ன பார்க்க வேண்டியிருக்கிறது என்று சொன்னால் அவர்களுக்கு சட்டப்படி உரித்தான சகல உரிமைகளையும் மக்கள் அனுபவிக் கட்டும். அது வேண்டுமென்று நான் சொல்கிறேன். நமக்கு ஒன்றும் தனிப்பட்ட பிரச்சினையில்லை. இது எதைக் காட்டு கிறது என்று சொன்னால் ஒரு போலீஸ் கமிஷனர் தெருவிலே வந்தார் என்று சொன்னால், கண்ணுக்கு தெரிகிற தூரத்தில் மனிதன் இருக்கக் கூடாது என்பது ஒரு பழைய காலத்து மகா

ராஜாக்களுடைய பந்தா தொடர்கிறது. இது பிரிட்டிஷ்காரர் காலத்திலேயே விட்டுப் போய் இருக்கும்படியான உபயோகம் அற்ற நிராகரிக்கப்பட வேண்டிய ஒரு குணம்.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் போலீஸ் கமிஷனர் அவர்கள் பெரிய பந்தா, மகாராஜா போன்ற பாணியிலே தெருவிலே மக்கள் நடமாட முடியாத நிலையிலே போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கின்றார்கள். சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், இந்த மாதிரி நிலை இல்லை நான் ஏறத்தாழ 10, 12 ஆண்டு காலமாக சென்னையிலே, சென்னை நகரத்தில் நானும் சென்று கொண்டு தான் இருக்கிறேன். இந்த மாதிரி சூழ்நிலை எந்தக் காலத்திலும் இருந்ததில்லை என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கணபதி அவர்கள் சென்னைக்கு ரொம்ப வேண்டியவர்கள். அவர் சொல்லட்டும். நான் சொல்கிறேன். இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குக் கூட இந்த பந்தா கிடையாது. கூடாது என்று சொல்கிறேன். கேரளாவிலே போய்ப் பாருங்கள். திருவனந்தபுரத்திலே அந்த மினிஸ்டர்கள் வெளியே போவது கண்டுபிடிக்க முடியாது. ஒரு சிங்கிள் போலீஸ்மென் அவர்களுக்கு எஸ்கார்ட் பண்ணுவது கிடையாது. நாங்களும், அப்படி செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. நீங்கள் சொல்வதனாலேதான் சொல்கிறேன். otherwise I woul not have mentioned it அதுதான் பிரச்சினை. ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டும். அந்த கமிஷனர் பேரிலே எனக்கு எந்தக் கோபமும் கிடையாது. அதற்காக நான் சொல்லவில்லை. ஒரு 'ஃபாஸ்ட்' எப்படி தொடருகிறது? old persistence in the new நல்லது இருந்தால் பரவாயில்லை. கெட்டது கூடாது. That should be given up இந்த அரசு அதில் கவனம் செலுத்த வேண்டும் என்பது என் கருத்து. நீங்களும் சேர்ந்து கவனம் செலுத்த வேண்டும் என்பது என் கருத்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் சொல்கின்ற பந்தா எந்த ஊரிலே நடக்கிறது என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே நடக்கிறது. அதனாலே தான் சொன்னேன்.

1989 ஏப்ரல் 27] [திரு. கே. ரமணி]

ஆகவே, மக்களுடைய ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் போலீஸ் துறையினருக்கு உண்டு. காவல் துறையினர் ஜனநாயக முறைக்கு கெடுதல் வராமல் பார்த்துக் கொள்ளக் கூடியவர்களாக, பாதுகாப்பாளர் களாக இருக்க வேண்டும். அவர்களே அதற்கு மாறாக நடந் தால் மற்றவர்களும் நாமும் அப்படி நடந்தால் என்ன என்று யோசிப்பார்கள். ஆகவே, கெடுபிடி செய்து ரொம்ப காலத் திற்கு கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியாது. அந்த வகையில் சின்னச் சின்ன சமாசாச்சாரத்திற்கு எல்லாம் தொழிலாளர்களும், பொதுமக்களும் தங்கள் உரிமைக் குரலை எழுப்புவதற்கு அனுமதி கேட்டால் உடனே கடற்கரைக்குப் போக சொல்லுகின்ற அணுகு முறை சரியில்லை. இன்றைக்கு எதற்கு எடுத்துக் கொண்டாலும் கடற்கரைக்கு போகச் சொல்லு கின்ற நிலைமை இருக்கிறது. கூட்டத்தை நடத்திக் காட்டு வதைப் பொறுத்த வரையில் எங்கள் பின்னாலும் ஆட்கள் இருக்கிறார்கள், 2 இலட்சம், 3 இலட்சம் பேரை கூட்டி காட்ட முடியும். ஆக, சாதாரண மக்களை எல்லாம் கடற் கரைக்குப் போங்கள் என்று சொல்வது ஜனநாயகத்தில் மக்களை கேலிக் கூத்து செய்வது போல இருக்கிறது. கிட்டத்தட்ட அதிகார வர்க்க மனப்பான்மை உள்ள உருவம் அது. தயவு செய்து அந்த முறையைக் கைவிட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக 2, 3, சம்பவங்கள் கொள்கைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வரதட்சணை கொடுமையை அகற்ற காவல் துறையினர் விரைந்து பணி செய்துள்ளனர் என்று காணப்படுகிறது. அது போல சிவில் லிபர்ட்டீஸ் என்று சொல்லப்படுகிற குடி உரிமை நல்ல முறையில் காப்பாற்றப்படப் பட்டிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். பல நல்ல வேலை களை காவல் துறை விரைந்து செய்திருக்கிறது என்பது உண்மைதான். உதாரணத்திற்கு வங்கிக் கொள்ளையை உடனடியாகக் கண்டு பிடிக்கும் வேலையைச் செய்திருக்கிறது. அது போல இலங்கையிலிருந்து இங்கே வரும்படியான மக்கள் சாதாரண மக்கள்மட்டுமல்ல, அதி தீவிரவாதிகள் கூட வந்திருக் கிறார்கள், அவர்கள் இங்கே தமிழ் நாட்டுக்கு வந்து தங்கள் அதி தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபட்டபோது அவர்களைக் கண்டு பிடித்து உடனே நடவடிக்கை எடுத்திருக்கிறது. அது போல வீடு புகுந்து கொள்ளையடித்தல், கொலை பண்ணுதல் போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டவர்களைக் கண்டு பிடித் திருக்கிறது. அது போல ஆட்டோ சங்கர் கேஸ் நடை பெற்றிருக்கிறது. அதைக் கண்டு பிடித்திருக்கிறது. ஆக, இதிலே எல்லாம் போலீஸ் செயல் பட்டிருக்கிறது. அதிலே எனக்கு நல்லெண்ணம் உண்டு. நான் மறுக்கவில்லை.

ஆனால், வரதட்சணைக் கொடுமைப் பற்றி ஒன்றை இங்கே சொல்கிறேன். அந்த விஷயத்தில் போலீசினுடைய நடவடிக்கை மிகவும் மந்தமாக, காலதாமதமாக இருக்கிறது. அதன்

காலதாமத செயல் பாடுகளின் காரணமாக பல கேஸ்கள் நிரூபிக்கப்படாத நிலைமை உள்ளன என்பதை நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். உதாரணத்திற்கு 1988 செப்டம்பர் 4 ஆம் தேதி பூந்தமல்லியில் மீரா என்ற பெண் மரணம். நாளது வரையில் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு ரிப்போர்ட் அனுப்பப்பெறவில்லை. அடுத்து, 27-7-1988 அன்று வில்லிவாக்கத்தில் திரிபுரசுந்தரி மரணம். நாளது வரையில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் ஆகவில்லை. அடுத்து, 24-10-1988 அன்று கோயம்புத்தூரில் ஷோபா என்ற பெண் மரணம். நாளது வரை அது குறித்து எந்த நடவடிக்கையும் இல்லை. அடுத்து, 12-12-1987 அன்று திருவொற்றியூரில் கிருஷ்ண வேணி என்பவர் மரணம். சி.ஐ.டி. விசாரணை நடத்துவதாக காவல் துறை அறிவித்துள்ளது. அதுவும் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணையில் இருக்கா இல்லையா என்று தெரியாது. ஆக, ஓராண்டுக் காலமாகியும் குற்றப் பத்திரிக்கை தாக்கலாகவில்லை. அடுத்து, நீலாம்பாள் மகள் ஜலஜா திருநெல்வேலியில் 31-5-1987 அன்று கணவனாலேயே கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார். கணவன் வி. கண்ணன் என்பவர் ஒரு போலீஸ் கான்ஸ்டபிள். டாக்டர் 'போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டில் 'அடித்துக் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவித்திருக்கிறார்.

ஆனால் ஆர். டி. ஓ. தன்னுடைய ரிப்போர்ட்டில் தற்கொலை என்று சொல்லியிருக்கிறார். இறுதியாக பெற்றோர்களைக் கைது செய்திருக்கிறார்கள். அப்படி என்றால் எந்த அடிப்படையில் கைது செய்திருக்கிறார்கள் அதிகாரிகள், அப்படி ஒன்றும் இல்லை என்று சொல்கிறார்கள். ஆக, அடித்துக் கொன்றிருப்பதாகச் டாக்டர் சொல்கிறார். ஆனால் விசாரணை செய்த அதிகாரி தற்கொலை என்று சொல்கிறார். அப்படி என்றால் மற்றவர்களை பின்னால் கைது செய்ய வேண்டிய நிலைமை ஏன் ஏற்படுகிறது? இது எப்படி ஏற்பட்டது? இதற்கு விளக்கம் இல்லை.

இன்றைக்கு வரதட்சணை தடை சட்டத்தை ஒழுங்காக நல்ல முறையில் அமுல்படுத்துகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கிணங்க ஒன்றைச் சொல்கிறேன். நம்முடைய அரசு கட்டாயம் இதில் கவனம் செலுத்த வேண்டும். இன்றைக்கு வரதட்சணை கொலைகள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. இது குறித்து போலீஸ் நடவடிக்கை ரொம்ப ஸ்லோவாக போய்க் கொண்டிருக்கிறது. அது மாத்திரமல்ல, மாஜிஸ்ட்ரேட் விசாரணையும் மேலெழுந்தவாரியாக, பார்மலாக நடந்து கொண்டிருக்கிறது. அந்த குறிப்பிட்ட இடத்திற்குக் கூட போகாமல் மாஜிஸ்ட்ரேட் பாடியை மட்டும் பார்த்துவிட்டு வந்துவிடு

[திரு. கே. ரமணி]

கிறார். அப்படி பல சந்தர்ப்பங்களில் நடைபெற்றுள்ளன. அவர்கள் அக்கரன்ஸ் நடைபெற்ற இடத்திற்கு போவதில்லை. அது போல அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை விஜாரிப்பது கூட கிடையாது.

(பிற்பகல் 12-10)

ஏனென்றால் வரதட்சணைக் கொடுமைகள் நடந்தால், மாமனார், மாமியார், வீட்டுச் சொந்தக்காரர்கள் அத்தனை பேரும் செத்துப் போன பெண்ணுக்கு ஆதரவாக இருப்பது ரொம்பக் குறைவு. அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அக்கம் பக்கம் விசாரித்தால் பல விவரங்கள் கிடைக்கும். இதிலே விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்க காலதாமதம் ஆகிறது. மாஜிஸ்டிரேட் விசாரணை அறிக்கையின்றி அல்லது விசாரணை அறிக்கை வரும் வரையில் போலீஸ் விசாரணை நடப்பதில்லை. அப்படிப்பட்ட ஒரு முறையைக் கையாள்கிறார்கள். இதற்கு எல்லாம் என்ன சட்டமென்று புரியவில்லை. அப்படி சட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட காரியம் நடந்தால் போலீசுக்கு விசாரணை செய்ய உரிமை இருக்கிறதென்பது என்னுடைய கருத்து. இதனால் மரணம் நடந்து, நீண்ட காலத்திற்குப் பின்னும் விசாரணை துவங்காமல், உண்மைகள் மறைக்கப்படும் ஆபத்து தொடர்ந்து நடந்து வருகிறது. இதை நமது அரசு கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

காவல் நிலையங்களில் இரவு நேரங்களில் பெண்களை அடைத்து வைப்பதோ அல்லது அங்கே அவர்களைக் கைது செய்து தொடர்ந்து வைப்பதோ திட்டவட்டமாகக் கூடாது என்று அரசு உத்தரவு இருக்கிறது. ஆனால் அது இன்னும் பூரணமாக அமுலாகிறதென்று சொல்ல முடியாது. கைது செய்யப்பட வேண்டிய நபர்கள் கிடைக்காவிட்டால், போலீசார் என்ன செய்கிறார்கள் என்றால், புருஷன் கிடைக்கவில்லை என்றால் அவனுடைய மனைவியைக் கைது செய்து கொண்டுபோய், (something like hostage) பணயக் கைதி மாதிரி கொண்டு போய் வைத்துவிடுகிறார்கள். தாய், தகப்பனைக் கூட, மகனை அரெஸ்ட் பண்ண அப்படிச் செய்கிறார்கள். அப்படிச் செய்யக் கூடாது. அது ஒரு கொடுமை. அது ஒரு இன் ஹூமன் நடவடிக்கை. குற்றம் செய்தவன், இவர்கள் சொல்லிக் கொடுத்தா அவன் செய்தான்? எனவே அப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது. அந்த மாதிரி முறைகளைக் கைவிட வேண்டும். இப்படி நடக்கும் அதிகாரிகள் மீது நமது அரசு திட்டவட்டமான நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி இல்லை என்றால், இது மேலும் வளரும். இது பழைய போக்கு. ஒரு ''ப்யூடல் லார்ட்ஸ் மெதட்''. ஒரு நிலப் பிரபுத்துவ முடி மன்னர் ஆட்சிக் காலத்தில் எப்படி நடந்ததோ அப்படிப்பட்ட ஒரு முறையாக இது போய்க் கொண்டிருக்கிறது. இது ஜன நாயக முறைக்கு ஒத்ததாகத் தெரியவில்லை.

[திரு. கே. ரமணி]

அடுத்தது, காவல் துறையில் இருக்கும்படியான காவலர்கள் எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத்து செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பல கோரிக்கைகள் இருக்கின்றன. இந்த கஷ்டமான வேலைகளை எல்லாம் அவர்கள் செய்கிறார்கள். இரவு பகல் காவல் நிற்கிறார்கள். கொலை நடந்த இடத்தில் பிணத்தைக் காவல் காக்கிறார்கள். அது மாதிரி என்னென்ன காவல் வேலை இருக்கிறதோ, அங்கேயெல்லாம் வெய்யில், மழை எதையும் பாராமல் எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் அவர்கள் நிற்கிறார்கள். அவர்கள் மனதிலே, அவர்களுடைய பிரச்சினைகளைப் பேசுவதற்கு, பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு வழியில்லையே என்ற குமுறல் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். அவர்களுக்கு ஏற்கெனவே 50 சதவிகிதம் சலுகை விலையில் ரேஷன் கொடுப்பது என்ற முறையை வைத்திருக்கிறார்கள். எனக்குக் கிடைத்த ரிப்போர்ட்படி சொல்கிறேன். தப்பாக இருந்தால் கரெக்ட் பண்ண வேண்டும். இன்றைக்கு விலைவாசி ஏறிக் கொண்டிருக்கிறது. அதற்கு லிமிட் கிடையாது. ஒவ்வொரு இடத்திலும், தொழிலாளர் சங்கம் வைத்திருக்கிறவர்கள் போராடி அதிக டி.ஏ., அதிகச் சம்பளம் வாங்குகிறார்கள். இவர்கள் ஒன்றும் பண்ண முடியவில்லை. ஆரம்பத்திலே ஒரு தொகை, அன்றைக்கு வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்கு ஒரு மாதத்தில் ஏற்படும் செலவில் கிட்டத்தட்ட 50 சதவிகிதத்தை ஈடு கட்டிக் கொடுப்பது என்பதை அமுல்படுத்தினார்கள். அதே தொகையை மட்டும் கொடுத்தால் சரியாகாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் இரண்டு நிமிடங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். 23 நிமிட நேரம் ஆகி இருக்கிறது.

திரு. கே. ரமணி: துணைத் தலைவர் அவர்கள் 5 நிமிடம் அனுமதிக்க வேண்டும். உடனே முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சொல்வதைக் கொஞ்சம் வேகமாகச் சொல்லுங்கள்.

திரு. கே. ரமணி: ஆகவே அதே தொகையைக் கொடுத்தால், விலை ஏறுவதற்கு ஏற்றாற் போல் ஈடுகட்ட முடியாது. அவர்கள் சாமான்கள் வாங்குவதைக் குறைத்து வாங்கவேண்டி இருக்கும். இப்போதிருக்கும் விலைவாசிக்கு ஏற்றாற்போல் அவர்களுக்கு ஈடு கட்டிக்கொடுக்காமல், ஆரம்பத்தில் கொடுத்த தொகையையே தொடர்ந்து கொடுப்பது சரியல்ல. ஒவ்வொரு

[திரு. கே. ரமணி]

மாதமும் ரேஷன் பொருள்களின் விலையில் 50 சதவிகிதம் மானியம் தரவேண்டும். அந்தந்த மாதத்தில் என்ன விலை இருக்கிறதோ அதில் 50 சதவிகிதம் மானியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து காவலர்களுடைய பிள்ளைகளுக்கு வேலை தேடுவதென்பது அவர்களால் முடியாது. அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் வேலை கொடுத்தால் நல்லதென்பது அவர்களுடைய கருத்து. அவர்கள் அப்படிச் சொல்லுகிறார்கள். அப்படி எல்லோருக்கும் சதவிகிதம் ஒதுக்க முடியுமா என்பது அரசாங்கம் கவனிக்க வேண்டிய விஷயம்.

அடுத்து யூனிபார்ம். துணியை வாங்கிக் கொடுத்து, தையல் கூலியையும் கொடுத்தால் அவர்கள் தைத்துக் கொள்வார்கள். அவர்களுடைய உடம்புக்கு ஒத்து வராமல் தைத்து, அதற்குள்ளே புகுந்து கொள்ளுங்கள் என்று சொல்லுவதை விட, துணியையும் கொடுத்து, தையற் கூலியையும் கொடுத்தால் அவர்களே தைத்துக்கொள்வார்கள். வாஷிங் அலவன்ஸ், 15, 20 ரூபாய் என்று கொடுப்பதை உடனடியாக உயர்த்த வேண்டும். அது மாதிரி உணவுப்படி கொடுக்கிறார்கள். அவர்களுக்கு டியூட்டி பூரணமாக இருந்தால் காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கொடுக்கிறார்கள். அதிகாரிகளுக்கு 15 ரூபாய் கொடுக்கிறார்கள். மற்றவர்களுக்கு 6 ரூபாய் கொடுக்கிறார்கள். இதை எல்லாம் சிந்திக்கவே முடியாது. 6 ரூபாய் காப்பி சாப்பிடக் கூட போதாது. இதெல்லாம் உயர்த்தப்பட வேண்டும். இதற்கு முன்னால் இதே மன்றத்தில் இதை எல்லாம் பேசி, அப்பொழுது கொஞ்சம் உயர்த்தப்பட்டது.

அடுத்தது வீட்டுவசதி. இன்றைக்கு அனைவருக்கும் வீடு இல்லை. அவர்களிலே பலர்—ஏன் ஏராளமானவர்கள்—வெளியே வாடகை வீட்டில் குடியிருக்கிறார்கள். அவ்வாறு வெளியே இருப்பவர்களுக்கான வீட்டு வாடகைப்படி இன்றைக்கு இருப்பதைக் காட்டிலும் 50 சதவீதம் உயர்த்தித் தரப்பட வேண்டும்.

காவலர்கள் ஓய்வுபெற்றாலோ அல்லது இறந்தாலோ அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சகல பணமும் ஒரு வார காலத்திற்குள்ளாகவே கணக்குத் தீர்த்துக் கொடுக்கப்பட வேண்டும். ரிடையர் ஆகிற எந்த ஒரு உத்தியோகஸ்தரும் அன்றைக்கே தங்கள் பென்ஷன் உட்பட அனைத்தையும் கணக்குத் தீர்த்துக் கொள்ளலாம் என்று அரசாங்கமே உத்திரவிட்டும் கூட இன்றைக்கும் அது நடக்கவில்லை. நாம் குறைந்தபட்சம் இதையாவது செய்ய வேண்டும்.

[திரு. கே. ரமணி]

அடுத்து லீவ் வசதி. அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில் வாரத்தில் 5 நாட்கள் வேலை 2 நாட்கள் லீவு. 20 நாட்கள் அவர்களுக்கு கேஷவல் லீவ் முன்பு இருந்தது. அதை 12 நாளாகக் குறைத்துவிட்டார்கள். அதை அவர்களே ஒத்துக் கொள்ளவில்லை எதிர்க்கிறார்கள். நம்முடைய காவல்துறையைச் சார்ந்தவர்களுக்கோ 24 மணி நேரமும்—365 நாளும் டியூட்டியில் இருப்பதாக அர்த்தம். வாரத்தில் ஒருநாள் தான் லீவு என்கிறார்கள். அவர்களுக்கும் கேஷவல் லீவை 12 நாளாகக் குறைத்திருக்கிறார்கள். அதை 20 நாட்களாக உயர்த்த வேண்டுமென்பது அவர்கள் கோரிக்கை. அதையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது ஆர்டர்லி முறை. இந்த முறை கொடுமையானது என்பது நமக்கு எல்லோருக்கும் தெரியும். இதன்மீது பெரிய போராட்டமே நடந்தது. அது ஒழிக்கப்பட வேண்டும் என்று சொன்னோம். ஆனாலும் அந்த ஆர்டர்லி முறை ஒழிக்கப்படவில்லை. இன்னும் இருக்கிறது. அதிகாரிகள் வீட்டில் இன்றைக்கும் பல இடங்களில் ஆர்டர்லி முறை இருக்கிறது. இவ்வாறு இந்த முறை ஒழிக்கப்பட வேண்டுமென்ற முடிவுக்கு வந்த பின்னரும், இது ஒழிக்கப்படவில்லை என்றால் இந்த ஆர்டர்லிகளை யார் யார் வைத்து வேலை வாங்குகிறார்களோ அந்த அதிகாரிகளிடமிருந்து ஆர்டர்லிகளுக்கான சம்பளத்தை வாங்க வேண்டும். என்னைக் கேட்டால் இந்த ஆர்டர்லி முறை இருப்பதே கூடாது என்பதுதான் என் கருத்து. அப்படி இருந்தால் அவர்கள் சம்பளத்தினை அந்த அதிகாரிகளிடமிருந்து வாங்க வேண்டும். ஆர்டர்லி முறை இருக்கவே கூடாது. அதுமட்டுமல்ல, இவர்கள் பெரிய போலீஸ் காரியாலயங்களின் அமைச்சுப் பணியாளர்களாக இருந்து செயல்படுகின்ற இடங்களில் பயன்படுத்தப்படுகிறார்கள். அதாவது சிட்டி போலீஸ் ஆபீஸ், டி. பி. ஓ. போன்ற பல இடங்களில் மினிஸ்டிரியல் ஸ்டாப் செய்கிற பல வேலைகளில் இவர்களைப் பயன்படுத்துகிறார்கள். இதனால் இவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், ஊழல்தனமாக, பொதுமக்களோடு தொடர்பு கொண்டு லஞ்சம் வாங்குவதற்கான வேலையில் ஒரு பாலமாக இவர்கள் செயல்படுகிறார்கள் என்ற புகார்கள் எங்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே ஆர்டர்லி முறையையே எடுக்க வேண்டும். இந்த ஏற்பாடே வேண்டாம்.

அடுத்து காவலர்கள் மனம்விட்டு தங்களுடைய குறைகளைப் பேசுவதற்கு ஒரு ஏற்பாடு இருக்க வேண்டும். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் தாழ்மையாகக் கேட்டுக் கொள்வது " அவர்கள் தங்களுடைய குடும்பப் பிரச்சினைகளை—தங்களுக்குக் கிடைக்கின்ற வருமானம்—அதில் இருக்கின்ற கஷடங்கள் ஆகியவற்றை எடுத்துச் சொல்லி தங்களின் குறைகளைத் தீர்த்துக் கொள்ள ஒரு சேவகனைப் போல் இந்த காவலர்கள் ஒவ்வொரு அதிகாரியிடமாகப் போய் நின்று யாசகம்

1989 ஏப்ரல் 27]

[திரு. கே. ரமணி]

செய்து கொள்ள முடியாது. என்னைக் கேட்டால் போலீசாருக்கு சங்கம் வைக்கலாம் என்று கொடுத்த உரிமை நடைமுறையில் செய்ய முடியாமற் போய்விட்டது. அதற்குக் கடுமையான போராட்டம் 1979 அக்டோபர் 16 முதல் நவம்பர் 6 வரை நடந்தது என்பதையும் அப்போது என்னென்ன நடைபெற்றது என்பதையும் நாடே அறியும். இந்த அரசும் அறியும். நம்முடைய முதல்வர் அவர்களும் அறிவார்கள். அந்த நிலைமையின் காரணமாக, அந்த இயக்கத்தின் தலைவர்களாக இருந்த பல பேர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்காக டிஸ்மிஸ் ஆக வில்லை. அற்ப சொற்ப வேறு காரணங்களைக் கூறி அவர்கள் எல்லாம் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள்தான் சங்க லீடர்களாக இருந்தார்கள். சங்கத்தில் தலைவர்களாக இருந்தவர்களில் சுமார் 15 பேர்களை வேறு காரணங்களைச் சொல்லி டிஸ்மிஸ் ஆக்கியிருக்கிறார்கள். பிரிட்டோ, நைனார்தாஸ், போஸ், லோபஸ், ராமசாமி, வெங்கடேசன் போன்றவர்கள் அன்றைக்கு தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்திக் கேட்டார்கள் என்பதற்காக ஏதோ ஒரு வகையில் அவர்கள் எல்லாம் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப்பற்றிய வழக்கு இன்னும் உயர்நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடும் அடக்குமுறைகளை அன்றைக்கு அவர்கள் அனுபவித்திருக்கிறார்கள். எனவே நான் இன்றைக்குத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்வது—ஒரே ஒரு விஷயம்தான். அவர்களுடைய போலீஸ் அசோசியேஷன் ஏற்பட வேண்டும். என்ன சட்டதிட்டங்கள் வைத்தாலும்சரி—ஜனநாயக முறையில் அவர்களுடைய கோரிக்கைகளை எடுத்துச் சொல்ல—அதுதேவை அதுவும் மேலதிகாரியின் நிர்பந்தத்தின் அடிப்படையில்—அல்லது மேலதிகாரியை தலைவராக வைத்துத்தான் அசோசியேஷன் நடத்துவது என்பது சாத்தியமில்லை. ஆகவே சங்கம் வைக்கும் உரிமையை—அரசியல் சட்ட பூர்வமாக நமக்கிருக்கின்ற அந்த உரிமையை—அவர்களுக்குத் தரவேண்டும். காவலர்கள் என்ற முறையில் என்னென்ன விதிகளைச் செய்ய வேண்டுமோ அந்த முறையில் அமைத்து அவர்களுக்கு அரசாங்கம் உதவிட வேண்டும். அவர்களுக்கு அனுமதியைக் கொடுக்க வேண்டும். அவர்கள் பயப்படத் தேவையில்லை. அவர்களுடைய ஸ்தாபனத்தை வைத்து அவர்களுடைய கோரிக்கையைச் சொல்ல வாய்ப்பு அளிக்க வேண்டும் (மணி அடிக்கப்பெற்றது) என்று சொல்லி அவர்களுக்கு அந்த உரிமையைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 300 காவல்துறை அதிகாரிகள் 2-ஆவது கேட்டகரியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி வைத்திருக்கிறார்கள். பிரிட்டிஷ்காரன் காலத்தில் சார்ஜெண்ட் என்று வைத்திருந்த பதவிகள் 2-ஆவது கேட்டகிரி என்று வைத்திருக்கிறார்கள்.

[திரு. கே. ரமணி]

கேட்டால் அவர்கள் சட்டம் படிக்கவில்லை என்கிறார்கள். காரணம் அவர்களுக்குச் சட்டம் சொல்லிக் கொடுப்பதில்லை. அவர்களெல்லாம் ஜெனரல் கேட்டகிரிக்கு மாறி உத்தியோக உயர்வு பெறுவதில் மிகுந்த சங்கடத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள் இன்றைக்கு 300 பேர்தான் உள்ளனர். நாடு முழுவதும் சட்டம் படித்து 40 ஆயிரம் பேருக்கு மேல் உத்தியோகத்தில் இருக்கிறார்கள். அவர்களோடு இவர்களையும் இணைத்து, என்ன சட்டப் படிப்பு மிச்சம் இருக்கிறதோ அதை அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து அவர்களையும் இணைத்துவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

பதவி உயர்வு அளிப்பதில் முறைகேடுகள் நடக்கிறது. அது இப்போது ஹை கோர்ட்டில் வந்திருக்கிற தீர்ப்பு. சிறப்பு காவல் படையில் ஜெனரல் பிரிவு, ஸ்பெஷல் பிரிவு இருக்கின்றன. அதிலே விதிகளை மீறி 6 பேர்களுக்கு ஜெனரல் பிரிவு இன்ஸ்பெக்டர் பதவிகளைக் கொடுத்ததை, உயர்மட்ட அதிகாரிகள் கொடுத்த அந்த முடிவு சட்ட விரோதமானது என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்து, அந்த விண்ணப்பம் போட்டவர்கள் அவர்களுடைய கோரிக்கைகளை உடனே பரிசீலித்து அமலாக்க வேண்டும்; மற்றவர்களுக்கு பணி உயர்வு கொடுத்தது தவறு என்று ஹை கோர்ட் தீர்ப்புக் கூறியும் அந்த ஹை கோர்ட் தீர்ப்பு இதுவரைக்கும் அமலுக்குக் கொண்டுவரப்படவில்லை. கோர்ட் தீர்ப்புக்கு போலீஸ் தலைமை அதிகாரிகள் மதிப்பு கொடுப்பார்களா, இல்லையா என்பதை அரசு கவனித்து ஆக வேண்டும். இதிலே என்ன நியாயம், அநியாயம் அடங்கி இருக்கிறது, இல்லை என்றால் அவர்கள் அப்பீலுக்கு போக வேண்டும்; அரசாங்கம் அப்பீலுக்கு போகவில்லை என்று எமக்குத் தெரிகிறது; அதைப்பற்றி கவனிக்க வேண்டும்.

அதே மாதிரி கள்ளச்சாராய விற்பனை, ரவுடிகளின்தாக்குதல் நாட்டில் பல இடங்களில் இருக்கின்றது. இதற்கு முடிவு கட்ட வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே உண்மையாகவே வரவேற்கத்தக்க அளவுக்கு விஷயத்தை எடுத்துச் சொன்னார்கள். கள்ளச்சாராய வியாபாரத்தில் சில போலீசாருக்கும் தொடர்பு இருக்கிறது; அப்படிப்பட்ட தொடர்பு தான் கள்ளச் சாராய விற்பனையாளர்களுக்கு தைரியம் கொடுக்கிறது; அப்படிப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆனால் இன்றைக்கும் பல பகுதிகளில் அது நடக்கக்கூடிய நிலை தான் இருக்கிறது. அதற்கு முடிவு

[திரு. கே. ரமணி]

கட்ட வேண்டும். போலீசாருக்கும், கள்ளச்சாராய வியாபாரம் செய்யக் கூடியவர்களுக்கும்—நேரடியாக அல்ல—தொடர்புக்கு எல்லாம் மெக்கானிஸம் அவர்களே செய்வார்கள்; அப்படிப் பட்ட எந்தத் தொடர்புக்கும் இடம் அளிக்கக் கூடாது. அந்த நிலைமை மாற்றப்பட வேண்டுமென்று நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

பொது மக்களுக்கு எதிரான ரவுடிகளின் தாக்குதல் பரவிக் கிடக்கிறது. அதற்கு எதிராக விஜிலன்ட் ஆக இருக்க வேண்டும். போலீஸ் அந்தப் பிரதேசத்தில் இருக்கிற மக்களோடு இணக்க மாக இருக்க வேண்டும். ஜனங்களும் நிச்சயமாக போலீசாருக்கு செய்திகளைக் கொடுப்பார்கள்; உதவி செய்வார்கள். அந்த முறையில் ரவுடித் தாக்குதல்களைத் தவிர்க்க வேண்டும். அதை காவல் துறையைக் கொண்டு அடிக்க முடியாது என்று யாராவது சொல்ல முடியுமா? அடிக்க முடியும். அப்படிப்பட்ட நடவடிக்கை தகுந்த நேரத்திலே எடுக்காதது தான் ஒரே காரணம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பெட்டி கேஸ் என்று போடுவது சென்னை நகரத்திலே ஏராளம். நமக்கும் அந்தக் கருவியைப் பயன்படுத்தினால் புரிந்து கொள்ள முடியும். ஒரு ஸ்டேஷனில் இருக்கிற அதிகாரி இன்னொரு ஸ்டேஷனுக்கு கூப்பிட்டுக் கேட்கும்போது, எத்தனை கேஸ் போட்டாய் என்று கேட்டு, இன்றைக்கு இரண்டு மூன்று கேஸ் தான் போடப்பட்டது என்று பதில் கூறுகிறார்......... முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 32 மணித் துளிகள் ஆகின்றன. உறுப்பினர் நான் குறுக்கிடுவதற்காக வருந்த வேண்டாம். நீங்கள் ஐந்தாவது பேச்சாளர்; இன்னும் அந்தப் பட்டியலில் இருப்பவர்கள் 9 பேச்சாளர்கள் என்பதை நினைவூட்ட விரும்பு கிறேன்.

திரு. கே. ரமணி: அப்படி பெட்டி கேஸ் ஏன் இப்படி குறைத்து போட்டாய், அதிகம் போடு என்று இவர்கள் பேசு வதை நாம் காதிலே கேட்க முடிகிறது; ரிக்கார்டு கூட பண்ண முடியும். இப்படிப்பட்ட நிலைமைகள் கொஞ்சம் கூட நியா யம் அல்ல. இந்த நிலைமையை மாற்ற வேண்டும். இது ஜன நாயகத்தின் பால் பட்டதல்ல. தவறு செய்பவர்களைத் தண்டி யுங்கள். ரவுடிகளையும், சமூக விரோதிகளையும் நீங்கள் எப் படிப் பிடித்துத் தண்டிக்கிறீர்களோ அப்படித் தண்டியுங்கள். அது பற்றி அல்ல நாம் சொல்வது. காவல் நிலையங்களுக்கு ஜனங்கள் செல்வதற்கு மிகப் பெரிய பயம் இன்றைக்கும் இருக்கி றது. அங்கு மரியாதை என்பது எல்லாம் கிடையாது. போனால் உட்கார் என்று சொல்வதற்குக் கூட கஷ்டம் இருக்கிறது. அதற்குவேறு வார்த்தைகள் உபயோகப்படுத்தப்படும். அதை இந்த அவையில் சொல்வது நல்லதல்ல. அந்த நிலை மாற வேண்டும்.

[திரு. கே. ரமணி]

அதே மாதிரி சென்னை நகரத்திலே உள்ள 40-க்கு மேற்பட்ட பைனான்ஸ் கம்பெனிகளின் பட்டியலை எனக்கு அனுப்பி இருக்கிறார்கள். அந்த பைனான்ஸ கம்பெனிகள் மக்களிடம் கோடிக் கணக்கான டணத்தை ஏமாற்றியவைகள். அந்தக் கம்பெனிகளின் பெயரில் புகார் வந்தது. இந்த வழக்குகள் பற்றி சென்னை மத்திய குற்றப் பிரிவு போலீசாருக்கு புகார்கள் வந்தன. இக் கம்பெனி களில பணம் போட்டவர்கள் ஒரு காசு கூட அவர்கள் திரும்ப வாங்க முடியவில்லை. அதற்கு மாறாக அந்த கேஸ்கள் முழுவதும் போலீகள் உதவியோடு சிவில் கேஸாக மாற்றிக் கொண்டு போகப்பட்டது. அதனால் சிவில் கேஸ் எல்லாம் கிரிமினல் கேஸாக ஆக்குவதற்கு நான் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் ''-சீட்டிங்'' நடந்தால் அதற்குத் தகுந்த நடவடிக்கை நீங்கள் எடுத்தால் அந்த பைனான்ஸ் கம்பெனிகள் மக்களை ஏமாற்றுவதையும், கொள்ளையடிப்பதையும் தடுத்து நிறுத்துவதில் ஒரு முக்கியப் பங்கு போலீசார் வகிக்க முடியும். அதைச் செய்யவில்லை என்பது குற்றச்சாட்டு. இதை நம்முடைய அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

இறுதியாக கோவை மாநகரத்தில் போலீஸ் கமிஷனர் நியமிப்பதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு அறிக்கை கொடுத்தார்கள். நல்லது, வரவேற்கிறோம். ஆனால் இன்னும் அங்கு ஒரு கமிஷனர் நியமனம் செய்து வரவேண்டிய நிலை இருக்கிறது. அங்கு கமிஷனர் மட்டும் போதாது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தென்னரசு சொன்ன மாதிரி அங்கு இரண்டு உதவி கமிஷனர்களும் தேவைப்படுகிறது. அவர்களையும் நியமிக்க கோருகிறேன். இப்படிப்பட்ட முறையில் அந்த போலீஸ் செய்யப்பட வேண்டுமென்று கேட்டு, புதிய மாற்றத்தை இந்தப் போலீஸ் இலாக்கா புரிய வேண்டும். அதனுடைய தலைமை புரிய வேண்டும். மக்களுடைய போராட்டத்தின் மூலம், சகல எதிர்ப்பையும் முறியடித்து உருவாக்கப்பட்ட ஒரு அரசாங்கமீது. அந்த அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளுக்காக, மக்களுடைய பாதுகாப்புக்காக அவர்களுடைய நடவடிக்கைகள் புதிய சாரத்தோடு நடைபெற வேண்டும்.

with a new content, with a new understanding; with a new behaviour and with a new approach இந்த இலாகா நடக்க வேண்டும். அன்றைக்குத் தான் மக்களுடைய ஆதரவை அவர்கள் பெற முடியும். அதை அவர்கள் பெற வேண்டும். நமது தமிழக போலீசார்கள் நல்ல பாடுபடக் கூடியவர்கள் என்பதில் எந்த ஆட்சேபணையும் கிடையாது. இந்த முறையில் நடத்த வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

1989 ஏப்ரல் 27]

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு ஜனநாயக நாட்டில் மக்கள் நல அரசு அமைக்கின்ற முயற்சியில், வாணிபம், தொழில் உற்பத்தியிலும், கல்வியிலும், கலாச்சார வளர்ச்சியிலும் ஒரு சமுதாயம், ஒரு பகுதி மக்கள் வளர வேண்டும் என்கின்ற ஒரு சூழ்நிலை வருகின்றபொழுது அங்கு சட்டமும் ஒழுங்கும் நிலை நிறுத்தப்பட வேண்டும். மக்கள் பாதுகாப்பான மன ரீதியான சூழ்நிலையிலே வாழ வேண்டும். அந்தப் பணியை ஒரு ஜனநாயக அரசிலே ஏற்றுக்கொண்டிருக்கின்ற கடமை இந்தக் காவல் துறைக்கு இருக்கிறது.

ஜனநாயக நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சார்பாக அரசு அமைக்கப்படுகின்றது. எனவே, ஆளுகின்ற கட்சியின் ஆணையை ஏற்றுக் செயல்பட வேண்டிய நிர்ப்பந்தம் போலீசுக்கு இருக்கிறது. அந்த முடிவு எப்படி உருவாகிறது என்றால், ஆளுகின்ற கட்சியினரின் அடியாட்களாகவே போலீசார் மாறிவிடுகிற அபாயமும் நமது ஜனநாயக அமைப்பிலே தவிர்க்க முடியாத ஒரு அமைப்பாக இருக்கிறது. ஆளுகின்ற கட்சியின் நலம், ஆளுகின்றஅரசின் நலம், இந்த இரண்டின் நடுவில் இருக்கின்ற வேறுபாட்டைப் புரிந்து கொண்டு செயல்படுகின்ற இந்தத் துறை நிர்வாகத்திற்குப் பொறுப்பு ஏற்கின்ற பெரிய அதிகாரிகள்தான் காவல்துறையை ஆளுங்கட்சியின் ஆக்கிரமிப்பிலிருந்து அதைப் பாதுகாக்க முடியும். பதவியின் சுகத்தை எதிர்பார்க்காமல், பதவியில் மரியாதையை எதிர்ப்பார்க்கின்ற போலீஸ் அதிகாரிகள்தான் இந்த முக்கியமான துறையின் சொத்துக்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட, பதவியிலே நலம் தேடாமல் பதவியிலே மரியாதை தேடுகின்ற அதிகாரியை உருவாக்குகின்ற முயற்சியிலே இந்த அரசு ஈடுபட வேண்டும். இந்தக் காவல்துறை அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையோடு நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்கு, அவர்கள் சார்பாக இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கத்தை நான் பார்த்து, அதிலேயிருக்கின்ற சில புள்ளிவிவரங்கள் எவ்வளவு பெரிய கவலையைத் தருகின்ற புள்ளி விவரங்களாக இருக்கின்றன என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

1987–88-ஆம் ஆண்டுக்கான குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் இங்கே இந்தக் கொள்கைக் குறிப்பிலே தரப் பட்டிருக்கின்றன. அதிலே, 1987-ஆம் ஆண்டிலே மொத்தம் நடந்த குற்றங்கள் 29,840 என்று சொல்லியிருக்கின்றார்கள். அதிலே கண்டுபிடிக்கப்பட்டவை 20,098 என்று சொல்லி, அது 67.4 விழுக்காடு குற்றங்களை இந்தக் காவல்துறை 1987-ஆம் ஆண்டில் கண்டு பிடித்திருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 1988ஆம் ஆண்டிலே மொத்தம் நடந்த குற்றங்கள்

30,545 என்றும், அதிலே கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் 20,853 என்று சொல்லி, 68.3 விழுக்காடு என்று கொடுத்திருக்கிறார்கள்.

நான் முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தப்புள்ளி விவரங்கள் Misleading the house ஏனென்று சொன்னால், இந்த இந்தியத் தண்டனை சட்டத்திலே மிகப்பெரிய குற்றம் Murder for gain அதாவது, ஆதாயத்திற்காகச் செய்யப்படுகின்ற கொலை. அந்தத் தண்டனைச் சட்டத்திலே இருக்கின்ற மிகப்பெரிய குற்றம் தமிழ் நாட்டிலே 1987ஆம் ஆண்டு 81 குற்றங்கள் நடந்திருக்கின்றன. ஆனால், கண்டு பிடிக்கப்பட்டவை 44 தான். 50 விழுக்காடு தான்.

அதைப் போல 1988-ஆம் ஆண்டு 72 Murder for gain அதிலே கண்டுபிடிக்கப்பட்டவை 37 தான். அதைப் போலவே, மிகப் பெரிய கொள்ளை-ஆயுதம் தாங்கிய கொள்ளை 69 நடந்திருக்கின்றன. 1987-ஆம் ஆண்டிலே, ஆனால் கண்டுபிடிக்கப்பட்டவை 14 தான். 70-க்கு 14. 1 : 5. ஐந்து குற்றவாளிகள் தப்பித்திருக்கிறார்கள், ஒருவரை மட்டும் தான் தண்டித்திருக்கிறார்கள். அதைப்போல 1988-ஆம் ஆண்டிலே 52 கொள்ளைகள் நடந்திருக்கின்றன, ஆனால் 14 வழக்குகள்தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

Robbery வழிப்பறி, It is a dangerous crime அது 421 நடந்திருக்கின்றன. ஆனால் கண்டுபிடிக்கப்பட்டவை 231 தான். அதைப்போல 1988-ஆம் ஆண்டு 420 கொள்ளைகள் நடந்த வேளையிலே 240 தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

(பிற்பகல் 12,30.)

அதைப்போல, House Burglary 7,646 House Burglary அதாவது வீடு புகுந்து திருட்டு. அதிலே கண்டுபிடிக்கப்பட்டிருப்பவை சுமார் 4,000தான். 50 சதவிகிதம் கூட இல்லை.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், சிறு வழக்குகள், Petty Cases Petty theft Cattle theft இதையெல்லாம் சேர்த்து 67.4 என்று தந்து, 67.4 விழுக்காடு குற்றங்களைக் கண்டுபிடித்திருப்பதாக பொய்யான விவரங்களை இந்தச் சபைக்குத் தந்திருக்கிறார்கள். murder for gain, Dacoity, Robbery கால்நடைத் திருட்டு போன்ற மிகப் பெரிய குற்றங்கள் ஐந்தில் ஒன்று என்ற விகிதத்தில் தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எதற்காகச் சொல்கிறேன் என்றால், murder for gain-ல் சம்பந்தப்பட்டிருப்பவர்கள்Professional murderersஅதாவது கொலையையே தொழிலாகக் கொண்டவர்கள். அப்படி கொலையையே தொழிலாகக் கொண்டவர்கள் மிகச் சுலபமாகத்தப்பித்துக் கொண்டு இந்தத் தமிழ் நாட்டிலே உலவி வருகிற

1989 ஏப்ரல் 27] [திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்]

நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும் இந்த அரசு என்பதற்காக நான் இந்த புள்ளிவிவரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஒரு காலத்தில் 'ஸ்காட்லாண்ட் போலீசோடு' ஒப்பிடப்பட்ட தமிழ்நாடு போலீசார், உலகத்தில் இருக்கிற மிகப் பெரிய போலீஸ் துறையின் வல்லுநர்களுடைய அறிவையும், அவர்களுடைய கூர்மையையும் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிற தமிழ்நாடு போலீசார் இன்றைக்கு மிகப் பரிதாபமாக ஐந்தில் ஒரு விழுக்காடு குற்றங்களைக் கூட கண்டுபிடிக்க முடியாத நிலைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு என்ன காரணம் என்பதை அரசு ஆராயவேண்டும். ஏனென்றால் மக்கள் காவல்துறையின் பாதுகாப்பிலே இருக்கவேண்டியவர்கள். காவல்துறையின் பாதுகாப்பில் தங்கள் சொத்துக்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இன்றைக்கு இந்த நாட்டில் குற்றவாளிகள் குற்றங்களைச் செய்துவிட்டு, கொலைகளைச் செய்துவிட்டு, வழிப்பறிகளைச் செய்துவிட்டு, கொள்ளைகளைச் செய்துவிட்டு சாதாரணமாக தெருவில் நடமாட முடியும் என்ற நிலையை அரசினுடைய புள்ளிவிவரங்களே சபையில் சொல்லுகிற போது எவ்வளவு ஒரு பாதகமான சூழ்நிலை காவல் துறையினரால், அவர்களுடைய இயலாமையால் அல்லது அவர்கள் அப்படி இருக்கிற சூழ்நிலையில் உருவாகிறது என்பதை நான் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதற்கு என்ன காரணம் என்றால், அவர்கள் சொல்லுகிறார்கள். எங்களுக்கு அடிப்படை வசதிகள் இல்லையென்று சொல்கிறார்கள். 40, 50 கிலோ மீட்டர் அளவிற்கு ஒரு காவல் நிலையம் இருக்கிறது. ஆனால் அங்கே S.H.O. Sta ion House Officer என்பவருக்கு ஒரு ஊரிலே கொலை நடந்திருக்கிறது, கொள்ளை நடந்திருக்கிறது என்று சொன்னாலும் கூட அங்கே போவதற்கு வாகனம் இல்லை. ஏனென்றால் டி.எஸ்.பி-க்கு ஜீப் கொடுத்திருக்கிறார்கள். சில இடங்களில் இன்ஸ்பெக்டருக்கு ஜீப் கொடுத்திருக்கிறார்கள். ஒரு பெரிய கலவரம், மிகப் பெரிய கொள்ளை நடக்கிறது என்றால் அவர்களால் உடனே போகமுடியவில்லை. சில இடங்களில் தொலைபேசி தொடர்புகள் இல்லை. சில இடங்களில் V. H. F தொடர்புகள் இல்லை. இதைப் போன்ற குறைகளையெல்லாம் ஆராய்ந்து மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கிற இடங்களில், குற்றங்கள் மலிவாக தினசரி நடக்கிற இடங்களில், rime prone-areas என்று சொல்லக்கூடிய இடங்களில் இதைப் போன்ற வசதிகளை அதிகமாக பெருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் காவல் துறையில் இருக்கிற மிகப் பெரிய அதிகாரிகளிலிருந்து மிகச் சிறிய உத்தியோகத்தில் இருக்கிற .போலீசார் வரையில் இருக்கிற நிலைமைகளையெல்லாம் சொன்னார்கள். கள்ளச்சாராயம் பற்றி சொன்னார்கள். அதைப் பற்றி சொல்லாவிட்டால் போலீஸ் மானியத்தில் பேசியதாக நிறைவு இருக்

காது. சில காவல் நிலையங்களில் பகிரங்கமாக ஏலம் விடு கிறார்கள். 'பேரேடு' வைத்திருக்கிறார்கள், மிகப் பெரிய கணக்குப் புத்தகங்கள். ஒரு காவல் நிலையத்தினுடைய ஆளுகைக்கு உட்பட்ட இடங்களை பகுதி பகுதியாகப் பிரித்து அந்த ஏரியா இந்த ஏரியா என்று பிரித்து காவல் நிலையத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஏலம் விடுகிற நிலையெல்லாம் இருந்து வருகிறது. அந்த ஏலத்தில் வருகிற தொகையை கேட்டால் நமக்கெல்லாம் ஆச்சரியமாக இருக்கும். லட்சக்கணக்கில் போகிறது. அவர்களை கேட்டால் சொல்கிறார்கள், இது எங்களுக்கு மட்டுமல்ல, இங்கே இருந்து மேலே வரை போகிறது என்று சொல்கிறார்கள். நான் யாரையும் குறிப்பாக குற்றம் சாட்ட விரும்பவில்லை. ஒரு P rallel economy ஆக இந்த அரசு நடத்துகிற பொருளாதாரத்திற்கு துணையாக; இணையாக, கள்ளச்சாராயம் ஒரு பெரிய குற்றமாக, பொருளாதாரமாக நடந்து கொண்டிருக்கிறது. அதை நிரந்தரமாகத் தொழிலாக எடுத்துக் கொண்டவர்கள், அதைப் பாதுகாக்க வேண்டுமென்று இருப்பவர்களும், தடுக்க வேண்டுமென்று நியமித்த காவல் துறையும் பாலோடு தண்ணீர் சேர்ப்பதைப் போல இரண்டற கலந்து இருக்கிறார்கள். இன்னும் இதிலே வேதனையோடு சொல்லக்கூடிய சம்பவம் என்னவென்றால் சில கள்ளச் சாராயம் காய்ச்சுகிற நபர்கள் மனந்திருந்தி, இனி மேல் சாராயம் காய்ச்ச வேண்டாம் என்று நினைத்து அந்தத் தொழிலை விட்டால் கூட, அந்த காவல் நிலையங்களைச் சார்ந்தவர்கள் அவர்களைக் கூப்பிட்டு கட்டாயப்படுத்தி சாராயம் காய்ச்சித்தான் ஆக வேண்டும். மாமூலைத் தந்தாகத்தான் வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிற சம்பவங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. இதிலே யாரையும் ஒருவரை குறிப்பிட்டு ஒருவரை மாசுப்படுத்திச் சொல்ல விரும்பவில்லை. ஒட்டு மொத்தமாக இந்த காவல் துறையில் Prohibition Fnforcement Wing 80 விழுக்காடு அப்படி இருக்கிறது என்பதை நிதர்சனமாக ஒப்புக் கொள்ள வேண்டும். அதை மாற்றுவதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சுரண்டை மிகப் பெரிய நகரமாக இருந்தாலும் கூட, அங்கே ஒரு காவல் நிலையம் அமைக்க வேண்டுமென்று சிபாரிசு இங்கே அரசுக்கு வந்திருந்தாலும்கூட பணம் இல்லாத காரணத்தால் அது அப்படியே இருப்பதாக அறிகிறேன். அதைப்போல தென்காசி, குற்றாலத்திற்கு அருகிலே இருக்கிற பகுதியிலே ஒரு தீயணைப்பு நிலையத்திகாக நாங்கள் இடம் ஒதுக்கிக் கொடுத்து மூன்று ஆண்டுகளாகி விட்டாலும் கூட, இன்னும் அங்கே கட்டடம் கட்டவில்லை யென்று சொல்கிறார்கள். அதற்கு என்ன காரணம்? அதற்கு ஏன் பணம் ஒதுக்கவில்லை? இது போன்ற முக்கியமான தேவைகளுக்கு, பணிகளுக்கு பணம் ஒதுக்கீடு செய்வதற்கு அரசாங்கம் ஏன் தயக்கம் காட்டுகிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன் இது 'எக்சைஸ்' மானியத்தில் நடக்கும் விவாதம். நம்

முடைய முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட் விளக்கத்திலே பேசுகிறபோது சொன்னார்கள். அரசாங்கம் தீர்வைகளை மாற்றிப் போட்டு புதிய வரிகளை விதித்த காரணத்தால் குறைந்தபட்சம் ஆண்டுஒன்றுக்கு 100 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று சொன்னார்கள்.

ஆனால், எங்களுக்கு வந்திருக்கின்ற தகவல்கள், கடந்த 60 நாட்களாக இந்த எக்சைஸ் துறையில் டாஸ்மாக்கிற்கு வர வேண்டிய வருமானம் மாதம் ஒன்றுக்கு 24கோடி ரூபாய் குறைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். இது எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்குத் தெரியவில்லை. சில ரீடெயில் ஷாப்புகளிலே, அதற்கான லிக்கர், ஐ. எம். எப். எல்., என்று சொல்லக் கூடிய Indian made foreign Liquor available, ஆக இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் இப்போது திடீரென்று மார்க்கெட்டிலே இந்த ஐ. எம். எப். எல். has flooded. இந்த இரண்டுக்கும் நடுவிலே என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை எப்படி உருவானது என்று தெரியவில்லை. கவர்னர் ஆட்சியிலே 39 கோடி ரூபாய் அதிகமாக வருமானம் எடுத்துக் கொடுத்தோம். எந்த விதமான வரி விதிப்பையும் மாற்றாமல், இருக்கின்ற நடைமுறைச் சிக்கல்களை சரி செய்து, 39 கோடி ரூபாய் வருமானத்தை ஒரு ஆண்டிலே எடுத்துக் கொடுத்தோம். ஆனால் இப்போது நமது முதலமைச்சர் அவர்கள் சொன்ன கணக்கைப் போல், 100 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று சொன்னால், இந்த 60 நாட்களிலே 20 கோடி ரூபாய் வருமானத்தை அரசாங்கம் பார்த்திருக்க வேண்டும். அந்த 20 கோடி ரூபாய் வருமானம் இருக்கிறதா என்ற விவரத்தை நமது முதலமைச்சர் அவர்கள் நமக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படி 20 கோடி ரூபாய் வருமானம் இல்லை என்று சொன்னால், அரசாங்கத்தினுடைய கணக்கிலே எங்கேயோ தவறு நடந்திருக்கிறது என்று ஆகும் இது வந்து, பட்ஜெட்டினுடைய செட்-அப்பையே அசைத்துவிடும் அப்படிப்பட்ட ஒரு தவறான கணக்கிலே, தவறான வருமானம். வரும் என்ற அடிப்படையிலே இந்த அரசு தன்னுடைய திட்டங்களை விஸ்தரிக்கும் என்று சொன்னால், அந்த வருமானம் உண்மையிலே வரவில்லை என்று சொன்னால், ஏற்றுக் கொள்ளப்பட்ட பெரிய திட்டங்களைச் செயல்படுத்த முடியாத நிலைமை வரும். இப்போது சொல்லுகின்ற தகவல்கள் உண்மையாக இருக்கும் என்று சொன்னால், இந்த அரசாங்கத்திற்கு கடந்த வருடம் வந்த வருமானத்தைவிட குறைவான வருமானம் இந்த ஆண்டு வரும் என்று தான் சொல்கிறார்கள்.

வரியைக் குறைக்கின்றபோது கூட சொன்னார்கள். தமிழ் நாட்டிலே மாதம் ஒன்றுக்கு 40 லட்சம் கேஸ்கள் விற்க வேண்டும் என்று சொன்னார்கள். கடந்த அரசின்போது. ஆவரேஜைப் பார்க்கின்றபோது, 40 லட்சம் கேஸ்கள் விற்றிருக்கின்றன. ஆனால் ஆந்திராவிலே $12\frac{1}{2}$ லட்சம் தான் விற்றிருக்கின்றன. கர்நாடகாவிலே 3 லட்சம் கேஸ்கள்தான் விற்றிருக்கின்றன தமிழ்

நாட்டிலே கடந்த இரண்டு மாதங்களாக எத்தனை லட்சம் கேஸ்கள் விற்றிருக்கின்றன. அதிலே எவ்வளவு வரி இழப்பும் ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் காவல் துறையைப் பொறுத்த வரையில், ஆயுதம் தாங்கிய போலீசாருக்கு, —ஆர்ம்டு ரிசர்வ் போலீஸ்—சென்னையிலே இருப்பவர்களுக்கு குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். இந்த குடியிருப்பு வசதி செய்து கொடுக்கப்பட்ட அந்த ஆயுதம் தாங்கிய போலிசார். சட்டம்-ஒழுங்கு காவல் நிலையங்களுக்கு மாறுகிறபோது, அவர்கள் தங்கியிருந்த வீடுகளை எடுத்துக்கொள்கிறார்கள். போலிசார், இங்கே வேலை பார்த்தாலும், அங்கே வேலை பார்த்தாலும் போலிசார் வேலையைத்தான் பார்க்கிறார்கள். ஆயுதம், தாங்கிய போலீஸ் பணியிலே அவர்கள் வேலை செய்கின்ற காரணத்தால், அவர்களுக்கு வீடுகளைக் கொடுக்கின்றபோது அவர்கள் அங்கேயிருந்து மாற்றப்படுகிறபோதோ, அல்லது தாங்களாகவே கேட்டு சட்டம்—ஒழுங்குப் பகுதிக்குப் போகிறபோதோ அவர்கள் இருக்கின்ற குடியிருப்புகளை காலி செய்யக்கூடிய அபாயத்தை சில நண்பர்கள் என்னைப் பார்த்துச் சொன்னார்கள். எனவே அந்தப் போலிசாரை பரிதாபத்தோடு —ஏன் என்றால், இங்கே கூட பார்க்கிறோம், காலையிலே 7 மணிக்கு வந்தவர்கள் கால்கடுக்க நிற்கிறார்கள், 24 மணி நேரமும் உத்தியோகம் பார்க்கிறார்கள்,—பார்த்து, இந்தியாவிலேயே மிகச் சிறந்த காவல்துறை என்ற பெயருக்குச் சொந்தமான தமிழகம், அந்தப் புகழை நிலையாக நிறுத்திக் கொள்வதற்கு, நமது முதலமைச்சர் அவர்கள் இவைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. பெ. ஆசையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை நீர்த்தேக்கத்தில் வாயிற் கதவுகளுக்கு முன்னாலே வாழ்ந்து கொண்டு இருந்தாலும், குடிக்கத் தண்ணீர் கூட இல்லாமல், மிகக் கடுமையான நிலைக்கு ஆளாக்கப்பட்டும், கண்ணீரை சிந்திக் கொண்டும், அந்தக் கண்ணீரைத் தமிழகத்தினுடைய காவலர் கலைஞர் அவர்கள்தான் தீர்த்திடும் ஆற்றல் பெற்றவராக இருக்க முடியும் என்று கருதிய காரணத்தால் உள்ளன்போடு உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களித்து, உரிய பரிகாரத்தைப் பெற்றுவா என, என்னை இங்கே வரவழைத்திருக்கிற, வாய்ப்பு அளித்திருக்கிற, ஆண்டிப்பட்டி தொகுதியைச் சேர்ந்த வாக்காளப் பெருமக்களுக்கும், இந்த வாய்ப்பினை தந்திருக்கிற மரியாதைக்குரிய தமிழினத்தினுடைய காவலராம் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பொதுச் செயலாளர் இனமானத் தலைவர் அவர்களுக்கும், எங்களுடைய அன்பிற்குரிய மதுரை மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும். சில நேரங்களில் தட்டாமலேயே, கேட்காமலேயே இந்த அரசு கொடுக்கும் எனச் சொல்லி, கடந்த காலத்திலே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே பல சேவைகளை நாட்டுமக்களுக்காக தந்திட்ட நேரத்தில், காவலர்களுடைய கருத்துதனை ஏற்று, உடை, பாதுகாப்பு, அவர்களின் உயிர்ப் பாதுகாப்பு, உரிமைப் பாதுகாப்பு, அதைப்போல், காவலர்களுடைய குடும்பநலப் பாதுகாப்பு என்பதை எல்லாம், தமிழகத்தினுடைய காவலராகத் திகழ்ந்த கலைஞர் அவர்கள் அன்றைக்கு காவலர்கள் கேட்காமலேயே அளித்து, காவல்துறையினுடைய மாண்பை, காவலர்களுடைய மாண்பை தூக்கி நிறுத்தியிருக்கிற தமிழகத்தினுடைய காவலர் கலைஞர் அவர்களுக்கு, இந்தக் காவல் துறை மானியத்திலே என்னுடைய கருத்துதனை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-40.)

காவலர்களைப் பொறுத்தவரையில், இரண்டு சங்கதிகளை மிகவும் கொடுமையாக வாட்டிக் கொண்டிருப்பதை நான் எடுத்து வைக்கவிரும்புகிறேன். காவலர்கள் போதிய அளவிற்கு சட்டப் பயிற்சி அளிக்கப்பட்டவர்களாக இல்லாத நிலையிலே இருக்கிறார்கள் என்பதை வெளி ஓட்டமாகவே காணமுடியும். நாட்டு மக்கள், குற்றம் இழைக்கப்பட்டிருகின்ற நேரத்தில், உரிய பரிகாரத்தைசட்ட நுணுக்கத்தோடு உள்ளகாவல் நிலையத்திலே சென்று பாதிப்பிற்கு பரிகாரத்தைப் பெற்றிடமுடியும் என்கின்ற அடிப்படையில் காவல் நிலையத்திற்கு வருகிறார்கள். காவலர்கள் பிடிக்கக் கூடிய குற்றம் எது, பிடிக்கக் கூடாத, அனுமதியோடு பிடிக்கக் கூடிய குற்றம் எது? இவைகளில் என்னென்ன வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்? தஸ்தாவேஜுகள் எப்படி சேகரிக்கப்பட்டு, அந்த சான்று ஆவணங்கள், அவர்களாலே நீதிமன்றத்திலே எப்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும்? அரசுத் துறை வழக்கறிஞர்கள் வாதாடுகின்ற நேரத்திலே உரிய வகையிலே அவர்களுக்கு ஒத்துழைப்பு தரக் கூடிய ரீதியில் எப்படி செயல்படவேண்டும் என்பதெல்லாம் தெரிந்திராத காரணத்தால் ஆரம்ப கட்டத்திலேயே பல வழக்குகள் நீதிமன்றத்களில் வழக்கறிஞர்களால் வாதாடாமலும், குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மறுப்பு தெரிவித்திருக்கிற நிலையிலும் கூட, விடுதலையாகிப் போய், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய பரிகாரம் கிடைக்காமல் போய் இருக்கிற நில்லமையை அனைவரும் அறிவோம். எனவே அதற்கு உரிய மாற்றத்தைப் பெறுகிற ரீதியில் காவல்துறையைச் சார்ந்திருக்கிற, கீழ்மட்டத்திலே இருக்கிற அதிகாரிகளுக்கு, காவலர்களுக்கு, நீண்ட சட்டப் பயிற்சி அளிக்கவோ, அல்லது வட்டார அளவிலே சட்டம் தெரிந்த ஒரு வழக்கறிஞரை நியமனம் செய்து, ஆரம்ப நிலையிலே, அவர்களுக்கு ஒத்துழைப்பு தரவோ, அதற்கான வாய்ப்பினை மேற்கொள்ளவோ வேண்டுமாய் என்னுடைய கருத்துதனை முதல்வருடைய கவனத்திற்கு எடுத்து வைக்கிறேன்.

அதேபோன்று வழக்கு பதிகிற நேரத்திலே, காவலர்கள் ஒரு நியாயமான வழக்கை பதிவு செய்து, குற்றவாளியை தண்டிக்கும் வாய்ப்பு இருந்தாலும் கூட, பொதுமக்களுக்கு பாதுகாப்பு ஏற்படுகின்ற நேரத்தில், இந்த வழக்கைப் பதிவதனால் தனக்கு பாதுகாப்பு இருக்குமா என்று அச்சப்பட்டுக்கொண்டே இருக்கிற நிலைக்கு இன்றைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். தன்னுடைய பணிக் காலத்திலே வழக்கைப் பதிவு செய்ததற்குப் பின்னாலே, அந்த வழக்கிலே பொதுவாகவே குற்றம் சாட்டப்பட்டவர்கள், தானும் ஏன்ஒரு புகாரைக் கொடுக்கக் கூடாது என்று எண்ணிக் கொண்டு, அவர்களும் ஒரு புகாரை காவல் நிலையத்தில் கொடுக்கிறார்கள். புகார் பதிவு செய்வதற்கு முன்னால் வரை, காவல்நிலையத்தைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்த முயற்சித்தும், முடியாத நிலையிலே அந்தக் காவலர்களையும், புகார் கொடுத்தவர்களையும் இணைத்து நீதிமன்றத்தில் ஒரு புகாரை தாக்கல் செய்கிறார்கள். அப்படி தாக்கல் செய்கிற நேரத்திலே, அவர் தன்னுடைய பணிக் காலத்தில் தனக்கு இழைக்கப்பட்டிருக்கிற, தன் பக்கத்திலே இருக்கின்ற நியாயத்தை எடுத்துச் சொல்லி, அதிலே தனக்கு உரிய தீர்ப்பைப் பெறுவதற்கு முன்னாலே ஆரம்ப நிலையிலேயே அவரை தற்காலிகப் பணி நீக்கம் செய்துவிடுகிறார்கள். இன்னும் கூட பலர் நிரந்தரமாக நீதிமன்றத்திலே தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டதற்குப் பின்னாலும்கூட, அவர்கள் பணியிலே இருந்துகொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. இந்தப் பாகுபாடு நீக்கப்பட்டு, 7 ஆண்டுக் காலம் தண்டிக்கக்கூடிய குற்றத்திற்கு ஆளாகியோ, அல்லது மாரல் அபென்சஸ் என்று சொல்லப்படுகின்ற அந்தக் குற்றச்சாட்டிற்கு ஆளாக்கப்பட்டு இல்லாமல் இருந்தாலோ, அவர்களுக்கு மாத்திரமே சில கருத்துக்களை ஆய்வு செய்து, 7 ஆண்டுகள் தண்டனைக்கு உட்படாத குற்றங்கள். அதுபோன்று 'மாரல் அபென்சஸ்' என்ற குற்றச்சாட்டிற்கு உட்படாத குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர்கள் ஆகியோரை ஆரம்ப நிலையிலேயே நீதிமன்றத்திலே முறையான, முடிவான தீர்ப்பை பெறுவதற்கு முன்னாலே தற்காலிக பதவி நீக்கம் செய்யாமலே தொடர்ந்து அவர்கள் எந்த விதமான மன மாச்சரியமும் இல்லாமல் வழக்குகளை தாக்கல் செய்ய வழி வகுக்க ஆவன செய்ய வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன். போக்குவரத்துத் துறையிலே பணியாற்றுகிறவர்கள் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகிற நேரத்தில், அந்த வழக்கில் தன் தரப்பிலே இருக்கிற நியாயத்தை எடுத்து வைப்பதற்காக அரசு 250 ரூபாய் வழங்குகிறது. நீதிமன்றச் செலவு, வழக்கறிஞர் பீஸ் என்று. அதேபோல அரசு பாணியாற்றுகிற நேரத்தில் காவலர்கள் மீது சாட்டப்படுகிற குற்றச்சாட்டில் தன் பக்கத்திலே இருக்கிற நியாயத்தை நிலை நாட்டுவதற்காக வழக்கறிஞர்களுக்கு கொடுக்கிற பீஸ் ஆகியவற்றை ஈடுகட்டி அந்தத் தொகை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்பதையும் மாண்பு மிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களின் கவனத்திற்காக நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

1989 ஏப்ரல் 27] [திரு. பெ. ஆசையன்]

அதேபோல காவல்துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்றவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற இல்லங்களிலே 20 யூனிட்டுகள் மின்சாரம் பயன்படுத்தலாம் என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. பலர் அந்த அளவை எட்டி அனுபவிக்கிறார்கள். பலபேர்கள் அந்த அளவிற்கு அப்பாற் பட்டும் அனுபவிக்கிறார்கள். அதிலே பாகுபாடு ஒட்டு மொத்தமாக இவ்வளவு யூனிட் என்ற அளவு கோலை வைத்து மீட்டரைப் பொறுத்தி இல்லம் தோறும் வைக்காமல், ஒட்டு மொத்தமாக கணக்கிட்டு செய்வதனால் அதிகமாக அனுபவித்தவர்கள், அங்கீகரிக்கப்பட்ட இலக்குக்குள்ளாக அனுபவித்தவர்கள் அனைவருமே ஆண்டு இறுதியில் 4 ஆயிரம் ரூபாய், 3 ஆயிரம் ரூபாய் என்று மின் கட்டணத்தை கட்ட வேண்டிய நிலைக்கு ஆளாகிறார்கள். அதை சீர் செய்கிற ரீதியில் அனைத்து இல்லங்களுக்கும் தனி மீட்டர் என்ற மின் அளவை அலகை பொருத்தக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல தீ அணைப்புப் படை பிரிவுகள். இன்றைக்கு பல இடங்களிலே தீயணைப்பு நிலையங்கள் இருந்தாலும் அவற்றிற்கு நிரந்தரமான கட்டிடங்கள் இல்லை. ஆண்டிப்பட்டி தொகுதியிலே தீ அணைப்பு நிலையங்கள் நிரந்தரமான கட்டிடத்திலோ அல்லது காவல் நிலையம் நிரந்தரமான கட்டிடத்திலோ அமைக்கப்பட்டிருக்கவில்லை. ஒரு ஆம்புலன்ஸ் வசதி என்று உடனடியாக ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டிய அவசியமான நிலைமை இருக்கிறது. 400 கிராமங்களுக்கும் சேர்த்து ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று அமைக்கப்பட்டு, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஆண்டிப்பட்டிக்கே வரவேண்டிய நிலை இருக்கிற காரணத்தினால், பாதிக்கப்பட்டவர்களை மலைப் பகுதியிலே இருந்து எடுத்து வர மிகவும் கஷ்டமாக இருக்கிறது, அந்த ஆம்புலன்ஸ் வசதி செய்து அதுவும் தீயணைப்பு துறைக்கே கொடுக்கப்படுமானால் உரிய சிகிச்சையை உடனடியாக பெறுவதற்கும் வாய்ப்பு இருக்கும் என்பதையும் அதேபோல தீயணைப்பு துறையைச் சேர்ந்தவர்களிடத்திலே சினிமா தியேட்டரில் புகை பிடித்தல், துப்புறவு கேடுகள் போன்ற வழக்குகளை எல்லாம், இந்தக் குற்றச்சாட்டுகளையெல்லாம் தண்டனைக்கு கொண்டு வருகிற அந்த பொறுப்பை அவர்களிடத்திலே ஒப்படைத்து பார்க்க முயற்சிக்கலாம் என்பதையும் என்னுடைய கருத்தாக தெரிவித்துத் தொடர்ந்து காவலர்களுடைய மாண்பையும் மரியாதையையும், காவல் துறையினுடைய சிறப்பையும் நடுநிலையோடு நிலை நாட்டி, நடுநிலை முதல்வராக திகழ்ந்துக் கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் அவர்களே உரிய பரிகாரத்தை தருவதற்கான முயற்சியையும் எடுத்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. வி.கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின் மீது பேசுகிற வாய்ப்புக்கு நன்றி கூறி, தமிழகத்தைப் பொறுத்த மட்டில் 10, 11 ஆண்டுக்காலம் தமிழகத்தினுடைய ஒட்டு மொத்த காவலராக இருந்து முதலமைச்சராகப் பணியாற்றிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காவல்காரன் படத்திலே நடித்துக் காட்டியவர். காவல்காரர்களிடத்திலே ஓர் அரசு எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்பதையும் காவலர்கள் என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டும் என்பதையும் சினிமாவிலேயே நிலை நிறுத்தி இருக்கிறார்கள். மக்களுக்கு புரிகின்ற வகையில் நடித்தே காட்டியிருக்கிறார்கள்.

காவல் துறையினருக்கும் நியாயமான விலையில் மலிவான விலையில் ரேஷன் கடைகளிலே கொடுப்பதைப் போல காவல் நிலையங்களிலேயே இருப்பவர்களுக்கு உணவுப் பொருள், அரிசி எண்ணெய் வகைகள், பருப்பு வகைகள் போன்றவற்றை அன்றைய தினம் வழங்கிய பெருமை இந்திய துணைகண்டத்திலேயே தமிழகத்தினுடைய முதல்வராக இருந்த டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குத்தான் சேரும் என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆக 11 ஆண்டுக்கால ஆட்சியில் காவல் துறையிலேயே தலையீடு இல்லாத ஒரு ஆட்சி நடைபெற்றது என்றால், சுதந்திரத்திற்கு பின்பு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியிலேதான் என்பதை நான் இங்கே திட்டவட்டமாக கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நிச்சயமாக காவல் துறையிலே பணியாற்றுகிற உயர் மட்ட அதிகாரிகளுக்கு, அது நன்கு புரியும் என்பதையும் நான் இங்கே தெளிவாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் (குறுக்கீடு).

(பிற்பகல் 12-50)

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது, கடந்த ஆட்சிக் காலத்திலே தலையீடே இல்லையென்று சொன்னார்கள். எங்களுடைய தொகுதியில் முன்னாள் அமைச்சர் ஒருவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் காலத்திலும் தலையீடு இல்லையென்று சொல்லலாமே.

1989 ஏப்ரல் 27]

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது, பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள் விழா நாளிலும், மாண்புமிகு முதல்வராக இருக்கும் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளாக வரும் பொன் விழா, வெள்ளி விழா நாட்களிலும் ஐந்து கிலோ அரிசியை இலவசமாக வழங்குவதாக அறிவித்திருக்கிறீர்கள். ஆகவே, நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், மாண்புமிகு மறைந்த முதல்வர் அவர்களுக்குச் சமாதி கட்டு வதிலே ஆர்வம் காட்டுகின்ற, தீவிரம் காட்டுகின்ற, இந்த அரசு காவல்துறைக்கு அரிசி வழங்கிய அந்தத் தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பிறந்த நாள் விழாவிலும் 5 கிலோ அரிசியை இலவசமாக வழங்குவதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, இங்கே காவல் துறை எஸ்.ஐ. செலக்ஷன் நடந்ததிலே. (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் பிறந்த நாள் விழாவிலே இலவச அரிசி வழங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டார். அவர் பிறந்த நாள் எது என்ன என்று சொன்னால், அது பரிசீலிக்கப் படும்.

திரு வி. கே. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அது, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நிச்சய மாகத் தெரியும். அதைத் தெரிந்தவர் சொல்வார் என்று நான் நம்புகிறேன். நாற்பதாண்டுக் காலமாக ஒன்றாக இருந்தவர். அவர் தெரிந்திருப்பார் என்று கருதுகிறேன்.

இன்னும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் எஸ். ஐ. செலக்ஷனிலே தவறு நடந்ததாகக் குறிப்பிட்டார்கள். நான் ஆணித்தரமாகக் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன் நிச்சயமாக அப்படிப்பட்ட தவறுகள் நடந்திருக்காது என்பதை நான் உறுதியாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்பு மிகு முதல்வர் அவர்கள், அப்படி நடந்திருக்குமேயானால், நிச்சய மாக அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ''நடந்திருக்காது'' என்று சொன்னால் அது அனுமானம்; ''நடக்கவே இல்லை'' என்று சொன்னால் அது முடிவு.

திரு. வி. கே. சின்னசாமி ; பேரவைத் தலைவர் அவர்களே, நடந்திருக்கவே முடியாது என்றுதான் நான் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நடக்கவேயில்லை என் கிறீர்களா?

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, குறுக்கிட்டால்....(சிரிப்பு) ஆக, நிச்சயமாக இருக்காது என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்த மட்டில், கிராமப் பகுதிகளில் இருக்கின்ற காவல் நிலையங்களைப் பொறுத்த மட்டில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது என்னவெனில், நிச்சயமாக ஒரு ஆய்வாளருக்கு ஒரு ஜீப் அவசியம் தேவைப்படுகிறது. அவர் கள் கிராமத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், குற்றம் நடந்த இடத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், அவர்களிடத்தில் ஜீப் வசதி இருக்குமானால் அதை எடுத்துக் கொண்டு ஸ்டேஷனில் இருக்கின்ற எஸ். ஐ. மற்றும் காவலர்களோடு அந்தக் குறிப்பிட்ட இடத்திற்குச் செல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். இல்லாவிடில் வாடகை வண்டியை எடுத்துக் கொண்டு செல்லக் கூடிய நிலைமை இருக்கிறது. அப்படி வாடகை வண்டியை எடுத்துச் செல்லும் போது, அதற்கு வாடகையை கொடுப்பது யார் என்ற பிரச்சினை ஏற்பட்டு, அது சம்பந்தமாக பல புகார்கள் வருகின்ற வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, நிச்சயமாக ஜீப் வசதியை அவர்களுக் குச் செய்து தர வேண்டுமென்பதை இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஒயர்லெஸ் பொருத்துகின்ற வகையில் வருவாய்த் துறை அதிகாரிகளும், மற்ற போக்குவரத்து அதிகாரிகளும் காவல் நிலையத்தில் வைத்திருக்கின்ற 'ஒயர்லெஸைப் பயன்படுத்து வதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென்பதையும் நான் இந்த நேரத்திலே பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் அருகில் சங்கரிக்குப் பக்கத்தில் நடந்த ஒரு விபத்தில் வழியில் சென்ற பிரைவேட் வண்டியில் கூட உயிர் விட்ட பிணத்தை, விபத்தில் அடிபட்டவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத் துச் செல்ல வேண்டுமென்றால், வண்டியை நிறுத்தாமல் கூடச் சென்று விடுகிறார்கள். விபத்துக்குள்ளானவர்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்க முடியவில்லை. எனவே, காவல் துறையில் இருக்கின்ற ஒயர்லெஸ்களை வருவாய்த் துறை அதிகாரிகளும், மற்றவர்களும், போக்குவரத்து அதிகாரிகளும் பயன்படுத்து வதற்கான வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1989 ஏப்ரல் 27] [திரு. வி. கே. சின்னசாமி]

இன்னொன்று, ஒரு ஸ்டேஷனிலே சட்டம் ஒழுங்குப் பிரிவு என்றும், குற்றப் பிரிவு என்றும் இரண்டு பிரிவுகளை வைத்திருக்கிறார்கள். நான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், சட்டம்—ஒழுங்கு, குற்றம் என்று இரண்டு பிரிவுகளை வைத்திருப்பதை எடுத்துவிட்டு ஒரே சீராகச் செயல்படுத்துவதற்கான வாய்பபை உருவாக்க வேண்டும். ஒரு காவல்நிலையத்திலே புகார் கொடுக்கச் செல்லும்போது, க்ரைம் பிரிவு ஆய்வாளர் இல்லையென்றால், அந்த எஸ். ஐ. லீவில் இருக்கிறார். நாளைக்கு வாருங்கள் என்று சொல்லுகின்ற நிலைமையும் இருக்கிறது. ஆகவே, க்ரைம் என்று இருப்பதையும், சட்டம்-ஒழுங்கு என்று இருப்பதையும் எடுத்துவிட்டு, இரண்டையும் சேர்த்து ஒரே பிரிவாக வைத்து விட்டால், அங்கே இருக்கின்ற அதிகாரிகள் கவனிப்பதற்கும், வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் முடியும். ஆகவே அதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மதுவிலக்கு என்று தனியாக ஒரு பிரிவைத் வைத்திருக்கிறார்கள். உயர் அதிகாரிகளைக் கலந்து அந்த மது விலக்கு பிரிவை எடுத்துவிட்டு, அவர்களையும் காவல் நிலையத்தோடு இணைத்து விட்டால, காவல்நிலையத்தில் எண்ணிக்கை பலமும் கூடும். அவர்களும் அதையும் கவனிக்கின்ற நிலையும் உருவாகும். அப்படிச் செய்தால் காவல்நிலையத்தின் சேவையும் மக்களுக்கு நன்றாகப் பயன்படும் என்பதையும் நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் கடத்தூர் காவல் நிலையம் என்பது டாக்டர் கலைஞர் காலத்திலே உருவாக்கப்பட்டது தான். அந்த இடம் சாதாரண ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில் கட்டிடங்கள் கட்டப்படாமல் சாதாரண நிலையில் இருக்கிறது. வெய்யில் காலத்திலே பார்ப்போமானால் ஓட்டின் மேலே ஓலைகளை போட்டுத்தான் அங்கே இருக்கின்ற காவலர்கள் பணியாற்றுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அந்த காவல் நிலையத்திற்கு கட்டிட வசதியை உருவாக்கித்தர வேண்டும். அந்தக் காவலர்களுக்கு குடியிருப்பும் இல்லை. கிராமத்திலே போலீஸ்காரர்களுக்கு வீடு வாடகைக்கு கொடுப்பதற்கு கூட பயப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு குடியிருப்பு கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த குடியிருப்பு இல்லாத காரணத்தினாலே அங்கே பணியாற்றுகின்ற காவல் துறை அதிகாரிகள் கோபியூர், நம்பியூர் போன்ற இடங்களிலே தங்குகின்றார்கள். ஆக குற்றங்கள் ஏற்படுகின்ற நேரததில் அதிகாரிகளை சந்திக்கின்ற வாய்பபு இல்லாமல் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று தர்மபுரி மாவட்டத்தில் சூளகிரி காவல் நிலையத்தில் பொதுப்பணித் துறையிலே லாரி டிரைவராக பணியாற்றிய பேபி என்பவர் 18—8—88 அன்று — 174லே அவர் இறந்திருக்கிறார். அவருடைய குற்ற எண். 111/88. அவர் இறந்ததற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஆயிரம் ரூபாய் மட்டும் அவருடைய மனைவி மனோன்மணியிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு சேர வேண்டிய மீதித் தொகை இன்னும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இதற்கு கெமிக்கல் ரிப்போர்ட் இன்னும் வரவில்லை என்று சொல்லி அவருடைய மனைவி மனோன்மணி அந்த காவல் நிலையத்தில் சென்று கேட்ட நேரத்தில் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் அவரை பலமுறை திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். ஆக 18—8—88 அன்று இறந்திருக்கிறார். அந்த கெமிக்கல் ரிப்போர்ட் இதுநாள் வரை வந்து சேராத காரணத்தினால் அவருடைய குடும்பம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அது குறித்த விவரம் வைத்திருக்கிறேன் அதை தருவதற்கும் தயாராக இருக்கிறேன். ஆக பொதுப்பணித் துறையிலே பணியாற்றிய அந்த லாரி டிரைவருடைய குடும்பத்திற்கு உதவுகின்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பெரியார் மாவட்டத்தை பொறுத்தமட்டில் துப்பாக்கி உரிமம் வைத்திருக்கின்ற விவசாயிகளுடைய அல்லது பொது மக்களுடைய துப்பாக்கிகளை ஓராண்டிற்கு மேல் டெப்பாசிட்லே வைத்திருக்கிறார்கள். ஒரு காலத்திலே பிரதமர், வருவதாகச் சொல்லி வைக்கவேண்டும் என்று சொன்னார்கள். இன்னும் அந்த துப்பாக்கி வழங்கப்படாமல் இருக்கிறது. எங்களைப் போன்றவர்கள் எல்லாம் கிராமத்திலே தனித் தனியாக வீடுகளிலே வாழ்கின்றவர்கள், அதை பயன்படுத்து கின்ற ஒரு நிலைமை. பாதுகாப்புக்கு வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதைத் திருப்பி கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலே, ராயர் வளையம் என்ற ஒரு பகுதி இருக்கிறது. அது எல்லோருக்கும் தெரியும். மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். காரணம் காங்கிரஸ் ஆட்சி ஆண்ட காலத்திலிருந்து அங்கே அந்த சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் திருட்டு சாராயம் காய்ச்சுகின்ற தொழிலை அதிகமாக செய்து வந்தார்கள். காவல் துறையினர் பெரும் முயற்சி எடுத்து அதை அடக்கினார்கள். சில நடவடிக்கைகளை எடுத்தார்கள். 1977-க்கு பின்பு தான் அவர்களுக்கு ஆரம்ப கல்வியைக் கொடுக்கின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்தோம். அங்கே ஆரம்ப பள்ளிக்கூடம் ஒன்றை உருவாக்கி, அவர்களுக்கென்று தனியாக பி.சி. ஹாஸ்டல் என்ற ஒன்றும்

மலையப்பாளையத்திலே உயர்நிலைப் பள்ளியை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கிறோம். இப்பொழுதுதான் உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற வாய்ப்பு அந்த குழந்தைகளுக்கும் ஏற்பட்டிருக்கிறது. நிச்சயமாக வருகின்ற காலத்தில் அவர்கள் நல்லவர்களாகத் திருந்துவார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டு இருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் திருந்த வேண்டும் என்ற அடிப்படையிலே காவல் துறை அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலைவரும் பல முயற்சிகளை எடுத்துக் கொண்டு, அங்கே அரசாங்கத்தினுடைய நிவாரணப் பணிகளைச் செய்ய பல லட்சங்களை அங்கே செலவு செய்து இருக்கிறார்கள். தறிகளைப் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஆக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னும் முழுமையாக, அதிலே அக்கறை எடுத்து நிச்சயமாக அந்த சமுதாயத்து மக்கள் உழைத்து வாழ்கின்றவர்களுக்கு தினந்தோறும் கூலி வேலை செய்து அவர்கள் ஜீவனம் செய்கின்ற அளவுக்காவது ஒரு வேலையை நிரந்தரத் தீர்வை உயர்மட்ட அதிகாரிகளோடு கலந்து செய்ய வேண்டும். அந்த மாவட்டத்திற்கு முன்பு ஒரு அமைச்சர் இருந்தார். இப்போது ஒரு அமைச்சர் இருக்கிறார். எனவே அந்த அதிகாரிகளோடு கலந்து நீங்கள் நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும். (மணியடிக்கப் பெற்றது) கோவிந்தன்குட்டி என்ற ஒரு இன்ஸ்பெக்டர் நம்பியூரிலே பணியாற்றி வந்தார். வேண்டுமென்றே சொல்வதாக நீங்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது. அந்த சமுதாயத்து மக்களை திராவிட முன்னேற்றக் கழகததிலே கண்டிப்பாக இணைய வேண்டும் என்று— அருமை அண்ணன் இராமநாதன் அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர். . . .

திரு. சம்சுதின் என்கிற கதிரவன் : தலைவர் அவர்களே, ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராமநாதன் எழுந்துவிட்டார். சும்மாயிருக்காமல் நீங்கள் அவரை எழுப்பி விட்டீர்கள்.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய பேச்சில் அவர் குறிப்பிடுகின்ற காவல் துறை அதிகாரி திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேரும்படி மக்களை வற்புறுத்துகிறார் என்று சொல்வது எனக்குத் தெரியும் என்பது போல அவர் சொல்வது— அவருடைய வாதத்திற்கு என்னையும் அவர் சாட்சியாக அழைப்பது போல இருக்கிறது. அது தவறு என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-00)

திரு. வி. கே. சின்னசாமி: தயவுசெய்து, திரு. இராமநாதன் அவர்கள் மன்னிக்க வேண்டும். நான் அப்படிச் சொல்வதற்குள்ளாக நீங்கள் குறுக்கிட்டு விட்டீர்கள். அந்தப் பகுதியிலே வேட்பாளராக நின்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

திரு. வி. கே. சின்னசாமி : அங்கேயே வந்து ராயர்வளையம் பகுதியினர் மீது 6, 7 பொய்க் கேஸ்களை அந்தப் பகுதி மக்களை வைத்து, ஒரு குறிப்பிட்ட மக்களை வைத்து, 6, 7 பொய்க் கேஸ்களை எழுதிக் கொடுத்தார்கள். அந்த இன்ஸ்பெக்டர் தீர விசாரித்து, கோபி டி.எஸ்.பி. எல்லாம் தீர விசாரித்து, அந்தப் புகார்கள் பொய் என்று சொல்லிய பின்பும், அந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், நம்பியூரிலேயே வந்து உட்கார்ந்து அந்த வரப்பாளையம் சப்-இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டு மிரட்டி இருக்கிறார். அந்த இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டு, நீ ஒழுங்காக அவர் மீது கேஸ் போடவில்லையென்றால், உன்னை ஒரு மாதத்திற்குக் கூட நம்பியூரிலே வைத்திருக்கமாட்டேன் என்று மிரட்டிச் சென்று இருக்கிறார். இப்போது அவர் வேறு எங்கேயோ பொள்ளாச்சி பக்கம் உடனடியாக மாறுதல் கூட செய்யப்பட்டிருக்கிறார். அவர் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி எங்களுக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. யாரோ இருந்து விட்டுப் போகிறார்கள், எங்களுக்குப் பிரச்சினை இல்லை. காரணம், இப்படிப்பட்ட பொய்ப்புகார் கூட, அவர் மீது சரியாக நடவடிக்கை.. (மணியடிக்கப் பெற்றது). இன்னொன்று சொல்லிக் கொள்கிறேன். அதுபோல புஞ்சைப் புளியன்பட்டியிலே தலைமையாசிரியையாக சீதாலட்சுமி என்பவர் பணியாற்றி வந்தார். அந்த அம்மையார் பணியாற்றிய நேரத்தில் அவரை அரசாங்கம் டிரான்ஸ்பர் செய்து, அந்தப் பள்ளியிலே குழப்பங்களை ஏற்படுத்தி, அங்கே சட்டம்-ஒழுங்கு கெடுகின்ற நிலமை உருவாகி கடையடைப்பு எல்லாம் ஏற்படுத்தி, பஸ் போக்குவரத்து பாதிப்பு ஏற்படுத்தி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரே தலைமை தாங்கி நடத்தினார், எங்களுடைய ஆட்சியிலே கூட எங்களாலே அதைச் சமாளித்து இருக்கமுடியும். ஆனால் மாணவர்கள் அடிப்பட்டு விடுவார்களே, என்ற அச்சத்தின் காரணமாகக் கொஞ்சம் ஒதுங்கியிருந்தோம், ஆனால் அதைப் பயன்படுத்திக்கொண்டு, அரசாங்கத்திலே புகார் செய்த நேரத்திலே அந்த அம்மையாரை டிரான்ஸ்பர் செய்தார்கள். அதற்கு அன்றைக்கு சஸ்பென்ஷனும் செய்தார்கள். ஆனால், இன்றைக்கு ஆட்சியிலே பொறுப்பேற்ற அடுத்த மாதமே அந்த அம்மையாரை அங்கே பணியிலே அமர்த்தியிருக்கிறார்கள். (குறுக்கீடு) காவல் துறை அதிகாரிகள்கூட, அந்த அம்மையார் அங்கே இருந்தால் சட்டம்-ஒழுங்கு கெடுவதற்கான......

1989 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி சொல்வது ஒரு பெரிய கதை. இதை, சாதாரணமாக கொஞ்ச நேரத்தில் பேசிவிட முடியாது. வேண்டு மானால் இதைத் தனியாகப் பேசிக் கொள்ளலாம். உயர்நீதிமன் றத்திற்குச் சென்று தடையாணை வாங்கி நீங்கள் அதில் தலை யிட்ட விபரம் எல்லாம் இருக்கிறது. அதைப்பற்றி நீங்கள் இப் போது பேசி நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம். அது ஒரு பெரிய தொடர்கதை. அதைத் தனியாகப் பேசிக்கொள்ளலாம் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள். முடித்து விடலாம். ஒரு மணித்துளி பலதடவை கொடுத்தாகி விட்டது. அடுத்த உறுப்பினருக்குப் போகிறேன். திரு. ஏ. செங்குட்டுவன், (குறுக்கீடு) என்னுடைய எச்சரிக்கைகளைப் பொருட்படுத்தாவிட்டால் அடுத்த உறுப்பினருக்குப் போக வேண் டியதுதான் (குறுக்கீடு) சரி. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் காவல்துறையைப் பொறுத்த வரையில் ஒரே ஒரு அதிகாரி செய்த தவறின் காரணமாக, ஒரு அதிகாரி அத்துமீறி செய்ததின் காரணமாக, இந்தத் துறைக்கே கெட்ட பெயர் ஏற்படுகின்ற வகையில் உள்ளது என்று பல அதிகாரி பெருமக்கள், அந்தக் காவல்துறையிலே பணியாற்றுகிறவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, அத்துமீறி நடந்த போலீஸ் கமிஷனர்** அவர் கள் மீது நிச்சயமாக முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே சொல்லி யிருக்கிறது. எந்த ஒரு அதிகாரியின் பெயரையும் சொல்லக் கூடாதென்று. அடுத்து திரு. ஏ. செங்குட்டுவன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஒரு தடவை அந்தப் பெயரை நீக்கினால்தான் மற்ற உறுப் பினர்கள் அதைப் பயன்படுத்தமாட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவைக் குறிப்பி லிருந்து நீக்கப்படுகிறது. அடுத்து, திரு. ஏ. செங்குட்டுவன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற் றப்பெற்றது.

திரு. ஏ. செங்குட்டுவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தேர்தலில் நிற்க அனுமதித்த கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், கழகத்தினு டைய பொதுச் செயலாளர் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக் கும், முன்னாள் அமைச்சர் மாண்புமிகு திரு. மன்னை அவர் களுக்கும், மாவட்டச் செயலாளர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னைப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்த மயிலாடுதுறை வாக்காளப் பெருமக்களுக்கும் முதலில் நன்றி கூறி, எனனுடைய உரையைத் துவக்குகின்றேன்.

1989—90 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை கூர்ந்த மதியுடன் எல்லாத் தரப்பு மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவிற்கு, பாராட்டக்கூடிய அளவிற்கு அமைந்திருக் கிறது. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம், என்று அண்ணா கூறிய அத்தனை அம்சங்களும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நாம் காண முடிகிறது. குறிப்பாக, காவல் துறை மானியத்திலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப் பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். நான் உள்ளாட்சித் துறை மானியத்தில், நகராட்சி மன்றத் தலைவர் என்ற முறையில் பேசுவதற்கு முனைந்தேன. நேரம் கிடைக் காத காரணத்தால் இப்போது காவல் துறை மானியத்தில் நான் பேசுவதற்கு நின்று கொண்டிருக்கிறேன். காரணம், எங் களைப் போன்று முதன் முறையாக சட்ட மன்றத்திற்கு வருகிற வர்களுக்கு முன்னுரிமை தந்து கன்னிப் பேச்சு என்ற வகையிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முன்ன தாகப் பேசவாய்ப்பு அளித்தால் என்னைப் போன்றவர்கள் எதையாவது சொல்லமுடியும். ஆனால் முன் அனு பவம் பெற்றவர்களைப் பேச வைத்து விட்டு பிறகு எங்களைப் பேச வைப்பது மிக சங்கடமான நிலை யாகும். நாங்கள் பேசும்போது அவர்கள் பேசியதையே நாங் களும் பேசவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்படுகிறோம் என்ற பரிதாப நிலையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக் குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்கள், இந்த விஷயத்தில் கொஞ் சம் கருணை காட்ட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறை மானியம் பற்றிக் குறிப்பிடுகின்றபோது, நம்மு டைய தமிழக காவல் துறை, உலகத்திலேயே சிறந்தது என்று கருதப்படும் ஸ்காட்லாண்டு யார்டு போலீசுக்கு நிகரானது என் பது உலகம் அறிந்த ஒன்றாகும். இந்தக் காவல் துறையில் மேலும் சிறப்பாகப் பணியாற்றவேண்டுமென்று கருதி நம்முடைய இன்னாள் முதல்வர் அன்னாள் முதல்வராக இருந்தபோது காவல் துறையில் மிகப் பெரிய மாறுதலைக் கொண்டு வந்தார்கள். வெள்ளையர் ஆட்சிக் காலத்திலேயிருந்த அந்த அரைக்கால்.

சட்டை போன்ற உடைகளையெல்லாம் — அரைக்கால் சட்டைகளையெல்லாம் அணிந்து கொண்டு பள்ளிக்குச் செல்கின்ற மாணவர்களைப் போல—மாற்றி, முழுக்கால் சட்டையாக அவர்களுக்கு அணிவித்து, அதைப்போல ஹெல்மெட் போன்று அணிந்து செல்லக்கூடிய தொப்பிகளையெல்லாம் மாற்றி, நல்ல சிறப்பான முறையில் அவர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதற்காக அவர்களுக்கெல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரால் விருதுகளை வழங்கியும் அவர்களுக்கு நல்ல ஒரு மாறுதலை ஏற்படுத்தினார். அவர்களுக்கு குடியிருப்புகளையெல்லாம் சிறப்பாக அமைத்த பெருமை நம்முடைய கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும். இதை நான் சொலவதற்குக் காரணம், அண்ணா அவர்களுடைய விருது மேல் மட்ட அதிகாரிகளுக்கு மட்டும்தான் என்ற நிலை, ஒரு நினைப்பு தற்போது பொது மக்கள் மத்தியிலே நிலவிக்கொண்டிருக்கிறது. ஆகவே காவல் துறையினருக்கும் இன்னும் அதிகப்படியாக அந்த விருதுகளை வழங்கி அவர்களை உற்சாகப்படுத்தினால் காவல் துறையினர் இன்னும் சிறப்பாக பணியாற்ற வாய்ப்பு இருக்கும் என்பதை இந்த நேரத்திலே பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறையில் பல பிரிவுகள் இருக்கின்றன. அந்தப் பிரிவுகளில், ஒரே தொகுதியில், ஒரே இடத்தில் பல ஆண்டுக் காலம், பல்வேறு பகுதிகளில், பல பிரிவுகளின் கீழ் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அந்தப் பகுதியின் மக்களுடைய உறவும், அவர்களுடைய தொடர்பும் அவர்களுக்கு நிரந்தரமாகக் கிடைத்து விடுகிறது. அதிலே சமூக விரோதிகளும் சில சமயங்களிலே புகுந்து விடுகிறார்கள். எனவே காவல் துறையினருடைய வாழ்நாள், அவர்களுடைய பீரியட் அந்தத் தொகுதிக்குள்ளாகவே முடிந்து விடுகிற ஒரு சூழ்நிலை கடந்த காலத்திலே இருந்ததை கொஞ்சம் மாற்றி, தவறு செய்கின்றவர்களையாவது வேறு பகுதிகளுக்கு கண்டிப்பாக அனுப்ப வேண்டுமென்று பணிவுடன் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, காவல் துறையில் நம்முடைய ஆட்சிக் காலத்தில் உதவி ஆய்வாளர் என்ற பொறுப்பு இருந்தது. அந்த ஆய்வாளர் பதவியை திடீரென்று கடந்த கால அரசு மாற்றியமைத்து அதை இல்லாது செய்து விட்டது. அதனால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய அந்த ஊதிய உயர்வும் கிடைக்கவில்லை, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உத்தியோக உயர்வும் கிடைக்கவில்லை. அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய சலுகைகளை அனுதாபத்துடன் அரசு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சிறப்புப் பயிற்சி, ஸ்பெஷல் டிரெயினிங் என்று போகிறார்கள். அப்படி போய்விட்டு வருகின்றவர்களுக்கு அதற்

கான ஊதியமோ, அதற்கான சலுகைகளோ இல்லை என்ற சூழ்நிலை இன்று இருந்து வருகிறது. அப்படி சிறப்பப் பயிற்சி பெற்று வருகின்றவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய அந்தச் சலுகைகளை நமது அரசு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

காவலர் குடியிருப்புப் பற்றிச் சொல்லவேண்டுமென்றால், அவைகள் இன்னும் வெள்ளையர் ஆட்சிக் காலத்திலே இருந்த நிலையிலேதான் ஒரு சில இடங்களிலே நாம் இன்றைக்கும் பார்க்க முடிகிறது. மயிலாடுதுறையில் உள்ள காவலர் குடியிருப்புக்கு நான் நகராட்சி மன்ற தேர்தலின் பொழுது வாக்கு கேட்கச் சென்றேன். அப்போது அந்தத் தெருக்களையெல்லாம் அந்தப் பகுதியினுடைய தாய்மார்கள் காட்டினார்கள். நானும் பார்த்தேன். அந்தத் தெருக்கள் எல்லாம் மிகமோசமாக இருக்கின்றன. மின் விளக்குக் கம்பங்களில் மின் விளக்கு எரிவது இல்லை. குடிப்பதற்குத் தண்ணீர் இல்லையென்றல்லாம் தாய்மார்கள் சொன்னார்கள். நகராட்சி மன்றத் தலைவர் ஆனவுடன் செய்கிறேன் என்று சொன்னேன். ஆனால் நகராட்சி மன்றத் தலைவர் தேர்தலுக்குப் பிறகு அந்தத் தெருவுக்கே, சமீபத்தில் நடைபெற்ற இந்தச் சட்டமன்றத் தேர்தலுக்காக வாக்கு கேட்கச் செல்ல முடியவில்லை. காரணம், அங்கேயுள்ள அந்த மின் கம்பங்கள், மின் கம்பங்களில் மின் விளக்குகள், ரோடுகள், குடிநீர் பைப்புகளையெல்லாம் பொதுப்பணித் துறையினர் தான் செய்ய வேண்டுமென்றும் அதனால் நகராட்சி மன்றத்தால் செய்ய முடியாது என்றும் சொல்லிவிட்டார்கள். அது பொதுப்பணித் துறை வசம் இருக்கிறது. ஆகவே அதைச் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். ஆகவே, ஒன்று, இதையெல்லாம் பொதுப் பணித்துறை செய்ய வேண்டும். அப்படி அவர்களால் அதைச் செய்ய முடியவில்லையென்றால், அவைகளை நகராட்சி மன்றம் செய்வதற்காகவாது ஒரு வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்பது என்னுடைய பணிவான வேண்டுகோள்.

(பிற்பகல் 1–10)

அடுத்து, ஆயுதப் படை உதவி ஆய்வாளர் மற்றும் சட்டப் பிரிவு உதவி ஆய்வாளர் இருவரும் ஒரே கல்வித் தகுதியின் அடிப்படையிலேதான் தேர்வு செய்யப்படுகிறார்கள். உடையும் அதுவே. ஆனால் அவர்களுடைய பதவி உயர்வு ஒரு சில நேரங்களில் தவறாகக் கணிக்கப்படுகிறது என்ற நிலையை நம்முடைய அரசு மாற்றியமைக்கவேண்டும்.

அடுத்து, தீயணைப்புப் படையில், நம்முடைய ஆட்சிக் காலத்தில் அந்தத் துறையினுடைய அதிகாரிகளில் சிறப்பாகப் பணியாற்றுகின்றவர்களை அந்தத் துறையினுடைய மேலாளர்களாக, இயக்குநர்களாக மாற்றியிருக்கிறோம். கடந்த காலத்தில் அது மாற்றப்பட்டு, அதாவது காவல் துறையில் ரிடயர்டு ஆனவர்

களை, ஐ.பி.எஸ். அதிகாரிகளை அதிலே இடம் பெறச் செய்கிறார்கள். தீயணைப்புப் படையில் பணிபுரிகின்றவர்களுடைய உணர்வுகளை இவர்கள் ஏற்று அதற்கேற்ற வகையில் அவர்களுக்குச் சலுகை செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது.

அடுத்து, மூன்று ஆண்டுக்காலத்திற்குமேல் ஒருவர் சட்டப்படி ஒரு இடத்திலேயிருந்து பணியாற்ற முடியாது என்ற நிலைஇருந்தாலும் அந்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, கலால் பிரிவு அல்லது மற்ற வேறு வேறு பிரிவுகளில் தங்களுடைய பணி நேரத்தை அதாவது பணிக்காலத்தை, அமைத்துக்கொள்கிறார்கள். அப்படிப்பட்டத் தவறுகள் மீண்டும் நீடிக்காத அளவு இந்த அரசு பார்த்துக் கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்............ (மணியடிக்கப்பெற்றது.)

கடைசியாக, நான் என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நான் மயிலாடுதுறை தொகுதியினுடைய குறைகளை உள்ளாட்சி மன்ற மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு இல்லாத ஒரு சூழ்நிலை அமைந்துவிட்ட காரணத்தால், இப்போது என்னுடைய தொகுதியினுடைய ஒருசில குறைகளை தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மயிலாடுதுறையில் ஏறத்தாழ 1/2 கோடி ரூபாயில் மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் மாணவர் சாரங்கபாணி அவர்களுடைய பெயரால் பாலத்தை திறந்து வைக்க மயிலாடுதுறைக்கு வருகை தந்தார்கள். அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த மறைந்துவிட்ட கிட்டப்பா அவர்கள் ஒரு அன்பு வேண்டுகோளாக மயிலாடுதுறை மக்களுக்கு கொசுத் தொல்லை தீரவேண்டும், அதற்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் வேண்டுமென்று அன்பு வேண்டுகோளாகச் சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காவல் துறை மானியத்துடன் நிறுத்திக்கொண்டு மற்ற, நகராட்சி மன்ற விஷயங்களையெல்லாம் எழுதிக் கொடுத்தால் கவனிக்கப்படும். பேசினால் கவனிக்கப் படமாட்டாது. (சிரிப்பு).

திரு. ஏ. செங்குட்டுவன் : நன்றி. காவல் துறையினர் இன்னும் உற்சாகமாகப் பணியாற்றுவதற்கு அவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை இந்த அரசு செய்யும் என்று எதிர்பார்க்கிறார்கள். அவர்களுடைய உணர்வுகளை......... (மணியடிக்கப்பெற்றது.)

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியது எங்களுக்கும் பொருந்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது இந்த மானியக் கோரிக்கைக்குத் தொடர்பு இல்லாததை எல்லாம் கவனத்திலே வைத்திருக்கிறோம். ஆனால் தொடர்ந்து இப்படிப் பேசினால் தான் கவனத்தில் இருந்து எடுத்து விடுவோம். இப்போது உங்களுடைய கவனம் இருக்கிறது.

திரு. ஏ. செங்குட்டுவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறையில் துப்புரவுப் பணியாளர்கள் நீண்ட நாட்களாக இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை. எந்த உதவியும் இல்லையென்ற ஒரு குறை இருந்து வருகிறது. அப்படிப்பட்ட துப்புரவுப் பணியாளர்களுக்கு ஏதாவது இந்த அரசு சலுகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கடந்த அரசு காலத்தில் ஒரு காவலர் 'முரசொலி' படித்தார் என்ற காரணத்திற்காக வேலை நீக்கம் செய்யப் பட்டிருக்கிறார். ராமாபுரம் தோட்டத்தில் முரசொலி பத்திரி கையைப் படித்தார் என்ற காரணத்திற்காகஅவர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அவருடைய கோரிக்கையை இந்த அரசு பரிவுடன் பரிசீலித்து அவருக்கு உதவி செய்ய வேண்டு மென்று கேட்டு, காவல்துறையினருடைய குறிப்பாக காவல ருடைய நிலை நம்முடைய அரசு காலத்தில் சிறப்பு அடைவதற் காக அவர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளை சிறப்பாகச் செய்து இந்த அரசு நல்ல அரசாக இருப்பதற்கு, அவர்களுடைய பாராட்டைப் பெறுவதற்கு எல்லாவிதமான சலுகைகளையும் அவர்களுக்குச் செய்யவேண்டுமென்று உங்கள் வாயிலாக கேட்டுக் கொண்டு காவல்துறை மானியத்திலே எனக்கு பேச வாய்ப்பு அளித்ததற்காக நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எம். முகமது சித்திக் : மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் போதுமான காவல் நிலையங்கள் இல்லை. பாகசாலை என்னும் கிராமத்தில் அவுட் போஸ்ட் காவல் நிலையம் ஒன்று உள்ளது. அதை நிரந்தரமான காவல் நிலையமாக ஆக்க வேண்டும். எனது தொகுதியில் உள்ள சங்கரன்பந்தல், ஆக்கர் போன்ற இடங் களில் அதைப் போன்று புதிதாக காவல் நிலையங்களை அமைக்க வேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

செம்பனாரில் உள்ள காவல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் இல்லை. அது வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றது. அந்தக் காவல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1980ஆம் ஆண்டு எஸ்.டீ. போர்டு என்று ஒன்று இருந்தது. அதில் அட்டண்ட் செய்த அனைவரையும் வேலைக்குச்

1989 ஏப்ரல் 27] [திரு. எம். முகமது சித்திக்]

சேர்த்துக்கொண்டார்கள். ஆனால் 1985-ல் எஸ். ஐ. போர்டில் ஆர். ஓ. 261 நபர்களைக் கூப்பிட்டு, அதில் 60 பேர்களை மட்டும் வேலைக்கு அனுப்பினார். மீதி நபர்களுடைய நிலைமை என்ன ஆனது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

கள்ளச்சாராயத்தை ஒழிப்போம் என்று சொல்லுகிறோம். ஆனால் பல்லவன், சோழன் போன்ற அரசு பேருந்துகளில் பணத்திற்காக ஆசைப்பட்டுக்கொண்டு, அந்த ஓட்டுநர், நடத்துனர்கள் சாராயத்தை வாகனங்களில் எடுத்துச் செல்வதற்குத் துணை போகிறார்கள் என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நம் அரசு செய்துவரும் நல்ல காரியங்களுக்கு இதனால் கெட்ட பெயர் ஏற்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுபவர்கள் விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்து கடுமையான தண்டனை விதிக்க வேண்டும். தற்போது இருக்கிற சட்டம் போதாது. போலீஸ் நடவடிக்கை எடுத்தால் நடவடிக்கை எடுத்த சில மணி நேரத்தில் எல்லாம் குறிப்பிட்ட அபராதத் தொகையைக் கட்டிவிட்டு மீண்டும் அதே தொழிலில் ஈடுபடுகிறார்கள். போலீசாரும் சில இடங்களில் மாமூல் என்று வாங்கிக் கொண்டு அங்கே நடப்பதைக் கண்டும் காணாததுபோல் இருந்துவருகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா காவல் நிலையங்களுக்கும் தனி கேபிள் தொலைபேசியை இணைக்க வேண்டும். அதைப் போன்று காவல் நிலையங்களுக்கும், வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும், தீயணைப்பு நிலையங்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர் இல்லங்களுக்கும் மருத்துவமனைகளுக்கும் கோட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் தனி கேபிள் தொலைபேசி இணைப்பை ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுத்தினால்தான் மக்களுக்கு ஏற்படுகிற தீ விபத்து, போக்குவரத்தில் ஏற்படுகிற விபத்து, கலவரம், கொலை, கொள்ளை போன்றவற்றை உடனுக்குடன் தெரிவிக்க வசதியாக இருக்கும். இதை அரசு உணர்ந்து, இதுபோன்ற தகவல்களை உடனடியாகத் தெரிவிக்க வசதிகள் இல்லாத காரணத்தால் பல்வேறு தவறுகளும், கொலைகளும், கொள்ளைகளும், கலவரங்களும் நடந்துவிடுகின்றன. இப்படிப்பட்ட தகவல்களை உடனடியாகத் தெரிவிக்க தற்போது வசதி இல்லாத காரணத்தால் தகவல்கள் கொடுத்து, அதிகாரிகள் வருவதற்குள் சில அசம்பாவிதங்கள் நடந்துவிடுகின்றன. அதற்குப் பின்னாலேதான் சில அரசு அதிகாரிகளும், தீயணைப்பு வண்டிகளும் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இதுபோன்ற தகவல் தொடர்பு சாதனங்களை அமைக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளில் தீ விபத்து, போக்குவரத்து விபத்து மற்ற மற்ற விபத்துக்கள் ஏற்படும்நேரங்களில் உதவுவதற்கு என்று ஆம்புலன்ஸ் வசதியை ஒவ்வொரு தாலுகாவிலும் ஏற்படுத்த வேண்டும். இதற்கு என்று போக்குவரத்துக் கழகங்களில் ஆம்புலன்ஸ் இருக்கிறது. அவசர விபத்துக் காலங்களில் அந்த ஆம்புலன்ஸ்களைக் கொடுத்து உதவ அந்த அரசுப் போக்கு வரத்துக் கழகங்களில் இருக்கிற அதிகாரிகள் மறுக்கிறார்கள். அந்த ஆம்புலன்ஸ்கள் வீணாக ஒரு வேலையும் இல்லாமல் இருக்கின்றன. போக்குவரத்துக் கழக விபத்துகளுக்கு மட்டுமே அந்த ஆம்புலன்ஸ்களை உபயோகப்படுத்த வேண்டுமென்று கூறுகிறார்கள். அந்த ஆம்புலன்ஸ்களை மக்களுடைய எந்த விதமான விபத்திற்கும் கொடுத்து உதவுவதற்கு முன்வர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் 5,000 தீயணைப்புப் படை வீரர்கள் பணியில் இருக்கிறார்கள். இருப்பினும் ஒரு ஊழியர் 8 மணி நேரத்திற்கு மாறாகக் கூடுதல் பணி சுமத்தப்பட்டு, கூடுதலாக 4 மணி நேரம் பணி செய்யும் நிலமை இருக்கிறது. இன்றைக்கு இரண்டு 'ஷிப்டாக' பணி நடைபெறுகிறது. அதை 3 ஷிப்டாக மாற்றினால் அவர்களுடைய பணி நேரம் குறைந்து, மேலும் 2,000 புதிய ஊழியர்களுக்கு வேலை கொடுக்க வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளில் மாடுகளுக்கு தார் குச்சி போடும் பழக்கம் இருக்கிறது. தற்போது இதற்காகவே ஒரு இன்ஸ்பெக்டர் இருக் கிறார். தங்களுடைய மாடுகளை தட்டி வேகமாக, விரைவாக ஒட்டுவதற்கு மாடுகளுக்கு தார் குச்சி பயன்படுத்துவது பண் டைக்காலம் முதல் விவசாயிகளுடைய இயற்கையான நிலைமை.

(பிற்பகல் 1-20)

ஆனால் அங்கே புதிதாக ஒரு இன்ஸ்பெக்டர் நியமித்து இருக்கிறார்கள். அவர் தார்குச்சி வைத்திருக்கின்ற விவசாயி களிடமிருந்து அதைப் பிடுங்குவதோடு அபராதமும் விதிக்கிறார். ஆனால் சில நேரங்களில் குறிப்பிட்ட அளவுக்கு நடவடிக்கை எடுத்துவிட்டு மற்ற காலங்களில் எல்லாம் விவசாயிகளிட மிருந்து லஞ்சமாகப் பணத்தைப் பெற்றுக்கொண்டு விட்டுவிடு கிறார்.

அதைப்போன்று கோழி வியாபாரிகள் கோழிகளைக் கூடை யிலே எடுத்துச் செல்லும்போது அந்தக் கோழிகளுக்கு குருணை வைக்கவேண்டும். அந்தக் கூடைகளிலே கோழி குடிக்கத் தண்ணீர் வைக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி வைக்கா விட்டால் அந்தக் கோழி விபாயாரிகள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள். அதே போன்று ஆடுகளைப் பெட்டியிலே எடுத்துச் சென்றால் அந்தப் பெட்டியிலே ஆடுகளுக்கு தின் பதற்குத் தழை வைக்கவேண்டும் என்று சொல்கிறார்கள்.

இல்லை என்றால் நடவடிக்கை எடுக்கிறார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கைகள் கிராமப் பகுதிகளில் தேவையில்லை என்பதை இந்த அரசுக்கு எடுத்துச் சொல்லி இந்தச் சட்டத்தையும் நீக்கிவிடுமாறு நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சென்னை மாநகரில் காவலர்கள் ஓய்வு பெறும் போது வீடு கட்டித் தரவேண்டும். வீட்டு வசதி வாரியம் இருந்தும் ஓய்வு பெறும் காவலர்களுக்கு ஒரு வீடு கூட கட்டித் தரவில்லை. இனிமேலாவது சென்னையில் அவ்வாறு வீடுகளைக் கட்டித் தரும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து காவலர்களுடைய பிள்ளைகளுக்கு, அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பதையும், இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அபய நிலையங்கள் இருக்கின்றன. அனாதைகள், ஆதரவற்றவர்கள், விபச்சாரக் குற்றம் புரிந்தவர்கள் ஆகியோரை ஒரே இடத்திலே அங்கே காவலில் வைக்கிறார்கள். இதனால் பல முறைகேடுகள் நடக்கின்றன. சம்பந்தம் இல்லாதவர்கள் எல்லாம் இவர்களைத் தங்கள் உறவினர் என்று சொல்லி அழைத்துச் சென்று விபச்சாரம் போன்ற தவறான பழக்கத்தில் ஈடுபடுத்துவதாகத் தெரிகிறது. அங்கே இருப்பவர்களுக்கு எய்ட்ஸ் நோய் பரவி இருப்பதாகவும் தெரிய வருகிறது. எனவே இதுகுறித்து சரியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அடுத்து கிராமப் பகுதிகளிலும், நகரப்பகுதிகளிலும் உள்ள இரு சக்கர வாகன ஓட்டுநர்கள் அனைவரும் ஹெல்மெட் தேவையில்லை என்ற விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இதுகுறித்து அரசு பரிசீலனை செய்து அவ்வாறு ஹெல்மெட் அணிவதைத் தவிர்க்க வேண்டும் என்று நான் கேட்டு கொள்கிறேன்.

தீயணைப்புப் படை வீரர்கள் பெரும்பாலான நேரங்களில் வேலையின்றி இருக்கிறார்கள். அந்த நேரங்களில் காவல் துறையினருக்கு உதவியாகப் பணி புரிய வேண்டும் என்ற வகையில் ஒரு ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன். இதன் காரணத்தால் காவல் துறையில் ஆள் பற்றாக்குறை நீங்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமீபத்தில் நடிகை ராணி பத்மினி என்பவர் கொலை செய்யப்பட்டார். இதில் சில அரசியல்வாதிகள், உயர் அதிகாரிகள் எல்லாம் சம்பந்தப்பட்டிருப்பதாக பரபரப்பாகச் செய்திகள் வந்தன. ஆனால் இந்த வழக்கு இப்போது ஆமை போலும், நத்தை போலும் ஊர்ந்து செல்கிறது. இந்த வழக்கைத் துரிதப்படுத்தி சம்பந்தப்பட்டவர்களின் முகமூடியைக் கிழித்

தெரிய அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று ஆட்டோ சங்கர் என்பவர்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ராணி பத்மினி வழக்கில் தீர்ப்புச் சொன்னது மாதிரி ஒரு நினைவு.

திரு. எம். முகமது சித்திக் : அதேபோல் ஆட்டோ சங்கர் என்பவர் தொடர் கொலைகள் செய்ததாக பத்திரிகைகளில் செய்திகள் பத்தி பத்தியாக வந்துகொண்டிருந்தன. இதில் பெரிய பெரிய போலீஸ் அதிகாரிகள், அரசியல்வாதிகள் எல்லாம் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வந்தன. சில போலீஸ் அதிகாரிகள் சங்கர் வீட்டுக்குச் சென்று விருந்து சாப்பிட்டதாக வும் வீடியோ கேசட் கைப்பற்றப்பட்டதாகவும் (மணியடிக்கப்பெற்றது)........சொல்கிறார்கள். எனவே அந்த நடவடிக்கையையும் துரிதப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள் கிறேன்.

எனது பகுதியில் தீயணைப்பு நிலையம் என்பதே இல்லை. நாகப்பட்டினம் செல்லவேண்டும் என்றால் 55 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. மயிலாடுதுறை, சீர்காழி போன்றவை 40 மற்றும் 50 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்றன.. அரசினுடைய கொள்கையின்படி 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு தீயணைப்பு நிலையம் இருக்கவேண்டும் என்று திட்டம் இருக்கிறது. எனவே என்னுடைய தொகுதியில் தரங்கம்பாடி தாலுக்காவில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

9. அரசினர் தீர்மானம்
விதி 32—ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தை மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். .ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப் பெற வேண் டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (28—4—1989-ஆம் தேதியன்று) தளர்த்த வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

தெரிய அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று ஆட்டோ சங்கர் என்பவர்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ராணி பத்மினி வழக்கில் தீர்ப்புச் சொன்னது மாதிரி ஒரு நினைவு.

திரு. எம். முகம்மது சித்திக் : அதேபோல் ஆட்டோ சங்கர் என்பவர் தொடர் கொலைகள் செய்ததாக பத்திரிகைகளில் செய்திகள் பத்தி பத்தியாக வந்துகொண்டிருந்தன. இதில் பெரிய பெரிய போலீஸ் அதிகாரிகள், அரசியல்வாதிகள் எல்லாம் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வந்தன. சில போலீஸ் அதிகாரிகள் சங்கர் வீட்டுக்குச் சென்று விருந்து சாப்பிட்டதாக வும் வீடியோ கேசட் கைப்பற்றப்பட்டதாகவும் (மணியடிக்கப்பெற்றது)........சொல்கிறார்கள். எனவே அந்த நடவடிக்கையையும் துரிதப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள் கிறேன்.

எனது பகுதியில் தீயணைப்பு நிலையம் என்பதே இல்லை. நாகப்பட்டினம் செல்லவேண்டும் என்றால் 55 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. மயிலாடுதுறை, சீர்காழி போன்றவை 40 மற்றும் 50 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்றன.. அரசினுடைய கொள்கையின்படி 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு தீயணைப்பு நிலையம் இருக்கவேண்டும் என்று திட்டம் இருக்கிறது. எனவே என்னுடைய தொகுதியில் தரங்கம்பாடி தாலுக்காவில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

9. அரசினர் தீர்மானம்
விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தை மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். .ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப் பெற வேண் டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (28—4—1989-ஆம் தேதியன்று) தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

1989 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (28–4–1989) காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

96. ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் 1986–87-ஆம் ஆண்டிற்கான முதலாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

97. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழுவின் 1986–87-ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1?1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

98. நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் 1986–87-ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.].

99. தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கழகத்தின் 1986–87-ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]

100. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1986–87-ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

101. பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 1986–87-ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

135. கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989–90. (தமிழ், ஆங்கிலம்).

!136. தமிழ்நாடு காவல் துறை மீதான ஆய்வுரை, 1988–89. (தமிழ், ஆங்கிலம்).

137. கோரிக்கை எண். 16—தமிழ்நாடு தீயணைப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989–90. (தமிழ், ஆங்கிலம்).

1989 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (28-4-1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

96. ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் 1986-87-ஆம் ஆண்டிற்கான முதலாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

97. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழுவின் 1986-87-ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1?1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

98. நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் 1986-87-ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.].

99. தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கழகத்தின் 1986-87-ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]

100. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1986-87-ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

101. பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 1986-87-ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

135. கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989-90. (தமிழ், ஆங்கிலம்).

!136. தமிழ்நாடு காவல் துறை மீதான ஆய்வுரை, 1988-89. (தமிழ், ஆங்கிலம்).

137. கோரிக்கை எண். 16—தமிழ்நாடு தீயணைப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989-90. (தமிழ், ஆங்கிலம்).

இணைப்புகள்

(270-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்)

கொள்கை விளக்கக் குறிப்பு.

1. 1971ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதற்கொண்டு தமிழ் நாடு மதுவிலக்குச் சட்டம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டு மீண்டும் 1974ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதற்கொண்டு அமல்படுத்தப்பட்டது. ஆயினும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளை பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்து வியாபாரம் செய்யும் கடைகள் தொடர்ந்து செயல் பட்டு வந்தன. 1981ஆம் ஆண்டு மே மாதம் முதல், கள், சாராயம் ஆகியவற்றை விற்பனைசெய்யகடைகள் திறக்கப்பட்டு மீண்டும் அவைகள் 1–1–1987 முதற்கொண்டு மூடப் பட்டன. எனினும், IMFS என்ற அயல்நாட்டு மதுபான உற் பத்தியும்—வியாபாரமும் தொடர்ந்து நடைமுறையில் உள்ளது.

2. இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டவுடன் தமிழ் நாட் டில் மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்தப்பட்டது பற்றி ஆய்வு செய்து கீழ்க்கண்ட முடிவுகளை எடுத்துள்ளது :—

(i) தமிழகத்தில் தற்போது ஐந்து தனியார் நிறுவனங்கள் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளை உற் பத்தி செய்ய உரிமங்கள் பெற்றுள்ளன. எதிர்காலத்தில் மது பானங்களைத் தயாரிக்கத் தனியார்களுக்கு உரிமங்கள் வழங்கப் படமாட்டாது. மேலும், தற்போதுள்ள நிறுவனங்கள் தங்கள் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் அனுமதியும் தரப்படமாட் டாது.

(ii) பீர் தயாரிக்க ஒரு தனியார் நிறுவனம் உரிமம் பெற்று உற்பத்தி செய்து வருகிறது. இனிமேல், பீர் தயாரிக்கப் புதிய தனியார் நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்கப்படமாட்டாது. மேலும், தற்போது இயங்கிவரும் தனியார் பீர் உற்பத்தி நிறு வனத்தின் திறனைக் கூடுதலாக்கவும் அனுமதி வழங்கப்படமாட் டாது.

(iii) தமிழ்நாட்டில் எட்டு வடிசாலைகள் உள்ளன. அவை கள் சாராவியைத் தயார்செய்து அதனை மதுபான வகைகளைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கும், இரசாயனப்பொருட்களை உற் பத்திசெய்யும் தொழிற்சாலைகளுக்கும் வழங்கி வருகின்றன. இவை அனைத்தும் இப்போது தனியார்த்துறையில் இயங்கி வரு கின்றன. பொதுத்துறை மற்றும் கூட்டுறவுத்துறைகளில் இயங்கி வரும் சர்க்கரை ஆலைகள், வடிசாலைகள் அமைக்க உரிமங்கள் வழங்குவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

1989 ஏப்ரல் 27]

(iv) மதுபான வகைகள் மற்றும் பீர் தயாரிப்பினைப் படிப் படியாக தமிழக அரசின் நிறுவனமான தமிழ்நாடு மாநில வாணி பக் கழகம் (TĀSMAC) மேற்கொள்ளும். மதுபானங்கள் தயாரிக்கப் புதிதாக இரண்டு நிறுவனங்களைத் துவங்கும்படி அக்கழகம் மேட்டுக்கொள்ளப்பட்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

(v) தற்போது கருப்பஞ்சாற்றுக் கசண்டின் உற்பத்தி அதிக மாக உள்ள காரணத்தால் கூட்டுறவு மற்றும் பொதுத்துறைகளில் இயங்கிவரும் சர்க்கரை ஆலைகள் சாராவி உற்பத்திசெய்ய வடி சாலைகளை அமைக்க உரிமங்கள் வழங்குவதுபற்றி அரசு பரி சீலனை செய்து வருகிறது. அப்படித் தயாரிக்கும் சாராவியைக் கொண்டு இரசாயன பொருட்கள் உற்பத்திசெய்யும் தொழிற் சாலைகள் வடிசாலைகளுடன் இணைந்து செயல்படும் வடிசாலை யில் உற்பத்தி செய்யப்படும் சாராவியை இரசாயன பொருட் கள் உற்பத்திக்கு அந்தச் சர்க்கரை ஆலைகளே பயன்படுத்திக் கொள்ளும். (Captive Units).

வருமானத்தைப் பெருக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் :

3. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் மேற்கொண்ட ஆய் வில் ஆயத்தீர்வை மூலம் மாநில அரசுக்குக் கிடைத்திருக்க வேண் டிய வருவாய் கிடைக்காமல் அரசுக்கு நிதி இழப்பு ஏற்பட்டிருந்த நிலைமையை இந்த மாமன்றத்தில் ஏற்கெனவே சுட்டிக்காட்டப் பட்டது. மதுபானங்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு மது பானங்கள் தயாரிக்க சாராவி வழங்கப்பட்டு வருகிறது. அப்படி வழங்கப்படும் சாராவி மீது ஒரு பூரூப் லிட்டருக்கு ரூ. 8 ஆயத் தீர்வையாகவும், ஒரு பல்க் லிட்டருக்கு ஒரு ரூபாய் வெண்ட் கட்டணமாகவும் மதுபானங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் செலுத்தவேண்டும். ஆனால், முந்தைய அரசு இவற்றைச் செலுத்த வேண்டாமென விதிவிலக்கு அளித்து 2–9–1983ஆம் தேதியன்று ஆணை பிறப்பித்து சலுகை அளித்தது. ஆனால், சாராவி இந்தத் தேதிக்கு முன்பாகவே அதாவது 29–5–1982 முதல் வழங்கப்பட்டு வந்ததால், அப்படி வழங்கப்பட்ட சாரா விக்கும், இதர மாநிலங்களிலிருந்து மேற்படி நிறுவனங்கள் இறக்கு மதி செய்த மால்ட் சாராவி, திராட்சை சாராவி, சைலண்ட் சாராவி போன்றவற்றிற்கு இந்த விதி விலக்கு பொருந்தாது என மாநில கணக்காயர் சுட்டிக்காட்டியபோது 2–9–1983ஆம் நாளிட்ட ஆணை 29–5–1982ஆம் தேதியிலிருந்தே அமலுக்கு வரும் என்றும், சாராவி என்பது மால்ட், திராட்சை போன்ற மற்ற சாராவிகளையும் உள்ளடங்கியதாகும் என அரசு 24–7–1986ஆம் தேதி ஆணை பிறப்பித்தது. இதன் காரண மாக 1987–88ஆம் ஆண்டு முடிய ஏறக்குறைய 54 கோடி ரூபாய் அரசுக்கு நிதி இழப்பு ஏற்பட்டது. 1987–88 முதல் ஒரு ஆண் டுக்கு இழப்பு சுமார் ரூ. 23 கோடியாகும்.

4. மேலும், மதுபானத் தொழிற்சாலையிலிருந்து மதுபானங்கள் விற்பனை செய்யும்போது ஆயத்தீர்வை செலுத்த வேண்டிய பொறுப்பு மதுபான தயாரிப்பாளர்களையேச்சாரும். அப்பொருட்களின் விலை மீது விற்பனை வரி செலுத்தும்போது ஆயத்தீர்வைக்கும் சேர்த்து விற்பனை வரியை அவர்கள் செலுத்த வேண்டும். ஆனால், இந்த முறையை மாற்றி மதுபானத் தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து மதுபானங்களை வாங்குகின்ற மொத்த வியாபார உரிமம் பெற்ற நிறுவனமான, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகமே செலுத்தவேண்டுமென்று விதிகளில் 4–10–1982ஆம் தேதி அரசு திருத்தம் செய்தது. இதனால், ஆயத்தீர்வையை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகமே செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆயத்தீர்வையோடு செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி செலுத்தப்படாமல் அரசுக்கு நிதி இழப்பு ஏற்பட்டது. இந்த இனத்தில் உற்பத்தியாளர்கள் செலுத்த வேண்டிய விற்பனை வரி ரூ. 24 கோடியாகும். இந்த வரியை அவர்கள் செலுத்தாத காரணத்தால் அபராத வட்டியாக ரூ. 33 கோடி விதிக்கப்பட்டது. இதனையும் சேர்த்து மொத்தம் ரூ. 57 கோடியாகும். இதனை வசூலிக்க அரசு நடவடிக்கை எடுத்ததையடுத்து உற்பத்தியாளர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர். அதுவுமின்றி ஆயத்தீர்வையாக பல லட்ச ரூபாய்களை வாணிபக் கழகம் செலுத்தி, அதன் பின்பு, சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்யும் போதுதான் அதைப் பெற இயன்றது. இடைக் காலத்தில் இவ்வாறு செலுத்தப்பட்டத் தொகைக்கான வட்டியை வாணிபக் கழகமே செலுத்த நேர்ந்தது. மொத்தத்தில் முந்தைய அரசு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானங்களின் தயாரிப்பாளர்களுக்கு வழங்கிய சலுகைகள் காரணமாக ஏறக்குறைய 100 கோடி ரூபாய் மாநில அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது.

5. இத்தகைய சலுகைகளை இந்த அரசு தேவையற்றவை என்று கருதியதாலும், அரசுக்குப் பெருமளவில் நிதி இழப்பு இதனால் ஏற்படுகின்ற காரணத்தினாலும், இச்சலுகைகளை உடனடியாக விலக்கிக்கொள்ள ஆணையிட்டது. இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏறக்குறைய ரூ. 23 கோடி உபரியாக ஆயத்தீர்வை மற்றும் விற்பனை வரி மூலம் வருமானம் கிடைக்க இந்த ஆண்டு வழி ஏற்பட்டுள்ளது. அது மட்டுமின்றி, பானங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களே ஆயத்தீர்வையையும் செலுத்த வேண்டுமென்ற காரணத்தினால் பல இலட்ச ரூபாய்களை வாணிபக் கழகம் முன் முதலீடு செய்ய வேண்டிய நிலைமை தவிர்க்கப்பட்டு அதன் காரணமாக வட்டி செலவை ஏற்க வேண்டியதும் தவிர்க்கப்பட்டது.

6. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானங்களின் மீது தமிழகத்தில், புரூப் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 25 ஆயத்தீர்வையாக வசூலிக்கப்பட்டு வந்தது. அதிகபட்சமாக ஒரு புரூப் லிட்டருக்கு ரூ. 30 ஆயத்தீர்வை விதிக்க 1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தது.

1989 ஏப்ரல் 27]

மற்ற மாநிலங்களில் விதிக்கப்பட்டிருந்த ஆயத்தீர்வைகளுடன் ஒப்பிடும்போது தமிழகத்தில் குறைவாக இருந்தது. எனவே, மாநிலத்தின் வருவாயைப் பெருக்குவதற்கு மதுபானங்களின் மீது விதிக்கப்பட்டிருந்த ஆயத்தீர்வையை அதிகபட்சமாக ரூ. 60 வரை விதிக்க 1937 ஆம்ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் திருத்தப்பட்டது. மதுபானங்கள் மீது ஒரு புருப் லிட்டருக்கு ஆயத்தீர்வை ரூ. 55 என நிர்ணயிக்கப்பட்டு 28-2-1989 முதற் கொண்டு அமல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால், ஆயத் தீர்வை மற்றும் விற்பனை வரி மூலமாக அரசுக்கு ஆண்டு ஒன் றுக்கு ரூ. 70 கோடி அளவுக்குக் கூடுதலான வருமானம் கிடைக்கு மென எதிர்பார்க்கப்படுகிறது.

7. தமிழகத்தில் விற்பனை செய்யும் பீர் பானத்தின்மீது ஒரு பல்க் லிட்டருக்கு ஆயத்தீர்வை ரூ. 1 எனவும், வெண்ட் கட்டண மாக 35 பைசாவும் விதிக்கப்பட்டிருந்தது. மற்ற மாநிலங்களில் நிலவிவந்த வரி விகிதங்களுடன் ஒப்பிடும்போது இவை குறைவு எனத் தெரிய வந்தது. எனவே, மாநிலத்தில் வருவாயைப் பெருக்குவதற்கு இந்த ஆயத்தீர்வையை ஒரு பல்க் லிட்டருக்கு ரூ. 2.50 எனவும், வெண்ட் கட்டணத்தை 50 பைசாவாகவும், உயர்த்தி ஆணை இடப்பட்டது. தமிழகத்திலிருந்து வெளி மா நிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பீர்பானத்தின் மீது ஒரு பல்க் லிட்டருக்கு ஆயத்தீர்வை 10 பைசாவாகவும் வெண்ட் கட்டணம் 5 பைசாவாகவும் இருந்தது. ஆயத்தீர்வையை ரூ. 1.25 எனவும், வெண்ட் கட்டணத்தை 50 பைசாவாகவும் உயர்த்தி ஆணையிடப்பட்டது. இவ்வாறு ஆயத்தீர்வைகளை உயர்த்தியதன் காரணமாக ஆண்டொன்றுக்கு சுமார் 5 கோடி ரூபாய் கூடுதலாக வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

மதுபானங்களுக்கு விலை நிர்ணயம் செய்தல் :

8. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு உற்பத்தியாளர் கள் விற்பனை செய்யும் மதுபானங்களுக்கும், இக்கழகம் சில் லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்யும் மதுபானங்களுக்கும், சில்லறை வியாபாரிகள் நுகர்வோருக்கு விற்கும் மதுபானங்களுக் கும் விலைகளைச் சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்படவில்லை என் பது தெரிய வந்தது. உற்பத்தியாளர்களே, தாங்கள் விற்பனை செய்யும் மதுபானங்களுக்கு, விலைகளை நிர்ணயித்த நிலைமை இருந்தது. மொத்த வியாபாரியான தமிழ்நாடு மாநில வாணி பக் கழகம் நியாயமான விலைகளில் மதுபானங்களை உற்பத்தி யாளர்களிடமிருந்து வாங்கவும், நுகர்வோருக்கு நியாயமான விலைகளில் மதுபானங்கள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டு மென்பதாலும் தயாரிப்பாளர், மொத்த வியாபாரி மற்றும் சில் லறை வியாபாரி ஆகியோர் மதுபானங்களை விற்கும் விலைகளைச் சட்டப்பூர்வமாக நிர்ணயிக்க மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்

விலைகளை நிர்ணயம் செய்வதில் அவருக்கு ஆலோசனை கூற உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவும் அமைக்கப் பட்டுள்ளது. இதன் அடிப்படையில், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத்துறையின் ஆணையர் 1–4–1989 முதல் உற்பத்தியாளர் களிடமிருந்து (TASMAC) வாங்கும் விலையையும், TASMAC சில்லறை வியாபாரிகளுக்கு விற்கும் விலையையும் நிர்ணயித்து ஆணை பிறப்பித்துள்ளார்.

மதுபான சில்லரை விநியோகம் :

9. மதுபானங்களை சில்லறையில் விற்பனை செய்ய மாநிலம் முழுவதிலும் 2,037 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் இந்த உரிமங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். ஒரு உரிமதாரர் ஒரு ஆண்டுக்கு உரிமைச் சலுகைக் கட்டணம் (Privilige) மற்றும் உரிமைக் கட்டணமாக (Licence) ரூ. 20,500ம் மனு கட்டணமாக (Application) ரூ. 100ம் செலுத்த வேண்டும். மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது இத்தொகை மிகவும் குறைவு. இந்த இனத்தில் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4 கோடி அளவுக்கு வருமானம் கிடைத்து வரு கிறது. எனவே, மாநிலத்தின் வருவாயைப் பெருக்குவதற்கும், சில்லறை வியாபார உரிமங்கள் வழங்குவதில் தவறான கண் ணோட்டத்தோடு சலுகைகள் காட்டப்பட்டது என்பது போன்ற குற்றச்சாட்டுக்களைத் தவிர்க்கவும், அனைவரும் பங்குகொள்ளக் கூடிய வகையில் ஏலத்தின் மூலமாக சில்லறை வியாபார உரிமங் கள் வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளதை ஏற்கெனவே இம்மாமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. இந்த முறை 1–6–1989 முதற்கொண்டு அமலுக்கு வரும்.

மதுபானங்களை சில்லறையில் விற்பனை செய்வதில் தமிழ் நாடு மாநில வாணிபக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணி பக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபடும். மாநிலத் தில் அமைக்கப்படவுள்ள மொத்த கடைகளில் 40 சதவீதத்திற்கு மேற்படாமல் இந்த நிறுவனங்களுக்கு கடைகள் ஒதுக்கீடு செய் யப்படும். இவ்வாறு ஏல முறையைக் கொண்டு வருவதனால் அரசுக்குக் கணிசமான கூடுதல் வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கருப்பஞ் சாற்றுக் கசண்டு (Molasses) :

10. மதுபானங்கள், மருந்து வகைகள் மற்றும் இரசாயன பொருட்களைத் தயாரிக்க மூலப் பொருட்களாக சாராவி பயன படுத்தப்படுகிறது. சாராவி தயாரிக்க அடிப்படையாகத் தேவைப் படும் மூலப்பொருள் கருப்பஞ்சாற்றுக் கசண்டாகும்.

11. மாநிலத்தில் நிலவி வந்த வறட்சியின் காரணமாக, 1985–86ஆம் ஆண்டு வரை கரும்பு உற்பத்தி குறைவாக இருந்த

1989 ஏப்ரல் 27]

காரணத்தால் கருப்பஞ்சாற்றுக் கசண்டின் உற்பத்தி திருப்திகரமாக இல்லை. ஆனால், அதன் பின்பு, பருவ மழை நலமாகப் பெய்ததின் காரணமாக கரும்பு உற்பத்தியும் கருப்பஞ்சாற்றுக் கசண்டின் உற்பத்தியும் அதிகரித்தது. மேலும், 1–1–1987 முதற்கொண்டு சாராய விநியோகத்தை நிறுத்தியதன் காரணத்தால், சாராவியின் தேவை குறைவான காரணத்தாலும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு உபரியாக உள்ள மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். சாராவி உற்பத்திக்கு மட்டுமல்லாமல் கால்நடைத் தீவனம், நல்லெண்ணெய் போன்ற சமையல் எண்ணெய்கள், மற்றும் முந்திரி எண்ணெய், ரப்பர் எண்ணெய் போன்ற வற்றைத் தயாரிக்கவும் சில பொருட்களைத் தயாரிக்கத் தொழிற்சாலைகளிலும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு பயன்டடுத்தப்பட்டு வருகிறது.

12. 1988–89ஆம் சர்க்கரை ஆண்டின் துவக்கத்தில் 1.15 இலட்சம் டன்கள் கருப்பஞ்சாற்றுக் கசண்டு இருப்பு இருந்தது. நடப்பாண்டில் இதன் உற்பத்தி 4.23 இலட்சம் டன்களாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கருப்பஞ்சாற்றுக் கசண்டின் உற்பத்தி அதிகரித்துள்ள காரணத்தால் கால்நடைத் தீவனம் தயாரிக்கும் நிறுவனங்களுக்கும் இதர தொழிற்சாலைகளுக்கும் ஒதுக்கீடு சற்று தாராளமாக செய்யக் கூடிய நிலைமை உள்ளது. பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பல்வேறு திட்டங்களை கிராமப்புறங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் கால்நடைத் தீவனத்தின் தேவை அதிகரித்துள்ளது. கருப்பஞ்சாற்றுக் கசண்டின் மொத்த உற்பத்தியில் சுமார் 10 விழுக்காட்டை கால் நடைத் தீவனம் தயாரிக்க ஒதுக்கவேண்டுமென்று மைய அரசு தெரிவித்துள்ளது. கருப்பஞ்சாற்றுக் கசண்டு உபரியாக உள்ளதால், வெளிநாடுகளுக்கு ஒரு இலட்சம் டன்கள் ஏற்றுமதி செய்ய மைய அரசு அனுமதித்துள்ளது. அதில், 73,000 டன்கள் ஏற்றுமதி செய்ய இதுவரை அனுமதி வழங்கப்பட்டு, 35,496 டன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கருப்பஞ்சாற்றுக் கசண்டின் விலை குறைவாக உள்ள காரணத்தால் கள்ளச் சாராய தயாரிப்புக்குப் பயன்படுத்தக்கூடிய ஆபத்து உள்ளது. எனவே, பல்வேறு காரியங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டினைப் பெறுவோர் எந்த காரியங்களுக்கு இது ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அவற்றிற்கு பயன்படுத்தாமல் தவறானக் காரியங்களுக்கு பயன்படுத்துவதைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொலை நோக்குத் திட்டம் :

13. 1992–93ஆம் ஆண்டுவரை கருப்பஞ்சாற்றுக் கசண்டினுடைய உற்பத்தி மற்றும் தேவைகள் பற்றி ஒரு தொலைநோக்குத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மாநிலத்தில் புதியதாகச் சர்க்கரை ஆலைகள் அமைக்க இருப்பதன் காரணமாகவும், ஏற்கெனவே உள்ள சர்க்கரை ஆலைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ள காரணத்தாலும்

[1989 ஏப்ரல் 27

1989–90இல் கருப்பச்சாற்றுக் கசண்டின் உற்பத்தி 6.13 இலட்சம் டன்களாகவும், 1992–93இல் 6.88 இலட்சம் டன்களாகவும் இருக்குமென்று கணக்கிடப்பட்டுள்ளது. சாராவி, கால்நடைத் தீவனங்கள் தயாரிக்கவும் மற்றும் இதரத் தொழில்களின் தேவைகளுக்கு ஒதுக்கீடு செய்ததுபோக ஏறக்குறைய 1.5 இலட்சம் டன்களுக்கு மேலாக கருப்பஞ்சாற்றுக் கசண்டு உபரியாக இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறு மிகுதியாகும் கருப்பஞ் சாற்றுக் கசண்டை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதினால் நமக்கு நன்மை ஏதுமில்லை. எனவே, இதனை நம் மாநிலத்திலேயே பயன்படுத்தி சாராவி தயாரிக்க புதிய வடிசாலைகளை அமைக்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது. பொதுத்துறை மற்றும் கூட்டுறவுத் துறைகளில் இயங்கிவரும் சர்க்கரை ஆலைகள் வடிசாலைகளை அமைக்க உரிமங்கள் வழங்குவது பற்றி பரிசீலிக்கப்படுகிறது.

மேலும், இப்படி உற்பத்தி செய்யப்படும் சாராவி, மதுபானங்கள் தயாரிக்க பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது. அசிடிக் அமிலம், ஈதர் போன்ற நாட்டின் தொழிற் வளர்ச்சிக்குத் தேவைப்படும் இரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளையும், சாராவி வடிசாலையுடன் அமைத்து, அவை ஒருங்கிணைந்து செயல்படுகின்ற நிலைமையை உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது. இப்படி செய்வதன் மூலம் இம் மாநிலத்திற்கு இரசாயனத் தொழிலில் கணிசமான முன்னேற்றம் ஏற்படும் என்று நம்பப்படுகிறது.

இராசயனத் தொழில்கள் அமைப்பதை ஊக்குவித்தல் :

14. இரசாயனப் பொருள்களைத் தயாரிக்கும், புதிய நிறுவனங்களுக்கு சாராவி வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதன் காரணமாக மாநிலத்தில் இரசாயனத் தொழில்கள் அமைவது ஊக்குவிக்கப்படும்.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் :

15. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் 1983ஆம் ஆண்டு மே மாதத்தில் பதிவு செய்யப்பட்டு ஜூலை 1983 முதல் செயல்பட்டு வருகிறது. இது மாநில அரசுக்கு முழுவதும்சொந்தமான ஒரு நிறுவனம் ஆகும். தமிழ்நாட்டில் மதுபானங்கள் மற்றும் பீர் ஆகியவற்றின் மொத்த வியாபார உரிமம் வாணிபக் கழகத்திற்கு மட்டும்தான் தரப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதிலும் இவ் வாணிபக் கழகம் 32 கிளைகளைத திறந்து அங்கு மதுபான சில்லறை வியாபார உரிமம் பெற்றவர்களுக்கு வழங்கி வருகிறது. 1988–89ஆம் ஆண்டில் இந்நிறுவனம் சுமார் ரூ. 310 கோடி பெறுமான மதுபானங்களை விற்பனை செய்துள்ளது. 1987–88 இல் இந்நிறுவனம் செய்த வியாபாரம் ரூ. 247 கோடியாகும்.

1989 ஏப்ரல் 27]

16. இந்நிறுவனம் மதுபான புட்டிகள் மீது ஒட்டப்படும் ஆயத் தீர்வைச் சீட்டுக்களை அச்சடித்து அரசுக்கு வழங்கி வருகிறது

வெளி மாநிலங்களில் மதுபானம் வாங்குதல்—

17. தமிழ் நாட்டில் சில்லறை விநியோகத்திற்கு தேவைப்படும் மதுபானங்களை தமிழகத்தில் உள்ள மதுபான உற்பத்தி நிறுவனங்களிடலே வாங்கப்படும். நட்சத்திர உணவு விடுதிகள், 'கிளப்' ஆகிய பொது அமைப்புக்களுக்கும் வெளிநாட்டு உல்லாச பயணிகள் போன்றவர்களுக்கும் மற்ற பெர்மிட் தாரர்களுக்கும் வழங்க சில சிறப்பான வகை மதுபானங்கள் தேவைப்படுகின்றன. அவை தமிழகத்தில் இப்போது தயாரிக்கப்படுவதில்லை. தற்காலிகமாக தேவை களைப் பூர்த்தி செய்ய வெளி மாநிலங்களிலிருந்து அவர்களுக்கு தேவையான அளவில் வாங்கி வழங்கப்படும்.

அமல்படுத்தல் பிரிவின் பயணிகள் (Enforcement wirg) :

18. தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் அச்சட்டத் தின்கீழ் வெளியிடப்பட்டுள்ள விதிகளையும் பல்வேறு ஆணை க்ளையும் செயல்படுத்துவதற்காக தனியாக மதுவிலக்கு அமல் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. காவல் துறைத் தலைவர் (அமல் பிரிவு) தலைமையில் இதர அலுவலர்களுடன் இயங்கி வருகிறது. பரங்கிமலை, சேலம், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகியவற்றை தலைமையிடமாகக் கொண்டு ஐந்து மண்டலக் காவல் துறை கண்காணிப்பாளர்கள் செயல் பட்டு வருகின்றனர்.

19. தமிழ்நாட்டில் பாண்டிச்சேரி, காரைக்கால் யூனியன் பிரதேச எல்லையோரப் பகுதிகளில் 8 சோதனைச் சாவடிகள் செயல்பட்டு வருகின்றன. பாண்டிச்சேரி மாநிலங்களிலிருந்து மதுபான கடத்தல் நடைபெறுவதைத் தடுப்பதற்காக இவை அமைக்கப்பட்டுள்ளன. இவை, 331 இனங்களில் தவறுகள் நடந்ததாகக் கண்டுபிடித்துள்ளன. தடுப்புக் காவல் சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்தி 1988 ஆம் ஆண்டில் 349 கள்ளச் சாரா யம் காய்ச்சுவோர் இச்சட்டத்தின் மூலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 1987 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 237 ஆக இருந்தது. மதுவிலக்கு அமல் நடத்தும் பிரிவு தொடர்ந்த வழக்குகளின் எண்ணிக்கை, முடிவு செய்யப்பட்டவை கைப்பற்றப்பட்ட வாகனங்கள் பற்றிய விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

கள்ளச் சாராயத்தை ஒழிக்க அரசின் முனைப்பான நடவடிக்கைகள் :

20. மதுவிலக்கை தீவிரமாக அமல் நடத்த வேண்டு மென்பது இந்த அரசின் கொள்கையாகும். கள்ளச் சாராயம்

கள்ளச்சாராயம் காய்ச்சுவதையும் அதன் விற்பனையையும் ஒழிப்பதில் இந்த அரசு மிக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கள்ளச் சாராயம் பெரும்பாலும் கிராமப்புறங்களில் காய்ச்சப்பட்டு நகர்ப்புறங்களில் விற்பனை செய்யப்படுகிறது. ஏழை எளிய மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுகின்றனர். சட்டம் ஒழுங்கு பொறுப்பேற்றுள்ள காவல் துறையினரும், மதுவிலக்கை அமல்படுத்தும் காவல் துறையினரும் ஒன்றாக இணைந்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஒத்துழைப்போடு கூட்டாக செயல்பட்டு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். அடிக்கடி திடீரென கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற விற்கின்ற பகுதிகளுக்குச் சென்று குற்றம் புரிகின்றவர்களை கைது செய்து தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். மதுவிலக்கு அமல் பிரிவில் பணிபுரிகின்ற காவல் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் தவறு செய்யும்போது அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகளினால் இந்த ஆண்டு பிப்ரவரி மார்ச் திங்களில் மட்டும் 1 லட்சத்திற்கு கூடுதலான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவைகளில் 29,948 வழக்குகள் கள்ளச் சாராயம் காய்ச்சியது பற்றியதாகும். 91,488 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏறக்குறைய 7.72 லட்சம் லிட்டர் அளவுக்கு கள்ளச் சாராயம் கைப்பற்றப்பட்டுள்ளது. 96 லட்சம் லிட்டர்கள் அளவுக்குக் கள்ளச் சாராய ஊறல் அழிக்கப்பட்டுள்ளது. தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் 22 நபர்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 1987 ஆம் ஆண்டில் ஒரு மாதத்தில் சராசரியாக 19,000 வழக்குகளும், 1988 ஆம் ஆண்டில் 34,000 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டிருந்தன. ஆனால் இந்த ஆண்டு சராசரி மாதம் சுமார் 50,000 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

நிலுவையிலுள்ள வழக்குகளை முடிவு செய்தல்:

21. இந்த அரசு பொறுப்பேற்ற போது ஏறக்குறைய 6.49 லட்சம் மதுவிலக்கு வழக்குகள் நீதிமன்றங்களில் தொடரப்பட்டு அவை நீண்ட காலமாக தேங்கியிருந்த நிலைமை தெரிய வந்தது. மதுவிலக்குக் குற்றங்கள் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. மதுவிலக்குக் குற்றங்களுக்காக 3 வருட கடுஞ் சிறைத் தண்டனையையும் அதனுடன் ரூ. 3,000 அபராதமும் விதிக்கப்பட்டு வந்ததால், ஒவ்வொரு குற்றவாளியும் நீதிமன்றத்தில் எதிர் வழக்காடுகின்ற ஒரு நிலைமை பரவலாகக் காணப்பட்டது. எனவே இவ்வழக்குகள் விரைவில் முடிவு பெறாத நிலை ஏற்பட்டு நீதிமன்றங்களின் வேலைப் பளுவும் கூடியது. எனவே தேங்கியிருந்த இவ்வழக்குகளைத் துரிதமாக முடிவு செய்ய மதுவிலக்குச் சட்டத்தை திருத்த முடிவு செய்து கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் இதற்கான சட்டமும் நிறைவேற்றப்பட்டது. 1937 ஆம்

1989 ஏப்ரல் 27]

வருடம் மதுவிலக்குச் சட்டத்தின் பிரிவுகள் 6 மற்றும் 52E ஆம் பிரிவுகளின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள் நீங்கலாக இதர வழக்குகளுக்கு மூன்று மாதம் சிறைத்தண்டனை அல்லது அபராதம் ரூபாய் ஆயிரம் விதித்தல் மட்டும் போதுமென்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த முடிவின் காரணமாக வழக்குகள் துரிதமாக முடிவு செய்யப்பட்டு அரசுக்கு வருமானமும் கிடைக்கும்.

போதை மருந்து தடுப்பு :

22. மக்கள் போதை மருந்துகளை உபயோகிக்கும் பழக்கத்தைத் தடுக்கவும் போதை மருந்துகள் கடத்தலைத் தடுக்கவும் 1985-ல் மைய அரசு போதை மருந்துகள் மற்றும் மன மயக்கம் அளிக்கும் பொருட்கள் சட்டம் (Narcotice Drugs and psychotropic Substance Act) எனும் சட்டத்தை இயற்றியுள்ளது. இச் சட்டமும் அதன் கீழ் வெளியிடப்பட்டுள்ள விதிகளும் 14—11—1985 முதல் அமலுக்கு வந்துள்ளன. போதை மருந்து சம்பந்தமான குற்றங்களைக் கண்காணிக்கவும், தவறு செய்பவர்கள் மீது நீதிமன்றங்களில் குற்றவியல் நடவடிக்கை தொடரவும் காவல் துறையில் போதைப் பொருள் குற்றத் தகவல் சேகரிப்பு பிரிவு ஒன்று இயங்கி வருகிறது.

இக்குற்றங்களைப் புரிபவர்களுக்கு மேற்குறிப்பிட்ட சட்டத்தில் குறைந்த பட்ச தண்டனையாக 10 ஆண்டு கடுங்காவல் மற்றும் ஒரு லட்ச ரூபாய் அபராதமும், அதிகபட்சமாக 20 ஆண்டு கடுங்காவல் தண்டனையும் மற்றும் 2 லட்ச ரூபாய் அபராதமும் விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. அண்மையில் மைய அரசு இயற்றிய சட்டத்தில் போதை மருந்து கடத்தலில் ஈடுபடுவோரை குறைந்தபட்சம் ஒரு ஆண்டு தடுப்புக் காவலில் வைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக கேரள மாநிலத்தை ஒட்டிய எல்லையோர பகுதிகளில் கஞ்சா பயிரிடுவதைத் தவிர்க்க முனைப்பான நடவடிக்கைகளை காவல் துறை அமல் பிரிவினர் எடுத்துள்ளனர். பல ஏக்கர்களில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா பயிரும், பதப்படுத்தப்பட்ட கஞ்சாவும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

இணைப்பு I

மதுவிலக்கு அமல் பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டதும் முடிவு செயப்பட்டதுமான வழக்குகளின் விவரங்கள்

வரிசைகள் விவரம் (1)	1980 (2)	1981 (3)	1982 (4)	1983 (5)	1984 (6)	1985 (7)	1986 (8)	1987 (9)	1988 (10)
1. கண்டுபிடிக்கப்பட்ட மொத்தம் வழக்குகள்.	20,845	59,293	76,735	93,946	71,260	87,801	90,079	29,014	4,08,326
2. குற்றம் சுமத்தப்பட்ட .. வழக்குகள்.	18,376	44,295	42,366	27,358	53,883	64,303	56,743	2,05,612	2,99,475
3. தண்டனையில் முடிந்த வழக்குகளின் எண்ணிக்கை.	1,554	2,591	2,825	3,234	2,754	1,831	1,661	8,102	39,772
4. விடுதலையில் முடிந்த வழக்குகளின் எண்ணிக்கை.	3,923	7,171	7,778	5,773	6,515	3,878	621	119	297
5. திரும்பப்பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	11,850	30,401	22,452	10,999	790	40	11	2	..
6. விசாரணையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை	1,049	4,132	9,310	7,352	43,824	58,551	55,450	1,97,38	2,59,406
7. நடவடிக்கை கைவிடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	2,469	4,988	34,369	66,287	17,377	23,498	32,336	20,209	31,236
8. புலனாய்விலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை.	..	..	..	..	..	..	..	82	25,742

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-II

மதுவிலக்கு சம்பந்தமாக கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள், கைப்பற்றப்பட்ட ஊர்திகளின் எண்ணிக்கை மற்றும் கைப்பற்பட்ட மதுபானங்களின் அளவு விபரம் பின்வருமாறு :

வரிசை எண், விவரம்.	1983	1984	1985	1986	1987	1988
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1. கண்டுபிடிக்கப்பட்ட மொத்த வழக்குகள்.	93,645	71,260	87,801	90,079	2,29,014	4,08,326
2. கண்டுபிடிக்கப்பட்ட கள்ளச் சாராயம் (லிட்டரில்).	3,90,700	5,44,058	5,55,814	4,48,884	27,30,120	35,47,099
3. அழிக்கப்பட்ட சாராய ஊறலின் அளவு)லிட்டரில்).	83,83,423	5343,458	85,05,050	90,06,792	2,49,36,679	4,24,80,57
4. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மதுவகை கைப்பற்றிய புட்டிகளின் எண்ணிக்கை						
முழுமையானது	5,852	2,425	1,939	1,547	12,631 ஸி	1,346
அரை	9,052	1,258	1,944	1,732	5,491	1,776
கால்	4,971	4,986	9,609	7,035	47,722	32,701
5. கைப்பற்றப்பட்ட ஊர்திகளின் எண்ணிக்கை.—						
கார்	26	51	38	22	246	285

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்ணும் விவரமும்.	1983	1984	1985	1986	1987	1988
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
ஜீப்	1	1	2	2	11	6
வேன்	7	26	11	11	76	48
ஆட்டோ ரிக்ஷா	21	14	30	12	90	84
லாரி	3	4	14	12	43	35
மோட்டார் சைக்கிள் ..	5	7	9	..	221	360
படகு	..	..	..	..	1	..
ஸ்கூட்டர்	1	1	1	3	22	21
பஸ்	..	..	..	..	4	2
டிரக்கர்	..	..	..	..	8	4
மொத்தம்	64	104	105	62	722	845

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 ஏப்ரல் 27]

தமிழ் நாடு காவல் துறை.

ஆய்வுரை.

1. மக்களின் நல்வாழ்வை அடிப்படையாகக் கொண்ட நமது மாநிலம் போன்ற ஒன்றில், காவல் துறையினரின் பணிகள் சிக்கல் மிக்கதாகவும், பல்வேறு சமுதாய மற்றும் பொருளா தாரச் சட்டங்களைச் சீராகவும், முறையாகவும் நிறைவேற்ற அரசுக்கு பலவகையில் உதவுவதாகவும் உள்ளன. காவல் துறையினர் தக்க நிலைமைகளையும், சுற்றுச் சூழலையும் உருவாக்க வேண்டியுள்ளது. மாநிலத்தில் தொழில் வர்த்தகம் போன்றவற்றின் வளர்ச்சிக்கு இவையே அடிப்படையானவை.

2. காவல் துறையின் கடமைகளை, மக்களை முறைப் படுத்துதல், குற்ற நிகழ்வைத் தடுத்தல் மற்றும் கண்டு பிடித்தல் என வகைப்படுத்தலாம். முறைப்படுத்தும் பணிகள், நகர சாலைகளில் போக்குவரத்துச் சட்டம் மற்றும் விதிகளைச் செயல்படுத்துதல், முக்கிய நபர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல் வங்கிகள், தொழில் நிறுவனங்கள் போன்றவற்றிற்குப் பாது காப்பு அளித்தல் போன்றவைகளைக் கொண்டதாகும். தடுப்புப் பணிகள் என்பவை முன்கூட்டியே தகவல் சேகரித்தல் இனக் கலவரம் தொழிலாளர் அல்லது மாணவர்களின் அமைதி யின்மை ஆகியவற்றால் ஏற்படும் பிரச்சினைகளின் விளைவுகளை முன்கூட்டியே அறிந்து, அவற்றைக் கட்டுப்படுத்துதல் மற்றும் செயலிழக்கச் செய்தல் போன்ற நடவடிக்கைகளை எடுப்ப தாகும். காவலர்களின் துப்பு துலக்கும் பணியானது குற்றங் களை உடனுக்குடன் புலன் விசாரணை செய்து கண்டுபிடித்தல், குற்றவாளிகளைக் கைது செய்தல் மற்றும் தொடர்ந்த வழக்கு களின் அடிப்படையில் தண்டனை பெற்றுத் தருதல் ஆகிய வற்றை உள்ளடக்கினதாகும். தொழில் மயமாக்கம் மற்றும் நகர்ப்புறங்களின் விரிவாக்கம், கிராமப் புறங்களிலிருந்து நகரங் களுக்கு மக்கள் குடிபெயருதல் மற்றும் மாறி வரும் சமூக நீதிகள் ஆகியவற்றால், குற்றங்கள் மற்றும் குற்றங்கள் புரிதலின் தன்மைகள் ஆகியவை பெரிதும் மாறியுள்ளன. இவ் வாறு மாறிய சூழ்நிலையில் குற்றங்களைக் கண்டு பிடிப்பதற்கு காவல் துறையினர் நவீனக் கருவிகள் மற்றும் நடைமுறைகளைக் கையாள வேண்டியுள்ளது.

3. தனது பொறுப்புக்களை நன்குணர்ந்த தமிழ் நாடு காவல் துறை, தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பல்வேறு பணிகளை நல்ல முறையில் நிறைவேற்ற, தக்க ஆர்வம் மற்றும் பணியின் பால் ஈடுபாடு ஆகியவற்றைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருவதன் மூலம், அரசு மற்றும் பொது மக்களின் பாராட்டை ஒருங்கே பெற்றுள்ளது.

4. சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைமையை மேம்படுத்தும் வகையில் மது விலக்குச் சட்டம், வரதட்சணை தடைச் சட்டம், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் போன்ற பல்வேறு சமூக நலச் சட்டங்களை தமிழக காவல் துறையினர் நல்ல முறையில் செயல் படுத்தி வருகின்றனர்.

5. தமிழக காவல் துறையினர் பரபரப்பு மிக்க பல வழக்குகள் வங்கி கொள்ளைகள், குண்டு வெடிப்பு வழக்குகள் ஆகிய வற்றைக் கண்டு பிடித்துள்ளனர். காலதாமதமின்றி குற்றவாளிகளைப் பின்தொடர்ந்து கண்டுபிடித்து, அவர்களுக்கு நீதி மன்றங்களில் தண்டனை பெற்றுத் தந்து நாட்டிலேயே தங்களுக்கென ஒரு தனி இடத்தை தமிழக காவல் துறையினர் பெற்றுள்ளனர். கிராமப் புறங்களில், காவல் துறையினர் பணியாற்ற மக்கள் தங்களுக்கு உதவிடும் வகையில் அவர்களின் ஆதரவினைப் பெறுதல் மற்றும் இது போன்ற நடவடிக்கைகள், காவலர்-பொது மக்கள் உறவுகளை வெகுவாக மேம்படுத்தியுள்ளன.

6. காவல் துறையினரின் பொறுப்புமிக்க கடமைகளை மனத்தில் கொண்டு, அவர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதி, நல்ல தகவல் தொடர்புமுறை குற்றங்களைக் கண்டு பிடிப்பதற்காக நவீன விஞ்ஞான கருவிகள் போன்ற வசதிகளை அளிப்பதன் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது.

7. நவீன காவல் படைக்கு, அதன் பணியாளரமைப்பு, நவீன கருவிகள், தெளிவான வரையறுத்த ஆணை, கட்டுப்பாடு ஆகியவை மிகவும் இன்றியமையாதவையாகும். பணியாளர் தொகுதியைப்பற்றியும், காவல் துறையினுடைய அமைப்பு பற்றியும் விவரங்கள் பகுதி 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

8. காவல் துறை திறமையாகச் செயல்பட வேண்டுமானால் அதற்கு நல்ல தகவல் தொடர்பு சாதன அமைப்பும், வலுவான வாகன வசதியும் அளிக்கப்படுவது அவசியமாகும். பகுதி 2 மற்றும் 3 ஆகியவை காவல் துறையில் உள்ள தகவல் தொடர்பு மற்றும் அறிவியல் சாதனங்கள் பற்றிக் கூறுகின்றன.

9. காவலர்கள் ஒழுக்க உணர்வுடன் செயல்படுவதற்கு அவர்களை ஊக்குவிக்கும் வகையில் கூறப்படுத்தியுள்ள பல்வேறு நல வளர்ச்சித் திட்டங்களை பகுதி 4 குறிப்பிடுகின்றது.

10. காவல் துறையினை நவீனப்படுத்துவதற்கு மைய அரசு கொடுக்கும் உதவி பற்றி, பகுதி 5 விவரிக்கிறது.

11. குற்றங்கள். சட்டம், ஒழுங்கு ஆகியவற்றின் விவரங்கள் பகுதி 6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

12. பொது மக்களின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காக தமிழக காவல் துறை மேற்கொள்ளும் முயற்சிகள் மற்றும் தற்போது அவர்களுக்கிடையே நிலவும் நல்லுறவு ஆகியவை, பகுதி 7-ல் விவரிக்கப்பட்டுள்ளன.

13. 1988 ஆம் ஆண்டில் காவல் துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட பல்வேறு திட்ட விவரங்களை பகுதி 8 குறிப்பிடுகின்றது.

பகுதி 1.

அமைப்பும் பணியாளர் தொகுதியும் :

14. தமிழ்நாடு காவல் துறை காவல் துறை இயக்குநரின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இவர் சட்டம், ஒழுங்கை பராமரிப்பதுடன் மொத்த மாக மாநிலத்தின் காவல் துறை நிருவாகப்பொறுப்பினையும் கவனித்து வருகிறார். காவல் துறை தலைமை இயக்குநரின்கீழ் பணிபுரியும் காவல் துறை இன்ஸ்பெக்டர்—ஜெனரல் (சட்டம் மற்றும் ஒழுங்கு) இம்மாநிலத்தின் அன்றாட நிருவாகப் பணிகளையும், சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டும் பணியினையும் மேற்கொண்டுள்ளார். காவல் துறை இன்ஸ்பெக்டர்—ஜெனரல் (குற்றங்கள்) சிறப்பு குற்ற வழக்குகள் மற்றும் தொழில் நுட்பப்பணிகளைக் கவனித்து வருகிறார். காவல்துறை துணைத் தலைவர் (நுண்ணாய்வு) பாதுகாப்பு மற்றும் நுண்ணாய்வு பணிகளைக் கவனித்து வருகிறார். காவல் துறை இன்ஸ்பெக்டர்—ஜெனரல் (வனப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை) வனவளம் மற்றும் உணவுப் பொருள் வழங்கு துறைத் தொடர்பான குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணியினை மேற்கொண்டுள்ளார். காவல்துறை இன்ஸ்பெக்டர்—ஜெனரல் (ஊர்க்காவல் படை) மாநிலத்தின் சிவில் பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் படை நிருவாகத்தைக் கவனித்து வருகிறார். காவல்துறை துணைத் தலைவர் (மதுவிலக்கு செயல் பிரிவு) பதவி 1988ஆம் ஆண்டிலிருந்து காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவியாக உயர்த்தப்பட்டு, அவர் மதுவிலக்கை செயல்படுத்தும் பொறுப்பினை மேற்கொண்டுள்ளார். காவல்துறை இன்ஸ்பெக்டர்—ஜெனரல் (படைக் கலப்பிரிவு மற்றும் பயிற்சி), தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிகளின் நிருவாகம் மற்றும் பயிற்சி ஆகியவற்றைக் கவனித்து வருகிறார்.

15. தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இந்திய காவல் பணிப் பதவிகளின் எண்ணிக்கை 156 ஆகும். 1988ஆம் ஆண்டில் 2 இந்திய காவல் பணி அதிகாரிகள் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 இந்திய காவல் பணி அதிகாரிகள் இவ்வாண்டில் தமிழ் நாட்டிற்கான இந்திய

காவல் பணி பதவிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளனர் மாநில காவல் பணியிலுள்ள அதிகாரி ஒருவர் பதவி உயர்வு பெற்று, தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்பட்டு இந்திய காவல் பணிப் பதவியில் நியமிக்கப்பட்டார். 1988ஆம் ஆண்டில் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் நிலை-1, பதவிக்கு எவரும் நேரடியாக நியமிக்கப்படவில்லை.

16. இணைப்பு 1இல் கண்டுள்ளவாறு 1989ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1ஆம் நாள் நிலவரப்படி தமிழ்நாடு காவல்படையினரின் மொத்த எண்ணிக்கை 66,872 ஆகும். 1988ஆம் ஆண்டில் 684 நிருவாகப் பதவிகளும், 84 அமைச்சுப் பதவிகளும் 32 பிற பதவிகளும் ஏற்படுத்தப்பட்டன. இவற்றின் விவரங்கள் இணைப்பு 2இல் கொடுக்கப்பட்டுள்ளன.

17. தமிழ்நாடு சேமக் காவல் படையின் 189 பிரிவுகளும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 9 அணிகளும் சட்டம் மற்றும் ஒழுங்கைத் திறம்படப் பேணிக் காத்திட உள்ளூர் காவல் துறையினருக்கு உதவி வருகின்றனர். தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 6ஆவது அணி இம்மாநில அரசுக்கு வெளியே மைய அரசின் கீழ் புதுடில்லியில் தொடர்ந்து முகமைப் பணியில் உள்ளது.

18. இம்மாநிலத்தில் சென்னை, தென் ஆற்காடு, மதுரை' கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, வட ஆற்காடு, சேலம் மற்றும் சிதம்பரனார் மாவட்டம் ஆகிய எட்டு இடங்களில் உள்ள துப்பறியும் நாய்ப்படைகள் குற்றங்களைக் கண்டுபிடித்து காவல் துறையினருக்குத் துணை புரிவதில் சிறப்பான பணியினை ஆற்றி வருகின்றன. இவைகளின் பணி, 1988ஆம் ஆண்டு 849 வழக்குகளில் பயன்படுத்தப்பட்டன. இவற்றில் 284 வழக்குகளில் அவை பயன் உள்ளவையாக இருந்தன.

19. மக்கள் கூட்டங்களைக் கட்டுப்படுத்துவதிலும் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்துவதிலும் குதிரைப்படை தனது பணியினைத் தொடர்ந்து திறமையாக நிறைவேற்றி வருகிறது. சென்னையிலுள்ள குதிரைப்படைப் பிரிவு 34 குதிரைகளுடன் செயல்படுகிறது. மதுரையில் 10 குதிரைகள் கொண்ட குதிரைப்படைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

20. ஆதிதிராவிட மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் மற்றும் தீண்டாமை ஆகியவற்றை ஒழிக்கும் நோக்கத்தைச் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்காகக் குடியுரிமைப்பாது காப்புச் சட்டத்தின் விதிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதில் அரசு முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. குடியுரிமைச் சட்டம் தமிழ்நாட்டிலுள்ள எல்லா காவல் நிலையங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இது தவிர, ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும் ஒரு ஆய்வாளர், ஒரு சார்பு ஆய்வாள இரண்டு தலைமைக் காவலர்கள், இரண்டு இரண்டாம் நிலை

1989 ஏப்ரல் 27]

காவலர்கள் மற்றும் ஒரு ஜீப்பும் கொண்ட 24 நடமாடும் காவல் அணிகள் இந்தச் சட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்துவதற்காக 24 காவல் மாவட்டங்களில் பணியாற்றி வருகின்றன. இந்த நடமாடும் காவல் அணிகள் அந்தந்த மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களின் நேரடி மேற்பார்வையில், மாவட்ட குற்றப் பிரிவு வைப்பறைக் கூடக் காவல் துணைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்திற்கான காவல்துறைத் துணைத் தலைவர் இச்சட்டம் திறம் படச் செயல்படுவதைக் கண்காணித்து வருகிறார். சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரையைத் தலைமையகமாகக் கொண்டு காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் தலைமையின் கீழ் செயல்படும் மூன்று மேற்பார்வை அணிகள் காவல்துறை துணைத் தலைவருக்கு உதவியாக செயல்பட்டு வருகின்றன. இது தவிர, இச்சட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏற்படுகின்ற முன்னேற்றத்தைப்பற்றிய புள்ளி விவரங்களை அவ்வப்போது முறைப்படி கண்காணிக்க மாவட்டந்தோறும் ஒரு புள்ளியியல் ஆய்வாளர் மற்றும் ஒரு சார்பு ஆய்வாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்டங்களில் மேற்கண்ட பணியாளர்களின் உதவியோடு ஒரு பொருளாதார நிபுணர் மற்றும் ஒரு சமூக இயல் வல்லுநர் அடங்கிய ஒரு ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு, தீண்டாமை அதிகமகாத் தென்படும் இடங்களில் மாதிரி ஆய்வுகள் நடத்திக் குறைகளைக் களைவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிக்கை அனுப்புகிறது, நலிவடைந்த பிரிவினருக்குக் குடிநீர் தெரு விளக்குகள் இடுகாட்டுக்குச் செல்வதற்கான பாதை போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து அரசின் கொள்கைகளை கண்டிப்பாக நிறைவேற்றுவதற்காக மாவட்டங்களில் உள்ள குடியுரிமைப் பாதுகாப்பு பிரிவுகள் மாவட்டங்களிலுள்ள அலுவலர்களுடன் நெருங்கி ஒத்துழைக்கின்றன.

21. நீதித்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் ஒரு முதல் வகுப்பு குற்றவியல் நீதிபதி மற்று பணியாளர்கள் அடங்கிய நான்கு சிறப்பு நீதி மன்றங்கள் தஞ்சாவூர் மேற்கு மாவட்டத்தில் கும்பகோணம், திருச்சிராப் பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இத்தகைய சிறப்பு நீதிமன்றங்கள் செயல்படும் மேற்கூறிய நான்கு இடங்களிலும், நீதிமன்றப் பணிகள் அதிகமாக நிலுவையில் இருக்கின்ற தென்னாற்காடு, கோயம்புத்தூர் (கிராமப்புறம்) மற்றும் திண்டுக்கல்-காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களிலும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு காவல் சார்பு ஆய்வாளர் ஒரு தலைமைக் காவலர் மற்றும் ஒரு இரண்டாம் நிலைக் காவலர் ஆகியோர் அடங்கிய 7 வழக்குத் தொடரும் அணிகளும் பணியாற்றி வருகின்றன. 1988ஆம் ஆண்டில் இவ்வழக்குத் தொடரும் அணிகள் 882 வழக்குகளைப் பதிவு செய்தன. அதில் மொத்தம் 51 வழக்குகள் தண்டனையில் முடிவடைந்தன.

பெண் காவலர்கள் :

22. 1973-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு காவல் துறையின் பெண் காவலர்களின் பணி தொடர்ந்து பயன் நிறைந்ததாக உள்ளது. பெண் கைதிகளைச் சோதனையிடல், மற்றும் பெண் குற்றவாளிகளைக் கைது செய்து நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லுதல் இளங்குற்றவாளிகளை கைது செய்து நீதி மன்றங்களுக்குக் கொண்டு செல்லுதல், மகளிர் மருத்துவ மனைகள் மற்றும் கல்வி நிலையங்களில் பெண்களுக்கெதிரான குற்றங்கள் இழைக்கப்படுவதிலிருந்து அவர்களுக்கு பாதுகாப்பளித்தல் போன்ற பணிகளை இவர்கள் திறமையாகச் செய்து வருகின்றனர். தற்பொழுது தமிழ்நாடு காவல் துறையில் உள்ள பெண்காவலர் பிரிவில் 88 சார்பு ஆய்வாளர்கள், 80 தலைமைக் காவலர்கள் மற்றும் 690 காவலர்கள் உள்ளனர்.

தேர்வு மற்றும் பயிற்சி :

23. 1988-ஆம் ஆண்டில் 4,472 பேர் இரண்டம் நிலை காவலர்களாத் தேர்வு செய்யப்பட்டனர். அவர்கள் தங்களது பயிற்சி முடிந்த பின்னர், 1988ஆம் ஆண்டு அக்டோபர்-நவம்பர் மாதத்தில் மாவட்டங்களில் பணிபுரிய நியமிக்கப்பட்டனர். 1988-ஆம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் மாதத்தில் தேர்வு செய்யப்பட்ட 2,300 பேர் கொண்ட மற்றொரு பிரிவினர் தற்போது காவலர் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

24. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணிபுரிய 724 பேர் காலவலர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். பயிற்சிக் காலம் முடிந்தும் அவர்கள் 1988-ஆம் ஆண்டு யூனிட்டுகளுக்கு அனுப்பப்பட்டனர். ஆவடியிலுள்ள பயிற்சி மையத்தில் தமிழ்நாடு சிறப்புக் காவல்படை பிரிவில் 317 காவலர்கள் 1988ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ஆம் நாள் முதல் பயிற்சி பெற்று வருகின்றனர்.

25. தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணியின்கீழ் காவல் துறை சார்பு ஆய்வாளர்கள், ஆயுதப்படைப் பிரிவு சார்பு ஆய்வாளர்கள், மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் சார்பு ஆய்வாளர்கள் ஆகிய மூன்று வகைப் பதவிகளுக்காக நடைபெற்ற தேர்வில் 1,058 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு சென்னை மற்றும் வேலூரிலுள்ள காவல பயிற்சிக் கல்லூரிகள், ஆவடியில் உள்ள பயிற்சி மையம் மற்றும் மணிமுத்தாறிலுள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 9-வது அணியில் தற்காலிமக பயிற்சி மையம் ஆகிய இடங்களில் ஒரு ஆண்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

1989 ஏப்ரல் 27]

பகுதி 2.

தகவல் தொடர்பு முறை :

26. தமிழகக் காவல் துறை பணியில் நுண்ணலை மற்றும் மின்னியல் ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டதையடுத்து, தமிழகக் காவல் துறையின் தகவல் தொடர்பு முறையில் ஒரு விரைவான மாற்றம் ஏற்பட்டுள்ளது. இத்தொடர்பு முறையினால் இம்மாநிலத்தில் அனைத்துக் காவல் நிலையங்களும், ரேடியோ பொருத்தப்பட்ட வாகனங்களும், மாநில காவல் தலைமையகத்துடன் உடனடி தொடர்பு கொள்ள முடிகிறது. தேர்தல்கள், மிகமுக்கிய நபர்களின் வருகை, சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்சினைகள் போன்ற முக்கியமான நிகழ்ச்சிகள் காவல் தொடர்பு சாதனங்களின் மீது பெரும் பளுவை ஏற்படுத்தியுள்ளன. திறமையான தகவல் தொடர்பு முறை ஏற்படுத்திக் கொடுக்காவிடின் காவல் துறையினர் திறமையாகவும் உடனடியாகவும் செயல்படுவதென்பது இயலாது. இவ்வகையில் தமிழகக் காவல் துறையின் சாதனை பாராட்டுக்குரியது.

27. இராமநாதபுரம், திண்டுக்கல்-காயிதேமில்லத் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்கள் நீங்கலாக, அனைத்து மாவட்டத் தலைமையிடங்களும் மாநிலக் காவல் தலைமையகத்துடன் காவல் வானொலி நிலையம் ஏற்படுத்திய நுண்கலை மீவுயர் அலை (VHF) அல்லது அதிமீவுயர் அலை (VHF) வானொலிச் சாதனங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இம்முறையின் வழியாக ஒலி மற்றும் தொலையச்சுப் பொறி நேரடித்தொடர்பு வசதி செய்து தரப்பட்டுள்ளது.

28. தமிழ்நாட்டில் உள்ள 1,034 காவல் நிலையங்களி 1,004 காவல் நிலைங்களும், 106 உட்கோட்டங்களில் 82 உட்கோட்டங்களும் மீவுயர் அலைக் கருவிகள் மூலமாக அந்தந்த மாவட்டத் தலைமையகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. எனவே, மாநிலத்திலுள்ள காவல் நிலையங்களில் 97 விழுக்காடு தத்தம் மாவட்டத் தலைமையகங்களுடன் நேரடித் தொடர்பு கொள்ள முடியும்.

29. மைய அரசின் உதவியுடன் காவல் துறையினை நவீனமாக்கும் திட்டத்தின்கீழ் 1,080 வாக்கிடாக்கி கருவிகள் வாங்கப்பட்டு தமிழ்நாடு சிறப்புக் காவல் படை உட்பட மாவட்டங்களில் உள்ள பல்வேறு காவல் நிலையங்கள், சென்னை நகரக் காவல் படை மற்றும் இருப்புப் பாதைக் காவல் க படை ஆகியவற்றில் தொடர்ந்து பயன் படுத்தப் படுகின்றன. இது தவிர, கையில் எடுத்துச் செல்லக் கூடிய 324 கருவிகள் காவல் கட்டுப்பாட்டு நிலையம் மற்றும் புறக் காவல் நிலையங்களின் பயனுக்காக வழங்கப்பட்டுள்ளன

30. இவ்வாண்டில் வேலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரிலுள்ள காவல் சரகத் தலைமையகங்கள் நுண்ணலை வானொலித் தொடர்பு மையத்துடன் இணைக்கப் பட்டுளள்ன. இதப் ன்மூலம், காவல் துறைத் துணைத் தலைவர்கள் மாவட்டங்களிலுள்ள காவல் துறைக் கண்காணிப்பாளர்களுடனும், காவல் துறைத் துணைத் தலைவர்கள் மாநில தலைமையகத்தில் உள்ள அதிகாரிகளுடனும் நம்பகமான கூடுதல் செய்தி தொடர்பு கொள்ளை ஏதுவாகிறது. இத் திட்டம், ரூபாய் 162 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டது. வட சென்னையில் தகவல் தொடர்பு சாதனங்களுக்கான புதி கட்டிடமொன்று ரூபாய் 3 இலட்சம் செலவில் சட்டப்பட்டு, 1988-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் செயல்படத் தொடங்கிது. காவல் துறை வானொலிப் பிரிவு காவல் துறைக்குத் தொடர்ந்து செய்தித் தொடர்புகளை அளித்து வருகிறது.

31. 1988-ஆம் ஆண்டில், காவல் துறையில் பயன்படுத்துவதற்காக ரூபாய் 24.47 இலட்சம் செலவில் 14 மோட்டார் வண்டிகள் வாங்கிட, அரசு அனுமதி அளித்தது. மேலும் பயனற்றது என்று கழிக்கப்பட்ட 157 மோட்டார் வண்டிகளுக்குப் பதிலாக புதிய வண்டிகளை வாங்க அரசு ரூபாய் 147.25 இலட்சம் அனுமதி அளித்துள்ளது. துறை வண்டிகளை நல்ல முறையில் பராமரிப்பதற்காக ஆவடி மற்றும் திருச்சிராப்பள்ளியில் இரண்டு பணி மனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன

பகுதி 3.

அறிவியல் சாதனங்கள் :

32. அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் ஏற்பட்ட முன்னேற்றம், அதிகரித்து வரும் கணினிகளின் (Computer) பயன் ஆகியவை உலகெங்கும் நிர்வாக முறைகள் நவீனமடை) உதவியுள்ளன. தமிழ்நாடு காவல் துறை இந்த வளர்ச்சிகளை நன்கு பயன்படுத்திக்கொண்டு, குற்றங்கள் பற்றிய விவரங்கள் மற்றும் குற்றங்களைத் துப்புத் துலக்கல் போன்ற பணிகளை தொகுப்பதில் புதிய உத்திகளைக் கையாண்டுள்ளது.

கணினி பிரிவு :

33. மாநிலக் காவல் துறையை நவீனப்படுத்தும் மைய அரசின் திட்டத்தின்கீழ் டி.டி.சி. 316 கணினி ஒன்று 1971-ஆம் ஆண்டில் காவல் துறையில் ரூபாய் 74 இலட்சம் செலவில் நிறுவப்பட்டது. இந்த கணினி பிரிவு சொத்து தொடர்பான குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் பற்றி புலன் விசாரணை செய்தல், தகவல்களைச் சேகரித்தல், சேமித்தல் மற்றும் மீண்டும் அவற்றைப் பெறுதல் ஆகியவற்றுக்கான பணிகளில் ஈடுபட்டுள்ளது. 1988ஆம் ஆண்டு இறுதி வரை மொத்தம் 2,89,348 குற்றப் பதிவேடுகளும், 2.97,624 குற்றவாளிகள்

1989 ஏப்ரல் 27]

பற்றிய பதிவேடுகளும் தொகுக்கப்பட்டு கணினி தகவல் சேகரிப்பு நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. நுண்ணலை தொலைத் தகவல் தொடர்பு மூலம் செயல்படும் கணினி செயலாக்கம் 1984ஆம் ஆண்டு மே மாதம் தொடங்கப்பட்டது. இம்முறையின் மூலம் மாவட்டத் தலைமையகங்கள் தொலையச்சுத் தொடர்பு மூலம் கணினியை நேரடியாகத் தொடர்பு கொண்டு கண்டுபிடிக்க முடியாத அனைத்து சொத்து தொடர்பான குற்றங்களிலும் உடனுக்குடன், தகவல்களைக் கேட்டுப் பெற முடியும். இவ்வாறாக 1988ஆம் ஆண்டில் கண்டுபிடிக் பிடிக்க முடியாத சொத்துப் பற்றிய குற்ற வழக்குகளில் குற்ற முறைகளின் அடிப்படையில் சந்தேகப்படும் குற்றவாளிகள் பற்றிய பட்டியல் தயார் செய்யப்பட்டு 20,295 தகவல் குறிப்பாணைகள் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டன.

போக்குவரத்து விபத்து தகவல் முறை :

34. மோட்டார் வண்டிப் போக்குவரத்து விபத்துக்கள் பற்றிய விவரங்களைச் சேகரித்து, இதன் மூலம் தவறு செய்யும் ஓட்டுனர்களைக் கண்காணித்து இவற்றின் அடிப்படையில் சாலை விபத்துக்களைக் குறைக்கும் வகையில் ஒரு ஆய்வையும் கணினி பிரிவு மேற்கொண்டுள்ளது. இந்த ஏற்பாட்டைச் செயல்படுத்துவதற்காக இரண்டு கணினிகள் வாங்குவதற்காக ரூ. 3,92,000மும் ஆண்டுதோறும் தொடரினச் செலவாக ரூபாய் 10,000மும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

35. புது டில்லியிலுள்ள தேசிய குற்றவியல் ஆவணக் கூடம் தற்போதைய டி.டி.சி. 316 கணினிக்குப் பதிலாக நவீன கணினி அமைக்கலாமெனத் திட்டமிட்டுள்ளது, இதன்படி தமிழகக் காவல் துறை ஒரு சிறு கணினியையும் 8 மாவட்டங்களுக்கு. 8 பர்சனல் கணினிகளையும் நிலை 1-ன்படி பெறமுடியும் மாவட்ட மற்றும் மாநில அளவுகளில் குற்றப் பதிவேடுகளைக் கணினிகளில் பதிவு செய்யவும் தேசிய அளவில் கணினிகள் மூலம் தொடர்பு கொள்ளவும் இதன் மூலம் ஏதுவாகும்.

தமிழ்நாடு விரல் ரேகை பதிவுப் பிரிவு :

36. தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுக் கூடம் மற்றும் மாவட்டங்களில் செயல்படும் 25 ஒரு விரல் ரேகைப் பதிவுக் கூடங்களும் புலனாய்வு அதிகாரிகள் தாங்கள் கைது செய்யும் சந்தேகத்திற்குரிய குற்றவாளிகளின் முந்தைய நடவடிக்கைகளை அறிந்து கொலை, கொள்ளை, கன்னக் களவு போன்ற பல்வேறு குற்றங்களில் குற்றம் நடைபெற்ற இடங்களிலிருந்து பெறப்படும் கண்ணுக்குப்புலனாகாத விரல் ரேகைப் பதிவுகளைக் கொண்டு குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களைக் கைது செய்ய உதவுகின்றன. சென்னையில் விரல் ரேகைப் பதிவுக் கூடத்தில் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளின் விரல் ரேகை அட்டைகள்

[1989 ஏப்ரல் 2

6.01 இலட்சம் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. குற்ற நிகழ்வு நடந்த இடத்தில் காணப்பட்ட பதிவுகள் மூலம் 965 குற்றங்களில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

37. குற்ற நடவடிக்கை பற்றிய தகவல் கிடைத்தவுடன் விரல் ரேகைப் பிரிவில் பணியாற்றும் பணியாளர்கள் குற்றம் நடைபெற்ற இடத்திற்கு நேரில் சென்று அவ்விடங்களில் உள்ள விரல் ரேகைப் பதிவுகளை விரிவு படுத்துவர். தங்களிடம் உள்ள ஆவணங்களில் காணப்படும் விரல் ரேகைப் பதிவுகளுடன் இப்படி கண்டெடுக்கப்பட்ட விரல் ரேகைப் பதிவுகளை அவர்கள் அயராது ஒப்பிட்டுத்தேடுதலின் மூலம் குற்றவாளியைக் கண்டு பிடிக்க இயலும். இப்படி கிடைக்கப்பட்ட அரிய தகவலை அவர்கள் புலன் விசாரணை அலுவலர்களுக்குத் தெரிவிக்கின்றனர். நீதிமன்ற விசாரணையின்போது இவர்கள் குற்றச் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து எடுக்கப்பட்ட விரல் ரேகைகளைப் பற்றி சாட்சியம் அளிக்கின்றனர்.

38. இதுவரை 18,78,257 குற்றவாளிகளின் விரல் ரேகைகள் சேகரிக்கப்பட்டு, ஒரு விரல் ரேகைப் பதிவுக் கூடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க அடிப்படையாக விளங்குகின்றன.

39. அதிக வேகத்தில் குற்றப் பதிவுகளைத் தானாகவே தேடிக் கண்டுபிடிக்கக் கூடியதும், குற்றவாளிகளின் அடையாளத்தை வேகமாக கண்டுபிடிக்கக் கூடியதுமான மாநிலத் தலைமையகத்தில் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள 'மிராகோட்' என்ற மின்னணுக் கருவியைத் தவிர மின்னொளிப் பாய்தலின் மூலம் 'ரேகையைக் கண்டுபிடிக்கும்' நுண்ணிய மின்னணுக்ச் சாதனம் ஒன்றும் 1988 ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து வாங்கப்பட்டுள்ளது. இக் கருவியைப் பயன்படுத்துவதற்குப் பயிற்சி பெறுவதற்காக விரல் ரேகைப் பதிவு நிபுணர்கள் இருவர் அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டு பயிற்சி பெற்று வந்தனர். இக் கருவி குற்றம் நடந்த இடத்திற்கு நிபுணர்கள் செல்கையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மனிதக் கண்களைவிட 500 மடங்கு அதிக சக்தி வாய்ந்த இக் கருவி சுவர்கள் மரம் போன்ற பல்வேறு பொருள்களிலுள்ள கண்ணுக்குப் புலனாகாத ரேகைகளைப் பெரிதாக்க உதவும்.

தடய அறிவியல் துறை :

40. தமிழ்நாடு தடய அறிவியல் துறை, 1849 ஆம் ஆண்டில் முதன்முறையாக தனது தடய அறிவியல் பணியைத் துவக்கியது ஆசியாவிலேயே மிகவும் பழமையான நிறுவனங்களில் தடய அறிவியல் துறையும் ஒன்றாகும். சட்டத்தைச் செயல்படுத்தும் மைய, மாநில அரசைச் சார்ந்த அனைத்து நிறுவனங்களுக்கும் தேவைப்படும் போதெல்லாம் தடய அறிவியல் பணியை இவ் வறிவியல் துறை செய்து வருகிறது.

1989 ஏப்ரல் 27]

41. சென்னையில் உள்ள பரிசோதனைக் கூடத்தில் துப்பாக்கியியல், உயிரியல், வேதியியல் ஆவணம், ஆயம் நிழற்படப் பிரிவு, இயற்பியல், மதுவிலக்கு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி குருதி நீரியல் பிரிவு, நஞ்சியல், போதைப் பொருட்கள் பிரிவு, கருவிகள் பிரிவு என 13 பிரிவுகள் உள்ளன. மேலும் மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, வேலூர், சேலம் ஆகிய ஆறு இடங்களில் வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்கள் இயங்கி வருகின்றன. மதுரை, கோயம்புத்தூர், தஞ்சை ஆய்வகங்களில் மதுவிலக்கு மற்றும் நஞ்சியல் பிரிவுகள் மட்டும் உள்ளன. திருநெல்வேலியில் உள்ள வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகத்தில் மேற்படி பிரிவுகளோடு உயிரியல் பிரிவுகளும் உள்ளன. வேலூர் சேலம், ஆகிய வட்டாரத்தடய அறிவியல் ஆய்வகங்களில், மது விலக்குப் பிரிவு மட்டும் செயல்பட்டு வருகிறது. குற்றங்களைக் கண்டு பிடிப்பதற்காக 24 காவல் மாவட்டங்களில் 24 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, சென்னை பெருநகரில் குற்றம் நடந்த இடத்தில் அறிவியல் பணிக்காக 24 மணி நேர நடமாடும் தடய அறிவியல் ஆய்வுக்கூடம் ஒன்று உள்ளது.

42. இத் துறை அறிவியல் பணிவுடன் கல்விப் பணியையும் மேற்கொண்டு வருகிறது. சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, தடய அறிவியல் துறையில், எம். எஸ். சி. மற்றும் டாக்டர் பட்டத்திற்கான வகுப்புகளை நடத்தி வரும் ஒரே அரசுத் துறை இதுதான். மேலும், சுற்றுப்புற நஞ்சியலில் எம். எஸ். சி. பட்டத்திற்கான மாணவர்களுக்கும், தடய மருத்துவத்தில் முதுகலை பட்டத்திற்கான மாணவர்களுக்கும் குற்றவியலில் முதுகலைப் பட்டத்திற்கான மாணவர்களுக்கும் இத்துறையில் வகுப்புகள் நடத்தப்படுவதில் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும், மாநில மருத்துவ நிறுவனங்களுக்கும் இத்துறை உதவுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தடய அறிவியலில் எம். எஸ். சி. வகுப்பில் 18 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். தடய அறிவியலில் டாக்டர் (Ph.D.) பட்டத்திற்கான ஆராய்ச்சிகளை நடத்த, ஆராய்ச்சி மையமாக இத்துறையை சென்னை மற்றும் அண்ணா பல்கலைக்கழகங்கள் அங்கீகரித்துள்ளன.

43. தற்பொழுது இத்துறையில் இயக்குநர் உட்பட 181 விஞ்ஞானிகளும் மற்றும் 213 இதர பணியாளர்களும் ஆக 394 பேர் உள்ளனர். இத்துறையில் ஆண்டுதோறும் சுமார் 1,00,000 வழக்குகளில் சம்பந்தப்பட்ட சுமார் 3,00,000 பொருட்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. 1–1–1988 முதல் 30–12–1988 வரையில், 95,365 வழக்குகளில் சம்பந்தப்பட்ட 3,18,267 பொருட்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

44. மேலும், பசும்பொன் தேவர் திருமகன், திண்டுக்கல்—காயிதே மில்லத் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில், இயங்கும் தடய அறிவியல் ஆய்வகங்கள் செயல்பட ஆரம்பித்துள்ளன. உலகத்தில் முன்னேறிய நாடுகளின் பெருநகரங்களில் உள்ளதைப்

போன்று, இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னையில் 24 மணி நேரமும் இயங்கும் தடய அறிவியல் ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது.

45. ரூபாய் 8.20 இலட்சம் மதிப்புள்ள மாஸ் செலக்டிவ் டிடெக்டருடன் கூடிய காஸ்குரோமோடாக்ராப் கருவி மற்றும் ரூபாய் 15 இலட்சம் மதிப்புள்ள ஸ்கானிங் எலக்ட்ரான் மைக்ரோஸ்கோப் போன்ற நவீன கருவிகள் இந்த ஆய்வகத்தின் தொழில்நுட்ப உத்திகளை மேம்படுத்துவதற்காக வாங்கப்பட்டு உள்ளன.

பகுதி 4.

காவலர் நலம் :

46. காவலர்கள் ஆற்றிடும் பணிகள் பலதரப்பட்டவையாகும். உறுதியுடன் கூடிய நேர்மையும் கடமைப் பற்றும் காவலர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களுடைய பணித் திறனைக் கூட்டுவதில் அவர்களுக்கு ஊக்கமளிக்கும் நடவடிக்கைகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு, அரசு காவலர்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவற்றின் விவரங்கள் வருமாறு :

உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம்.

47. உணவுப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, ரவை, மைதா, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவை காவல் ஆய்வாளர்கள் வரையிலான காவல் துறை அலுவலர்களுக்குக் குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. காவல் வானொலிப் பிரிவில் உள்ள தொழில் நுட்பப் பிரிவு அலுவலர்கள், சுருக்கெழுத்துப் பிரிவு அலுவலர்கள் போன்றவர்கள் கூட இத்திட்டத்தின் கீழ் சலுகை பெறுகின்றனர். இத் திட்டத்தின் கீழ் தற்போதைய அங்காடி விலையில் ஏறக்குறைய 50 சதவீதத்தினை அரசு மானியமாக வழங்குகிறது. இத் திட்டத்தின் கீழ் வருபவர்கள் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 70 பயன் அடைகின்றனர்.

காவலர் வீட்டு வசதித் திட்டம் :

48. காவல் துறையில் பணியாற்றும் 80 விழுக்காடு காவல் துறை சார்நிலை பணியாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் நோக்கத்துடன் 1955-56-ஆம் ஆண்டு காவலர் வீட்டு வசதித் திட்டம் தொடங்கப்பட்டது. 1979-80 முதல் 1983-84 வரையிலான காலத்தில் காவல் துறை மேல்நிலை சார் பணியாளர்களுக்கு 524 குடியிருப்புகள், காவல் துறை கீழ்நிலை சார் பணியாளர்களுக்கு 830 குடியிருப்புகள் மற்றும் படை வீடுகள் கட்டுவதற்கு ஏழாவது நிதிக் குழு ரூபாய் 6.75 கோடி நிதி ஒதுக்கியது. இதனைப் பயன்படுத்தி மேல்நிலை சார் பணியாளர்களுக்கு 523

1989 ஏப்ரல் 27]

குடியிருப்புகளும், காவல் துறை கீழ்நிலை சார் பணியாளர்களுக்கு 3,487 குடியிருப்புகளும், 2,445 படை வீடுகளும் கட்டுவதற்கு ஏழாவது நிதிக் குழு அளித்த தொகையைக் காட்டிலும் கூடுதலாக ரூபாய் 16.65 கோடிக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

49. இதுவரை 3,921 குடியிருப்புகளும், 2,245 படை வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 89 குடியிருப்புகளும் 200 படை வீடுகளும் கட்டப்பட்டு துணைப் பணிகள் நடந்தேறி வருகின்றன.

50. எட்டாவது நிதிக்குழு அத்தகைய ஒதுக்கீடு எதனையும் செய்யவில்லை. ஆனால், 1984-85 ஆம் ஆண்டிலிருந்து 1987-88 ஆம் ஆண்டு வரை காவல் துறையில் காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான பல பதவித் தரங்களிலுள்ளவர்களுக்கு 1,924 குடியிருப்புகளைக் கட்டித் தருவதற்காக அரசு ரூபாய் 1,292.14 இலட்சத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இதுவரை 80 குடியிருப்புகளும், ஒரு படை வீடும் அனுபோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன; 1,844 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. காவல் துறையினருக்கு 80 சதவீதம் வீட்டு வசதி செய்து தரப்பட வேண்டுமென நிர்ணயிக்கப்பட்ட இலக்கில், இதுவரை காவல் ஆய்வாளர் மற்றும் சார்பு ஆய்வாளர்களுக்கு 30 விழுக்காடும், தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்களுக்கு 45 விழுக்காடும் குடியிருப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் :

51. தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றும் காவலர்களுக்குச் சொந்த வீடு கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்ற முக்கிய குறிக்கோளுடன் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் அரசால் ஏற்படுத்தப்பட்டது.

52. இக் கழகம், இதுவரை பல்வேறு பிரிவினர்களுக்குச் சொந்த வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் 1,554 வீடுகளை ரூபாய் 590.45 இலட்சம் செலவில் ''அட்கோ''வின் மொத்த நிதியுதவியான ரூபாய் 273.24 இலட்சத்தைப் பயன்படுத்திக் கட்டிக் கொடுத்துள்ளது.

53. சொந்த வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டுவதைத் தவிர, இக்கழகம், அவ்வப்போது அரசினால் காவல் துறையில் பணிபுரிவோர்களுக்கு வீடு கட்ட ஒப்படைக்கும் திட்டத்தையும் நிறைவேற்றியது. அவ்வாறே இக்கழகம், ரூபாய் 65.83 இலட்சம் செலவில் 100 காவல் துறைப் பணியாளர்களுக்கான குடியிருப்புகளைக் கட்டியது.

54. திண்டுக்கல் மற்றும் காஞ்சீபுரத்தில் காவல் துறையினருக்காக முறையே 267 பணியாளர்கள் குடியிருப்புகளை ரூபாய் 163.80 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் 234 பணியாளர் குடி

யிருப்புகளை ரூபாய் 175.92 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டுவதற்கான பணியை அரசு இக் கழகத்திடம் ஒப்படைத்தது. இதுவரை திண்டுக்கல் திட்டத்திற்காக ரூபாய் 30 இலட்சமும், காஞ்சீபுரம் திட்டத்திற்காக ரூபாய் 20 இலட்சமும் அரசு வழங்கியுள்ளது.

55. இது தவிர, சொந்த வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் ரூபாய் 29 இலட்சம் செலவில் 35 குடியிருப்புகளை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் கழனிவாசலிலும் ஆரம்பிக்க உள்ளது. மேற்படி திட்டத்திற்கு ‘‘அட்கோ’’-வினால் நிதியுதவி அளிக்கப்படும். தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்திற்கு அருகில் ஆகூரில் மேற்குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் 46 வீடுகளை ரூபாய் 38 இலட்சம் செலவில் கட்டுவதற்கான திட்டம் ஒன்றை இக்கழகம் தீட்டியுள்ளது. மேலும் வட ஆற்காடு மாவட்டம் வேலூருக்கருகிலுள்ள தொரப்பாடியில் சொந்த வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் ரூபாய் 85 இலட்சம் மதிப்பீட்டில் 73 வீடுகளைக் கட்ட இக் கழகம் திட்டமிட்டுள்ளது.

56. சென்னை மாநகரிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் நகர்ப்புற நில உச்ச வரம்பு சட்டத்தின்கீழ் பெறப்பட்ட உபரி நிலத்தினைப் பயன்படுத்தி சொந்த வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டித் தருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் திருத்தியமைக்கப்பட்ட நிலக் கொள்கையினை கருத்தில் கொண்டு மதுரை மற்றும் பிற மாவட்டங்களில் புறம்போக்கு நிலங்களைப் பெற்று வீடுகள் மற்றும் தனி குடியிருப்புகள் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் கலைக்கப்பட்ட போதிலும் இப்பணிகளை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தொடர்ந்து செய்யும்.

காவல் நிலையக் கட்டிடங்கள் :

57. எல்லாக் காவல் நிலையங்களும் கூடிய அளவில் அரசு கட்டிடங்களில் இயங்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும் தற்போது மாநிலத்தில் உள்ள 1 034 காவல் நிலையங்கள் மற்றம் 184 புறக் காவல் நிலையங்களில் 768 காவல் நிலையங்களும் 108 புறக் காவல் நிலையங்களும் அரசு கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. மற்றவை வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. 1988 ஆம் ஆண்டு 18 காவல் நிலையக் கட்டிடங்களும், 8 பெண் காவலர் இணைப்புத் தொகுதிகளும் கட்டப்பட்டன.

1989 ஏப்ரல் 27]

காவல் பதக்கங்கள் :

58. காவலர்கள் மிகத் திறமையுடன் செயல்படும் போது அதனை அறிந்து அவர்களின் செயலினைப் பாராட்டுவதற்கும் மற்றும் அவர்களது தொழில் ரீதியான திறமைகளை வளர்க்கவும் பல்வேறு பதக்கங்களை அரசு அளித்து வருகிறது.

தீரச் செயலுக்கான குடியரசுத் தலைவரின் காவல் பதக்கங்கள் :

59. சென்னை மாநகரக் காவல் துறையைச் சார்ந்த ஒரு காவல் ஆய்வாளர் மற்றும் ஒரு தலைமைக் காவலர் ஆகியோருக்கு அவர்களுடைய தீரச் செயலைப் பாராட்டி 1988 ஆம் ஆண்டு தீரச் செயலுக்கான குடியரசுத் தலைவரின் காவல் பதக்கம் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதல் அமைச்சரின் காவல் பதக்கம் (வீரச் செயல் / பாராட்டத்தக்க பணிக்காக) :

60. 1969-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாள் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 1988-ஆம் ஆண்டு தமிழ் நாடு காவல் துறை அதிகாரிகள், காவலர்கள் ஆகிய 15 பேருக்கு வீரச் செயலுக்கான முதல் அமைச்சர் அவர்களின் காவல் பதக்கம் வழங்கப்பட்டது.

குடியரசுத் தலைவரின் காவல் பதக்கம் (குறிப்பிடத்தக்க பணிக்காக)

61. குறிப்பிடத்தக்க பணிக்காக குடியரசுத் தலைவரின் காவல் பதக்கம் சென்னை மாநகர விழிப்புப் பணி—இலஞ்ச ஒழிப்புத் துறையில் பணியாற்றும் கூடுதல் காவல் கண்காணிப் பாளருக்கு வழங்கப்பட்டது.

உயிர் மீட்டல் போன்ற வீரச் செயலுக்கான பிரதமரின் விருது :

62. உயிர் காத்தமைக்கான இந்திய பிரதமரின் பதக்கம் காவல் துறையைச் சேர்ந்த காவலர் ஒருவருக்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதல் அமைச்சரின் காவலர் பதக்கம் (பாராட்டத்தக்க பணிக்காக) :

63. தமிழ்நாடு காவல் துறையில் பணி புரியும் தலைமை காவலர்கள், காவலர்கள் மற்றும் அதற்குச் சமமான பதவியி

லுள்ளவர்கள் 10 ஆண்டுக் காலம் தண்டனை ஏதுமின்றி பணி புரிந்தால் இத்திட்டத்தின் கீழ் பதக்கங்கள் பெறத் தகுதி யுடையவர்கள் ஆவர். 1988 ஆம் ஆண்டு 1,474 பேர்களுக்கு இப்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு காவலர் நல நிதி :

64. தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றும் அனைத்துச் சார்நிலைப் பணியாளர்களின் நிலையினை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு காவலர் நல நிதி தொடங்கப்பட்டது. இந்நிதியின் வருவாய் இத்திட்டத்தில் தாமாகவே சேருபவர்களிடமிருந்து பெறப்படும் சந்தா தொகை மற்றும் அதிகாரிகளிடமிடந்து பெறப் படும் நன்கொடை ஆகியவை மூலம் திரட்டப்படுகிறது. மேலும் இதைத் தவிர இத்திட்டத்திற்கு அரசு ஆண்டுதோறும் அளிக்கும் மானியமும் சேர்ந்து இந்நிதியைப் பெருக்கி வருகிறது.

65. இந்நிதி கீழ்க்கண்டவாறு பயன்படுத்தப்படுகிறது :—

(அ) காவலர் குடியிருப்புகளில் நூல் நிலையங்கள் அமைத் தல், குறித்த கால வெளியீடுகளை வாங்குதல் :

(ஆ) சார்நிலைப் பணியாளர்களின் குழந்தைகளின் தொழில் நுட்பக் கல்விக்கு உதவித் தொகை அளித்தல் ;

(இ) உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு ஈமச் சடங்கு செலவிற்காக ரூ. 150 வழங்குதல் ;

(ஈ) இறந்து போன உறுப்பினர்களின் மனைவி மற்றும் வாரிசுகளுக்கு குடும்ப நிவாரண உதவி வழங்குதல் ;

(உ) காச நோய், புற்று நோய், தொழு நோய் போன்ற நோய்களினால் அல்லல்படுபவர்களுக்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கு அவர்களுடைய வருமானத்திற்கு மேற்கொண்டு ஆகும் செலவை ஏற்பதற்காக நிதி உதவி அளித்தல் ; மற்றும்

(ஊ) காவல் துறைக் குழுவின் பரிந்துரையின்படி உறுப் பினர்களின் நலனிற்காகத்தேவையானவர்களுக்கு உதவி அளித்தல்,

66. இவை தவிர ஒவ்வொரு ஆண்டும் பொறியியல், மருத் துவம், கலை, அறிவியல் போன்ற பட்டப் படிப்பு மற்றும் பட்ட யப் படிப்பிற்காக (Diploma) சார்நிலைப் பணியாளர்களின்

1989 ஏப்ரல் 27]

தகுதி வாய்ந்த குழந்தைகளுக்கு கல்லூரிப் படிப்பு தொடர்வதற்கு உதவும் வகையில் அவர்களுக்கு இந்நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது. படிப்பின் தன்மையைப் பொறுத்து ஆண்டு ஒன்றுக்கு ரூ. 305 முதல் ரூ. 1,500 வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. காவல் துறை பணியாளர் இறந்தால் அவர் வகித்து வந்த பதவிக்கேற்ப ரூ. 300-லிருந்து ரூ. 700 வரை உதவித் தொகை அவரது குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. 1988 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் ரூ. 6,64,996 செலவழிக்கப்பட்டு, 1,600 பேர்கள் இதனால் பயனடைந்தனர்.

தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு விழா படிப்புதவித் தொகை.

67. மேற்கூறிய திட்டம் தவிர, சார்நிலைப் பணியாளர்களின் தகுதி வாய்ந்த குழந்தைகள் கல்லூரிகளில் தொழில்நுட்பம் மற்றும் மேல் படிப்பு தொடர்வதற்கு உதவும் வகையில் அவர்களுக்கு வருடாந்திர கல்வி உதவித் தொகை அளிக்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. வருடாந்திர நன்கொடை மற்றும் கொடை உள்ளம் படைத்தவர்கள் அளிக்கும் நிதி உதவிகள் மூலம் இத்திட்டத்திற்கான நிதி திரட்டப்படுகிறது. 1980–88 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் படிப்புதவித் தொகையாக 78 பேருக்கு ரூபாய் 51,353 வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காவலர் நல அமைப்பு.

68. காவலர் நலத் திட்டங்களில் ஒன்றான தமிழ்நாடு காவலர் நல அமைப்பு, காவல் துறையில் பணிபுரியும் நிருவாக மற்றும் காவல் பணியாளர் குடும்பங்களின் வருவாயினைப் பெருக்கிடவும், அவர்களுக்கு கல்வி, மருத்துவம் மற்றும் பொழுது போக்கு வசதிகள் செய்து கொடுக்கும் நோக்கத்துடனும் செயல்பட்டு வருகிறது. அப்பணியாளர்களின் குடும்ப வருவாயினை அதிகரிப்பதற்காக நூல் நூற்றல், தையல் வேலை, பாய் முடைதல், தறி நெய்தல், தீக்குச்சி செய்தல், பால் பண்ணை, கோழி பண்ணை அமைத்தல் போன்ற திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

69. மதுரை மற்றும் ஆவடியில் கூட்டுறவு பால் பண்ணைகள் இரண்டும், விருதுநகரில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் ஒன்றும் உள்ளன. தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ளும் வகையில் காய்கறித் தோட்டங்கள் அமைக்கவும், கறவை பசுக்கள் வளர்க்கவும் காவலர் குடும்பங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

70. இதுவரை தைப்பதற்காக தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டு வந்த காவலர் சீருடைகள், 900 தையல் இயந்திரங்களையும், 900 காவலர் குடும்ப உறுப்பினர்களையும் கொண்ட 9 தையல் பிரிவுகளிடமும் 20 மாதர் சங்கங்களிடமும் (டெண்டிர் தையல் பிரிவுகள்) தற்போது ஒப்படைக்கபபட்டு தைக்கப்படுகின்றன. இந்த பிரிவுகள் சில பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தமிழக அரசு சத்துணவு திட்டம் மற்றும் இலவச சீருடை திட்டங்களின் கீழ் உள்ளவர்களின் சீருடைகளையும் தைத்துள்ளன.

71. வேலை வாய்ப்பு கிடைக்காத காவலர்களின் பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் பல தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு காவல் கம்பியூட்டர் தயாரிப்பு தொழில் கூட்டுறவுச் சங்கம், காவலர்களின் பிள்ளைகளை மின்னணுக் கருவிகள் தயாரித்தலில் ஈடுபடச் செய்யவும், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், கம்பியூட்டர் திட்டமிடுதல், டிரான்சிஸ்டர்களை இணைத்தல், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் கம்பியூட்டர் தயாரித்தல் போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்கவும் அமைக்கப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள இந்திய தொழில் நுட்ப நிறுவனம் மற்றும் தொழில் மற்றும் வணிகத் துறையினரின் உதவியுடன் டிரான்சிஸ்டர்கள், வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் மற்றும் கம்பியூட்டர்கள் ஆகியவற்றின் பாகங்களை இணைக்கும் பணியிலும் கம்பியூட்டர்களுக்குத் தேவையான கணிப் பொறிகளையும் அடிப்படை தகவல் குறியீட்டுத் துணை சாதனங்களையும் தயாரிக்கும் பணியிலும் காவலர்களின் பிள்ளைகளுக்கு பயிற்சியளிக்கவும் ஒரு திட்டமுள்ளது. ஒரு உயர்ந்த தொழில் நுட்பமடங்கிய இத்திட்டம் அநேகமாக நம் நாட்டிலேயே முதலாவதாகும்.

72. முப்பது உறுப்பினர்களுடன் துவக்கப்பட்ட தமிழ்நாடு காவலர் டயர் புதுப்பிக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கம், அரசு போக்குவரத்துக் கழகங்களால் ஒப்படைக்கப்பட்ட சில பணிகளை நிறைவேற்றி வருகின்றது.

73. இருபது உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்நாடு காவலர் விளையாட்டுப் பொம்மைகள் மற்றும் தொழில் கூட்டுறவுச் சங்கம் மற்றும் முப்பது உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்நாடு காவலர் பற்றவைப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை சென்னை புறநகர் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

1989 ஏப்ரல் 27]

பகுதி 5.

மைய அரசிடமிருந்து பெற்ற உதவி :

74. 1969-70 முதல் மைய அரசின் 50 விழுக்காடு உதவியுடன் செயல்பட்டு வரும் காவல் படையை நவீனப்படுத்தும் திட்டம் 1990 ஆம் ஆண்டு மார்ச்சு வரை நீடிக்கும். 1980-81 ஆம் ஆண்டு முதல் 1987-88 ஆம் ஆண்டு வரை மைய அரசின் ரூபாய் 542 இலட்சமும் மற்றும் மாநில அரசின் ரூபாய் 340 இலட்சமும், 'வி.எச்.எப்.'', வாக்கி டாக்கி, யு.எச்.எப். கருவிகள், வாகனங்கள், கம்பியூட்டர் கருவிகள், புலன் விசாரணைக்கான விஞ்ஞானக் கருவிகள் சட்டம் சார்ந்த அறிவியல் துறை பயிற்சிக் கழகம் மற்றும் போக்குவரத்துப் பணிமனை ஆகியவற்றிற்காகச் செலவிடப்பட்டுள்ளன. 1988-89 ஆம் ஆண்டில் ரூ. 23.40 இலட்சம் செலவில் காவல் வானொலிப் பிரிவிற்காக ''வி.எச்.எப்'' கருவிகள் வாங்கப்பட்டன.

பகுதி 6.

குற்றம் :

75. தொழில் மயம், நவீன மயம், சமுதாய நிலையில் மாற்றம், இதுகாறும் நின்று நின்ற சமுதாய கோட்பாடுகளின் சிதைவு ஆகிய காரணங்களால் குற்றங்களின் தன்மையிலும் நடவடிக்கைகளிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குற்றம் மற்றும் குற்றத் தடுப்பு ஆகியவற்றைச் சமுதாயம் அணுகும் முறையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே, காவலர்களின் பணி மேலும் சிக்கல் வாய்ந்ததாக ஆகி வருகிறது. குற்றங்களைக் கையாளுவதில் காவல் துறையினர் மிகுந்த தொழில் நுட்பத்தோடு செயல்பட வேண்டியுள்ளது. இவற்றை உணர்ந்து குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதிலும் அவர்கள் மீது வழக்குத் தொடுப்பதிலும் தமிழகக் காவல் துறை மிகவும் விழிப்புடனும், திறமையுடனும், விரைந்தும் செயல்பட்டு வருகின்றது.

76. அநேக வழக்குகளில் குற்றவாளிகளை உளவு பார்ப்பதிலும், எதிர்காலத்தில் குற்றம் நிகழாவண்ணம் தடுக்க புதிய முறைகளைக் கையாளவும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை புறநகர்களில் வீடுகளைத் தாக்கிய கொள்ளைக் கூட்டங்களின் நடவடிக்கைகள் காவல் துறையின் இத்தகைய விரைந்த நடவடிக்கையால் முறியடிக்கப்பட்டன.

77. குற்றங்களை மிக சாமர்த்தியமாகத் தடுப்பதிலும் மற்றும் கண்டுபிடிப்பதிலும் தமிழக காவல் துறையினர்

[1989 ஏப்ரல் 27

நாட்டிலேயே முதன்மையாக விளங்குகின்றனர். குற்றவாளி களை வலைவீசிக் கண்காணிக்கும் முயற்சியிலிருந்து அவர்கள் என்றும் பின்வாங்கியதில்லை. காவல் துறையின் திறமையைக் கீழ்வரும் புள்ளி விவரங்கள் கோடிட்டுக் காட்டும் :—

தமிழ்நாட்டில் சொத்து பற்றிய குற்றங்களும் கண்டுபிடிப்புகளும் :—

குற்றத் தலைப்பு.	1987		1988	
	புகார் செய்யப் பட்டவை.	கண்டு பிடிக்கப் பட்டவை.	புகார் செய்யப் பட்டவை.	கண்டு பிடிக்கப் பட்டவை.
(1)	(2)	(3)	(4)	(5)
ஆதாயத்திற் கான கொலை	81	44	72	37
கொள்ளை	69	14	52	14
வழிப்பறி ..	421	231	420	240
வீடுபுகுந்து திருட்டு	7,646	4,021	7,602	3,933
பெரிய திருட்டு	19,388	13,694	20,309	14,693
சிறிய திருட்டு	1,451	1,385	1,398	1,312
கால்நடைத் திருட்டு	784	708	692	624
மொத்தம்	29,840	20,098	30,545	20,853
கண்டுபிடிக்கப் பட்ட குற்றங் களின் விழுக்காடு	..	67.4		68.3

78. சென்னையிலுள்ள விரல் ரேகைப் பதிவுக் கூடம், மாவட்டங்களிலுள்ள ஒரு விரல் ரேகைப் பதிவுப் பிரிவு, தமிழ் நாடு தடய அறிவியல் ஆய்வகம், நாய்ப்படை மற்றும் கணினி பிரிவு ஆகியவை அறிவியல் அணுகுமுறையோடு துப்பு துலக்கும் பணியில் தொடர்ந்து செவ்வையாகப் பயன்படுத்தப்பட்டன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 ஏப்ரல் 27]

79. காவல் துறையினரின் விரைந்த நடவடிக்கையாலும், சிறந்த புலனாய்வினாலும் கண்டுபிடிக்கப்பட்டு, வழக்கு தொடரப்பட்ட சில வழக்குகள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

கொலை :

80. பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் உலகம் பட்டி காவல் நிலையக் குற்ற எண் 41/88-ல் பதிவு செய்யப் பட்ட வழக்கில் 14–3–1988 அன்று உலகம்பட்டியில் இராம சாமி என்பவரின் மனைவி ராமாயி ஆச்சி என்பவர் சந்தேக முறத்தக்க சூழ்நிலையில் இறந்து கிடந்தார். அயராத புலன் விசாரணை காரணமாக, குற்றம் சாட்டப்பட்ட வாசுகி மற்றும் அவருடைய கூட்டாளிகள் 4 பேர்கள் சேர்ந்து ராமாயி ஆச்சியை கொலை செய்து ரூ. 32,550 மதிப்புள்ள ரொக்கம் மற்றும் தங்க நகைகளைக் களவாடிச் சென்றனர் என்பது தெரிய வந்தது. குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப் பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

81. சேலம் மாவட்டம் திருச்செங்கோடு நகரக்காவல் நிலையக் குற்ற எண் 434/88-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 29–5–1988 அன்று திருச்செங்கோடு வடிவேல்பிள்ளை தெரு வைச் சேர்ந்த முத்துசாமி என்பவரின் மனைவி வரதாயம்மாள் என்பவர் கொலை செய்யப்பட்டு ரூ. 60,000 மதிப்புள்ள நகைகள் களவாடப்பட்டிருந்தன. தீவிர புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்ட கிருஷ்ணவேணி என்ற கிட்டம்மாள் என்பவர் கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் கைப்பற்றப்பட்டன. இவ்வழக்கு நீதி மன்ற விசாரணையில் உள்ளது.

82. சென்னை மாநகரம் பட்டினப்பாக்கம் காவல் நிலையக் குற்ற எண் 687/88-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில், 22–8–1988 அன்று பட்டினப்பாக்கம் குடியிருப்பின் கதவு இலக்கம் இ. 17-ல் வசித்து வந்த ஸ்ரீனிவாசன் என்பவரின் மனைவி புஷ்பவதி என்பவர் கொலை செய்யப்பட்டு ரூ. 25,000 மதிப்புள்ள தங்க நகைகள் களவாடப்பட்டிருந்தன. குறித்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்ட கணேஷ் என்ற கணேசன் அன்றைய தினமே கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

83. பெரியார் மாவட்டம் வெள்ளக்கோயில் காவல் நிலையக் குற்ற எண் 329/88-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில்

25–8–1988 அன்று கரட்டுப்பாளையம் மேட்டுக்காட்டுத் தோட்டத்தில் குப்புசாமி என்பவரது மகன் வேலுசாமி என்பவர் சந்தேகமான முறையில் இறந்து கிடந்தார். புலன் விசாரணையினபோது குற்றம் சாட்டப்பட்ட மோகன சுந்தரம் என்ற சுந்தரம் மற்றும் அவரது இரண்டு கூட்டாளிகள் ஆகியோர் வேலுச்சாமியை கொலை செய்து அவரிடமிருந்து ரூ. 18,000 மதிப்புள்ள தங்கச் சங்கிலியை களவாடிச் சென்றது தெரிய வந்தது. மூன்று பேர்களும் கைது செய்யப்பட்டு சொத்துக்கள் மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

84. தென் ஆற்காடு மாவட்டம் கச்சிராப்பாளையம் காவல் நிலையக் குற்ற எண் 223/88-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில 8–9–1988 அன்று கோட்டகரமதூரில் ராமசாமி என்பவரின் மனைவி காளியம்மாள் என்பவர் கொலை செய்யப்பட்டு ரூ. 93,000 மதிப்புள்ள தங்க நகைகளும் ரொக்கமும் களவாடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது, முறையான மற்றும் அறிவியல் முறையில் மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணை காரணமாக தாஸ் என்ற ராமதாசும் மற்றும் அவரது 5 கூட்டாளிகளும் கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் கைப்பற்றப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

85. கன்னியாகுமரி மாவட்டம் மணவாளக்குறிச்சி காவல் நிலையக் குற்ற எண் 178/88-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 13–10–1988 அன்று தீர்பரப்பைச் சார்ந்த முனியன் ஆசாரி என்பவரின் மகனான குற்றம் சாட்டப்பட்ட செல்வம் மற்றும் அவரது கூட்டாளிகள் நான்கு பேர்கள் அம்மாண்டி விளைவில் செல்லம் நாடாச்சி என்பவரது வீட்டினுள் நுழைந்து அவரைக் கொலை செய்து அங்கிருந்த ரூபாய் 26,000 மதிப்புள்ள நகைகளைத் திருடிச் சென்றனர். அயராத புலன விசாரணை காரணமாக குற்றம் சாட்டபபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன இவ்வழக்கு நீதிமனற விசாரணையில் உள்ளது.

86. தஞ்சாவூர் (மேற்கு) மாவட்டம், தஞ்சாவூர் வட்ட காவல் நிலையக் குற்ற எண் 850/88-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 9–12–1988 அன்று வளமார் கோட்டை கிராமத்தைச் சேர்ந்த தங்கவேல் என்பவரின் மகனான குற்றம் சாட்டப்பட்ட முருகானந்தம் என்பவர் அதே ஊரைச் சேர்ந்த கோவிந்தராஜனின் மனைவி சரோஜா என்பவரைக் கொலை செய்து, அங்கிருந்து ரூபாய் 25,000 மதிப்புள்ள தங்க நகை

1989 ஏப்ரல் 27]

களைக் களவாடினார். குற்றம் சாட்டபபட்டவர் 17-12-1988 அன்று கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில உள்ளது.

கொள்ளை :

87. தென்னாற்காடு மாவட்டம் நெய்வேலி தெர்மல் காவல் நிலையக் குற்ற எண் 1988-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 29-12-1988 அன்று நெய்வேலியில் மந்தாரக்குப்பத்தைச் சேர்ந்த சிவராம் என்பவரின் மகன் குற்றம் சாட்டபபட்ட முனியன மற்றும் அவரது கூட்டாளிகள் நான்கு பேரும் தேசிய பால்வள நிறுவனத்தின் உள்ளே புகுந்து ரூபாய் 16,000 மதிப்புள்ள இரும்புக் கம்பிகளை களவாடிச் சென்றனர். குறித்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் அன்றே கைது செய்யப்பட்டு களவாடபபட்ட அனைத்து கம்பிகளும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

88. பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் தேவக் கோட்டை வட்டக் காவல் நிலையக் குற்ற எண் 161/88-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 14-7-1988 அன்று மாவிடுதி கோட்டையில் குற்றம் சாட்டப் பட்ட பாரதி மற்றும் அவரது கூட்டாளிகள் 5 பேர் புகார் மனுதாரரான கணேசன் என்பவரை வழி மறித்து டி.சி.ஏ. 1957 என்ற எண்ணுள்ள அவரது ஸ்கூட்டரையும், தங்கச் சங்கிலி மற்றும் ரொக்கம் ரூபாய் 70,000 உட்பட ரூ. 94,500 மதிப்புள்ள பொருட்களைக் களவாடிச் சென்றனர். அயராத புலன் விசாரணை காரணமாக குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட அனைத்து சொத்துக் களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

89. வடாற்காடு மாவட்டம் லத்தேரி காவல் நிலையக் குற்ற எண். 68/88-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில், கேரசமங்கலம் கிராமத்தில் ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த கங்கையா என்பவ ரின் மகன் மேகலா கனகராஜ் மற்றும் அவரது நான்கு கூட்டாளி களும் சேர்ந்து 1988 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ம் நாள் அன்று புகார் மனுதாரரான பரமானந்தம் என்பவரின் வீடு புகுந்து ரூபாய் 90,000 மதிப்புள்ள தங்க நகைகளைக் கொள்ளை யடித்துச் சென்றனர். முறையான மற்றும் அயராது மேற் கொண்ட புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் 1988 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31 ஆம் நாள அன்று கைது செய்யப்படடு அனைத்து சொத்துக்களும் மீட்கப் பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

[1989 ஏப்ரல் 27

90. மதுரை நகரம் அண்ணா நகர் காவல் நிலைய குற்ற எண். 1441/88-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 1988 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 6 ஆம் நாள் அன்று அடையாளம் தெரியாத சில பேர்கள் கலைஞர் கருணாநிதி நகரிலுள்ள மதுரை வங்கியினுள் புகுந்து, வங்கி ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களை கைத் துப்பாக்கி மற்றும் கத்தி ஆகியவற்றைக் கொண்டு மிரட்டி ரூ. 63,61,195 மதிப்புள்ள அடகு வைக்கப்பட்ட தங்க நகைகள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றனர். முறையான மற்றும் அயராத புலன் விசாரணை காரணமாக மதுரையைச் சார்ந்த குற்றம் சாட்டப்பட்ட நல்லதம்பி மற்றும் அவரது கூட்டாளிகள் 14 பேர் கைது செய்யப்பட்டனர். ரொக்கம் ரூ. 9,190 உட்பட ரூ. 62,13,226 மதிப்புள்ள தங்க நகைகளும் மீட்கப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டவர்களில் 5 பேர் தலைமறைவாக உள்ளனர். தலை மறைவாக உள்ளவர்களைக் கண்டு பிடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வழக்கு நீதி மன்ற விசாரணையில் உள்ளது.

91. 1988 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 25 ஆம் நாள் அன்று செங்குன்றத்தைச் சேர்ந்த சண்முகம் என்பவரின் மகனான குற்றம் சாட்டப்பட்ட அரிகிருஷ்ணன் என்ற அரியும் அவரது கூட்டாளிகள் 7 பேரும், கோடம்பாக்கம் கவரைத் தெரு 36 ஆம் எண் வீட்டில் வசித்து வரும் புகார் மனுதாரரான கோதையன் என்பவரது வீட்டினுள் நுழைந்து ரூ. 65,000 மதிப்புள்ள தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றனர். இது குறித்து சென்னை நகரம் கோடம்பாக்கம் காவல் நிலையக் குற்ற எண். 3547/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. உடனடியாக மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் அன்றே கைது செய்யப்பட்டு, அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

92. 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11 ஆம் நாள் அன்று குற்றம் சாட்டப்பட்ட வீரராகவன் என்பவரும் அவரது கூட்டாளிகள் 7 பேரும் கபாலமேடு கிராமத்தில் பிளாஸ்டிக் நிறுவனம் ஒன்றின் உள்ளே புகுந்து, அங்கிருந்து, ரூ. 65,000 மதிப்புள்ள சென்டரிங் சீட்டுகள், இரும்புக் கம்பிகள் மற்றும் மரம் ஆகியவற்றை எடுத்துச் சென்றனர். இது குறித்து செங்கை-அண்ணா (மேற்கு) மாவட்டம், படாளம் காவல் நிலையக் குற்ற எண். 145/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. உடனடியாக மேற் கொள்ளப்பட்ட புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு, அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

1989 ஏப்ரல் 27]

வழிப்பறி :

93. 1988 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 12 ஆம் நாள் அன்று தெற்கு காட்டூர் கிராமத்தில், குற்றம் சாட்டப்பட்ட பத்திரி தாசர், ஜோதி ஆகியோர் மனுதாரரான அண்ணாதுரை என்பவரை வழிமறித்து ரூ. 75,000 மதிப்புள்ள அம்பாசிடர் காரைக் களவாடிச் சென்றனர். இது குறித்து, திருச்சிராப்பள்ளி மாவட்டம், கண்டோன்மென்ட் காவல் நிலையக் குற்ற எண். 84/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அயராது மேற் கொள்ளப்பட்ட புலன் விசாரணையின் காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் 1988 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டதுடன் திருடப்பட்ட காரும் கைப்பற்றப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

94. 1988 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாள் அன்று கொடைக்கானலில், நடராஜன் என்பவரின் மகனான குற்றம் சாட்டப்பட்ட ஆல்வின் என்ற சிவா என்பவரும் அவரது கூட்டாளிகள் இருவரும் புகார் மனுதாரரான டாக்டர் அனந்தராம சுப்பிரமணியம் என்பவரின் வீட்டிற்குள் புகுந்து அங்கிருந்து ரூ. 1,53,100 மதிப்புடைய தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றனர். இது குறித்து கொடைக்கானல் காவல் நிலையக் குற்ற எண். 31/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. திறமையான புலன் விசாரணையின் காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7 ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு, ரூ. 1,20,100 மதிப்புடைய தங்க நகைகள் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

95. 1988 ஆம் ஆண்டு மே திங்கள் 19 ஆம் நாள் அன்று மறைமலை நகரில், கந்தசாமியின் மகனான குற்றம் சாட்டப்பட்ட சிவதாஸ் என்ற மகேஷ், மற்றும் வேலு பிள்ளை என்பவரின் மகனான நாதன் ஆகியோர் ராஜா என்பவருக்கு சொந்தமான டி.எம்.டி. (TMD) 3868 என்ற எண்ணுள்ள அம்பாசிடர் காரை வழி மறித்து ரூ. 1,00,000 மதிப்புள்ள அக்காரை கொள்ளையடித்துச் சென்றனர். இது குறித்து, செங்கை அண்ணா (மேற்கு) மாவட்டம், மறைமலை நகர் காவல் நிலையக் குற்ற எண். 129/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டதுடன் கொள்ளையடிக்கப்பட்ட காரும் மீட்கப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

96. 1988 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 12 ஆம் நாள் அன்று, நுங்கம்பாக்கம், ஷெனாய் சாலையில் கதவிலக்கம் 25-ல் உள்ள மனுதாரரான ஜெயபாண்டியன் என்பவரின் வீட்டிற்குள் இலங்கையைச் சேர்ந்த தியாகராசன் என்பவரின் மகனான சுரேஷ் என்ற தாப்பாவும் அவரது கூட்டாளிகள் 3 பேரும்

நுழைந்து ரூ. 1,21,000 மதிப்புடைய தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றனர். இது குறித்து நுங்கம்பாக்கம் காவல் நிலையக் குற்ற எண். 2059/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. முறையான அயராத புலன் விசாரணையின் காரணமாக, குற்றம் சாட்டப்பட்டவர்கள் 1988 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 25 ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டதோடு ரூ. 1,19,000 மதிப்புடைய நகைகளும் மீட்கப்பட்டன இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

97. 1988 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 20 ஆம் நாள் அன்று கோயம்புத்தூர், கலைக் கல்லூரி காலனி சாலையிலுள்ள புகார் மனுதாரரான முருகேசன் என்பவர் வீட்டிற்குள், கிருஷ்ணன் என்பவரின் மகன் குற்றம் சாட்டப்பட்ட சித்தார்த்தனன் என்பவரும் அவரது கூட்டாளிகள் மூவரும் நுழைந்து ரூ. 85,000 மதிப்புள்ள தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றனர். இது குறித்து கோயம்புத்தூர் (நகரம்) மாவட்டம் குதிரைப் பந்தய மைதான காவல் நிலையக் குற்ற எண். 1282/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அயராத புலன் விசாரணை காரணமாக, குற்றம் சாட்டப்பட்டவர்கள் 1988 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு கொள்ளையடிக்கப்பட்ட தங்க நகைகள் அனைத்தும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

கன்னக் களவு :

98. 1988 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16 ஆம் நாள் அன்று, சேதுக்கொல்லையில், உத்தமசோழமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த துரையரசன் என்பவரின் மகன் குற்றம் சாட்டப்பட்ட ராஜேந்திரனும் மற்றும் அவரது கூட்டாளிகள் இருவரும் புகார் மனுதாரரின் வீட்டினுள் மேற் கூரை வழியாக புகுந்து ரூ. 2,75,000 மதிப்புள்ள ரொக்கம் மற்றும் தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றனர். இது குறித்து, தென் ஆர்க்காடு மாவட்டம் கிளை காவல் நிலையக் குற்ற எண். 14/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்ட அனைத்துப் பொருட்களும் மீட்கப்பட்டன. 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாள் அன்று அனைத்துக் குற்றவாளிகளுக்கும் ஒரு வருட கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது.

99. 1988 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25 ஆம் நாளுக்கும் 1988 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 4 ஆம் நாளுக்கும் இடைப்பட்ட கால அளவில் கொண்டம நாயக்கன் பட்டியில் சுப்பையா என்பவரின் மகன் குற்றம் சாட்டப்பட்ட இராமச்சந்திரன், புகார் மனுதாரரின் வீட்டின் சுவரேறி குதித்து உள்ளே நுழைந்து, அங்கிருந்து மொத்தம் ரூ. 1,09,000 மதிப்புள்ள தங்க நகைகளையும், டேப் ரிக்கார்டரையும் திருடினார். இது குறித்து, மதுரை (ஊரக) மாவட்டம் ஆண்டிப்பட்டி காவல் நிலைய

1989 ஏப்ரல் 27]

குற்ற எண். 41/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அயராத புலன் விசாரணையின் காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர் 1988ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 18 ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு, அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

100. 1988 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 2 ஆம் நாள் அன்று பெசன்ட் சாலையில், குற்றம் சாட்டப்பட்ட கண்ணப்பன் என்ற கண்ணன் என்பவர் சேதுராமலிங்கம் என்பவரின் இல்லத்தின் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்து அங்கிருந்து ரூ. 3,00,000 மதிப்புள்ள தங்க நகைகளைத் திருடினார் இது குறித்து, சென்னை நகரம் மெரீனா காவல்நிலையக் குற்ற எண் 1098/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அறிவியல் மற்றும் முறையான புலன் விசாரணையின் காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர் 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11 ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

101. 1988 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 14 ஆம் நாள் அன்று அக்ரகாரத்தில், நடேசன் என்பவரின் மகனான குற்றம் சாட்டப்பட்ட விஸ்வநாதன் என்பவர் இராமச்சந்திரன் என்பவரின் இல்லத்தின் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்து அங்கு இருந்து ரூ. 1,55,000 பெறுமான தங்கம், வெள்ளி நகைகளைத் திருடினார். இது குறித்து பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் காவல் நிலையக் குற்ற எண். 368/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அறிவியல் மற்றும் முறையான புலன் விசாரணையின் காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர் 1988 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 10 ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு ரூ. 1,50,000 பெறுமான சொத்துக்கள் மீட்கப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டவருக்கு 6 மாத காலம் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது.

102. 1988 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ஆம் நாள் அன்று சேத்துப்பட்டு ஸ்பர்ட்டாங்க் சாலையில், கண்ணன் என்பவரின் மகனான குற்றம் சாட்டப்பட்ட நளரமணன் என்பவர், வேணுகோபால் தெரு கதவிலக்கம் 12-ல் உள்ள புகார் மனுதாரர் நாயக் என்பவரின் வீட்டினுள் சுவர் ஏறிக் குதித்து நுழைந்து ரூ. 2 இலட்சம் பெறுமான தங்க நகைகளையும் ரொக்கத்தையும் திருடினார். இது குறித்து, சென்னை நகரம் சேத்துப்பட்டு காவல் நிலையக் குற்ற எண். 2002/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அயராத மற்றும் முறையான புலன் விசாரணையின் காரணமாக 1988 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13 ஆம் நாள் அன்று குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டு, அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ் வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

103. 1988 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27ஆம் நாள் அன்று புத்திரகவுண்டன் பாளையத்தில், சதாசிவம் என்பவரின் மகனான குற்றம் சாட்டப்பட்ட ஜெயக் குமார் என்ற ஜெயக் கொடி புகார் மனுதாரர் சக்கரவர்த்தி என்பவரின் வீட்டின் கூரையின் வழியாக உள்ளே நுழைந்து, அங்கிருந்து ரூ. 12,00,000 பெறுமான தங்க நகைகளைத் திருடினார். இது குறித்து, சேலம் மாவட்டம் ஏத்தாப்பூர் காவல்நிலையக் குற்ற எண். 395/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அறிவியல் மற்றும் முறை யான புலன் விசாரணையின் காரணமாக குற்றம் சாட்டப்பட்ட வர் 1988 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு, அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. குற்றவாளிக்கு 2 வருட கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது.

104. 1988 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7 ஆம் நாள் அன்று கோட்டூரில் நடேசன் என்பவரின் மகனான குற்றம் சாட்டப்பட்ட சொக்கலிங்கம் என்ற ஜான் புகார் மனுதாரர் ஜெயராமன் என்பவரின் வீட்டினுள் நுழைந்து ரூ. 2,00,000 மதிப்புள்ள தங்கம், வைர நகைகளையும் மற்றும் ரொக்கத்தையும் திருடி னார். இது குறித்து சென்னை நகரம் கோட்டூர்புரம் காவல் நிலையக் குற்ற எண். 2214/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப் பட்டது. உடனடியாக மேற்கொள்ளப்பட்ட அயராத புலன் விசாரணையின் காரணமாக 1988 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9 ஆம் நாள் அன்று குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப் பட்டு, அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

சிலைத் திருட்டு :

105. 1988 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 18 ஆம் நாள் அன்று, கதிர்வேலு என்பவரின் மகன் குற்றம் சாட்டப்பட்ட அரிதாசும் அவரது கூட்டாளிகள் 3 பேரும் கடலூர் பெரியகுப்பத்தில் உள்ள எல்லையம்மன் கோயிலினுள் நுழைந்து அங்கிருந்து ரூ. 50,000 மதிப்புள்ள பஞ்சலோகச் சிலையைத் திருடினார்கள். இது குறித்து, செங்கை அண்ணா (மேற்கு) மாவட்டம் கூவாத்தூர் காவல் நிலையக் குற்ற எண். 33/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அயராத புலன் விசாரணை காரணமாக குற்ற வாளிகள் அனைவரும் கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட சிலை மீட்கப்பட்டது. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள் ளது.

106. 1988ஆம் அண்டு ஏப்ரல் திங்கள் 25 ஆம் நாள் அன்று, சோமு பிள்ளை என்பவரின் மகன் குற்றம் சாட்டப்பட்ட கணே சன், மருதூரில் உள்ள அருள்மிகு வரதராசபெருமாள் திருக் கோயிலின் உள்ளே நுழைந்து அங்கிருந்து ரூ. 1,50,000 மதிப்புள்ள பஞ்ச் லோகத்தாலான வரதராச பெருமாள் ஸ்ரீதேவி மற் றும் பூதேவி ஆகிய சிலைகளைத் திருடிச் சென்றார். இது

குறித்து, தஞ்சாவூர் கிழக்கு மாவட்டம் வாய்மேடு காவல் நிலையக் குற்ற எண். 168/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டு அனைத்து சிலைகளும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

107. 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7 ஆம் நாள் அன்று லட்சுமிநாராயணனின் மகன் குற்றம் சாட்டப்பட்ட ஸ்ரீனிவாச பட்டாச்சாரியார், அவரது கூட்டாளியான ரத்தின படையாச்சி என்பவரின் மகனான நாராயணன் ஆகியோர், புளாகம் கிராமத்தில் உள்ள அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் ஆலயத்தில் இருந்து ரூ. 15,00,000 மதிப்புள்ள எட்டு பஞ்சலோகச் சிலைகளைத் திருடினார். இது குறித்து, தஞ்சாவூர் கிழக்கு மாவட்டம் நன்னிலம் காவல் நிலையக் குற்ற எண். 330/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. குற்றவாளிகள் 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22 ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு அனைத்து சிலைகளும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

108. 1988 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ஆம் நாளுக்கு இரண்டு மாதங்கள் முன்பாக மாணிக்க ஆசாரியின் மகன், குற்றம் சாட்டப்பட்ட மணி ஆசாரி மற்றும் அவரது இரண்டு கூட்டாளிகள் எம். வெட்ரப்பட்டி கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோயிலினுள் நுழைந்து அங்கிருந்து ரூ. 1,50,000 மதிப்புள்ள பஞ்சலோகத்தாலான மூன்று சிலைகளைத் திருடினர். இது குறித்து, தர்மபுரி மாவட்டம் மொரப்பூர் காவல் நிலையக் குற்ற எண். 211/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் 1988 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22 ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு, அனைத்து சிலைகளும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திருட்டு

109. 1988 அம் ஆண்டு மே திங்கள் 29 ஆம் நாள் அன்று ஆர்க்காடு திரசு தோட்டத்தில் வேப்பன் கிராமத்தைச் சேர்ந்த பெருமாள் என்பவரின் மகன் வேலு என்பவர் ரூ. 3,50,000 மதிப்புள்ள இரசாயனப் பொருட்களுடன் டி. டி. ஜே. 7900 என்ற எண்ணுள்ள லேலாண்டு லாரியைத் திருடினார். இது குறித்து, வடஆர்க்காடு மாவட்டம், ஆர்க்காடு காவல்நிலையக் குற்ற எண். 256/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அயராத புலன் விசாரணை காரணமாக, குற்றம் சாட்டப்பட்டவர் 1988 அம் அண்டு மே திங்கள் 30 அம் நாள் அன்று கைது செய்யப்பட்டு, திருடப்பட்ட லாரி மீட்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவருக்கு 1988 ஆம் அண்டு அகஸ்டு திங்கள் 29 ஆம் நாள் அன்று 7 வார கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

110. 1988 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20 ஆம் நாள் அன்று, சென்னை எழும்பூர் மற்றும் தஞ்சாவூர் இரயில் நிலையங்களுக்கு இடையே, எண். 101 சென்னை—இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ்ஸில் இரண்டாம் வகுப்பு பெட்டியில் போத்தன் குடியைச் சார்ந்த மீரான் மொகைதீன் என்பவரின் மகனான குற்றம் சாட்டப்பட்ட அப்பாஸ் என்பவர் தங்க நகைகளும் ரொக்கம் ரூபாய் ஆயிரமும் கொண்ட சூட்கேஸ் ஒன்றைத் திருடினார். இவற்றின் மொத்த மதிப்பு ரூ. 2,50,000 ஆகும். இது குறித்து, செங்கல்பட்டு இரயில்வே காவல் நிலையக் குற்ற எண். 352/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. உடனடியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் காரணமாக குற்றவாளி அன்றே கைது செய்யப் பட்டு, அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டவருக்கு 1988 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5 ஆம் நாள் அன்று ஐந்து மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

111. எல்லாபுரத்தில், 1988-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 2-ஆம் நாள் அன்று கொல்லாபுரம் கிராமத்தைச் சேர்ந்த கொல்லா கருப்பையா என்பவரின் மகனான குற்றம் சாட்டப் பட்ட கொல்லா ஜெகந்நாதன் என்பவர் ரூபாய் 1,84,000 மதிப் புள்ள தங்க நகைகளைத் திருடினார். இது குறித்து செங்கை-அண்ணா (மேற்கு) மாவட்டம், பெரியபாளையம் காவல் நிலை யக் குற்ற எண். 247/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டு அனைத்து சொத் துக்களும் மீட்கப்பட்டன. இவ் வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

112. 1988-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 18-ஆம் நாள் அன்று ஈரோடு படேல் தெருவில், அதே ஊரைச் சேர்ந்த சேதுராமன் என்பவரின் மகனான பாண்டியன் என்பவர் ரூபாய் 2,50,000 மதிப்புள்ள டி.டி.ஒய். 4176 என்ற எண்ணுள்ள லாரியைத் திருடினார். இது குறித்து பெரியார் மாவட்டம் ஈரோடு நகர காவல் நிலையக் குற்ற எண். 1497/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர் 1988 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 22-ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு அந்த லாரி மீட்கப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

113. 1988-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10-ஆம் நாள் அன்று, நெய்வேலியில் அடையாளம் தெரியாத சில நபர்கள் '' ஜோதி வைத்தியலிங்கம் மினரல் அண்ட் கெமிக்கல் '' என்ற நிறுவனத்திலிருந்து ரூபாய் 1,62,500 மதிப்புள்ள செப்பு இரசாயனங்களைத் திருடினர். இதுகுறித்து தென் ஆர்க்காடு மாவட்டம் நெய்வேலி-2 காவல் நிலையக் குற்ற எண். 320/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அயராத புலன் விசார ணையின் காரணமாக அங்கமுத்து என்பவரின் மகனான சக்ர பாணி என்கிற சர்க்கரை மற்றும் அவரது ஐந்து கூட்டாளிகளும்

1989 ஏப்ரல் 27]

1988-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ் வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினரின் குறிப்பிடத்தக்க சில பணிகள் :

திருவெறும்பூர் காவல் நிலையக் குற்ற எண். 197/88 :

114. 1988-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 23-ஆம் நாள் அன்று திருவெறும்பூர் பேருந்து நிலையத்தில், திருவெறும்பூர் காந்திநகர் நாவல்பட்டு பிரதான சாலையில் வசிக்கும், சுப்பையா என்பவரின் மகனான ஜெயராமன் ரொக்கம் ரூபாய் 25,000-ஐ திருடினார். உடனடியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர் அன்றே கைது செய்யப்பட்டு தொகை முழுவதும் மீட்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவருக்கு 4 மாத கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது.

கண்டோன்மெண்ட் காவல் நிலையக் குற்ற எண். 1665/88 :

115. 1988 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 1 ஆம் நாள் அன்று ராம்ஜி நகரில், குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வு அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் துறையின் அதே நகரினைச் சேர்ந்த தின்னசாமி கொன்மார்க்குளம் என்பவரின் மகனான நாராயணனையும் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த சாந்தப்பன் என்பவரின் மகனான கருப்பன் என்பவரையும் கைது செய்தனர். அவர்களின் ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில், 1988-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4-ஆம் நாள் அன்று ஆந்திர மாநிலம் அனந்தப்பூர் நகரில் உள்ள வைசியா வங்கியில் திருடப்பட்ட ரொக்கம் ரூபாய் 70,000 மீட்கப்பட்டது. (அனந்தபூர் காவல் நிலைய குற்ற எண். 75/88). குற்றவாளிகள் ஒவ்வொருவருக்கும் 1988 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2-ஆம் நாள் அன்று ஒரு வருட கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது.

கரூர் நகர காவல் நிலையக் குற்ற எண். 380/88 :

116. 1988 ஆம் ஆண்டு மே திங்கள் 5-ஆம் நாள் அன்று கரூர் நகரம் ஜவஹர் அங்காடியில், துவாக் குடியைச் சேர்ந்த ரவாலாடு மாரிமுத்து என்பவரின் மகனான குற்றஞ்சாட்டப்பட்ட கிருஷ்ணமூர்த்தி என்பவரும், திருவெறும்பூர் 3-ஆவது தெரு, கதவிலக்கம் 27-ல் வசிக்கும் இராமையா என்பவரின் மகனான ஹரிகிருஷ்ணன் என்கிற ஹரியும் சேர்ந்து தங்க நகைகளையும் ரூபாய் 3,500ஐயும் திருடினர். இவற்றின் மொத்த மதிப்பு ரூபாய் 1,55,000 ஆகும். சென்னை குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் தனிப் படை ஒன்று திறமையாக புலன் விசாரணை செய்து 1988-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ஆம் நாள் அன்று இவ்விரு குற்றவாளிகளையும் கைது செய்து அனைத்து சொத்துக்களையும்

மீட்டது. 1988 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20-ஆம் நாள் அன்று குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும், 7 மாத கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது.

ஸ்ரீமுஷ்ணம் காவல் நிலையக் குற்ற எண். 51/88 :

117. தஞ்சை, பூண்டி புஷ்பம் கல்லூரியைச்சேர்ந்த துணைப் பேராசிரியர் (தமிழ்) சௌந்தர பாண்டியன் என்ற பாண்டியன், சிலர் துணையுடன் 1988-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 29-ஆம் நாள் அன்று மாமங்கலம் இந்தியன் வங்கியில் புகுந்து துப்பாக்கி முனையில் அங்கிருந்து 7,367,600 கிலோ எடையுள்ள நகைகளையும், ரொக்கம் ரூபாய் 12,955-ஐயும் எடுத்துக் கொண்டு வெளியில் காத்திருந்த வேன் ஒன்றில் ஏறிச் சென்றுவிட்டனர். சோழன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த ஓட்டுநரது தீவிர ஒத்துழைப்புடன் அன்றே நான்கு குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பாக ஸ்ரீமுஷ்ணம் காவல் நிலையக்குற்ற எண். 51/88-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு பின்னர், மேல் விசாரணைக்காக குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு அவ்வழக்கு மாற்றப்பட்டது. குற்றப்புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவு விசாரணையின்போது குற்றஞ்சாட்டப்பட்ட சுமன், பாலு, தர்மராஜ், சூசைமாணிக்கம், சுரேஷ், ஜோசப் அந்தோணிராஜ், குலேந்திரன் என்ற கண்ணன் என்ற கோபு, ரவி என்ற சுதாரகன் காந்தன் என்ற தேவேந்திரன், பாரதி என்ற கணேசன் ஆகியோர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

நெல்லிக்குப்பம் காவல் நிலையக் குற்ற எண். 385 மற்றும் 414/88 :

118. திரவியமும் அவரது சகோதரர் அருள் என்கிற அருள்மொழி என்பவரும் சென்னையிலுள்ள இந்தியன் வங்கியில் பணி புரிந்து வந்தனர். நெல்லிக்குப்பத்திலுள்ள இந்தியன் வங்கியில் ராஜாராம் என்பவர் பணியாற்றிவந்தார். மேற்படி மூவரும் நெல்லிக்குப்பத்தைச் சேர்ந்த சதாசிவம், ரமேஷ், நத்தப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த சக்தி மாமோ ஆகியோருடன் சேர்ந்து நெல்லிக்குப்பத்திலுள்ள இந்தியன் வங்கியை மோசடி செய்ய சதி செய்தனர். சதித் திட்டத்தின்படி, இம் மூவரும், நெல்லிக்குப்பத்திலுள்ள இந்தியன் வங்கியில் கணக்குகள் வைத்துக் கொண்டனர். முதலில் குறிப்பிடப்பட்ட மூவரும் தத்தம் கிளைகளில் தபால் பிரிவில் இருந்து காசோலைகள் மற்றும் படிவங்கள் ஆகியவற்றை அவை பதிவு செய்யப்படுவதற்கு முன்னதாகவே எடுத்துக் கொண்டனர். அந்தக் காசோலைகளில் தேவையான மோசடிகள் செய்யப்பட்ட பின்னர், அந்த காசோலைகள் நெல்லிக்குப்பம் வங்கிக் கிளையில் மேலே குறிப்பிடப்பட்ட மூன்று நபர்களால் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களுடைய கணக்கிலிருந்து பணம்பெறப் பட்டது. ஒரு முறை அவ்வாறு பணம்பெறும் போது, அதிகமாக கொடுக்கப்பட்ட ஐந்து ரூபாய் கட்டொன்றை திரும்பப்பெற முயற்சித்தபோது கணக்கு வைத்திருப்பவர்களின் விலாசம் பொய்யானது என்று தெரியவந்தது. சந்தேகத்தின் பேரில்

1989 ஏப்ரல் 27]

அனைத்து கணக்கு வழக்குகளும் சரி பார்க்கப்பட்டபோது வங்கியிலிருந்து ரூபாய் 5.80 இலட்சத்திற்கு மோசடி செய்யப்பட்டது தெரிய வந்தது. இதுவரையில் ரூபாய் 25,000 ரொக்கமும், 4 சவரன் எடையுள்ள தங்கச் செயின் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் கைது செய்யப்பட்டனர். மேலும் புலன் விசாரணை நடைபெற்று வருகிறது.

மதுரை (ஊரக) மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண் 18/88 :

119. மதுரையிலுள்ள முன்னாள் ராணுவத்தினர் நலத்துறை அலுவலகத்தில் தலைமையக ஒதுக்கீட்டின்கீழ் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்காக, அவ்வலுவலக துணை இயக்குநரது அலுவலக முத்திரையை மோசடி செய்த வழக்காகும் இது. மனுதாரரான குற்றஞ்சாட்டப்பட்ட சிராஜ்தீன், சன்னாசியப்பன் மற்றும் தரகர்களான கிருஷ்ணமூர்த்தி, பன்னீர்செல்வம் ஆகியோர் கைது செய்யப்பட்டு, நீதி மன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர். மேலும் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மதுரை நகரம் மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண் 115/88 :

120. குற்றம் சாட்டப்பட்ட தியாகராஜன் செட்டியார், கல்லலில் உள்ள ருக்மணி காட்டன் மில்லைச் சேர்ந்த மற்றைய இரண்டு இயக்குநர்களுடனும் அதன் கணக்காளருடனும் சேர்ந்து, பல்வேறு இடங்களுக்கு நூல் பண்டல்கள் அனுப்பப்பட்டதாகப் பொய்யான ஆவணங்களை பாங்க் ஆஃப் மதுரையில் சமர்ப்பித்து, ரூபாய் 10,24,000-ஐ மோசடி செய்தது பற்றிய வழக்காகும் இது. இவ்வழக்கு குற்றப் புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவினரால் 1988-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25-ஆம் நாள் அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, புலன் விசாரணை நடைபெற்று வருகின்றது.

குற்றப் புலனாய்வுத் துறை சிலை திருட்டுப் பிரிவின் குறிப்பிடத்தக்க சில பணிகள் :

நன்னிலம் காவல் நிலையக் குற்ற எண் 268/88 :

121. 1988 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 23 ஆம் நாள் அன்று நன்னிலத்தில் கோட்டூரைச் சேர்ந்த வைரக்கண்ணன் என்பவரின் மகனான பழனியப்பன் என்பவர் பண்டைக் கால பெருமாள் சிலை ஒன்றோடு கைது செய்யப்பட்டார். புலன் விசாரணையின்போது, அந்த சிலை 1986 ஆம் வருடத்தில் (பேரளம் காவல் நிலையக் குற்ற எண் 129-86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில்) கோயில் ஒன்றிலிருந்து திருடப்பட்டதாகத் தெரிய வந்தது. குற்றம் சாட்டப்பட்டவருக்கு 1988 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8 ஆம் நாள் அன்று ஒரு வருட கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது.

[1989 ஏப்ரல் 27

திருவாரூர் நகர காவல் நிலையக் குற்ற எண் 867/88 :

122. 1988 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 25 ஆம் நாள் அன்று திருவாரூர் நகரில், திருவாரூர் நகர் கரிமேடு பகுதியைச் சேர்நத பரமசிவம் என்பவரின் மகனான குற்றஞ் சாட்டப்பட்ட பாஸ்கர் என்பவர் சந்தேகத்திற்குரிய சூழ்நிலையில் கைது செய்யப்பட்டார். அவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில், சிலைகளை விலைக்கு வாங்கிய கண்ணன் என்பவரிடமிருந்து பண்டைக்கால விநாயகர் சிலை ஒன்று கைப்பற்றப் பட்டது. புலன் விசாரணையில், அந்தச் சிலை செம்பனார் கோவிலில் உள்ள கோவில் ஒன்றிலிருந்து திருடப்பட்டது (செம்ப னார் கோவில் காவல் நிலைய குற்ற எண் 258/88) என்று கண்டுபிடிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட பாஸ்கருக்கு இரண்டு வருட கடுங்காவல் தண்டனையும் கண்ணன் என்பவ ருக்கு 9 மாத கடுங்காவல் தண்டனையும் 1988 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8 ஆம் நாள் அன்று அளிக்கப்பட்டது.

சட்டம்-ஒழுங்கு :

123. தமிழ்நாட்டில் வகுப்புப் பூசல் அதிகமின்றி பொது வாக அமைதி காக்கப்பட்டு வருகிறது. ஆயினும் 1988-ல் ஒருசில வகுப்புக் கலவரங்கள் நடைபெற்றன. அவை, பெரும்பாலும் நீண்ட காலமாக இருந்து வந்த சில கேளிக்கைகள், பகைமை உணர்வு, நிலத்தகராறு, மதம் மற்றும் விழாக்கால ஊர்வலங்கள், பெண்களைக் கேலி செய்தல் ஆகிய காரணங்களால் ஏற்பட்டன. ஆனால், காவலர் உடனுக்குடன் விழிப்புடன் செயல்பட்டு, பாதிக்கப்பட்டவர்களை அழைத்து, சமரசம் செய்வித்தும் சமூக விரோதிகளைக் கைது செய்தும், நிலைமையை சாதுரியமாக கட்டுப்படுத்தினர்.

124. கோவை நகரப்பகுதி கம்பட்டி காலனியில் 1988 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6 ஆம் நாள் அன்று நடைபெற்ற சண்டை யையடுத்து, மார்ச் திங்கள் 8 ஆம் நாள் அன்று இஸ்லாமியர் களுக்கும் இந்து முன்னணியைச் சார்ந்தவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் 8 இஸ்லாமியர்களும், 7 இந்துக்களும், ஒரு கிருத்தவரும் காயமடைந்தனர். காய முற்றவர்களில் ஒருவர் 1988 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9 ஆம் நாள் அன்று காயத்தின் விளைவாக மரணம் அடைந்தார். இது தொடர்பாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 30 இஸ்லாமியர் களும், 21 இந்துக்களும் கைது செய்யப்பட்டனர்.

மாணவர்கள் :

125. மாணவர்கள், சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்ட பிரச் சினைகள், எதையும் எழுப்பவில்லை என்றாலும் உள்ளூர் பிரச் சினைகளை காரணமாக நடைபெற்ற பரவலான சம்பவங்கள் காவல் துறையினரால் தக்க சமயத்தில் கட்டுப்படுத்தப்பட்டன,

1989 ஏப்ரல் 27]

ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் :

126. 1988 ஆம் ஆண்டு ஜூன்-ஜூலை மாதங்களில் தமிழ் நாடு ஆசிரியர்கள்—அரசு ஊழியர்கள் கூட்டு நடவடிக்கைக் குழு, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக ஊதியம், ஒரு மாத ஊதியத்தை ஊதியக் கொடையாக வழங்க வேண்டும் எனக் கோரி 1988 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22ஆம் நாள் முதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டது. இந்தக் காலங்களில் அவர்கள் பல இடங்களில் மறியல், ஆர்ப் பாட்டங்கள், ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் ஆகியவற்றை நடத்தினார்கள். காவல் துறையினர் தக்க நடவடிக்கை எடுத்து சட்டம்-ஒழுங்கைப் பாதுகாத்தனர். 1988 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 22ஆம் நாள் அன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக் கும் ஊழியர்களுக்கும், அரசாங்கத்திற்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டையடுத்து 1988ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 26ஆம் நாள் முதல் இயல்பான நிலைமை திரும்பியது.

தொழிலாளர்கள் :

127. பல்வேறு தொழிற் சங்கங்கள் நடத்திய வேலை நிறுத் தம், மறியல் போன்ற சில சம்பவங்கள் தவிர பெரும்பாலும் தமிழ்நாட்டில் தொழிலாளர் நிலைமை அமைதியாகவே இருந் தது. ஊதிய உயர்வு, இடைக்கால நிவாரணம் போன்ற தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுத் துறை நிறுவனங்களைச் சேர்ந்த தொழிற் சங்கங்கள் விடுத்த நாடு தழுவிய வேலை நிறுத்த அழைப்பிற்கிணங்க, தமிழ்நாட்டில் உள்ள 17 பொதுத் துறை நிறுவனங்களைச் சேர்ந்த தொழிற் சங்கங்களின் ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்கள் 1988ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14ஆம் நாள் முதல் 1988ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17ஆம் நாள் முடிய வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். வேலை நிறுத்த காலத்தில் அசம்பாவிதம் ஏதும் நிகழவில்லை.

1988 ஆம் ஆண்டில் காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடுகள்.

128. 1988ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் காவல் துறையினர் 17 முறை துப்பாக்கிச் சூடு நடத்தினர். சில முக்கியச் சம்பவங்கள் பற்றிய சுருக்கமான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

129. 1988ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1ஆம் நாளன்று தஞ்சாவூர் (கிழக்கு) மாவட்டம் கல்லாறு கிராமத்தைச் சேர்ந்த உள்ளூர் இஸ்லாமியர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கலை நிகழ்ச்சியின் போது, அதிகாலையில் சில அடையாளம் தெரி யதா நபர்கள் சில இஸ்லாமிய பெண்களிடம் தகாத முறையில்

நடந்து கொண்டனர். பாதுகாவல் பணிக்கு வந்திருந்த காவலர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து வந்தபோது அவர்களை அந்த நபர்கள் தாக்கினர். காவலாகள் குறைந்த அளவு சக்தியைப் பயன்படுத்தி அவர்களைத் துரத்தி அடித்தனர். சிறிது நேரத்திற்குப் பின்னர் சுமார் 100 பேர்களைக் கொண்ட கூட்டம் ஒன்று காவலர்களைக் கற்களால் தாக்கியதில் காவல் துறையைச் சேர்ந்த 9 பேருக்குக் காயங்கள் ஏற்பட்டன. கூட்டத்தைக் கலைக்கும் பொருட்டு காவல் துறையினர் 14 தடவைகள் வானை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர். இச்சம்பவம் தொடர்பாக 1988ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1ஆம் நாளன்று வேளாங்கன்னி, காவல் நிலையத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தும்படி நாகப்பட்டினம் வருவாய்க் கோட்ட அலுவலர் பணிக்கப்பட்டுள்ளார். அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

130. 1988ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 4ஆம் நாளன்று சென்னை, ராயபுரத்தில் லாரி ஒன்று மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவர் அதே இடத்தில் இறந்து போனார். இதனால் ஆத்திரம் அடைந்த காசிமேடு பகுதியில் வசிப்பவர்கள் லாரியைச் சேதப்படுத்தியதுடன் அவ்வழியே வாகனப் போக்குவரத்து நடைபெறத் தடை ஏற்படுத்தினர். இவ்வன்முறைக் கூட்டத்தினை கலைப்பதற்காக காவலர் வானை நோக்கி ஒரு தடவை சுட்டனர். இந்தத்துப்பாக்கிச் சூட்டில் எவரும் காயம் அடையவில்லை. இச்சம்பவம் தொடர்பாக 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

131. 1988ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 16ஆம் நாளன்று இரவு தஞ்சாவூர் கிழக்கு மாவட்டம் நாகூரில் இந்து முன்னணி தலைவர் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும்போது இஸ்லாமியர்களுக்கு எதிராகக் கூறிய தரக்குறைவான வார்த்தைகளைத் தொடர்ந்து இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் மிடையே மோதல் ஏற்பட்டது. கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காகக் காவலர்கள் இரண்டு முறை துப்பாக்கியால் சுட்டனர். இதில் ஒரு இஸ்லாமியர் காயம் அடைந்தார். இக் குழப்பத்தில் 3 காவல் துறையினரும், மற்றொரு இஸ்லாமியரும் காயம் அடைந்தனர். 1988ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 17ஆம் நாளன்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரால் கூட்டப்பட்ட அமைதிக் குழுக் கூட்டத்தில் இருதரப்பினரைச் சார்ந்த முக்கிய பிரமுகர்கள் பங்கு கொண்டனர். இரு தரப்பினரிடையே சுமுகமான சூழ்நிலையைப் பராமரிப்பதாக அவர்கள் உறுதியளித்தார்கள்.

132. புள்ளம்பாடி கால்வாயிலிருந்து விவசாயத்திற்கு தண்ணீர் திறந்துவிடக் கோரி பல்வேறு கட்சிகளைச் சார்ந்த சுமார் 2,000 பேர் 1988ஆம் அண்டு செப்டம்பர் திங்கள் 8 அம் நாளன்று புள்ளம்பாடி பஞ்சாயத்து ஒன்றிய அலுவலகம் முன்பு

1989 ஏப்ரல் 2[]

மறியல் செய்ய முயன்றனர். காவல்துறையினர் துப்பாக்கியால் சுட்டதில் இருவர் மரணம் அடைந்தனர். ஒருவர் காயம் அடைந்தார். இச்சம்பவம் தொடர்பாக திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலுவலரின் விசாரணையில் காவலர்கள் தற்காப்பிற்காகத் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானது எனத் தீர்ப்பு வழங்கினார்.

133. 1988ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15ஆம் நாள் அன்று மானாமதுரை காவல் நிலையம் நோக்கி காவல்துறை வேனில் சென்று கொண்டிருந்த காவலர் குழு, பயங்கர ஆயுதங்களைக் கையில் ஏந்திய 200 பேர் கொண்ட சட்ட விரோத கும்பலால் மேலபசலை கிராமத்தில் வழிமறிக்கப்பட்டது. மேலும் அவர்கள் சாலையின் குறுக்கே தடைகளைப் போட்டு 10 லாரிகளையும் வழி மறித்தனர். காவலர்கள் கூட்டத்தினரை கலைந்து செல்லுமாறு கேட்டுக் கொண்டனர். ஆனால் கூட்டத்தினர் காவலரையும், லாரிகளையும் தாக்க முயன்றனர். எனவே காவலர்கள் தற்காப்பிற்காக வானை நோக்கி ஒரு தடவை சுட்டதும் கூட்டத்தினர் உடனடியாகக் கலைந்தனர். சாலைத் தடைகளை காவல் துறையினர் அகற்றி, போக்குவரத்திற்கு வழி வகுத்தனர். இச்சம்பவம் தொடர்பாக மானாமதுரை காவல் நிலையக் குற்ற எண் 93/88-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக வருவாய்க் கோட்ட அலுவலர் விசாரணை நடைபெற்று வருகிறது.

134. 1988ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14ஆம் நாளன்று வேளாங்கண்ணி காவல் நிலைய அதிகார எல்லைக்குட்பட்ட மூங்கில்குடி என்ற கிராமத்தில், 25 ஏக்கர் நஞ்சை நிலத்திற்கு சொந்தக்காரரான ராமபிரசாத் என்பவருக்கு எதிராக இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டு கட்சியைச் சார்ந்தவர்கள், ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். ராமபிரசாத் அறுவடைக்கு இயந்திரங்களை பயன்படுத்தியதே, விவசாயத் தொழிலாளர்களுக்கும் ராமபிரசாத் என்பவருக்கும் இடையே பிரச்சினையை ஏற்படுத்தியது. சட்டம்—ஒழுங்கு பிரச்சினை ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகியதால், காவல் துறையினர் பாதுகாப்புப் பணிக்கு வரவழைக்கப்பட்டனர். அறுவடைப் பணியில் இயந்திரங்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்பொழுது, சுமார் 300 விவசாயத் தொழிலாளர்கள் ராமபிரசாத் நிலத்தினுள் சென்று அங்கு இயந்திரத்தினால் அறுவடை செய்யும் பணியைத் தடுத்து நிறுத்தினர். காவல் துறையினர் கலைந்து செல்லுமாறு எச்சரித்தனர். ஆனால் கூட்டத்தினர் அதற்கு செவி சாய்க்கவில்லை. காவல் துறையினர் கூட்டத்தினரை பயமுறுத்துவதற்காக வானை நோக்கிச் சுட்டனர். இதன் பிறகு கூட்டம் கலைந்து சென்றது. இதில் எவரும் காயமடையவில்லை. இச்சம்பவம் தொடர்பாக வேளாங்கண்ணி காவல் நிலையக் குற்ற எண் 159/88 மற்றும் 160/88-ல் இரண்டு

வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தும்படி நாகப்பட்டினம் வருவாய்க் கோட்ட அலுவலர் பணிக்கப்பட்டுள்ளார். அவரது அறிக்கை எதிர் பார்க்கப்படுகிறது.

135. 1988ஆம் ஆண்டு மே திங்கள் 2ஆம் நாள் அன்று சென்னை மாநகரின் காசிமேடு பகுதியில் உள்ள பூண்டி தங்கம் மாள் தெருவில் சண்டையிட்டுக்கொண்டிருந்த இரண்டு மீன வர்கள் கும்பல்களை கலைப்பதற்காக காவலர்கள் வானை நோக்கி ஒரு தடவை துப்பாக்கியால் சுட்டனர். இதில் எவரும் காயம் அடையவில்லை. இச் சம்பவம் தொடர்பாக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, இரு தரப்பினரையும் சேர்ந்த 12 பேர்களை காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

பகுதி 7.

காவலர்—பொதுமக்கள் தொடர்பு :

136. குற்றத் தடுப்பு கண்டுபிடிப்பு ஆகியவற்றில் பொது மக்களின் ஆதரவைப் பெறுவதற்கும், அவர்களிடையே நம்பிக் கையை ஏற்படுத்துவதற்கும் காவலர்கள் பொது மக்களுடன் நல்ல முறையில் தொடர்பு வைத்துக் கொள்வது இன்றி யமையாதது. காவல்துறையைச் சேர்ந்த ஒவ்வொருவரும், தங்களின் அன்பார்ந்த நடத்தையாலும் பொதுமக்களின் குறைகளைத் தீர்க்க நேர்மையான, உண்மையான நடவடிக் கைகளை எடுப்பதன் மூலமும், பொது மக்களிடையே அரசி னைப்பற்றிய நல்லெண்ணத்தை வளர்க்க முடியும். இவ் வழியில் பொது மக்களின் நன் மதிப்பை என்றென்றும் பெறு மளவிற்கு தமிழ்நாடு காவல் துறையினர் நன்கு செயல்பட வேண்டும்.

137. வெள்ளம், புயல், விபத்து, தீ விபத்து ஆகியவற்றினால் பாதிக்கப்படும் மக்களைக் காப்பாற்றவும், அவர்களுக்குத் தேவையான நிவாரணம் அளிக்கவும் அரசு எடுக்கும் எல்லா நடவடிக்கைகளிலும் காவல் துறையினர் தங்களை முழுமை யாக ஈடுபடுத்திக்கொண்டு எல்லா உதவிகளையும் செய்து வருகின்றனர். இனம், அரசியல், மதம் சம்பந்தப்பட்ட கலவரங்களினால் சட்டம்–ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் போதெல்லாம், பொறுப்புணர்ச்சியோடு காவல் துறையினரே முதன்மையாக முன் வந்து உடன்பாட்டுப் பேச்சு வார்த்தை களுக்கு அடிகோலி சிக்கல்களுக்குச் சுமுகமான முறையில் தீர்வுகாண வகை செய்திடவேண்டும்.

138. கிராம விழிப்புக்குழு, மாவட்ட போக்குவரத்துக்குழு, புறநகர் குடியிருப்பு சங்கத்தினர் செய்யும் சுற்றுக்காவல் போன்ற அமைப்புகளால் காவலர் பொது மக்களிடையே நெருங்கிய நல்லுறவு வளர்வதுடன், இம்மாநிலத்தில் குற்ற வாளிகளின் நடவடிக்கைகளையும் விழிப்போடு தடுப்பதற்கும் இயலுகிறது.

1989 ஏப்ரல் 27]

139. 1988ஆம் ஆண்டுக்கான மாநிலக் காவல் துறை விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் ஏப்ரல் மாதம் நடைபெற்றது. அனைத்து சரகங்களுக்கு இடையேயான விளை யாட்டு போட்டிகள் மதுரையில் 1988ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 6ஆம் நாள் முதல் 10ஆம் நாள் வரையில் நடைபெற்றன. திருவனந்தபுரத்தில் 1988ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3ஆம் நாள் முதல் 7ஆம் நாள் வரையில் நடைபெற்ற 37ஆவது அகில இந்திய காவல்துறை விளையாட்டுப் போட்டிகளில் நீச்சல் போட்டி, ஓட்டப் பந்தயம் ஆகியவற்றில் தமிழகக் காவல் துறையினர் பங்கு கொண்டனர். தமிழ்நாடு காவல் துறையினர் ஸ்ரீநகரில் 1988ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24ஆம் நாள் முதல் 30ஆம் நாள் வரை நடைபெற்ற அகில இந்திய காவல் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு 4 தங்கம், 3 வெள்ளி மற்றும் 4 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றனர். விசாகப்பட்டினத்தில் 1988ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5ஆம் நாள் முதல் 15ஆம் நாள் வரை நடைபெற்ற தென் மண்டல விளையாட்டுப் போட்டிகளிலும் தமிழக காவல் துறையினர் கலந்து கொண்டனர்.

ஊர்க் காவல் படை :

140. ஊர்க் காவல் படை அமைப்பானது காவல் துறை யினருக்கு உறுதுணையாக விளங்குவதோடு பொது மக்களுக்கு தாமாகவே வந்து உதவும் ஓர் அமைப்பாகவும் இருந்து வருகிறது. காவல்துறைத் தலைவரின் தலைமையில் இயங்கும் இவ்வியக்க மானது, பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த 10,010 ஆண் களையும், 550 பெண்களையும் கொண்டதாக இருக்கிறது. போக்குவரத்தினை ஒழுங்கு படுத்துதல், ரோந்துப் பணி, இரவு நேர ரோந்துப் பணி, கோவில்களில் நடைபெறும் திருவிழாக்களின்போது பாதுகாப்பு, அழைப்பாணை கொடுத்தல், நிதி வசூல் செய்தல் போன்ற பல்வேறு பணி களுக்காக 1988ஆம் ஆண்டு ஊர்க்காவலர்களின் பணி பயன் படுத்தப்பட்டது. 1988ஆம் ஆண்டு, மூன்று ஊர்க்காவல் படையினருக்கு குடியரசு தின பதக்கமும், ஒருவருக்கு சுதந்திர தினப் பதக்கமும் வழங்கப்பட்டன.

தேர்தல்கள் :

141. 1988ஆம் ஆண்டு இடைத் தேர்தல் ஏதும் நடை பெறவில்லை. ஆயினும் தமிழக சட்டப் பேரவைக்கான பொதுத் தேர்தல் 1989ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 21ஆம் நாளன்று நடைபெற்றது. அப்போது காவல் துறையினர் சட்டம்-ஒழுங்கை சிறப்பாக பாதுகாத்த விதம், தேர்தல் கமிஷனால் நியமிக்கப்பட்ட தேர்தல் பார்வையாளர்களின் பாராட்டினைப் பெற்றுத் தந்தது. தேர்தல் அமைதியாக நடைபெற விரிவான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

[1989 ஏப்ரல் 27

உயிர் மீட்டல் போன்ற வீரச் செயலுக்கான பிரதமரின் விருது :

142. 1987ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17ஆம் நாளன்று மதுரை (ஊரகம்) மாவட்டம், நரசிங்கம் கிராமத்தில் திருவாளர்கள் வெள்ளைச்சாமி, சந்திரன், பழனி, சிவநாதன் ஆகிய ஏழை கூலித் தொழிலாளர்கள் தங்கள் குழந்தைகளை குடிசைகளில் விட்டுவிட்டு தங்கள் மனைவிகளுடன் வயலுக்குச் சென்று விட்டனர். திடீரென்று ஏற்பட்ட தீ விபத்தில் அவர்களது குடிசைகளும் தீப்பற்றிக் கொண்டன. குடிசைகளின் உள்ளே தீயில் சிக்கிக் கொண்ட முனியாண்டி மற்றும் கருப்பையா என்ற சிறுவர்கள் வெளியே வர முடியாமல் அபயக் குரல் எழுப்பினர். அச்சமயம் கிராமத்தில் அழைப்பாணைப் பணியில் இருந்து முதல் நிலைக் காவலர் ஆண்டி (எண் 1510) என்பவர் சிறுவர்களின் கூக்குரலைக் கேட்டார். உடனே சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அவர் தீரத்துடன் தீப்பற்றி எரியும் குடிசையின் உள்ளே நுழைந்து சிறுவர்களைப் பாதுகாப்பாக வெளியே கொணர்ந்து அவர்களைக் காப்பாற்றினார். இதனால் காவலருக்கு தீக்காயங்கள் ஏற்பட்டு மதுரை அரசு இராஜாஜி மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. தனது உயிருக்கு ஏற்பட்ட ஆபத்தையும் பொருட்படுத்தாது கடமையுணர்வுடனும் தீரத்துடனும் சிறுவர்களின் உயிரைக் காப்பாற்றிய இவரது செயல் பிரதமரின் வீரச் செயலுக்கான விருதினைப் பெற்றுத்தந்தது.

பகுதி 8.

நடப்பாண்டில் வழங்கப்பட்ட முக்கிய ஆணைகள் ;

143. 1989ஆம் ஆண்டு மார்ச் முடிய உள்ள நிதியாண்டில் காவல் துறைக்குத் தேவையான பணியாளர்கள், கருவிகள் சம்பந்தப்பட்ட பல திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சில முக்கிய ஒப்பளிப்புகள் பற்றிய விவரங்கள் வருமாறு :

144. இந்த ஆண்டில் 4 காவல் துறை ஆய்வாளர்கள், 26 காவல் துறை சார்பு ஆய்வாளர்கள், 50 தலைமைக் காவலர்கள், 68 முதல் நிலைக் காவலர்கள் மற்றும் 383 இரண்டாம் நிலைக் காவலர்களைக் கொண்ட 19 புதிய காவல் நிலையங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

145. தென் ஆர்க்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு கடலூர், விழுப்புரம் ஆகிய காவல் மாவட்டங்கள் தேவையான பணியாளர்களுடன உருவாக்கப்பட்டன.

1989 ஏப்ரல் 27]

146. இந்த ஆண்டில் ரூ. 24,47,000 செலவில் புதிய வாகனங்கள் வாங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் பயனற்றதெனக் கழிக்கப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக ரூ. 1,47,25,400 செலவில் புதிய வாகனங்களை வாங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

147. தென் ஆர்க்காடு மாவட்டம் இரண்டாக பிரிக்கப் பட்டதை தொடர்ந்து 17 வி. எச். எப். கருவிகள், ஒரு நுண்ணலை தொலைபேசி, ஒரு ரிப்புட்டர் கருவி ஆகிய வற்றை ரூ. 29,58,800 செலவில் வாங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

பகுதி 9.

முடிவுரை :

148. இந்திய அரசியலமைப்பின் கீழ் சமுதாயத்தின் எல்லா பிரிவுகளையும் சேர்ந்த மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரசு மும்முரமாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, இன் றைய அரசு ஒரு மக்கள் நல அரசாகச் செயல்படுகிறது. இந்த மக்கள் நல அரசின் பணிகள் சிக்கலானவையும் எண்ணிறந்த வையும் ஆகும். இப்பணிகள் நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்றால், குற்றங்கள் கட்டுப்படுத்தப்பட்டு, நாட்டில் சட்டம்-ஒழுங்கு நல்ல முறையில் நிலவ வேண்டும். ஆகவே, இவ்வமைப்பில் காவல் துறையினர் மிக முக்கிய பங்காற்ற வேண்டியுள்ளது. கடமையுணர்வோடும் மக்களுக்குத் தொண் டாற்ற வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தோடும் பொது மக்கள் முன்னிலையில் காவல் துறையினர் மிகுந்த ஒழுக்க உணர் வோடு பணியாற்ற வேண்டும். ஆகவே, காவல் துறையில் பணியாற்றும் ஒவ்வொருவருக்கும் இதில் பெரும் பொறுப்புள் ளது. இதனைக் கருத்தில் கொண்டு கீழே கூறப்பட்டுள்ள நெறிமுறைகளைக் கடைப்பிடித்தொழுக தமிழ்நாடு காவல் துறை யினர் பெரிதும் முயன்று வருகின்றனர் :—

(அ) தெரிவிக்கப்பட்ட எல்லாக் குற்றங்களும் புள்ளிவவர நிலையைக் கருதாமல் கட்டாயமாகப் பதிவு செய்யப்படும். இவ் வாறு தெரிவிக்கப்படும் குற்றங்களைப் பதிவு செய்வதன் மூலம் தான் அக்குற்றங்களை வெளிப்படுத்தி நடவடிக்கைகள் மேற் கொள்ள இயலும்.

(ஆ) மிகச் சிறிய குற்றங்கள் குறித்து இயன்ற வரை யில் அக்குற்றங்களைச் செய்தோரை எச்சரித்து விட்டு விட வேண்டும். காவல் துறை, நீதி மன்றங்கள், சிறைத் துறை, குற்றவாளிகள் நன்னடத்தையைக் கண்காணிக்கும் பிரிவு ஆகி யவை அடங்கிய மாநிலக் குற்றவியல் நிர்வாகம், தன் வசமுள்ள வரையறுத்த அளவு வசதிகளை அநாவசியமாகப் பயன்படுத்

தவோ சிதறடிக்கவோ கூடாது. மதுவிலக்கைப் பொறுத்த வரை காவல் துறையினர் மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக வும் முழு மனதுடன் அமுல் செய்து, கள்ளச் சாராயம் காய்ச்சு வோர், சமூக விரோதிகள் ஆகியோர் மக்களுக்குத் தீமை விளை விக்கும் சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க எல்லா முயற்சிகளும் எடுக்க வேண்டும்.

(இ) மகளிர், இளம் பெண்கள் விபசாரத்தில் ஈடுபடுத்தப் படும் சமுதாயக் கொடுமை, வரதட்சணை கொடுமை ஆகியவை அகற்றப்பட்டு, தாழ்த்தப்பட்ட, மலை வாழ் மக்களின் உரிமை கள் பாதுகாக்கப்பட காவல் துறை தீவிரமாகச் செயல்படும்.

(ஈ) காவலரிடம் முறையிடவோ, குற்றம் சாட்டப்பட்டவ ராகவோ, உதவி கோரியோ வருபவர்களில் பெரும்பான்மை யான மக்கள் ஏழைகளாகவும் சமூகத்தின் கீழ்மட்டத்தில் உள்ள வர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை காவல் துறையினர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். எனவே, அவர்களிடம் காவலர் அன்புடனும், அனுசரணையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

(உ) காவல் துறையினரின் தூய்மையையும் திறமையையும் உறுதி செய்யும் பொருட்டு அவர்களது ஒழுங்குணர்வையும் கட்டுப் பாட்டையும் உயரிய நிலையில் பேணி வர வேண்டும். இதைச் சாதிப்பதற்கு வேண்டிய இன்றியமையாத அடிப்படை நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஊ) பொது மக்கள் சிறந்த காவல் பாதுகாப்பிற்கு உரி மை உடையவர்கள் ஆவர். எனவே, இது காறும் போதிய அளவு காவலர்கள், பாதுகாப்பு இல்லாத பகுதிகளில் காவல் நிலையங்கள் அமைத்து அவற்றில் நன்கு பயிற்சி பெற்ற காவ லர்கள் போதிய எண்ணிக்கையில் நியமிக்கப்படுவர்.

(எ) அவ்வாறு திறம்படைத்த காவல் பாதுகாப்புக் கிட்டு வதை உறுதி செய்யும் பொருட்டு காவல் துறையின் பயிற்சி வசதிகள் மேம்படுத்தப்படும். ஆராய்ச்சி வசதிகள் வலுப் படுத்தப்படும். காவல் துறையை நவீனப்படுத்துவதும் தொடரும்.

(ஏ) இயன்றவரை வனம், வனவிலங்குகளைப் பாதுகாத்தல் விலங்குகளைக் கொடுமைப்படுத்துவதைத் தடுத்தல், துப்பரவுக் கேடு, சப்தத்தால் வரும் கேடு, தூய்மைக்குக்கேடு ஆகியவற்றைத் தவிர்த்தல் போன்ற ஏனைய பணிகளிலும் காவல் துறை முனைப்புடன் உதவி புரிய வேண்டும்.

(ஐ) பொது மக்களின் நன்மதிப்புடன் கூடிய ஆதரவு இன் றியமையாதது என்பதைக் காவல் துறையினர் உணர்ந்து இத் தகைய ஒததுழைப்பை மிக அதிக அளவில் பெறும் வகையில் மக்கள் தொடர்பைச் சீர்படுத்திக் கொண்டு மேலும் தங்கள் பணிகளைத் தொடர வேண்டும்.

1989 ஏப்ரல் 27]

149. சமுதாயத்தின் நன் மதிப்பையும், அன்பையும் பெறுவதுதான் காவல் துறையினரின் தலையாய கடமையாகும். அதற்குப் பின்னர் தான் அவர் தன் குடும்பத்தின் மீது அக்கறை செலுத்த வேண்டும். அவர் தன் பணிக் காலத்தில் பெறுகின்ற வெகுமதிகள், பதவி உயர்வுகள் போன்றவற்றால் பெற முடியாத மன நிறைவினை இதன் மூலம் மட்டுமே அவர்கள் பெற முடியும். இதனைக் கருத்திற் கொண்டு, காவல் துறையினர் சட்டம்-ஒழுங்கைக் காக்க கடும் பணி ஆற்றுவதோடு குற்றத்தைக் கண்டு பிடித்தல், சமூகப் பணி ஆகியவற்றில் அவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். காவல் துறையினருக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து அரசியல் தலைவர்கள் செயல்பட்டு தங்களின் ஒத்துழைப்பை நல்கினால் காவல் துறையினரின் பணியும் கடமைகளும் எளிதாகும்.

150. மேலே வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப தமிழ்நாடு மாநில காவல் துறையினர் தொடர்ந்து செயல்படுவர். வருங்காலத்திலும் மேலும் அவர்கள் திறம்பட பணியாற்றும் வகையில் எல்லா நடவடிக்கைகளையும் தமிழ்நாடு காவல் துறை மேற்கொள்ளும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1989 ஏப்ரல் 27

1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாளன்றுள்ளவாறு தமிழ்நாடு காவல் துறைக்கு அனுமதியளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை.

தொடர் எண்ணும் பதவியும்.		மொத்தம்.
1.	காவல் துறை டைரக்டர் ஜெனரல் ..	1
2.	காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள்	8
3.	காவல் துறைத் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள்.	19
4.	காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் ..	70
5.	காவல் துறைத் தளவாய்கள் ..	2
6.	காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்கள்	40
7.	காவல் துறைத் துணைத் தளவாய்கள் ..	5
8.	காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் நிலை-1.	277
9.	காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் நிலை-2.	42
10.	காவல் துறை உதவித் தளவாய்கள் ..	37
11.	காவல் துறை ஆய்வாளர்கள் ..	1,301
12.	காவல் துறை அசுடண்ட் ஆய்வாளர்கள் ..	7
13.	காவல் துறை சேமக் காவல் படை ஆய்வாளர்கள்.	119
14.	காவல் துறை சார்பு ஆய்வாளர்கள் ..	3,928
15.	காவல் துறை சேமக் காவல் படை சார்பு ஆய்வாளர்கள்.	613
16.	காவல் துறை தலைமைக் காலவர்கள் ..	5,888
17.	காவல் துறை அவில்தார்கள் ..	830
18.	காவல் துறை காவலர்கள் நிலை-1 ..	4,897
19.	காவல் துறை நாயக்குகள் ..	619
20.	காவல் துறை லான்ஸ் நாயக்குகள் ..	1,071
21.	காவல் துறை காலவர்கள் நிலை-2 ..	45,238
22.	காவல் துறை பெண் சார்பு ஆய்வாளர்கள்	88
23.	காவல் துறை பெண் தலைமைக் காவலர்கள்	80
24.	காவல் துறை பெண் காவலர்கள் ..	690
	மொத்தம் ..	66,872

1988 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1988ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை காவல் துறைக்கு அனுமதியளிக்கப்பட்ட பணியாளர்கள் பற்றிய விவரம் :

(அ) நிர்வாகிகள்—

காவல் துறைக் கண்காணிப்பாளர்	..	1
காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள்		2
காவல் துறை ஆய்வாளர்கள்	..	11
காவல் துறை சார்பு ஆய்வாளர்கள்	..	35
காவல் துறை தலைமைக் காவலர்கள்	..	74
காவல் துறை காவலர்கள் — நிலை-1	..	77
காவல் துறை காவலர்கள்—நிலை-2	..	481
காவல் துறை பெண் சார்பு ஆய்வாளர்	..	1
காவல் துறை சார்பு ஆய்வாளர்கள் (சேமப்படை)		2
மொத்தம்	..	684

(ஆ) அமைச்சுப் பணியாளர்கள்—

கண்காணிப்பாளர்கள்	..	[illegible]
உதவியாளர்கள்	..	[illegible]
இளநிலை உதவியாளர்கள்	..	[illegible]
தட்டச்சர்	..	[illegible]
சுருக்கெழுத்து தட்டச்சர்	..	[illegible]
பதிவுரு எழுத்தர்	..	1
அலுவலக உதவியாளர்கள்	..	12
மொத்தம்	..	84

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(இ) பிற பணியாளர்கள்—

விரல் ரேகைக் கூட கண்காணிப்பாளர்	..	1
விரல் ரேகை நிபுணர்	..	1
விரல் ரேகை தேடுநர்	..	1
புகைப்படம் எடுப்பவர்	..	1
அறிவியல் உதவியாளர்	..	1
புள்ளி விவர ஆய்வாளர்	..	1
முதுநிலை ரிப்போர்ட்டர்	..	1
இளநிலை ரிப்போர்ட்டர்	..	1
ஆய்வாளர் (தொழில் நுட்பம்)	..	1
ஆப்பரேட்டிங் உதவி ஆய்வாளர்கள்	..	2
ஆட்டோமொபைல் பொறியாளர்	..	1
தொழில் நுட்ப உதவியாளர்	..	1
முதலாள்	..	1
கிடங்கு காப்பாளர்	..	1
இயந்திரக் கம்மியர்—நிலை-1	..	1
இயந்திரக் கம்மியர்—நிலை-2	..	1
பற்ற வைப்பவர்	..	1
மின் பணியாளர்—நிலை-1	..	1
பொருத்துநர்	..	1
உலோகத் தகடுகளைப் பழுதுபார்ப்பவர்	..	1
வண்ணம் தீட்டுபவர்	..	1
தச்சர்	..	1
லைனர்	..	1
உதவியாள்	..	5
சார்ஜ் மேன்	..	1
நேரப் பதிவாளர்	..	1
சுகாதாரப் பணியாளர்	..	1
மொத்தம்	..	32

1989 ஏப்ரல் 27]

தமிழ்நாடு தீயணைப்புத் துறை.

மானியக் கோரிக்கை எண் 16.

கொள்கைக் குறிப்பு 1989–90.

தமிழ்நாடு தீயணைப்புத்துறை தீ விபத்தைத் தடுப்பதும், தீயை அணைக்கும் ஒரு நிறுவனமாக விளங்குவதோடு மட்டுமல்லாமல், அவசர கால இடர் உதவிப் பணியையும் செய்து வருகிறது. இத்துறை தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லாமல் வெள்ளம், புயல், நில நடுக்கம், கட்டிடம் இடிந்து விழுதல் போன்ற இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மற்றும் ரயில் விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கிறது. தேர்தல் காலங்களிலும், கலவரங்களிலும், கோவில் திருவிழாக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்களின் வருகையின் போதும் பாதுகாப்பிற்காக இத்துறை பணியாளர்களின் சேவை காவல் துறையினருக்கு அளிக்கப்படுகிறது. தொற்று நோய்கள் பெருவாரியாக பரவும் காலங்களில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இத் துறை பெரிதும் உதவி புரிகிறது. அரசு கட்டிடங்கள், தொழிற்சாலைகள் மற்றும் பொது முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்கள் கட்டும்போது தீ விபத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வது பற்றிய அறிவுரைகளை இத்துறை வழங்குகிறது. பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட அனைத்து கட்டிடங்களையும் இத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்கின்றனர். 1988–89 ஆம் ஆண்டில் இவ்வாறு ஆய்வு செய்யப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் பிற்சேர்க்கை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. தற்போதைய நிதி நெருக்கடி நிலையிலும் மாநிலம் முழுவதும் 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒன்று வீதம் தீயணைப்பு நிலையங்கள் நிறுவுவதை இத்துறை முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இக் குறிக்கோளை கருத்தில் கொண்டு தீ விபத்து ஏற்பட அதிக வாய்ப்புள்ள தொழிற்சாலைகள் மற்றும் குடிமக்கள் நிறைந்த பகுதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தீயணைப்பு நிலையங்கள் திறக்க அரசு ஒப்புதலளித்து வருகிறது.

3. இந்திய பொது ஈட்டுறுதிக் கழகம் வழங்கும் கடன் உதவித் தொகைகளைக் கொண்டு அதி நவீன தீயணைப்பு கருவிகள் மற்றும் தொழில்நுட்பம் வாய்ந்த புதிய ஊர்திகள் வாங்கி தீயணைப்புத் துறையை நவீனப்படுத்த அரசு அனைத்து முயற்சிகளும் செய்து வருகிறது.

நிர்வாக அமைப்பு.

தமிழ்நாடு தியணைப்புத்துறை இயக்குநரைத் தலைவராகக் கொண்டு தொடர்ந்து செயலபட்டு வருகின்றது. இம் மாநிலம் மூன்று மண்டலங்களாகப் பிர்க்கப்பட்டு ஒன்று சென்னையையும், இரண்டாவது மதுரையையும், மூன்றாவது திருச்சியையும் தலைமையிடமாகக் கொண்டு தனித்தனி துணை இயக்குநரின் கீழ் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மண்டலத்திலும் நான்கு முதல் ஆறு கோட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கோட்டமும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்களைத் தன்னகத்தே கொண்டு ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் கீழ் செயலபட்டு வருகிறது. கோட்டத் தியணைப்பு அலுவலருக்கு உதவியாக நிர்வாக மற்றும் செயல் பணிகளில உதவக் கோட்டத் தியணைப்பு அலுவலர் பணிபுரிந்து வருகிறார். தற்போது நம் மாநிலத்தில் 15 தீயணைப்புக் கோட்டங்கள் உள்ளன. பல பதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்கபபட்டதன் விளைவாக ஒரு கோட்டத் தீயணைபபு அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்ட தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டது. படிப்படியாக நிர்வாகத் திறமையினை அதிகாக்கும் நோக்கத்துடன் பெரிய கோட்டங்களை கீழ்க்கண்டவாறு பிரிக்க அரசு நடவடிக்கை எடுத்தது.—

கோட்டத்தின் பெயர்.	பிர்க்கப்பட்ட கோட்டத்தின் பெயர்.	பிரிக்கப் பட்ட தேதி.
1. திருச்சி—புதுக்கோட்டை, தஞ்சாவூர் கோட்டம்.	1. திருச்சி—புதுக்கோட்டை கோட்டம்.	13—5—83
	2. தஞ்சாவூர் கோட்டம்.	
2. தென்னாற்காடு—செங்கற்பட்டு கோட்டம்.	1. தென்னாற்காடு கோட்டம்.	2—9—85
	2. செங்கற்பட்டு கோட்டம் (தற்போது செங்கை அண்ணா கோட்டம்.)	
3. மதுரைக் கோட்டம்.	1. மதுரைக் கோட்டம்	15—9—85
	2. அண்ணா கோட்டம் (தற்போது திண்டுக்கல் காயிதே மில்லத் கோட்டம்.)	
4. திருநெல்வேலி—தூத்துக்குடி—கன்னியாகுமரி கோட்டம்.	1. திருநெல்வேலி—தூத்துக்குடி கோட்டம்.	19—9—86
	2. கன்னியாகுமரி கோட்டம்.	
5. திருநெல்வேலி—தூத்துக்குடி கோட்டம்.	1. திருநெல்வேலி கோட்டம்.	16—3—87
	2. வ. உ. சிதம்பரனார் கோட்டம்.	

1989 ஏப்ரல் 27]

பணியாளர் எண்ணிக்கை.

5. 1989 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் நாள் நிலவரப்படி தீயணைப்புத் துறையில் மொத்தம் 5,804 பணியாளர்கள் பணி புரிகின்றனர். அதன் விவரம் பிற்சேர்க்கை 3 மற்றும் 4 ல் கொடுக்கப்பட்டுள்ளன.

தீயணைப்பு நிலையங்கள்.

6. இம் மாநிலத்தில் 1989 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் நாள் நிலவரப்படி மொத்தம் 173 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. (விவரங்கள் பிற்சேர்க்கை 2 ல் கொடுக்கபபட்டு உள்ளன). இவைகளில் 21 தீயணைப்பு நிலையங்கள் சென்னையிலும் இதர 152 தீயணைப்பு நிலையங்கள் மாநிலத்தின் ஏனைய மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

தீ விபத்து அழைப்புகள்.

7. 1988 ஆம் ஆண்டில், இம்மாநிலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு மொத்தம் 10,200 தீ விபத்து அழைப்புகள் வந்தன. மேற்படி தீ விபத்து அழைப்புகளில் 142 பெருந் தீ விபத்து அழைப்புகளாகும். இவை ஒவ்வொன்றிலும் ரூ. 50,000 க்கு மேற்பட்ட உடமைகளுக்கு சேதமோ அல்லது உயிரிழப்போ ஏற்பட்டது. இம்மாநிலத்தில் ஏற்பட்ட தீ விபத்துகளால் அழிந்துவிட்ட அல்லது சேதம் அடைந்த உடமைகளின் மொத்த தோராய மதிபபு ரூ. 4 கோடி எனக் கணக்கிடப்பட்டு உள்ளது. தீயின் அழிவினின்றும் காப்பாற்றப்பட்ட உடமைகளின் மொத்த தோராய மதிப்பு ரூ. 35 கோடியாகும்.

உயிர் மீட்பு மற்றும் அவசர அழைப்புகள்.

8. தீ விபத்தின் போது எல்லாவிதமான உதவியும் நிவாரணமும் அளிப்பதில் இத்துறை தனித்தன்மையுடன் திகழ்கிறது. எரிவாயு சிலிண்டர்களில் ஏற்படும் தவறுதல்கள் காரணமாக தீ விபத்து ஏற்படும் என்று அஞ்சி சென்னை மாநகரிலுள்ள இல்லத்தரசிகளிடமிருந்து வரும் அவசர அழைப்புகளுக்கும் சென்று செயல்படுவது போன்ற, அனைத்துச் சூழ்நிலைகளிலும் உதவி வேண்டுவோருக்கு இத் துறையினர் உதவி செய்கின்றனர். இவ்விதமாக, இத்துறையின் சேவை இருபத்திநான்கு மணி நேரமும் பொது மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. 1988 ஆம் ஆண்டில் 1,843 அவசர மற்றும் மீட்பு பணி அழைப்புகளை இத்துறை ஏற்றது.

நோயாளர் ஊர்தி.

9. சில முக்கிய நகர தீயணைப்பு நிலையங்களில் அவசர சிகிச்சைக்கென நோயாளிகளை உடனுக்குடன் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும் நோயாளர் ஊர்திகள உள்ளன இவ்வூர்திகளின் மூலம் நோயுள்ளவர்களையும், காயமுற்ற

வர்களையும் உடனடி மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்ல நியாயமான கட்டணத்தை வாடகை யாகப் பெற்றுக் கொண்டு செயலாற்றுகிறது. ஏழை எளிய மக்களை இலவசமாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவும் பயன்படுத்தப்படுகிறது. இவ்வூர்திகள் 1988ஆம் ஆண்டில் 4,213 அழைப்புகளை ஏற்றன. இவற்றுள் கட்டண அழைப்புகளின் எண்ணிக்கை 3,715 ஆகும். நோயாளர் ஊர்திகளில் நோய்வாய் பட்டவர்களை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு சென்றதற்கான வாடகைக் கட்டணமாக ரூ. 1,92,325 வசூலிக்கப்பட்டது.

ஊர்திகளும் சாதனங்களும்.

10. இத்துறையில் மொத்தம் 247 நீர்தாங்கி வண்டிகளும், 70 நோயாளர் ஊர்திகளும் மற்றும் 45 தீயணைப்புக்கு உறுதுணையான ஊர்திகளும் உள்ளன.

இத்துறையில் ஒரு விபத்து உதவி வண்டி உள்ளது. இது தென் சென்னைக் கோட்டத்தைச் சார்ந்த எழும்பூர் தீயணைப்ப நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சாலை விபத்துக்களில் கவிழ்ந்து சிதைந்த ஊர்திகளைத் தூக்கி நிறுத்தி அகற்றவும், இழுத்துச் செல்லவும், இடிந்த கட்டிடங்களில் மீட்புப் பணியின் போது அதிக எடையுள்ள கட்டிடப் பகுதிகளை அகற்றவும் ஏற்றவாறு இவ்வூர்தியின் தனித்தனி பாகங்கள் பொருத்தப் பட்டுள்ளன.

பலமாடிக் கட்டிடங்களில் ஏற்படும் தீ விபத்துக்களின்போது தீத்தடுப்பு மற்றும் மீட்புப்பணிக்காக ''ஸ்நார்க்கல்'' என்ற நவீன வசதிகள் கொண்ட ஓர் ஊர்தி இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு சென்னை மாநகரில் பயன் படுத்தப்பட்டு வருகிறது. இப்புதிய ஊர்தி சென்னை மாநகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் ஏற்படும் சில பெருந் தீ விபத்துக்கள் மற்றும் குடிசை தீ விபத்துக்களின் போது பங்கேற்று பணியாற்றுவதில் இத் துறைக்கு பெரிதும் உதவி புரிந்து வருகிறது.

பட்டறை.

11. தீயணைப்புத்துறை ஊர்திகளுக்கு ஏற்படும் பெரும் பழுதுகளை செப்பனிடும் பொருட்டு சென்னையில் பட்டறை ஒன்றை இத்துறை நிர்வகித்து வருகிறது. இப்பட்டறையை புனரமைக்கும் பொருட்டு அரசு ஒரு உதவிப் பொறியாளர் (தானியங்கி) பதவியை ஏற்படுத்தியுள்ளது.

பயிற்சி.

12. சென்னையிலுள்ள தமிழ்நாடு தீயணைப்புத்துறை மாநிலப் பயிற்சிப்பள்ளி நேரடியாக நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறது.

1989 ஏப்ரல் 27]

இப்பயிற்சிப்பள்ளி ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பில் செயல்பட்டு வருகிறது. கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கு அவசர பணிகளில் நிலையத் தீயணைப்பு அலு வலர் இருவரும் முன்னணித் தீயணைப்போர் இருவரும் உதவி புரிகின்றனர். இப்பயிற்சி வகுப்புகளில் 1988 ஆம் ஆண்டில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை விவரங்கள் கீழே வருமாறு :

	துறையைச் சார்ந்தவர்கள்.	மற்றவர்கள்.
(1)	(2)	(3)
1. நிலையத் தீயணைப்பு அலுவலர் பயிற்சி.	..	12
2. தீயணைப்போர் பயிற்சி	100	..
3. தீயணைப்போர் ஓட்டி பயிற்சி	70	..
4. இயந்திரக்கம்மியர் ஓட்டி பயிற்சி	39	..
5. முன்னணித் தீயணைப்போர் மறு பயிற்சி.	..	..

வெகுமதிகள் / பதக்கங்கள்

13. தீயணைப்புத் துறையில் பணிபுரியும் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு 1988 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

1. நற்பணி மற்றும் வீரதீர செயலுக்காக வழங்கப்படும் குடியரசுத் தலைவரின் சுதந்திர தின பதக்கம் :—

1.	தீயணைப்போர் ..	1
2.	இயந்திரக் கம்மியர் ஓட்டி ..	2
3.	முன்னணித் தீயணைப்போர் ..	1
	மொத்தம் ..	4

[1989 ஏப்ரல் 27

தமிழ்நாடு முதலமைச்சரின் பொங்கல் தின பதக்கம் :—

1.	முன்னணித் தீயணைப்போர் ..	54
2.	இயந்திரக் கம்மியர் ஓட்டி ..	15
3.	தீயணைப்போர் ஓட்டி ..	46
4.	தீயணைப்போர் ..	5
	மொத்தம் ..	120

குடிசைத் தீ.

14. பெரும்பான்மையான தீ விபத்துக்கள் அடிக்கடி குடிசைப் பகுதிகளில் ஏற்படுகின்றன. தீ விபத்து அடிக்கடி ஏற்படும் காலங்களில் பற்கோல், கூரைக் கொக்கி முதலிய எளிய தீ யணைப்பு சாதனங்களுடன் தற்காலிக புறநகர் தீயணைப்பு நிலையங்கள் குடிசைப் பகுதிகளில் நிறுவப்பட்டன. கடந்த ஆறு ஆண்டுகளில் இப்புறநகர் தீயணைப்பு நிலையங்கள் எதிர் நோக்கிய தீ அழைப்புகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

ஆண்டு		தீயணைப்பு அழைப்புகள்.
1983	..	362
1984	..	291
1985	..	80
1986	..	74
1987	..	68
1988	..	58

தீயணைப்புத் துறை சேமநல நிதி :

15. துயருற்ற தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு நிதி உதவி செய்யவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், 1962 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத் துறை சேமநல நிதி துவங்கப்பட்டது. காச நோய், தொழு நோய் அல்லது புற்று நோயினால் அவதியுறும் பணியாளர்களுக்கோ அல்லது அவரைச் சார்ந்தவர்களுக்கோ அவர்களின் சத்துணவிற்

காகவும், பணியாளர்களுடைய பிள்ளைகளின் உயர் கல்விக் காகவும் மற்றும் பணியாளர்களோ அல்லது அவர்களைச் சார்ந் தவர்களோ இறக்க நேரிட்டால் அவர்களின் ஈமச்சடங்கு செல விற்கும் இந்நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்படுகிறது. மேலும், எல்லாப் பணியாளர்களுக்கும் பணியிலிருந்து ஒய்வு பெறும் சமயம் தலா ரூ. 200 இந்நிதியிலிருந்து அடையாள உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. 1988 ஆம் ஆண்டு 23 ஒய்வு பெற்றவர்களுக்கு அடையாள நிதி உதவித் தொகை யாக ரூ. 4,600 வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 4,359 ஆகும். 1988 ஆம் ஆண்டில் உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட மொத்த சந்தாத் தொகை ரூ. 54,623.50. அவ்வாண்டில் இந்நிதியி லிருந்து 194 உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகை யின் மதிப்பு ரூ. 43,499.60. இந்நிதிக்காக ஒவ்வொரு ஆண்டும் அரசு ரூபாய் 50,000 மானியமாக அளித்து வருகிறது.

நலத் திட்டங்கள் :

16.1. உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் பதவி மற் றும் அதற்குக் கீழ் நிலைப் பதவிகளிலுள்ள பணியாளர்களுக்கு சில இன்றியமையாத உணவுப் பொருட்களை காவலர்களுக்கு வழங்குவது போன்று அரசு மலிவு விலையில் வழங்குகின்றது. இத்திட்டம் ஜனவரி, 1981 முதல் அமுலில் இருந்து வருகிறது.

இதற்காக கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசு செய்துள்ள செலவுத் தொகையின் விவரம் பின்வருமாறு :—

நிதியாண்டு.		செலவுத் தொகை. (ரூபாய் இலட்சத்தில்).
1984—85	..	14.49
1985—86	..	20.43
1986—87	..	28.00
1987—88	..	28.00
1988—89 (பிப்ரவரி 1989 வரை).	..	29.00

[1989 ஏப்ரல் 27

16.2. அலைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்பு வசதியளிக்கும் நோக்கத்துடன் முதற்கண் தீயணைப்புப் பணியாளர்களுக்கு 40.50 இலட்சம் ரூபாய் செலவில் உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை, சிவகாசி ஆகிய இடங்களில் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. சென்னையில் கலைஞர் கருணாநிதி நகர், நந்தனம் மற்றும் வண்ணாரப்பேட்டை ஆகிய இடங்களில் ரூ. 58.16 இலட்சம் செலவில் குடியிருப்புகள் கட்டும் மற்றும் ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இவ்வாறாக தீயணைப்புத் துறை பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் தொடர்ந்து நற்பணியாற்றி வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பிற்சேர்க்கை 1.

1988—89 ஆம் ஆண்டு தீயணைப்புத்துறை அதிகாரிகளால் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் ஆய்வு செய்யப்பட்ட கட்டிடங்களின் விவரங்கள் :—

	சட்டங்கள் மற்றும் விதிகள்.	ஆய்வு செய்யப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை.
1.	1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்குமுறை) சட்டம்.	317
2.	1955 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) விதிகள்.	141
3.	பொதுமக்கள் கூடுமிடங்கள் குறித்த சட்டம்	235
4.	தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் மாநகராட்சிகள் சட்டம்.	413
5.	தமிழ்நாடு மாவட்ட குழுக்கள் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்.	382
6.	தொழிற்சாலைகள் விதிகள் ..	1,017
7.	ஆய்வு செய்யப்பட்ட அரசு கட்டிடங்கள் ..	1,014
8.	படைக்கலம் சட்டம்—விதிகள் ..	945

பிற்சேர்க்கை 2.

தமிழ் நாட்டிலுள்ள தீயணைப்பு நிலையங்களின் விவரங்கள் (1–3–1989 நிலவரப்படி).

கோட்டத்தின் பெயர்.	இயங்கிவரும் தீயணைப்பு நிலையங்களின் பெயர்.
(1)	(2)
வட மண்டலம், சென்னை.	
வட சென்னைக் கோட்டம்	வண்ணாரப்பேட்டை
	எஸ்பிளனேட்
	ராயபுரம்
	வியாசர்பாடி
	செம்பியம்
	கீழ்ப்பாக்கம்
	வேப்பேரி
	தண்டையார்பேட்டை
	வ.உ.சி. நகர்
	எண்ணூர்
	மணலி
தென் சென்னைக் கோட்டம்	எழும்பூர்
	திருவல்லிக்கேணி
	மைலாப்பூர்
	தேனாம்பேட்டை
	அசோக் நகர்
	சைதாப்பேட்டை
	கிண்டி
	ஆளுநர் மாளிகை
	தாம்பரம்
	அம்பத்தூர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோட்டத்தின் பெயர்.	இயங்கிவரும் தீயணைப்பு நிலையங்களின் பெயர்.
(1)	(2)
தென்னாற்காடு கோட்டம்	சிதம்பரம்
	கடலூர்
	நெல்லிக்குப்பம்
	பண்ருட்டி
	விருத்தாசலம்
	வேப்பூர்
	கள்ளக்குறிச்சி
	உளுந்தூர்பேட்டை
	விழுப்புரம்
	திண்டிவனம்
	செஞ்சி
	காட்டுமன்னார்கோவில்
	திருக்கோவிலூர்
	குறிஞ்சிப்பாடி
	திட்டக்குடி
செங்கை-அண்ணா கோட்டம்	காஞ்சிபுரம்
	ஸ்ரீபெரும்புதூர்
	மதுராந்தகம்
	செங்கற்பட்டு
	திருவள்ளூர்
	கும்மிடிப்பூண்டி
	மறைமலை நகர்
	செங்குன்றம்
வடஆற்காடு கோட்டம் ..	வேலூர்
	ராணிப்பேட்டை
	ராணிப்பேட்டை (சிப்காட்)
	அரக்கோணம்
	வந்தவாசி
	ஆரணி
	திருவண்ணாமலை
	செங்கம்
	திருப்பத்தூர்
	வாணியம்பாடி
	ஆம்பூர்
	குடியாத்தம்
	போளூர்
	சோளிங்கர்
	நாட்ராம்பள்ளி
	செய்யாறு

தமிழ்நாடு சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 ஏப்ரல் 27]

மத்திய மண்டலம்—திருச்சிராப்பள்ளி.

கோட்டத்தின் பெயர்.	இயங்கி வரும் தீயணைப்பு நிலையங்களின் பெயர்.
(1)	(2)
சேலம்-தர்மபுரி கோட்டம் ..	மேட்டூர் அனல் மின் நிலையம்
	சேலம்
	சேலம் உருக்காலை தீயணைப்பு நிலையம்
	திருச்செங்கோடு
	ஆத்தூர்
	மேட்டூர்
	நாமக்கல்
	ராசிபுரம்
	சங்கரி
	தர்மபுரி
	ஹோசூர் (சிப்காட்)
	கிருஷ்ணகிரி
	அரூர்
திருச்சிராப்பள்ளி—புதுக்கோட்டைச் கோட்டம்	திருச்சிராப்பள்ளி
	ஸ்ரீரங்கம்
	முசிறி
	துறையூர்
	பெரம்பலூர்
	ஜெயங்கொண்ட சோழபுரம்
	கரூர்
	மணப்பாறை
	அரியலூர்
	கீரனூர்
	புதுக்கோட்டை
	அறந்தாங்கி
	பொன்னமராவதி
	ஆலங்குடி
	திருமயம்
தஞ்சாவூர் கோட்டம் ..	தஞ்சாவூர்
	கும்பகோணம்
	மன்னார்குடி
	நாகப்பட்டினம்
	திருவாரூர்
	நன்னிலம்
	மயிலாடுதுறை
	பட்டுக்கோட்டை
	ஒரத்தநாடு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கோட்டத்தின் பெயர்.	இயங்கி வரும் தீயணைப்பு நிலையங்களின் பெயர்.
(1)	(2)

தஞ்சாவூர் கோட்டம்—தொடர்ச்சி

	சீர்காழி
	திருத்துறைப்பூண்டி
	பேராவூரணி
	திருக்காட்டுப்பள்ளி
	பாபநாசம்
கோயம்புத்தூர்-பெரியார் நீலகிரி கோட்டம்	கோயம்புத்தூர் (தெற்கு)
	கோயம்புத்தூர் (வடக்கு)
	மேட்டுப்பாளையம்
	திருப்பூர்
	பொள்ளாச்சி
	உடுமலைப்பேட்டை
	வால்பாறை
	ஈரோடு
	தாராபுரம்
	காங்கேயம்
	கோபிச்செட்டிப்பாளையம்
	சத்தியமங்கலம்
	கூடலூர்
	உதகமண்டலம்
	குன்னூர்

தென் மண்டலம், மதுரை.

மதுரைக் கோட்டம் ..	மதுரை
	தல்லாகுளம்
	மேலூர்
	உசிலம்பட்டி
	பெரியகுளம்
	தேனி-அல்லிநகரம்
	ஆண்டிப்பட்டி
	மயிலாடும்பாறை
	உத்தமபாளையம்
	போடிநாயக்கனூர்
	திருமங்கலம்
	கம்பம்
	சோழவந்தான்
	கொட்டாம்பட்டி

1989 ஏப்ரல் 27]

கோட்டத்தின் பெயர்.	இயங்கி வரும் தீயணைப்பு நிலையங்களின் பெயர்.
(1)	(2)
திண்டுக்கல்-காயிதே மில்லத் கோட்டம்.	நத்தம்
	வத்தலகுண்டு
	திண்டுக்கல்
	பழனி
	ஒட்டன்சத்திரம் வேடசந்தூர்
காமராஜர் கோட்டம் ..	ராமநாதபுரம்
	ராமேஸ்வரம்
	கமுதி
	பரமக்குடி
	காரைக்குடி
	தேவகோட்டை
	சிவகங்கை
	சிங்கம்புனரி
	திருப்பத்தூர்
	ஸ்ரீவில்லிபுத்தூர்
	ராஜபாளையம்
	சாத்தூர்
	சிவகாசி
	அருப்புக்கோட்டை
	விருதுநகர்
	வத்திராயிருப்பு
திருநெல்வேலி கட்டபொம்மன் கோட்டம்.	பாளையங்கோட்டை
	திருநெல்வேலி (பேட்டை)
	தென்காசி
	கடையநல்லூர்
	நாங்குனேரி
	அம்பாசமுத்திரம்
	சங்கரன்கோயில்
	வாசுதேவநல்லூர்
வ.உ. சிதம்பரனார் கோட்டம்	கோவில்பட்டி
	தூத்துக்குடி
	தூத்துக்குடி அனல்மின் நிலைய தீயணைப்பு நிலையம்.
	திருச்செந்தூர்
	சாத்தான்குளம்
	ஸ்ரீவைகுண்டம்
	விளாத்திகுளம்
கன்னியாகுமரி கோட்டம் ..	நாகர்கோயில்
	கன்னியாகுமரி
	குழித்துறை
	குலசேகரம்
	பத்மநாபபுரம் (அல்லது) தக்களை

பிற்சேர்க்கை 3.

தீயணைப்புத் துறை களப் பணியாளர்.

வரிசை எண்.	பதவியின் பெயர்.	பதவி எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1.	தீயணைப்புத் துறை இயக்குநர்	1
2.	தீயணைப்புத் துறை துணை இயக்குநர்கள்	3
3.	கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்	16
4.	உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்	17
5.	உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் (போக்குவரத்து)	1
6.	நிலைய அலுவலர்கள் (போக்குவரத்து)	11
7.	நிலையத் தீயணைப்பு அலுவலர்கள்	176
8.	உதவி நிலையத் தீயணைப்பு அலுவலர்கள்	15
9.	யந்திரக் கம்மியர்கள்	159
10.	தீயணைப்போர் கம்மியர்	3
11.	முன்னணித் தீயணைப்போர்	667
12.	தீயணைப்போர் ஓட்டுநர்கள்	811
13.	பற்ற வைப்பாளர்	1
14.	தீயணைப்போர் தச்சர்	1
15.	தீயணைப்போர்	3,698*
	மொத்தம்	5,580

* 1988ஆம் ஆண்டு காலியிடங்களை நிரப்ப வேலை வாய்ப்பகம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 570 தீயணைப்போர்களும் இதில் அடங்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1989 ஏப்ரல் 27]

பிற்சேர்க்கை 4.

அமைச்சுப் பணியாளர்கள்.

வரிசை எண்.	பதவியின் பெயர்.	பதவி எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1.	தீயணைப்புத் துறை இயக்குநரின் நிர்வாக உதவியாளர்கள்	2
2.	கண்காணிப்பாளர் (தேர்வு நிலை)	1
3.	கண்காணிப்பாளர்கள்	19
4.	உதவியாளர்கள்	50
5.	இளநிலை உதவியாளர்கள்	52
6.	சுருக்கெழுத்து தட்டச்சர்கள்	4
7.	தட்டச்சர்கள்	20
8.	பதிவுக்கட்டறை எழுத்தர்கள்	18
9.	அடிப்படை பணியாளர்கள்	58
	மொத்தம்	224

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS